

# தமிழரசு

திங்கள் இருமுறை

அக் 16 1971 35 கா

நாட்டின் நல்வாழ்வுக்கு உதவுவதுடன்
நம் நல்வாய்ப்பைச் சோதிக்க
*பெரும் வாய்ப்பு அளிக்கிறது!*

# தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டு




மருத்துவ மனைகள்
திறக்க......






குடிசைப்
பகுதிகளை
மாற்றியமைக்க...



*தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுக்காக
நாம் செலவிடும் ஒவ்வொரு ரூபாயும்
இலட்சாதிபதிகளை மட்டும் உருவாக்கவில்லை!
நாட்டின் நல்வாழ்வையும் உருவாக்குகிறது!*

*இன்றே
வாங்குவோம்*
தமிழ்நாடு அரசு
பரிசுச்சீட்டு

செய்தி விளம்பரத் துறை
தமிழ்நாடு அரசு.




# தமிழரசு

மலர் 2 16-10-1971 இதழ் 6

## இந்த இதழில்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

அமிழ்தும் அருங்குறளும்

எதிர்கால ஆற்றல்

2001

நீலமலையில் ஒளி வெள்ளம்

இதோ ஒரு பொன்னேடு

சிறுவர் நீதி

ஏன் இந்தக் காதல் ? (தொடர்கதை)

ஒத்துழைக்க வேண்டுகிறேன்
(செய்திக் கவிதை)

வெண்பாப் போட்டி

அண்ணலைப் போற்றுதும்
—கல்வியமைச்சரின் உரை

காந்தியடிகளின்
103-வது பிறந்த நாள் விழாக் காட்சிகள்

முதல்வரின்

**மன்னிப்புக் கேட்கிறேன்**

65 ஆம் பக்கம் முதல்

அரசுத்துறை ஒப்பந்தப் புள்ளி,
வேலைவாய்ப்பு விளம்பரங்கள்.

முகப்பில் !

தமிழகத் தலைநகரில்—காந்தியடிகள்
பிறந்தநாள் விழாவில் அணிவகுத்து வந்த
அலங்காரத் தேர்களின் காட்சி.

# மன்னிப்புக் கேட்கிறேன்!

## முதல்வர்

காந்தி அடிகளின் 103-ஆவது பிறந்தநாள் விழாவைத் தமிழகம் சீரோடும், சிறப்போடும் கொண்டாடும் இந்த நன்னாள் இன்று காலையில் அனைத்துலக இளைஞர் அமைதி அணியினருடன் காந்தி சிலைக்கு மாலையணிவித்ததுடன் தொடங்கப்பெற்றது-நானும் அந்த அனைத்துலக இளைஞர் அணியின் தலைவரும் மாலை அணிவித்தோம். அடுத்து காந்திக்கு மிகவும் பிடித்தமான பணியினைச் செங்கற்பட்டு மாவட்டம், பரனூர் கிராமப் பகுதியில் நிறைவேற்றி வைத்ததன் மூலம் பிச்சைக்காரர் மறுவாழ்வுப் பணியின் முதற் கட்டம் தொடங்கி வைக்கப் பட்டது. இந்த ஆண்டு தொழு நோய்ப் பிணியாளர்களுக்கு மறு வாழ்வளிப்பது இந்த முதற் கட்டப் பணியாகி இருக்கிறது.

தமிழகத்தில் ஆறு இடங்களில் பிச்சைக்காரர் விடுதிகளைக் கட்டுவதற்குத் திட்டம் தீட்டியுள்ள தமிழக அரசு—அதன் முதல் கட்டப் பணியினை இன்று காலையில் பரனூரில் நிறைவேற்றியிருக்கிறது.

இந்த விடுதியில் 200-க்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிணியாளர்கள் வாழப் போகிறார்கள். இனிமேல் அவர்கள் பல்லை இளித்துக் கொண்டு தெருவில் நின்று தவிக்க வேண்டிய நிலைக்கு ஆளாக வேண்டியதில்லை. இதன் மூலம் அவர்கள் சோகம் துடைக்கப்படுகிறது. இது அண்ணல் காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்தமான ஒரு பணி என்பதை உணர்ந்து பேரறிஞர் அண்ணாவின் அறவழியில் வந்தவர்களான நாம் நிறைவேற்றும் இந்த நன்னாளில்—நாமே பெருமைப் படும் வகையில், மாலையில்—அரசுத் துறைகளின் சார்பிலும், தனியார் துறைகளின் சார்பிலும் அலங்காரத் தேர்களை ஊர்வலம் நடத்திக் காட்டி—கட்சிக் கண்ணோட்டத்தோடு இந்தியாவின் பல இடங்களிலும் காந்தியார் பிறந்த நாள் கொண்டாடப்படும்போது—கட்சிச் சார்பற்ற முறையில் கொண்டாடுகிற ஒரே ஒரு மாநிலம் தமிழகம் தான் என்பதைப் பெருமையுடன் நிலைநாட்டியிருக்கிறோம். இந்த விழாவில் அனைத்துக் கட்சிகளையும் கலந்து கொள்ளச் செய்து—எல்லாக் கட்சியினருக்கும் பெருமான் காந்தியடிகளைச் சொந்தக்காரராக்கி இருக்கிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக அரசுச் சார்பில் கொண்டாடப் படும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும், ஆதரவை வளர்த்து வரும் அனைத்துக் கட்சியினருக்கும் கலையுலகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த விழாவில் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

இங்குப் பேசிய சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த ஹண்டே அவர்கள் நாமெல்லாம் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று கூறினார். அவசர அவசரமாகப் பேசிவிட்டு ரயிலுக்குப் போன அவர் சார்பிலும், காந்தியடிகளிடம் அனைவரும் மன்னிப்புக் கேட்க முடியாது என்பதால்—உங்கள் சார்பிலும் இந்த விழாவில் நானே மன்னிப்புக் கேட்க முன்வருகிறேன்.

ஒரு மகாத்மாவின் கொள்கைகள் அனைத்தினையும் பின்பற்றுவது என்பது முடியாத காரியம் தான். இதை இங்குப் பேசிய ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி அனந்தநாயகி அம்மையார் 'எல்லாரும் மகாத்மாவாகிவிட முடியாது' என்று வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார்.

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கொள்கையில் காந்தியார் கொண்டிருந்த கருத்து அது மிகவும் பாவமான ஒன்று என்பதே. மக்கட் தொகைப் பெருக்கத்தைத் தடுத்தாக வேண்டிய அவசிய நிலை நாட்டுக்கு ஏற்பட்டபோது அவர் தம்

கொள்கையில் தம்மை மாற்றிக் கொள்ளவில்லை. அப்படியே குடும்பக் கட்டுப்பாடு தேவை என்கிறபோது அதை மன ஒருமைப்பாட்டின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

ஆனால் இன்று அவர் கொள்கைக்கு விரோதமாகக் கருத்தடை முறையைக் கொண்டுவந்து விட்டார்கள்.

அவர்களின் சார்பாக நான் காந்தியடிகளிடம் இப்போது மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

தாய் மொழியைப் பொறுத்த மட்டில் அந்தந்த மாநிலத்து மக்கள் அவரவர்களது தாய்மொழியில் தான் கல்வி பயில வேண்டும்; அதுதான் தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தையின் நிலையைப் போன்றது; வேற்று மொழி பயில்வது புட்டிப்பால் குடிப்பதைப்போன்றது என்று கருத்தைக் கொண்டிருந்தார்கள். இது அவருடைய பொன்மொழியாகும். அந்தப் பொன்மொழியின்படி நானும் தி.மு.க. அரசின் சார்பில் தமிழைப் பயிற்று மொழி என்று கொண்டுவந்தேன்.

ஆனால் அதை எதிர்க்கும்படி இங்கு, சிலர் மாணவர்களைத் தூண்டிவிட்டு எதிர்ப்புக்காட்டினார்கள்.

அந்த எதிர்ப்பாளர்களின் சார்பில் நான் காந்தியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குப் பிரச்சினையில் இந்தியா முழுமையும் ஒரே சீரான கொள்கையைக் கடைப்பிடித்தாக வேண்டும். தமிழகத்தில் அது விரைவில் ஒத்தி வைக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே கடந்த மூன்று ஆண்டுகளாக வாதாடி வாதாடிப் பார்த்தேன் அனைத்து இந்தியாவிலும் மதுவிலக்கு வர வேண்டும் என்று நான் விரும்பிய நேரத்தில், காந்தியடிகளின் கொள்கைகளைக் கடைப்பிடித்து நடப்பவர்களின் பின்னால் கொடி பிடித்து ஆள்கிற மாநிலங்களில் முதலில் ரத்துச் செய்யப்பட்டு விட்டது. சுதந்திராக் கட்சி ஆளும் ஒரிசாவிலும் ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

இப்படியெல்லாம் மதுவிலக்கை ரத்துச் செய்வதில் எங்களுக்கு முன்னால் ரத்துச் செய்தவர்களின் சார்பில் காந்தியடிகளிடம் இதற்காகவும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

தன் தாய்மொழியில் தான் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார். அதன்படி ஆண்டவனைத் தமிழர்களின் தாய் மொழியான தமிழில் வணங்குவதற்கு இங்கே வழி வகுத்தோம். இப்படி அர்ச்சனைகள் தமிழில் செய்யலாமா என்று அதற்காகச் சிலர் நீதிமன்றம் வரையில் சென்று விட்டார்கள்.

தாய் மொழியில் வணங்க வழி வகுத்தவர்களை எதிர்த்து நீதிமன்றம் சென்றுள்ளவர்களின் சார்பிலும் காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு, காந்தியடிகளின் கொள்கைகள் பலவற்றை ஔவை சண்முகம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இது ''ஔவை''யின் பேச்சுத்தான் என்றாலும் அதில் 'சிலம்பு' ஒலித்ததை நான் கவனிக்காமல் இல்லை.

கதர் போன்ற தொழிலுக்குத் தி.மு.க. அரசு காட்டி வரும் அக்கறையினையும், தீண்டாமையை ஒழிப்பதிலும், அரிசன நலத்திலும், சாதி ஒழிப்புப் பிரச்சினையிலும் வகுப்புவாதம் தலைதூக்க வொட்டாமல் தடுப்பதிலும் கழக அரசு எவ்வளவு கவலையோடு இருக்கிறது என்பதையும் அவர் நினைவு கூர்ந்து உங்கள்முன் எடுத்துச்சொன்னார்.

உத்தமர் காந்தியின் விழாவைக் கொண்டாடும் ஒவ்வொரு ஆண்டும் இந்த விழாவில் கலந்து கொள்ளும் பொது மக்களாகிய உங்களுக்கும் மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த விழாவில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ●

**உண்மையே என் கடவுள் !**

**அகிம்சையே அதைக்**
**காணும் வழி !**

**—காந்தியடிகள்.**





# ஒத்துழைப்பை வேண்டுகின்றேன்!

மணமுள்ள மலருண்டு ; மண மில்லாத
மலர்சிலவும் இங்குண்டு ; அழகில் லாமல்
மணமளிக்கும் மலருண்டு; அழகைப் பெற்றும்
மணமளிக்க மறந்திட்ட மலரும் உண்டு!
மணமில்லா எழில்மலரும் வனப்பில் லாத
மணமலரும் போன்றதே மக்கட் கூட்டம்.
மணமுடனே நல்லெழிலும் வாய்க்கப் பெற்ற
மலர்கட்கே எந்நாளும் தனிச்சிறப்பாம்!

எழிலோடு நறுமணமும் இணைந்திருக்கும்
இனியமலர் கொய்திடநாம் முனையும் போழ்து
விழிநோக நம்கரத்தே முட்கள் குத்தும் ;
வேதனையில் நமைஆழ்த்தும் ; குருதி பொங்கும்!
வழிகின்ற குருதியினை எண்ணிப் பார்த்து
மணமலரைப் பறிக்காமல் விடுவதில்லை
எழில்முத்தை வெறுத்தோமா கடந்து விக்கும்
இன்னலினை நம்மனத்தே எண்ணிப் பார்த்தே ;

நாட்டினிலே ஏழைமக்கள் எளிய மக்கள்
கல்வியற்றோர் பிற்பட்டோர் தாழ்த்தப் பட்டோர்
வாட்டமுறு கின்றார்கள் ; மணமில் லாத
மலர்போல இருக்கின்றார் ; எனினும் அன்பின்
கோட்டையெனும் நல்மனம் கொண்டுள் ளார்கள்
குறைபோக்கி அவர்வாழ்வில் நறுமணத்தைக்
கூட்டுகிற பெரும்பொறுப்பைக் கழக ஆட்சி
கொண்டுள்ள தென்பதனை உணர்க நன்றே!

கடந்த 25—9—1971 ஆம் நாள் உதகையில் மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்துத் தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை இங்குக் கவிதையுருப் பெற்றிருக்கிறது.

மலர்பூத்துக் குலுங்குமெழில் உதகை தன்னில்
மலர்க்காட்சி காண்கின்ற போழ்தென் நெஞ்சில்
மலர்கின்ற நினைவலைகள் முகவை யென்னும்
வறண்டதொரு மாவட்டந் தனையே சுற்றும்
நிலையதனை உணர்கின்றேன் ! செழிப்பில் சில்லோர்
நீந்துவதைக் காண்கின்ற போதென் உள்ளம்
நிலைகெட்டுச் சகதியிலே சாலை யோரம்
நெளிவோரை வட்டமிட்டுச் சுழன்று நையும்!

குளிர்பச்சைப் பட்டாடை போர்த்த நல்ல
கோலமிகும் நீலகிரி மலையைக் காணும்
பொழுதினிலே முகவைஎன் நினைவில் தோன்றல்
போன்றுநான் செல்வர்களைக் காணு கின்ற
பொழுதினிலே ஏழையர்கள் வாழ்வி ழந்தோர்
பொலிவிழந்து தோன்றுகிறார் ! இதனை மாற்ற
விழைகின்றோம் ! முகவையினை உதகை போல
வளங்கொழிக்கச் செய்திடவே எண்ணு கின்றோம்.

நீலகிரி தனைமுகவை போல மாற்ற
நினைக்கவில்லை ; அதுபோன்றே செல்வ வாழ்வில்
கோலமிகு மாளிகையில் திளைப்போர் தம்மைக்
குடிசைக்குக் கொண்டுவர எண்ண வில்லை!
சாலைகளின் ஓரத்தில் சகதி தன்னில்
சாக்கடையின் புழுப்போல நைவோர் தம்மை
மேலுயர்த்தி வாழ்வுதர எண்ணங் கொண்டே
மேதக்க செயல்முறைகள் மேற்கொண்டுள் ளோம்!

இத்தகைய மாற்றத்தைக் காண்ப தற்கே
ஏழையரை எளியவரை உயர்த்து தற்கே
இத்தரையில் எம்மைஆ ளாக்கி விட்ட
எம்அண்ணன் வழிநின்றித் தூய நாட்டை
நத்துமோ ரன்பாலே நானும் மற்ற
நண்பர்களும் அமைச்சர்களும் தோழர் தாமும்
நித்தமுநற் பணியாற்று கின்றோம் உங்கள்
நிகரற்ற ஒத்துழைப்பை வேண்டு கின்றேன்!



கவிதை ஆக்கம்: சாமிபழனியப்பன்

**இனிமை ! இனிமை !**

அக்டோபர் 1-ஆம் தேதிய தமிழரசு இதழில் வெளிவந்துள்ள ''இனிமைத் தமிழில் இறை வழி பாடு'' என்ற கட்டுரை கருத்தாழமும், சொல்லாழமும் கொண்டு மிளிர்கிறது. பல்கலைக் கழக மாணவர்களின் ஆராய்ச்சிப் பிரிவுக்குப் பாடமாக வைப்பதற்குத் தகுதி படைத்தது, இக் கட்டுரை என்றால் அது மிகையாகாது! கட்டுரையாசிரியருக்கு எம் அளவற்ற பாராட்டுகள்!

—புலவர் மாணிக்கனார்,
திருச்சி.




**விளம்புக விஞ்ஞானப் புதுமை !**

'பாலை சோலையாகிறது'—பயனுள்ள கட்டுரை. இதுபோன்ற விஞ்ஞானப் புதுமைகளை அவ்வப்போது 'தமிழரசு' வெளியிட வேண்டும்'.

—சித்ரா, மயிலாப்பூர்.

**போதிக்கும் சுவர் !**

'எதிர்ச் சுவரில்' சுவை மிக்க கட்டுரைக் கதை. குடும்பக் கட்டுப்பாட்டை மறந்து, தவிப்புக்கு ஆளாகும் இல்லற அன்பர்களுக்கு நல்லறத்தைப் போதிக்கிறது 'எதிர்ச் சுவர்'.

—எம். முனியப்பன்,
மணப்பாறை.

**சிறப்புமிகு குறிச்சி !**

மணவாளக் குறிச்சியில் இவ்வளவு சிறப்பிருப்பது இதுவரை எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதே!

—என். கோபாலசாமி,
தூத்துக்குடி.

**சுவைமிகு காதல் !**

அப்பா ... ...' ஏன் இந்தக் காதலில்' இப்போதுதான் சுவை தென்படத் தொடங்கியிருக்கிறது !

—கே. கமலாகாந்தன்,
பெங்களூர்.

**ஆதாரமான கட்டுரை**

தமிழக அரசு, அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளைப் பொன்னே போல் போற்றிப் பின்பற்றுகிறது என்பதற்கு ஆதாரமாக அமைந்துள்ள கட்டுரை 'சிற்றூர் செழிக்க, சிறு தொழில்கள்'.

—எஸ். நவநீதன்,
வத்தலக்குண்டு.

**மூட்டைப்பூச்சிக்குப் பாராட்டு !**

இறுதிவரை யாரோ நண்பர் தான் உடன் வந்தார் என்று நினைத்துக் கொண்டிருக்க, கடைசியில் அந்த நண்பர் 'மூட்டைப் பூச்சியார்' என்றுகூறிச் சுவைபட எழுதியிருக்கும் சுந்தருக்குப் பாராட்டு.

—எஸ். ஆர். சேகர்,
கோவை-9.

**சென்னையிலிருந்து சோவியத் வரை.**

வேலூரில் உள்ள கூட்டுறவு பழம் பதனிடும் தொழிற்கூடத்திலிருந்து (NAFCO) இந்த ஆண்டு சோவியத் நாட்டிற்கு இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள மாம்பழச் சாறு அனுப்பப்பட்டுள்ளது. அது போல, பிரெஞ்சு நாட்டிலிருந்து 70 டன், தோலுரித்துப் பதனிடப் பட்ட தக்காளிப் பழம் கேட்டு இத் தொழிற்சாலைக்குக் கோரிக்கை வந்துள்ளது.

மேற்கு ஆசிய நாடுகள் பல வற்றிலும் இந்த மாம்பழச் சாற்றிற்கு நல்ல வரவேற்புஇருப்பதால், அங்கிருந்து கணிசமான அளவு பழச்சாறு வேண்டிக் கோரிக்கைகள் வந்துள்ளன.

**மேனாட்டு விருந்து !**

இளைஞர் படையின் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்று சிங்கராஜன் தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்கும் கட்டுரையில் —மேனாட்டுச் செய்திகளை விருந்தாக்கியிருக்கிறார்.

—ஆர். பரமசிவம்,
நெல்லை.

**கண் போன்ற கட்டுரை**

புகழ்பெற்ற டாக்டர் வெங்கடசாமியின் 'கண் நோய்' கட்டுரை, பயனுள்ள கட்டுரை. இதழுக்குக் 'கண்' போன்ற கட்டுரை.

—ஜி. கண்ணாயிரம்,
மதுரை-1

**வெண்பாப் போட்டி**

தமிழரசு இதழில் வெண்பாப் போட்டியில் பங்கு பெறும் கவிஞர்களின் முழு முகவரியினை வெளியிடுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேம். இளம் கவிஞர்களின் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள நல்ல தொரு வாய்ப்பாக இருக்கும்.

—சி. வள்ளிநாயகம், திருச்சி-2

# அண்ணலைப் போற்றுதும்!



அண்ணல் காந்தியடிகள் இந்தியாவின் இந்த நூற்றாண்டில் ஒப்பாரும் மிக்காரும் அற்ற, அடுப்பாரும் எடுப்பாரும் அற்ற ஒரு பெரும் தலைவராவார். உலகில் வாழ்க்கைக்கு ஆண்டுகளைக் கூட்டுபவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் ஆண்டுக்கு வாழ்வினைக் கூட்டுபவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்தான் ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுகிறார்கள். அப்படித் தாம் வாழ்ந்த நாட்கள் அனைத்தையும் உறுபயன் நாட்களாக ஆக்கிய பெருமை அண்ணல் காந்தி அடிகளுக்கு உண்டு. ஒருவர் எதையும் எளிதில் பெற்று விடலாம். பட்டம், பதவி, பணம், ஆதிக்கம், அதிகாரம், மாடமாளிகை, கூட கோபுரம், காடு, கழனி, தோட்டம், துரவு ஆகியவற்றை நேர் வழியிலோ, அல்லது குறுக்கு வழியிலோ பலரும் பெற்று விடுகிறார்கள். ஆனால் பிறருடைய இதயத்தில் ஒருவர் இடம் பெறுவது என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல. உலகத்தில் ஒரு சிலர்தான் கோடிக்கணக்கான மக்களின் இதயங்களில் இடம் பெறுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். புத்தர், ஏசு, திருவள்ளுவர், நபிகள்நாயகம் போன்றவர்களைக் கோடானு கோடி மக்கள் தத்தம் இதயங்களில் வைத்துள்ளார்கள் என்பதை உலகெங்கணும் காணலாம். அப்படிப்பட்டவர்களுடைய பட்டியலிலேயேதான் அண்ணல் காந்தியடிகளும் இந்தியாவைப் பொறுத்து இடம் பெறுகிறார்கள். மனிதத் தன்மைக்கு மதிப்பளித்து, மனித மாண்புகளை வளர்த்து, தம் உடைமை, உடல், உயிர் ஆகியவற்றை நாட்டுக்கு ஈந்த பெருமக்களைத் தான் மக்கள் தங்கள் இதயங்களில் கொள்ள முன் வருகிறார்கள். அந்த வகையில் மனிதத் தன்மைக்கு மதிப்பு ஏற்படவும், மனித மாண்புகள் வளரவும், அல்லும் பகலும் உழைத்த அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளினைக் கொண்டாடுவதில் நாம் எல்லாரும் பூரிப்பும் பெருமையும் கொள்ளுகிறோம்.

அண்ணல் காந்தியடிகள், இந்தியாவின் ஊர்ப்புறங்களில் அறிவு ஆற்றலைப் பயன்படுத்தத் தெரியாமல், வசதி வாய்ப்புகளைப் பெற முடியாமல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியாமல், வறுமையிலும், ஏழ்மையிலும், போதாமையிலும் இல்லாமையிலும், அறியாமையிலும், கல்லாமையிலும், உழன்று கொண்டிருக்கின்ற கோடானு கோடி மக்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டுமென்று பெரிதும் கவலைப் பட்டார்கள். அதற்கான முயற்சிகள் பலவற்றையும் மேற்கொண்டார்கள். முயற்சிகளின் அடிப்படையில் அருந் தொண்டாற்றினார்கள். இந்த வகையில் அவர் தொடங்கிய பணிகளைத் தொடர்ந்து செய்யவும், அவரது குறிக்கோளை நிறைவேற்றவும், நாம் ஒவ்வொருவரும் சூளுரைகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சூளுரைகளை மேற்கொள்ளுவதற்குச் சிறந்த பொன்னாள் இந்நாளாகும்.

சிற்றூர் வளர்ச்சி, அண்ணல் காந்தியடிகளுடைய உயிர் நாடிக் கொள்கையாக இருந்து வந்தது. சிற்றூரெல்லாம் வசதிவாய்ப்புகளைப் பெற்றால்தான் இந்தியாவே வளர்ந்ததாகக் கருத முடியும் என்றுஅவர் எண்ணினார். சிற்றூர்கள் வளர்ச்சி பெற வேண்டுமானால், சிற்றூர்களில் வாழும் மக்கள்–சமுகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லா வகைகளிலும் வளர்ச்சி பெறவேண்டும். ஊர் மக்களின் வாழ்க்கைத் தரம் எல்லா வகையிலும் உயரவேண்டும் என்பதற்காகவே சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் வளர்ச்சிப் பணிகள் பலவற்றையும் மத்திய அரசும், மாநில அரசும், மேற்கொண்டுள்ளன. சென்ற சில பல ஆண்டுகளாகத் தமிழக மாநில அரசு சமுதாய வளர்ச்சித் திட்டப் பணிகளில் நல்ல ஆர்வமும் அக்கறையும், ஊக்கமும் ஆக்கமும் கொண்டு செயலாற்றி வருவதன் காரணமாக ஓரளவுக்கு ஊர்ப்புறங்கள் வலிவோடும் பொலிவோடும் காட்சி அளிக்கின்றன. என்றாலும் நாம் அடைந்திருக்கும் வளர்ச்சி மிகக் குறைவு. அடைய வேண்டிய வளர்ச்சி மிகப் பெரிய அளவில் இருக்கிறது. இரண்டிற்கும்

மாண்புமிகு கல்வி அமைச்சர்
நாவலர் இரா. நெடுஞ்செழியன்

இடையே உள்ள இடைவெளியை விரைவில் அகற்றுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அண்ணல் காந்தியடிகளோடு நெருங்கிய தொடர்பு உடைய ஊர் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கம் தரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் அவர் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் முதல், அக்டோபர் 8-ஆம் நாள் வரையில் உள்ள ஒருவார காலத்தைச் சமுதாய வளர்ச்சித் திட்ட வாரமாகக் கொண்டு அதனை விழாவாகக் கொண்டாடுவது என்று தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது. கடந்த ஆண்டிலும் இதே போன்று இவ்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினோம். இந்த விழா, அறியாத மக்களுக்கு அறிவுறுத்தவும், புரியாத மக்களுக்குப் புரிய வைக்கவும், தெளியாதவர்களுக்குத் தெளிவு படுத்தவும், உணராதவர்களுக்கு உணர்வூட்டவும் ஆன வகையில் பயன்படவேண்டும். ஒவ்வொரு சிற்றூரும் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் எல்லா வசதிகளையும் பெற்றிருக்கும் படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டியது அந்தந்த ஊர் மக்களின் பெரும் பொறுப்பாகும். நமது நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் ஊர்ப்புறங்களில் வாழ்கிறார்கள். அவர்களில் 73 பேர்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஊர்ப்புறங்களில் வாழும் மற்ற 17 பேர்கள் வேளாண்மையைச் சார்ந்த தொழில்களைச் செய்பவர்களாகவும், வேளாண்மைக்கு உறுதுணை புரிபவர்களாகவும், வேளாண்மையை நம்பிவாழ்பவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் வேளாண்மைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. வேளாண்மைப் பொருளாதாரம் வளர்ந்தால் தான் மற்றத் துறைகளின் பொருளாதார நிலையும் வளர முடியும். எனவே, நம்முடைய நாட்டுப் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மையாகும். வேளாண்மை மிகுந்து வருவாய் மிகுந்தால், மக்களிடத்தில், வாங்கும் ஆற்றல் வளரும். வாங்கும் ஆற்றல் வளர்ந்தால் தொழில் உற்பத்தி பெருகும். தொழில் உற்பத்தி பெருகினால் நாட்டின் வருமானம் மிகும். நாட்டின் வருமானம் மிகுந்தால் வாழ்க்கைத் தரம் எல்லா வகையிலும் உயரும். ஆகவே தான் வேளாண்மை வளர்ச்சிக்கான எல்லாப் பணிகளையும் வேளாண்மைப் பெருங்குடி மக்களின் பேரொத்துழைப்போடு செய்யத் தமிழக அரசு திட்டங்கள் பல தீட்டி வருகிறது. வேளாண்மைக்கு ஏற்றவகையில்நிலத்தைப் பண்படுத்துதல், நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல், வாரி காணக்கூடிய பொறுக்கு விதைகளைப் பயன்படுத்துதல், ஊட்டம் தருகின்ற உரத்தைப் பயன்படுத்துதல், அழிவைத் தடுக்கும் முறையில் பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துதல் போன்ற பல வகையான திட்டங்களைச் சமுதாயத்தின் ஒத்துழைப்போடு, தீவிரமாக நடைமுறைப் படுத்தத் தமிழக அரசு முனைந்துள்ளது. விளைபொருள்களைப் பெருக்க, தமிழக அரசு உறுதுணை புரிவதோடு வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு மானிய உதவி, கடன் உதவி போன்றவற்றை எல்லா வகையிலும் அளித்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல், மக்களின் அன்றாடவாழ்க்கைக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்து தருவதிலும் சமுதாய வளர்ச்சித் துறை மிக்க அக்கறையும் ஆர்வமும் காட்டிவருகிறது. மக்களின் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகத் தேவைப்படுகின்ற குடிநீர் வசதியைச் செய்து தர வேண்டும் என்பதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்துள்ளது. 1972—73-க்குள்ளாக எல்லாச் சிற்றூர்களும் குடிநீர் வசதியைப் பெற வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகள் பல வழிகளிலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. தூய்மையான, பாதுகாக்கப்பட்ட கிருமிகள் அற்ற, நல்ல குடிநீரை விரைவாகவும், செம்மையாகவும், எளிதாகவும் ஒவ்வொரு சிற்றூரும் பேரூரும் பெற வேண்டும் என்பதற்காகவே குடிநீர் வாரியம் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. ஊர்ப் பொது மக்கள், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு இந்தப் பணியைச் சிறப்புற நிறைவேற்றத் தமிழக அரசு திட்டங்கள் பல தீட்டி வருகிறது.



பெருவழிச் சாலைகளோடு, நெடுஞ்சாலைகள் இணைக்கப்பட வேண்டும்; நெடுஞ்சாலைகளோடு, கிளைச்சாலைகள் இணைக்கப்பட வேண்டும். கிளைச்சாலைகளோடு சிற்றூர்கள் இணைப்புச்சாலைகள் மூலம் இணைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தையும் தமிழக அரசு உள்ளத்தில் கொண்டு, அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இணைப்புச்சாலைகள் நாடெங்கும் அமைந்தால்தான் போக்குவரத்து நல்ல முறையில் நடைபெறவும், விளைபொருள்கள் விரைவாக அகற்றப்படவும் வழி ஏற்படும். ஆகவேதான் சமுதாய வளர்ச்சித்துறை இணைப்புச்சாலை ஏற்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.

நாட்டின் வளர்ச்சிக்கு விளைபொருள்களைத் தரும் வேளாண்மையோடு, செயற்கைப்பொருள்களை உற்பத்தியாக்கும் தொழிற்சாலைகளும் பெரும் அளவில் ஏற்படவேண்டும். விளைபொருள், செய்பொருள் ஆகிய இரண்டினையும் பெருக்க மின்சாரத்தின் உதவி பெரிதும் தேவைப்படுகிறது. எங்கெங்கு மின்சாரத்தின் உதவி கிடைக்கிறதோ அங்கெல்லாம் வேளாண்மையும் வளருகிறது; செய்பொருள் உற்பத்தியும் பெருகுகிறது. இந்த இரண்டு வகையிலும் உற்பத்திப் பெருக்கத்தைப் பெற மின்சாரத்தை எல்லா ஊர்களுக்கும் 1972—73-க்குள் வழங்குவதென்ற தீவிரத் திட்டத்தைத் தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது.

நிலத்துக்கு அடியில் உள்ள நீரை மேலே கொண்டுவர மின்சாரத்தின் துணை தேவைப்படுகிறது. அதே போன்று சக்கரத்தைச் சுழற்ற, இயந்திரங்களை இயக்க, பொருள்களை உற்பத்தி செய்யவும் மின்சாரம்

தேவைப்படுகிறது மின்சாரத்தைப் பயன்படுத்தி, விளை பொருள், செய்பொருள் இரண்டையும் ஏராளமாகப் பெருக்க ஊர்ப்பெருமக்கள் முன் வரவேண்டும் என்று இந்த விழா நாளில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய நாட்டில் ஏழ்மை ஏராளம் இருக்கிறது. ஏழ்மை இருப்பதினால் வறுமை இருக்கிறது. வறுமை இருப்பதினால் இல்லாமை நிலவுகிறது.

இல்லாமை நிலவுவதனால் போதாமை இருக்கிறது. இந்த நான்கிற்கும் காரணம் எதுஎன்று பார்த்தால் அறியாமைதான். அறியாமைக்கு எது காரணம் என்று பார்த்தால் கல்லாமைதான். ஆகவே கல்லாமை நீங்கினால் ஒழிய அறிவுடைமை ஏற்படாது. அறிவுடைமை பெறாமல் ஏழ்மை, வறுமை முதலியவற்றை அகற்ற முடியாது. எனவே முதலில் நாட்டைவிட்டுக் கல்லாமையை நீக்குவதில் சமுதாயத்தினர் அத்தனை பேரும் பெருமுயற்சியும், பெரும் பங்கும் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கல்லாமையை நீக்க வேண்டுமானால், கல்வி நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டும். குறைந்தது 300 மக்கள் வாழ்கின்ற ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு துவக்கப் பள்ளியாவது இருக்க வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊராட்சி மன்றங்களின் உதவியோடு, ஊர்ப் பொதுமக்களின் உறுதுணையான ஆதரவோடு ஆங்காங்குக் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி வருகிறது. சமுதாயம் வளர்ச்சி பெறக் கல்வி எவ்வளவு இன்றியமையாத ஒன்றாகத் தேவைப்படுகிறது என்பதை, ஒவ்வொரு ஊர் மக்களும் உணர்ந்து நிலக்கொடை, நிதிக்கொடை, பொருள் கொடை, கல்விக் கருவிகள் கொடை வழங்க முன்வரவேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. அந்தக் குறைவற்ற செல்வத்தை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற முயற்சியிலும் தமிழக அரசு பெரிதும் ஈடுபட்டு வருகிறது. நோய் வராமல், பரவாமல் தடுக்கும் முயற்சிகள் ஆங்காங்கு எடுக்கப்பட்டு வருகின்றன. அதே போது



பற்றிக்கொண்ட நோய்களை அகற்றும் முயற்சிகளும் ஆங்காங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிற்றூர் மக்களுக்கு ஒரு சேரப் பயன்படுகின்ற வகையில் ஆங்காங்கு மருத்துவ மனைகள் நிறுவுகின்ற முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

வசதிகளையும், வாய்ப்புகளையும் பெறப் பெற, சிற்றூர்கள் பேரூர்களாக மாறுகின்றன. பேரூர்கள் நாளடைவில் நகரங்களாக மாறுகின்றன. நகரங்கள் மாநகரங்களாக மாறுகின்றன. சமுதாய வளர்ச்சி தமிழகத்தில் பரவலாகக் காணப்படுவதால் தமிழகத்தில் மட்டும் மொத்தம் 443 நகரங்கள் உள்ளன. தமிழகத்தைப் போல் இரண்டு மடங்கு மக்கள் தொகை உள்ள உத்திரப் பிரதேசத்தில் 293 நகரங்கள்தான் உள்ளன. மராட்டியத்தில் 289 நகரங்களே உள்ளன. குசராத்தில் 217 நகரங்கள்தான் இருக்கின்றன. தமிழகம் எப்படிப்பட்ட வளர்ச்சியைப் பரவலாகப் பெற்று வந்திருக்கிறது என்பதை மேற்கண்ட புள்ளி விவரங்கள் உணர்த்தும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இணைப்புச் சாலைகளுக்கென ரூ. 700 இலட்சமும், பள்ளிக் கட்டடங்களுக்கென ரூ. 300 இலட்சமும், விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீன் வளம் ஆகியவற்றுக்கு ரூ. 593 இலட்சமும், சமூகக் கல்விக்கென ரூ. 100 இலட்சமும், மகளிர், குழந்தைகள் நலனுக்காக ரூ. 120 இலட்சமும், ஊர்க் கைத் தொழில்களுக்கென ரூ. 100 இலட்சமும் செலவிடுவதெனத் தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது. ஊர்களின் வளர்ச்சி கருதி "ஊர்ப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம்" துவக்கப்பட்டிருக்கிறது.

உடல் உழைப்பையும், உற்பத்தியையும், இரண்டறக் கலக்கச் செய்து, பல வகைப்பட்ட ஊர் வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாகக் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் இத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஊர் மக்களின் நன்மைக்குரிய சமுதாய வளர்ச்சிப் பணிகளை இத் திட்டம் உருவாக்கி ஊர் மக்களுக்கு நல்ல வாழ்வு அளிக்கும் என்று நம்பலாம்.

சமுதாய வளர்ச்சிப் பணிகள் மேலும் சிறப்பாகவும், செம்மையாகவும், தன்னலமற்ற தொண்டர்களின் பேருதவியோடு நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தில்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகமெங்கும் சீரணிப் படையைத் தோற்றுவித்தார்கள். ஊர் மக்களின் ஒத்துழைப்போடு ஊர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் இந்தச் சீரணிப் படை மிகச் சிறப்பாக ஈடுபட்டு வருகிறது. சீரணிப் படையின் பணிகளை மேலும் மேலும் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு ஊர் மக்களின் நீங்காக் கடமையாகும்.

பயன் தரும்—பழம் தரும்—நிழல் தரும் மரங்களைச் சாலையின் இரு புறங்களில் நிலைநாட்டுவது, கொல்லைப்புறங்களிலும், தோட்டப் புறங்களிலும் வளர்ப்பது. பள்ளிக்கூடங்களைச் சுற்றிலும், ஓரங்களிலும் அமைப்பது போன்ற சீரிய பணிகளை ஒவ்வொரு ஊர் மக்களும் இவ்விழாவை ஒட்டிய செயலாகக் கருத வேண்டும்.

ஊர்களின் வளர்ச்சி கருதி ஊராட்சி மன்றங்களின் மூலம் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அவற்றின் மேற்பார்வையின் கீழ் 1971–72-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக நாம் ஒதுக்கியிருக்கிற தொகை ரூ.71.93 கோடியாகும். இந்தத் தொகையைச் செலவழிப்பதன் மூலம் ஏற்படுகின்ற பலன் மக்களுக்கு உருவான, உறுதியான பயன்களை உருவாக்க வேண்டும். உருவாக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு அதிகாரிகள், அலுவலர்கள், ஊராட்சித் தலைவர்கள்

ஆகியவர்களைச் சார்ந்ததாகும். எனவே, தமிழகமெங்கணும் விரிந்துள்ள ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சித் திட்ட வார விழாவில் பெரும் பங்கு கொள்வதோடு, மக்கள் தலைவர்களும், அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து விழாவைச் சிறப்புடையதாக ஆக்க வேண்டிய சீரிய பணியை மேற்கொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ''மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில்! விழாக்களின் பலனோ நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ள பொன்மொழிக்கேற்பப்பொறுப்பு உணர்ச்சியோடு கடமைகளை ஆற்றுவோமாக!

கலையேவளர்! தொழில் மேலிடு!

கவிதைபுனை தமிழா!

கடலேநிகர் படைசேர்கடு
விடநேர் கருவிகள் சேர்!
நிலமேஉழு நவதானிய

நிறையூதியம் அடைவாய்;

நிதிநூல்விளை! உயிர்நூல் உரை

நிசநூல்மிக வரைவாய்!

அலைமாகடல் நிலம்வானிலுன்

அணிமாளிகை ரதமே
அவைஏறிடும் விதமேயுன

ததிகாரம் நிறுவுவாய்!

கொலைவாளினை எடடாமிகு
கொடியோர்செயல் அறவே

குகைவாழ் ஒரு புலியே உயர்

குணமேவிய தமிழா!

தலையாகிய அறமேபுரி

சரிநீதியுதவுவாய்;

சமமேபொருள் ஜனநாயகம்
எனவேமுரசறைவாய்!

இலையே உண விலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலை எனவேமுர
சறைவாய் முரசறைவாய்!

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதற்கொப்ப முரசொலி முழக்கத்தை எல்லாரும் எழுப்புவோமாக! வாழ்க அண்ணல் காந்தியடிகளின் புகழ்!



# இதோ ஒரு பொன்னேடு!



ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தி ஒன்றும் ஆண்டு, செப்டம்பர்த்திங்கள் இருபத்தி ஆறும் நாள் தமிழக வரலாற்றுப் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய நாள்.

''சுழன்றும்ஏர்ப் பின்னது
உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை''

என்று திருவள்ளுவரால் பாராட்டப் பெற்ற உழவுத் தொழிலின் மேம்பாட்டிற்கு உதவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப் பெற்ற பொன்னாள்.

''பழைய முறைமாற்றிப்
பயிர் செய்தால்
நிறையப் பலன்
கிடைக்க வழியுண்டு;
உழக்குத்தான் மிச்சமென்னும்
இருட்டு நிலை
கிழக்கு வெளுத்ததுபோல்
மறைந்து விடும்''

என்றுரைத்த நாவலரைக் கோடி தமிழ் மக்களின் நாயகனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால், மேதகு தமிழ்நாடு ஆளுநரும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேந்தருமான திரு கே.கே. ஷா அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்ட நன்னாள்!

அந்த நாள் — மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல்—தமிழகத்தின் வரலாற்று ஏடுகளில் ஓர் இன்றியமையாத நாளாகும். மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டதுபோல், அந்த நாள் தமிழக வரலாற்றிலே பொன்னேடு ஒன்று சேர்க்கப்பட்ட நன்னாள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நன்னாள் ஏற்படுவதற்குக் காரணம் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களே என்றால் மிகையல்ல.

இந்தியாவில், முதலாவது வேளாண்மைக்கல்லூரி 1878-ஆம் ஆண்டு, சென்னைக்கு அருகில் உள்ள சைதாப்பேட்டையில் நிறுவப்பட்டது. அக்கல்லூரி 1907-ஆம் ஆண்டில் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டது. இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் தமிழ்நாட்டில்தான் துவக்க வேண்டுமென்பதற்கான முயற்சி 1958-ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. 1958-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறைச் செயலாளர் திரு. பி. பி. ஐ. வைத்திய நாதன், ஐ.சி.எஸ். அவர்களும், கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தலைவர் டாக்டர் கே. சி. நாயக் அவர்களும், அமெரிக்கா சென்று அங்கு வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் செயல்படும் நடைமுறைகளைக் கண்டறிந்து வந்து, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பது பற்றிய அறிக்கையைத் தமிழ்நாடு அரசுக்குச்சமர்ப்பித்தனர். ஆனால் அன்றைய தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியை ஒத்தி வைத்து விட்டது. அதனால் இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைப் பெறும் வாய்ப்பைத் தமிழகம் இழந்து விட்டது. ஆனால் தமிழ்நாடு அரசுக்குப் பின்பு, வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட உத்திரப் பிரதேச மாநில அரசு 16,000 ஏக்கர் நில மானியம் அளித்து, இந்தியாவின் தலைமை அமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களைக்கொண்டு இந்தியாவின் முதல் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை 1960-ஆம் ஆண்டில் துவக்கி வைத்து விட்டது.

ஆண்டுகள் ஓடின! ஆயினும் அன்றையத் தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியில் அக்கறை காட்டவில்லை. உத்திரப் பிரதேசத்தைத் தொடர்ந்து, பஞ்சாப், அரியானா, ஒரிசா, மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம், ராஜஸ்தான், மேற்கு வங்காளம், பீகார், ஆந்திரப் பிரதேசம், மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களில் மாநிலத்திற்கு ஒன்று வீதமும், மராட்டிய மாநிலத்தில் இரண்டுமாக மொத்தம் 14 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. புது டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும் பல்கலைக் கழக மதிப்பைப் பெற்றது.

இவ்வாறு இந்தியாவில் 15 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் தோன்றிய பின்பும், வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கும் முயற்சியில் முதன் முதலில் ஈடுபட்ட தமிழகத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப் பெறாதிருந்தது, தமிழ்நாட்டிற்குப் பெருங்குறையாக இருந்தது. இப்பெருங்குறையைத் தீர்க்க இன்றையத் தமிழ்நாடு அரசு முன்வந்தது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இன்றியமையாமையை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் முயற்சியால் இந்தியாவின் பதினாறுவது பல்கலைக் கழகமாகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மலர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசு பிறப்பித்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டம் 1971-ன் படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1—6—1971 முதலே செயல்படத் தொடங்கியுள்ளது. இப் பல்கலைக் கழகத்

தின் முதல் துணை வேந்தராக டாக்டர் ஜி. ரங்கசாமி அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முக்கிய நோக்கங்களாவன :—

(1) வேளாண்மையின் பல்வேறு பிரிவுகளிலும், பல்கலைக் கழகத்தால் முடிவு செய்யப்படும் வேளாண்மையைச் சார்ந்த அறிவியல்களிலும் கல்வி கற்பித்தல்.

(2) வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிவியல்களில் மேற்படிப்புப் படிக்கவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வழி செய்தல்.

(3) தொடர்புடைய அரசுத் துறையின் ஒத்துழைப்புடன் கிராமப்புற மக்களுக்கு நன்மைதரும் அறிவியல்களை விரிவுபடுத்தல்.

''வேளாண்மை'' என்றால், மண், நீர் ஆகியவற்றின் நிர்வாகத்தில் அடிப்படை மற்றும் சார்பு அறிவியல்கள், தோட்டப் பயிர்களின் உற்பத்தியும் அடங்கிய பயிர் உற்பத்தி, பூச்சி-நோய் தடுப்பு, மலர் வகை சாகுபடியும் சேர்ந்த தோட்டக்கலை, கால் நடை மற்றும் பால் பண்ணை சேர்ந்த கால்நடைப் பராமரிப்பு, மீனளம், பண்ணைக்காடு உட்பட்ட காட்டியல், மனை இயல், வேளாண்மைப் பொறியியல், மற்றும் தொழில் நுட்பவியல், வேளாண்மை மற்றும் கால்நடை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்தல் மற்றும் பதனப் படுத்தல், கூட்டுறவு, நில உபயோகம் மற்றும் நிருவாகம், கிராமப்புற மக்களின் பொருளாதார சமுதாய மேம்பாடு என்று பொருள்படும்.

எனவே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப் பட்டுள்ளது 'பசுமைப் புரட்சி' பரவிடவும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், சமுதாயத்தில் வயிற்றுக்கும் வாய்க்கும் பற்றாத நிலையில் வாழும் ஏழை உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கவும், வேளாண்மை அடிப்படையான தொழில்கள் மலரவும், வேலை வாய்ப்பினை விரிவாக்கவும் வழிகோலும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ், பின்கண்ட நிலையங்கள் செயல்படுகின்றன:

1. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.

2. வேளாண்மைக் கல்லூரி, மதுரை.

3. வேளாண்மைக் கல்லூரி கோயம்புத்தூர் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள எல்லா ஆராய்ச்சி, மற்றும் கல்விப் பிரிவுகள்.

4. மதுரை வேளாண்மைக் கல்லூரியில் உள்ள எல்லா ஆராய்ச்சி மற்றும் கல்விப் பிரிவுகள்.



பல்கலைக் கழகத துவகக விழாவில் முதல்வரும் வேளாணமை அமைச்சரும்.

5. ஒட்டுவீரிய கம்புத் திட்டம், சத்தியமங்கலம்.

6. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்.

7. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், ஆளியாறு நகர்.

8. நிலக்கடலை ஆராய்ச்சி நிலையம், பொள்ளாச்சி.

9. ஆப்பிள் ஆராய்ச்சி நிலையம், கோடைக்கானல்.

10. பழ ஆராய்ச்சி நிலையம் பெரியகுளம்.

கோவை வேளாண்மைக் கல்லூரியிலும், மதுரை வேளாண்மைக் கல்லூரியிலும் இதுவரை ஏறத்தாழ 4,800 பேர் படித்து பி.எஸ்சி (வேளாண்மை) பட்டம் பெற்றுள்ளார்கள். சென்ற 13 ஆண்டுகளில் கோவை வேளாண்மைக் கல்லூரி மட்டும் 535 எம்.எஸ்சி. (வேளாண்மை) பட்டதாரிகளையும், 21 பி.எச்டி. பட்டதாரிகளையும் உருவாக்கியுள்ளது. சென்ற 3 ஆண்டுகளில் 16 எம்.எஸ்.சி (வேளாண்மை) பட்டதாரிகளை மதுரை வேளாண்மைக் கல்லூரி உருவாக்கியுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது :—

## பொன்னேடு

''இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழா நடைபெறும் இந்நாள், தமிழக வரலாற்றுப் பொன்னேட்டில் இன்றியமையாத நாள்.

இந்தியாவில் 15 வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இது 16-வது வேளாண்மைப் பல்கலைக் கழகமாகும். 16 என்பது தமிழகத்தில் போற்றிப்பாராட்டப்படும் எண்ணாகும். புதிதாகத் திருமணம் முடித்த தம்பதிகளை வாழ்த்துகிறபோது பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ் என்று வாழ்த்துவது வழக்கம். அந்தப் பதினாறு என்பது

பிள்ளைகள் அல்ல! பேறுகள்! அது போல் நான், 16-வது பல்கலைக் கழகத்தைப் பெறும் தமிழகம் அந்தப் பேறுகளைப் பெற்றுப் பெரு வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

தமிழகத்தில் வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன. வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைய வேண்டும் என்பது என் நீண்ட நாள் பேரவா.

## பெருமை

முன்பெல்லாம் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களை எந்தக் கல்லூரி மாணவர் என்றால், மருத்துவக் கல்லூரிகளிலும், வேறு கல்லூரிகளிலும் இடம் கிடைக்காததால் இறுதியாக வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் நாணி, தலையைக் குனிந்து கொண்டு தங்கள் கல்லூரியைச் சொல்வார்கள். ஆனால் இனிமேல் இந்த மாணவர்கள் தலை நிமிர்ந்து பெருமையுடன் பல்கலைக் கழக மாணவர்கள் என்று சொல்லலாம். இன்று நம் தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாகத் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படுகிறது என்று மாணவர்கள் பெருமையுடன் சொல்லிக்கொள்ளலாம்.



இந்தியாவின் 16-வது வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

நான் கல்லூரியில் படித்தது இல்லை என்றாலும் அடிக்கடி கல்லூரிக்குச் சென்றுவருகிறேன். ஆகவே, நான் இங்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மற்றையக் கல்லூரி மாணவர்களின் சீருடையை விட, வேளாண்மைக் கல்லூரி மாணவர்களின் உடைப் பொருத்தத்தைப் பார்க்கப் பார்க்கக் கண் குளிர்கிறது. உடையிலுள்ள பசுமை நாட்டில் வராதா என்ற ஏக்கம் தோன்றுகிறது. அவர்களின் பசுமையான உடைகளைப் போன்று தமிழகமெங்கும் பசுமைப் புரட்சி பரவிடாதா என்ற ஆசை என்னுள்ளே எழுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்கள் அதற்கு முயற்சி செய்ய வேண்டும். வேளாண்மைத் துறையில் புதுமைக் கருத்துக்கள் பூத்துக் குலுங்கிடவும், புது முயற்சிகள் செழித்திடவும் இந்தப் பல்கலைக் கழகம் உதவ வேண்டும்.

இந்தப் பல்கலைக் கழக வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள நான், லண்டன் மாநகரில் மாசெபெர்குசன் நிறுவனத்தினர் எனக்கு அன்பளிப்பாக அளித்த டிராக்டரை, உச்சவரம்புக்கு உட்பட்ட எனது சொந்த நிலத்தில் கூடப் பயன்படுத்தாமல் இந்தப் பல்கலைக் கழகத்துக்குக் கொடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இலச்சினையில் அகல் விளக்கு இடம் பெற்றுள்ளது. மனையியலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அடங்கும் என்பதை இது காட்டுகிறது.

இதில் மீன் சின்னம் இடம் பெற்று இருப்பது மீன்வளத் துறையும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருப்பதற்கு அடையாளம். எவ்வாறு நாற்று நட்டுப் பயிர் வளர்க்கின்றோமோ அதுபோல, மீன் குஞ்சுகளிலிருந்து மீன் உற்பத்தியைப் பெருக்குவதையும்குறிக்க அதில் மீன் இடம் பெற்றுள்ளது.

இதிலுள்ள மாடு வேளாண்மைத் துறைக்கும் கால்நடைத் துறைக்கும் உள்ள இணைப்பைக் காட்டுகிறது.

மரமும் இலச்சினையில் இடம் பெற்றுள்ளது. தனிமரம் தோப்பாகாது என்றாலும், அதிலுள்ள மரம் காட்டிலாகா வேளாண்மைத் துறையுடன் இணைந்திருப்பதைக் காட்டுகிறது.

மேலும் சின்னத்தில் ஏரும், டிராக்டரும் இடம்பெற்றுள்ளன. டிராக்டர் வருவதால் வேலை வாய்ப்பு இல்லாமல் போய் விடுமோ என்று உழைக்கும் மக்கள் பயப்படத் தேவையில்லை. குறிப்பிட்டஅளவுவேளாண்மைவளர்ச்சி ஏற்படும் வரை, ஏரும் நிலைத்து இருக்கும் என்பதைக் குறிக்கவே ஏரும் இடம் பெற்றுள்ளது.

இவ்வளவுக்கும் மத்தியிலே சூரியன் இடம் பெற்றுள்ளது. இது அரசியல் ரீதியாக அல்ல—இயற்கையின் ரீதியாக என்பதை நாட்டிலுள்ள நல்லோர்—நல்லெண்ணத்தோர் உணர்வார்கள்.

இவ்வாறு இச்சின்னம் வேளாண்மைக் குறிக்கோளை நாட்டிற்கு உணர்த்தும் வண்ணம் உள்ளது.

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்கள் பழமைப்பட்டவர்கள். அவர்கள், விஞ்ஞானத்தால் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ள புதுமைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். 'வரப்புயர வயல் உயரும்' என்பதற்கேற்ப வேளாண்மைத் துறையில் புதுமை உயர்ந்தாக வேண்டும். சத்துணவுத் துறையிலும், உணவு உற்பத்

தியைப் பெருக்கித் தன்னிறைவு பெறுவதிலும்—தன்னிறைவு பெறுவதில் மட்டுமல்ல—மற்ற மாநிலங்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் விதத்தில் தன்னிறைவு பெறவும், புதிய முறைகளை உழவர்கள் கையாள வேண்டும். மற்ற நாடுகளில் வேளாண்மைத் துறை விஞ்ஞான வேகத்தில் வளர்ந்துள்ளதுபோல, நமது நாட்டிலும் வளர, புதிய புதிய கண்டுபிடிப்புகளைப் பல்கலைக் கழகத்தில் கண்டுபிடிக்க வேண்டும். புதிய வேளாண்மை முறைகளைக் கண்டுபிடிப்பதற்கு வேளாண்மைப் பல்கலைக் கழக மாணவர்கள் பாடுபடுவார்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது.

தமிழகத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணம் எனக்கு, நான் முதலமைச்சர் ஆன பின்பு ஒரு சில திங்கள் கழித்து பஞ்சாப் மாநிலம் சென்ற போது ஏற்பட்டது. பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மனையியல் கட்டடத்தைத் திறக்கும்படி எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். அப்போது தான் நான் பஞ்சாப் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களையும் பேராசிரியர்களையும் சந்தித்துப் பேசினேன். தமிழகத்திலும் அப்படிப்பட்ட பல்கலைக் கழகத்தைத் துவக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அப்போது ஏற்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தின் மக்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அளித்து வரும் மதிப்பு, பெருமதிப்பாகும். வேளாண்மைப் பல்கலைக் கழகம், கிராம சமுதாயத்தை எவ்வாறு மாற்றமுடியும் என்பதை நேரில் கண்டேன். பஞ்சாப் கிராமங்களில் மோட்டார் கார்களைவிட அதிக டிராக்டர்களைக் கண்டேன். காலை முதல் மாலை வரை வயல் வெளியில் உழைக்கும் மக்கள், மாலையில் நாடகங்களுக்கும், திரைப்படங்களுக்கும் டிராக்டர்களில் குடும்பத்துடன் குதூகலமாகச் செல்லுகிறார்கள். வேளாண்மை எந்த அளவிற்குப் பஞ்சாப் மாநிலத்தில் பெருகியுள்ளது என்பதை அவை



முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி
முல்லைக்குப் பேர் கொடுத்தார் கலைஞர்

எடுத்துக் காட்டின. அதுபோலத் தமிழ்நாட்டிலும் வேளாண்மை வளர்ச்சி பெற வேண்டும்.

அங்கு, கிராமங்களில் நிறைய வேளாண்மைக் கருவிகள் பழுது பார்க்கும் சிறுசிறு தொழிற்சாலைகள் வைத்துள்ளனர். அதைப் போல, வேளாண்மை உற்பத்தி சம்பந்தமான தொழிற் கருவிகளை உற்பத்தி செய்யவும், பழுது பார்க்கவும் சிறு சிறு தொழிற்சாலைகளை நாமும் தொடங்க வேண்டும் என்பதற்காக, பட்டம் பெற்ற 3,000 பொறியியல்பட்டதாரிகள் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் துவக்க முன்வந்தால் தமிழ்நாடு அரசு உதவிசெய்யும் என்று நிதி நிலை அறிக்கையிலேயே கூறி இருக்கிறேன். பஞ்சாப் மாநிலத்தைப் போன்று தமிழகத்தில் வேளாண்மைத் துறையில் புரட்சி ஏற்படப் புதுமைகளை வரவேற்றே ஆக வேண்டும்.

1966-ஆம் ஆண்டில் 5 இலட்சம் ஏக்கரில் மட்டுமே மிகுபயன் தரும் பயிர் வகைகள் பயிரிடப்பட்டன. இப்போது 40 இலட்சம் ஏக்கரில் மிகு பயன் தரும் பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

இப்படிப்பட்ட வேகமான முன்னேற்றத்தைப் பரப்ப, வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரும் மாணவர்கள் பாடுபட வேண்டும். புதுமையை உழவர்களுக்குச் சொல்லித் தர மாணவர்கள் பயன்படவேண்டும்.

நமது நாட்டுப் பழமொழி ''ஓதுவார் எல்லாம் உழுவார்—தம் தலைக் கடைக்கே'' என்று கூறுகிறது. அதற்கேற்பப் படித்தவர்கள் உழவர் வீட்டுப் படியில் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். அந் நிலை ஏற்படாவிட்டாலும் படித்தவர்கள் உழவுத் தொழிலில் நாட்டம் செலுத்தவேண்டும்''.

இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினர்.

## தலைமை உரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கிய மேதகு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் தமது தலைமை உரையில் கூறியதாவது:

''பசுமைப் புரட்சி காண விழையும் தமிழகத்தில், வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப் பட்டிருப்பது மிகவும்முக்கியமான சாதனை ஆகும். வேளாண்மை உற்பத்திப் பெருகி விலைகட்டுப்பாட்டிற்குள் இருந்தால்தான்,

நமது பொருளாதாரம் சீராக முன்னேறும். உணவுப் பொருள்கள், பஞ்சு, எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் தான் நமது வளர்ச்சி அடங்கி உள்ளது. வேளாண்மை உற்பத்தியில் இன்று மிகப்பெரிய சாதனை செய்துள்ளோம். தேவைக்கு மட்டும் உற்பத்தி செய்தால் போதாது. உணவு தானியங்களையும், இன்றியமையாத இதரப் பொருள்களையும் சேமித்துவைக்க வேண்டும். அப்போதுதான் தன்னிறைவு பெறுவதுடன், விலைவாசியையும் கட்டுப்படுத்த முடியும்.

இந்தியாவிலேயே வேளாண்மை வளர்ச்சியில் தமிழகம் தான் முன்னிலையில் நிற்கிறது! இங்குள்ள உழவர்கள் மிகவும் முற்போக்காளவர்கள்! அறிவியல் அடிப்படையான வேளாண்மை வளர்ச்சியில் தீவிரம் காட்டி வருகின்றனர்! இந்தியாவில் உள்ள இளம் வேளாண்மைப்பல்கலைக்கழகமாக இது இருந்தாலும், இதன் சாதனைப் பாராட்டத் தக்கது. இந்தப் பல்கலைக் கழகத்திற்கு, வெளிநாட்டு மாணவர்களும், இந்தியா முழுவதிலும் இருந்து மாணவர்களும் வர ஆர்வத்துடன் உள்ளனர்'' என்று கூறினார்.

## வரவேற்பு உரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துவக்க விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்று மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் உரையாற்றினார். அவர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துவக்க விழாவை, தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விழா வென்று குறிப்பிட்டார். அவர், ''இப் பல்கலைக் கழகத்தில் பயிலுகின்றவர்கள் கிராம மக்களுக்குப் பணிபுரிய வேண்டும் என்ற அடிப்படை நோக்குடன் பயில வேண்டும்'' என்றும், ''கற்ற கல்வியை வைத்துக் கொண்டு தனியாக நிற்கமுடியும் என்ற நினைவுடன் பயிலவேண்டும்'' என்றும் மாணவர்களைக் கேட்டுக் கொண்டார்.

''வேளாண்மையைச் சேற்றோடு புரளவேண்டிய ஒரு தொழிலாகக் கருதாமல், கிராம மக்களோடு ஒன்றி அவர்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்'' என்றும் அவர் மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

## சிறப்பு மலர் வெளியீடு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டதை யொட்டி அச்சிடப் பெற்றிருந்த சிறப்பு மலரை மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டு உரையாற்றுகையில், ''1966-67-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் உணவு தானிய உற்பத்தி 54 இலட்சம் டன்களாக இருந்தது. இப்பொழுது 70 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் ஆராய்ச்சியும், கண்டு பிடிப்புகளுமேயாகும். கண்டு பிடிப்புகளும், ஆராய்ச்சிகளும் குடத்திலிட்ட விளக்காக இல்லாமல், குன்றின் மேலிட்ட விளக்காக இருக்க வேண்டும்'' என்றார்.

''இயற்றலும் ஈட்டலும்
காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு''

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள முயற்சியில் ஈடுபட்டுள்ள அரசுக்குத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் துணைபுரியும் என்றும், குறிப்பிட்டார்.

## பொருட்காட்சி திறப்பு விழா

வேளாண்மைப் பொருட்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு அமைச்சர் திரு அன்பழகன் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். அவர் ''வேளாண்மைத் துறை நன்கு வளர்ந்தால்தான் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வேலையுண்டு'' என்று குறிப்பிட்டார். பல பயிர், தொடர்ப் பயிர் ஆகியவைகளின் அவசியத்தை விளக்கினார். படிப்பறிவு இல்லாத மக்களிடையே, வேளாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை, புது முறைகளைப் புகுத்த ஆங்காங்கே பொருட் காட்சிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## பாரிமுல்லை

மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ''பாரி'' என்று மாண்புமிகு முதலமைச்சரால் பயிரிடப்பெற்றப் புதியரக முல்லையை வெளியிட்டு உரையாற்றினார். அவர் தமது உரையில் மைய அரசு இரசாயன உரங்களின் விலையை ஏற்றிய பின்பும், ஏழை உழவர்களின் நன்மையைக்கருதி பழைய விலையிலேயே இரசாயன உரங்களை விற்பனை செய்து வருவதால் எற்பட்ட நட்டம் ருபாய் 2 கோடியைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

## அறிவாலயம்

இவ்வாறு சீரோடும் சிறப்போடும் துவக்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஏழை உழவர்களின் வாழ்வையும் வளப்படுத்தப் போவதால், ''ஏழையின் சிரிப்பிலே இறைவனைக்காண்போம்'' என்ற பேரறிஞர் அண்ணாவின் வழி நடக்கும் டாக்டர் கலைஞரின் அரு முயற்சியால் உருவான அறிவாலயமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!



கோ. 7. மொச்சை


மிருகக் கொழுப்பு கலவாதது. முழுக்க முழுக்க தாவர எண்ணெ தயாரிப்பு.
கோபுரம்
சோப்
பொங்கும் நுரைதரும்
பொலிவான வெண்மை
தும்பைப் பூப்போன்ற
தூய்மையான சலவை
கோபுரம் மார்க்
GOPURAM BRAND
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் துறையின் தயாரிப்பு.


நெய்வேலியும்...நமது நாடும்
நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.
யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.
மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.
சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.
தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலென்ட் ஃபினல் கலவை.
நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேட்டர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஐவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.
NLC
நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி—1
FDSNLC946TM

16-10-3




# வழங்கியோர் பட்டியல்

| | | |
|---|---|---|
| முந்திய இதழின்படி தொகை | 17,04,636 | 21 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளர் | 14,971 | 84 |
| மதுரை மாவட்ட ஆட்சியாளர் | 30,279 | 76 |
| நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் | 2,782 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் | 17,891 | 50 |
| தர்மபுரி மாவட்ட ஆட்சியாளர் | 21,336 | 00 |
| செங்கற்பட்டு உதவி ஆட்சியாளர் | 3,448 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீவைகுண்டம். | 2,435 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பூந்தமல்லி. | 1,565 | 00 |
| வணிக வரித்துணை அலுவலர், தஞ்சை-2. | 2,300 | 00 |
| நகர ஊராட்சி இலுப்பூர்-திருச்சி மாவட்டம் நிர்வாக அலுவலர். | 101 | 00 |
| மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், திருநெல்வேலி. | 164 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலரும், ஊராட்சி அலுவலரும், பூண்டி, | 50 | 00 |
| நகராட்சி ஆணையர், தூத்துக்குடி | 241 | 00 |
| ஸ்ரீ பாடலீஸ்வரர் தேவஸ்தானம், குமாரகுப்பம், வளவனூர், தென்னார்க்காடு மாவட்டம். | 100 | 00 |
| தருமகர்த்தா, ஸ்ரீஅன்பநாக ஈஸ்வரர் தேவஸ்தானம், கிடங்கல் கோட்டை, திண்டிவனம். | 1,000 | 00 |
| சேலம் மாவட்ட ஆட்சியாளர் | 9,636 | 50 |
| செயின்ட் ஜோசப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம். | 175 | 00 |
| இந்தியன் நேவி குரு வெஸ்டன் கமாண்டு, பம்பாய். | 562 | 57 |
| திரு அருணா நமசிவாயம், கொப்பம்பட்டி. | 5 | 00 |
| துணைப்பதிவாளர், திருப்போரூர், செங்கற்பட்டு மாவட்டம். | 25 | 00 |
| கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப்பணி, தூத்துக்குடி-2. | 100 | 00 |
| லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனைச் சங்கம். | 100 | 00 |
| ஸ்ரீ திருவிக்ரமசாமி தேவஸ்தானம், திருக்கோயிலூர், தென்னார்க்காடு மாவட்டம். | 250 | 00 |
| மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதார நிலையம், நாகலாபுரம். | 20 | 00 |
| வீர ஆஞ்சனேய சுவாமி தேவஸ்தானம், திருப்பாதிரிப்புலியூர், கடலூர்-2. | 200 | 00 |
| மாவட்டக் கல்வி அதிகாரி, கோவில்பட்டி. | 85 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி. | 1,600 | 00 |
| கிராமவளர்ச்சி இயக்குநர், சென்னை-1 | 88,100 | 00 |
| துணை வணிகவரி அலுவலர், நெல்லை மாவட்டம். | 1,113 | 56 |
| எம். ஹரிகரன், தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, அரசம்பட்டு. | 20 | 00 |
| நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, தூத்துக்குடிக் கோட்டம். | 1,000 | 00 |
| கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை, தூத்துக்குடி-2. | 50 | 00 |
| துணை வணிகவரி அலுவலர், அம்பாசமுத்திரம். | 1,475 | 00 |
| திரு ஜி. சுப்பிரமணியம், தாசில்தார், ஸ்ரீபெரும்புதூர். | 2,114 | 56 |
| மொத்தத் தொகை | 19,09,933 | 50 |

# நீலமலையில் ஒளிவெள்ளம்

**1971** செப்டம்பர் திங்கள் 25-ஆம் நாள் பச்சைப் பட்டாடை உடுத்துப் பூமித்தாய் புதுமணப் பெண் கோலம் கொண்டு-எழிலார் சிற்பமாக, நெஞ்சைக் கிறங்கவைக்கும் வஞ்சியாக-நீலகிரி மாவட்டமே விழாக்கோலம் கொண்டுவிட்டது. தமிழன்னையின் ஒளி மகுடமான உதகை உவகையால் பூரித்து அழகு நடம் புரிந்து கொண்டிருந்தாள்.

இலக்கியம் படைக்கும் மலை நாடு. இன்பத் தேன் சொரியும் எழிற் பூமி. மலைநாட்டு மண் மாதாவின் மடியிலே தவழ்ந்து விளையாடும் தமிழி னத்தின் பழங்குடி மக்கள் உள்ளத்தில் உவகை யுடன், ஒளி வீசும் கண்களுடன் தமிழ்த்தாயின் தலைமகனை, டாக்டர் கலைஞரை, தமிழக முதல் வரைக் காண-அவருடைய தெள்ளு தமிழ் உரையைக் கேட்கப் பல்லாயிரக்கணக் கில் கூடிவிட்டனர்.



மேட்டுக் குடியினருக்கு மட்டும்தான் உதகை சொந்தமா? அல்ல; அல்ல! ஒட்டைக் குடிசையில் வாழும் உழைப்பாளர் பெருமக்களுக்கும் அது சொந்தம் எனப் பார் அறியப் பறை சாற்றக் கூடிவிட்டனர் பாமர மக்கள் பல்லாயிரக்கணக் கில்!

நீலகிரி மாவட்டம் அனைத்துக் கிராமங்கள் மின் இணைப்பு முழுமை விழா—உதகை காணாத ஒரு புதுமை விழா. மேட் டுக் குடியினரின் விழா பல அங்கே நடந்திருக்க லாம். ஆனால், இன்று தான் ஒட்டைக் குடிசை யில் வாழும் மக்களின் உயர்வுக்கு ஒரு விழா நடத்தப்படுகிறது. இது ஏழை எளிய மக்களின்-சாமான்ய மக்களின் அரசு என்ற இலட்சியம், செயல் வடிவம் பெற்றுத் திகழும் ஒப்பரிய பெரு விழா.

நீலவானம், நீல மலை பச்சைப் பசேலென்று பசுமை கொஞ்சும் எழில் பூமி. எங்கு பார்த்தாலும் மின் விளக்குகள், அழகுப்பந்தல், வண்ண வண்ணக் கொடிகள், கொள்ளை அழகுக் குவியல்!

''பொன்சாரம் இட்டிழைக்கும் பூமான்கள்
வீட்டுக்கே
மின்சாரம் போகுமென்ற நிலை மாற்றி
எழுபத்தி ரண்டுக்குள் எங்கணுமே மின் இணைப்பு
என் தமிழ்த் திருநாட்டில் ஏற்படவே உழைக்கின்
றோம்''

தமிழக முதல்வரின்-கலைஞரின் கனவு நன வாகிக் கொண்டு வரு கிறது.

மின்வாரியத் துறை யினர் ஏற்பாடு செய் திருந்த நினைவுச் சின் னத்தை முதல்வர் திறந்து வைத்தார். முதலமைச்சர் அவர்கள் மின்சார சுவிட்சை அழுத்திய உடனே திரை விலகி, ஒரு கிராமத்தில் மின் வசதி செய்யப்பட்டுள்ளது போன்றும், அக் கிராமத் தின் மேல் பகுதியில் அண்ணா அவர்கள் ஆசி கூறுவதுபோலவும், அந் தக் கிராமத்திற்கு மின் வசதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைப்பது போன் றும் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னம் தெரிந் தது. விழாவிற்கு வந் திருந்த மக்கள் கூட்டம்

அக்காட்சியைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியில் மிதந்தது!

அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு அளிப்பதிலே செங்கை மாவட்டம் முந்திக் கொண்டது; ஆலந்தூரிலே அழகு விழா எடுத்துப்பெருமை சேர்த்துக் கொண்டது. இரண்டாவது இடத்தை நீலகிரி மாவட்டம் தட்டிக் கொண்டது. நெல்லையில் இந்தப் பணி முற்றுப் பெற்று விட்டது என்ற தேனான செய்தி விழாப் பந்தலில் அறிவிக்கப்படுகிறது.




''அடுத்து நெல்லையில் அனைத்துக் கிராமங்கள் மின் இணைப்பு முழுமை விழா நடைபெறும். அதற்கடுத்த திங்களில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் இதே மாதிரி விழா நடைபெறலாம். இப்படித் தமிழகத்தில் திங்கள் தோறும் மின் இணைப்பு முழுமை விழாக்கள் நடைபெற இருக்கின்றன.

''1972-க்குள் தமிழகத்தில் மின் இணைப்பு இல்லாத கிராமமே இல்லை'' எனும் நிலையை நாம் வேகமாக அடைந்து கொண்டிருக்கின்றோம்.

''இந்தியாவிலே இதில் நமக்குப் பெருமை உண்டு.'' சிலர் கேட்கக் கூடும்.— 'இந்தியாவிலேயே முதன் முதலாக எல்லாக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தந்தது அரியானா மாநிலம் தானே ? இதை அறியாதவரா கருணாநிதி?'' என்று !

''ஆனால், அரியானா மாநிலம், இந்த நீலகிரி மாவட்டமும் செங்கை மாவட்டமும் இணைந்தால் எவ்வளவு பெரிய இடமாக இருக்குமோ அவ்வளவு பெரிய இடம்தான் !

''ஆனால், நாமோ நாலரைக்கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய மாநிலத்திற்கு ஒளி வழங்கும் திட்டத்தில் வெற்றி பெற்றிருக்கிறோம். இதற்காகப் பணியாற்றிய மின்துறை அமைச்சர் அவர்களையும், பொறியாளர்களையும், கணக்காளர்களையும், பிற தொழிலாளர்களையும் அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.''

கலைஞரின் உரை கேட்டு எழுந்த கரவொலி அந்த நீலகிரி மலையையே அதிர வைக்கிறது.

தமிழகத்தின் உச்சியில் நின்று வீரக் குரல் எழுப்புகிறார் தாயகத்தின் முடிசூடா மன்னன் !

''கடந்த 33 ஆண்டுகளில் தமிழகத்தில் 40 சதவிகிதம்தான் மின் இணைப்புச் செய்யப்பட்டது. ஆனால் கழக அரசில் நாலைந்து ஆண்டுகளில் 60 சதவிகித மின் இணைப்புத்தர இருக்கிறோம்.

''திருச்சியிலிருந்து விமானமூலம் அமைச்சர்கள் அன்பிலும், மாதவனும் நானும் வந்தபொழுது, தென் ஆர்க்காடு மாவட்டத்திலிருந்து சென்னை வரை ஒரே மின் விளக்கு மயமாக்கிக் கீழே இருப்பதை நான் அவர்களுக்குக் காட்டினேன்.

''வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் அனைத்தும் பூமியில் கொட்டிக் கிடக்கின்றனவோ-ஒளி விடுகின்றனவோ-என எண்ணும் வகையில் அக்காட்சி இருந்தது.

''சாதாரணமானவர்களுக்காக, பிற்பட்ட மக்களுக்காக உழைப்பவர்கள் என்று கூறியவர்கள்; படகர், தோடர், ஆகியோரது முன்னேற்றத்திற்காக உயிரைப் பணயம் வைத்துப் பாடுபடுவோம் என்று கூறியவர்கள் நாங்கள். இப்படிப்பட்ட அரிய சாதனையைச் செய்ய முடிந்ததே என இதயம் பெருமிதத்தால் விம்மிற்று'' என்று உள்ளத்தைத் திறந்து காட்டுகிறார் கலைஞர். கூடியிருந்த மக்கள் கூட்டம், கரவொலி எழுப்பி அவருடைய ஒவ்வொரு சொல்லையும் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக நிமிர்ந்து நிற்கிறது.

எத்தனை சிரமமானதாக இருந்தாலும் சரி-இடர்கள் எத்தனை ஏற்படினும் சரி-ஏழை எளிய மக்களின் ஏற்றமே தமிழக அரசின் இலட்சிய கீதம். நீலகிரி மாவட்ட மின் வசதி முழுமை விழா அதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு !

நீலகிரி மாவட்டம் தமிழகத்தின் மேற்கு ஓர எல்லைக் கோட்டில் அமைந்துள்ள சிறு மாவட்டம். தமிழகத்தின் ஒளிமகுடமெனத் திகழும் இந்த மலை நாட்டில் எங்கு நோக்கினும் இயற்கை எழில்! சிந்துபாடும்—சிற்றாறு, சீறிடும் காட்டருவி, கனிகுலுங்கும் பழத்தோட்டங்கள், கண்கவர் மலர்ச் சோலைகள் இன்னபிற இயற்கைச் செறிவு எங்கணும் நிறைந்து, அழகின் திருவுருவாய் இயற்கை அன்னை எழில் நடம் புரியும் கவின்மிகு காட்சிகள் நிறைந்த மாவட்டம்.

ஆனால், அடர்ந்த காடுகளும், மலைகளும், பாதை வசதி அற்றதும், பரவலுமான கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் கம்பிகளை இழுக்கும் பணி மிகவும் கடினமானது. சில இடங்களில் காட்டு யானைகள், நிறுத்தப்பட்ட கம்பங்களைச் சாய்த்தும் கீழே தள்ளியும் மின் பணியாளர்களுக்கு இன்னல் பல விளைவித்தன. தொடர்ந்து மழை பெய்யும் பூமி. பாதை வசதிக் குறை—இடர்ப்பாடுகள் பல இருந்தும், எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடித்து விட்டது மின் வாரியம். நீலகிரி மாவட்டத்தில் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கும் திட்டத்தைச் செய்துமுடிக்க ஆன செலவு சுமார் 40 இலட்சம் ரூபாய்!

2,542 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 4.913 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட நீலகிரி மாவட்டத்தில் 870 கிராமங்களும் சிற்றூர்களும் அடங்கியுள்ளன.

புதிய அரசு பொறுப்பேற்று, சென்ற நான்காண்டுகளில் மட்டும் இந்த மாவட்டத்தில் 708 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் அதாவது மொத்தத்தில் 81 சதவிகிதம் மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. 1967 வரை இந்த மாவட்டத்தில் மின் இணைப்புத் தரப்பட்ட கிராமங்கள், சிற்றூர்கள் 48 தான்! கடந்த நான்காண்டுகளில் மட்டும் மாவட்டத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் இணைப்பு அளிக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது. அதுவும், சிறப்பாக 1—10—1969 முதல் 31—7—1971 வரை, அதாவது 1 வருடம் 10 மாதங்களில் மட்டும், இந்த மாவட்டத்தில் 481 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் தெரு விளக்குகளுக்கான மின் இணைப்புத் தரப்பட்டு, கலைஞரின் ஆட்சியில் இன்று நீலகிரி மாவட்டத்தில் ஒளி பெறாத கிராமங்களில்லை—சிற்றூர்களில்லை என்றதொரு சாதனையை ஈட்டித்தந்துள்ளது, மின் வாரியம்.

இவை தவிர, அம்மாவட்டத்தில் 43 அரிசனக் குடியிருப்புகளுக்கும் 100 மலைவாழ் மக்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்கும் மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் மின் உற்பத்தி 1933-ல் தொடங்கியது. அன்றிலிருந்து 1966 வரை இடையிலான 33 ஆண்டுகளில் 20 ஆயிரம் கிராமங்கள்தான் மின் வசதி பெற்றன.

ஆனால் 1967-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று நாலரை ஆண்டுகளில் மட்டும், 24 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் மின் வசதி பெற்றுள்ளன.

இத்தகைய மாபெரும் சாதனைக்கும், சிறப்பான முன்னேற்றத்திற்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு ஓ. பி. இராமன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும் பேரார்வமும், மக்களுக்குத் தொண்டு புரியவேண்டுமென்ற நல்லெண்ணமும், இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு எத்தனை இடர்வரினும் துவண்டு விடாமல் இடையறாது பாடுபட்டுவரும் மின் வாரியத்தைச் சேர்ந்த அனைவருடைய உழைப்பும்தான் காரணம் என்பது வெள்ளிடை மலை.

உழைப்பதிலே மட்டுமல்ல, நன்கொடையளிப்பதிலும் மின் வாரியத்தைச் சார்ந்த அனைவரும் முன்னணியில் உள்ளார்கள் என்பதைப் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அவர்கள் அளித்துள்ள நன்கொடை எடுத்துக் காட்டுகிறது. முதல் தவணையாக ரூபாய் 2,02,000 நிதியளித்த மின் வாரியம், இரண்டாவது தவணையாக 31,000 ரூபாயை நீலகிரி மாவட்ட மின்வசதி முழுமை விழாவின் போது வழங்கியுள்ளது.

உதகையில் அன்று மலர்க் கண்காட்சி திறப்பு விழா—மின் இணைப்பு முழுமை விழா—வணிக வரி அலுவலகத் திறப்பு விழா இப்படி ஒரே விழாக் கோலம்!




பணி முடிந்து, உள்ளம் துள்ள, மலையை விட்டுக் கீழே இறங்குகிறோம். வளைந்து வளைந்து செல்கிறது பாதை; வண்டியும் வளைந்து வளைந்து கீழே கீழே இறங்கிக் கொண்டே இருக்கிறது. வளைவான பாதையின் இருமருங்கிலும் எங்குப் பார்த்தாலும் பசுமை வளம் கொழிக்கிறது; எழில் கொஞ்சுகிறது.

உதகையிலே மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய கலைஞரின் கருத்தோவியம் இதயத்திலே ரீங்காரமிடுகிறது...

‘‘மலர்களில் மணமுள்ள மலரிருக்கும்; மணமில்லாத மலரிருக்கும். சில மலர்கள் அழகாக இருக்கும். மணம் இருக்காது. சிலமலர்களில் மணம் இருக்கும். அழகு இருக்காது.

அழகும் மணமும் உள்ள மலர்களைப் பறிக்கக் கரம் நீட்டும்போது முள் குத்தும்.

இந்த நாட்டில் ஏழை எளிய-தாழ்த்தப்பட்ட பின்னடைந்த மக்கள் மணமில்லாத மலர்களாக இருக்கிறார்கள். ஆனால், நல்ல மனம் உள்ளவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். மணமில்லாத அவர்கள் வாழ்க்கையில் மணத்தை ஏற்றுகின்ற பொறுப்பை தி.மு. கழக அரசு ஏற்றிருக்கின்றது''

கலைஞரின் சொல்லோவியம் கேட்டு நெஞ்சு இனிக்கிறது.

வளைந்து வளைந்து செல்லும் மலைப்பாதை. ஒரு திருப்பம். சற்றுத் தள்ளி ஒரு புள்ளிமான் ஓடுகிறது. அதன் பின்னால், ஒரு மலைவாழ் மங்கை. என் கூட வந்த நண்பருக்கு ஒரே மகிழ்ச்சி! இப்பொழுதுதான் அவர் 'ஊட்டிக்கு' முதல் தடவையாக வருகிறார்.

மானைக்கண்டு வண்டியிலிருந்து துள்ளி எழுகிறார் அவர். சென்னையில் மிருகக் காட்சிச் சாலையில்தான் அவர் மானைப் பார்த்திருக்கிறார்.

இயற்கை அன்னை தாலாட்டுப் பாடும் இந்த நீலகிரி. . . அதனுடைய ஒப்பற்ற எழில். . .

என் நெஞ்சு எங்கெங்கோ ஓடுகிறது. மருளும் மானையும் மிரட்சிப் பார்வை வீசும் மங்கையையும் நெஞ்சில் வைத்துப் பார்க்கிறேன். . . கலைஞரின் கருத்தோவியம்—அந்த ஒப்பற்ற பேருரை காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்க . . .

காலங்களையெல்லாம் கடந்து, நெஞ்சு சங்க காலத்திற்கே போய் விடுகிறது. பிறர் துன்பம் அடைவதைக் காணச் சகியாமல் தன்னையே தியாகம் செய்து கொள்கிற பேராண்மையைப் படம் பிடித்துக் கொடுக்கும் புறநானூற்றுக்காட்சி ஒன்று என் கண் முன்னே நிழற்படம் போல் ஒளி விடுகிறது. காட்டுப் பகுதியிலே ஒரு குடிசை. பெண் மான் ஒன்று குடிசையில் முகப்பில் கட்டப்பட்டுள்ளது. வேட்டைக்குப் போய் விட்டு வந்த குடும்பத் தலைவன்—வேடன்—களைத்துப் போய் குடிசையின் வெளியே முற்றத்தில் படுக்கிறான். இயற்கை தாலாட்ட அவன் அசதியில் கண்ணயர்ந்து விடுகிறான். அமைதியான பிற்பகல் நேரம். எந்தவிதச் சந்தடியுமில்லை. கட்டப்பட்டுள்ள பிணை மான் அருகே கலைமான் ஒன்று அதை நெருங்கி அதனுடன் விளையாடுகிறது. இரண்டும் காதலர்கள் ! குடிசையின் வெளியே உள்ள மெழுகிவிட்ட மண் தரையில் கொஞ்சம் தினை எடுத்துக் காயவைத்திருக்கிறாள் அந்த வீட்டின் தலைவி—வேட்டுவச்சி. வெளியே சத்தம் கேட்டுக் குடிசையிலிருந்து வருகிறாள் அவள். காயவைத்துள்ள தினையை ஒரு கோழி வந்து கொத்திக் கொத்தித் தின்கிறது. அவளுக்கு ஒரே பதட்டம்! அந்தத் தினைதான் இரவு ஆகாரம். அதை விட்டால் அன்றைக்கு வேறு ஆகாரம் குடிசையில் இல்லை. அவ்வளவு ஏழைமை! அதையும் இந்தப்பாழாய்ப்போன கோழி சாப்பிட்டு விடுகிறதே என்று அவளுக்கு ஒரே ஆத்திரம்! கோழியை விரட்டத் துடிக்கிறாள். ஆனால் அவள் நெஞ்சம் துணியவில்லை. ஒரு பக்கத்தில் தன் அருமை நாயகன் அயர்ந்து தூங்குகிறான். கோழியை விரட்டினால் அந்தச் சத்தத்தில் உழைப்பால் களைப்படைந்து உறங்கும் கணவன் எழுந்து விடுவானே. அவன் தூக்கம் கெட்டுவிடுமே என்ற கவலை அவளுக்கு. அது மட்டுமா? அன்புப் பிணைப்பால் மகிழ்வுடன் இருக்கும் அந்த இரு மான்கள் . . . சத்தம் கேட்டால் கலைமான் ஓடிவிடும். மிகுந்த சிரமப்பட்டுப் பயந்து பயந்து வந்து தன் காதலியுடன் உறவாடும் அந்தக் கலைமான் ஓடிவிடும். அந்தப் பயத்தில் அதற்குப் பிறகு அது திரும்பி வராமலே கூடப் போய்விடலாம். அந்த அன்புள்ளங்களைப் பிரிக்க அவள் மனம் ஒப்பவில்லை. பிறர் மனம் சஞ்சலமடையக் கூடாது என்ற நல்ல உள்ளம் அவளுக்கு, அந்தத்தினையைத் தவிர வேறு ஆகாரம் இரவுக்கு இல்லை என்ற நிலையில் கூட, கோழியை விரட்டாமல் அப்படியே இருந்து விடுகிறாளாம்.

பிறர் துன்பம் கண்டு வருந்துவது நல்ல மனம். பிறர் துன்பம் களையத் தன்னையே தியாகம் செய்து விடுவது அதைவிட நல்ல மனம்.

இந்த உயரிய பண்பைப் படம் பிடித்துக் காட்டும் புறநானூற்றுக் கருத்தோவியம் தான் கலைஞரின் உரை கேட்டு என் நினைவிற்கு வருகிறது. மாடமாளிகையில் இருந்தாலும் கோட்டையில் கொலுவீற்றிருந்தாலும் ஏழை எளிய மக்களின் வாழ்விலே ஏற்றம் காணத் துடிக்கும் நல்ல உள்ளம்-வளம் கொழிக்கும் நீலகிரியிலே இருந்தாலும் வறண்டு கிடக்கும் இராமநாதபுர மாவட்டத்தை நினைத்து நெக்குருகும் கலைஞரின் தியாக உள்ளம்-தமிழ்க் கவிஞர்களின் இலட்சிய புருடனை என் கண்முன்னே கலைஞர் . . .

நினைவு அசை போடுகிறது. ''என்ன தூக்கமா-மேட்டுப்பாளையம் வந்து விட்டோம்: எழுந்திருங்கள்'' என்ற நண்பரின் குரல் சிந்தனை ஓட்டத்தைக் கலைக்கிறது.

''அடுத்து நெல்லை அழைக்கிறது. நெல்லை மாவட்ட மின்இணைப்பு முழுமை விழாவிற்குத் தயாராக இருங்கள்'', என்கிறார் நண்பர்.

அதைவிட வேறு எனக்கென்ன வேலை! கரும்பு தின்னக் கூலியா வேண்டும்?

—வ. ச.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை- 2

# அண்ணல் விழாவில்

# அணி திரண்ட சென்னை நகர்!

நேரம் நடு நிசியைக் கடந்து விட்டது.

ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது சென்னை நகரின் அண்ணா சாலை. ஆறு சிறுவர்கள், வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல் வேக வேகமாக நடந்து செல்கிறார்கள். எல்லாருமே பதினைந்து வயதுக்குட் பட்டவர்கள் தான்.

பொழுது விடிவதற்குள் அவர்கள் பத்துப் பனிரெண்டு மைல் நடந்தாக வேண்டும். வீட்டுக்குப் போய்ச் சிறிது நேரம் ஓய்வெடுத்து விட்டுக் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்படுவதற்குத்தான் நேரம் சரியாக இருக்கும்.

ஆம். அந்த ஆறு சிறுவர்களும் பள்ளி மாணவர்கள். அனகாபுத்தூரைச் சேர்ந்தவர்கள்.

முந்திய மத்தியானம் இரண்டு மணிக்கு அவர்கள் பெற்றோர்களின் அனுமதியுடன் சென்னை நகருக்கு வந்து சேர்ந்தார்கள். வேறு எங்கும் போகாமல், எதிலும் நாட்டம் கொள்ளாமல் அண்ணா சாலையில் இருந்த அரசினர் கலைக்கல்லூரிக்கு வந்து விட்டார்கள்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி கண்கொள்ளாக் காட்சி. 1968-ல் உலகத் தமிழ் மாநாட்டின் போது அந்த இடம் பெற்றிருந்த விழாக் கோலத்தை அவர்கள் இப்போதும் கண்டனர்.

பிற்பகல் மணி இரண்டரை. நல்ல வெயில். அந்த வெம்மையைப் பொருட்படுத்தாமல், நகரின் நாலாபுறங்களிலிருந்தும் இளைஞர், முதியவர், ஆடவர்-பெண்டிர் என்று மக்கள் புற்றீசல்களைப் போல் கலைக்கல்லூரிக்கு அருகே வந்து குழுமியிருந்தனர்.

இருபுறங்களிலும் பந்தல்கள். வண்ணத் தோரணங்கள். நீண்டு கிடக்கும் அண்ணா சாலையின் இருமருங்கிலும் மக்கள் வெள்ளம். அந்தச் சாலையே தனியானதோர் கம்பீரத்துடன் விளங்கியது.

சிறுவர்களுக்குக் கண்களும்-நெஞ்சும் நிறைந்துவிட்ட மகிழ்ச்சி. எவ்வளவு கூட்டம் . . . . . . எத்தகைய விழாக் கோலம்! வியப்புப் பொங்கப் பார்த்துப் பார்த்து அதிசயித்துப் போகிறார்கள்.

அந்தச் சிறுவர்களுக்கு மட்டும் தான் அதிசயமா? ''கண்டறியாதன கண்டோம்'' என்ற பெருமிதம் அவர்களுக்கு மட்டுமா? இல்லை . . . . . . . . . ஒவ்வொருவர் உள்ளத்திலும் அந்த உணர்வுதான்! அதே சமயத்தில் ஒரு கேள்விக்குறியும் கூட!

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது— எந்தவொரு நாளிலாவது இந்த விழா இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப்படுமா?

இந்த விழாதான் என்ன?

உலக உத்தமர் அண்ணல் காந்தியடிகளின் 103-ஆம் பிறந்த நாள் விழா. தாரணி மாந்தர் அனைவரும் தலைவணங்கிப் போற்றிய அந்தத் தன்னிகரற்ற தலைவன் பிறந்த நாளில் தமிழக அரசு எடுத்திட்ட தனிப் பெரும் விழா.

ஏந்திய இரண்டு குண்டுகளால் கொள்கைக்கு உயிர் கொடுத்தார் காந்தியடிகள். அந்தக் குணக்குன்றினைத் தமிழக மாந்தர் ஒருபோதும் மறக்க மாட்டார் என்னும் நன்றி உணர்வை நிலைநிறுத்திக் காட்டியது தமிழக அரசு—அந்த ஒரு நாள் விழாவில்.

விழா என்னவோ ஒரு நாள் தான். ஆனால் எத்தனை நிகழ்ச்சிகள்—எத்தனை சிறப்புகள்!

* * * *

அலை வீசிச் சிரிக்கும் ஆழ் கடலுக்கு அருகே சிலையாகித் தமிழர்தம் நெஞ்சில் நிலையாக நிற்கிறார் அண்ணல்.

காலை நேரம். தமிழகத்தைப் பொன்மயமாக்கும் உதயசூரியன் மேலெழும்பி வந்துவிட்டான். உற்சாகம் கரை புரண்டோட ஒரு பெருங்கூட்டம் அந்தச் சிலைக்கு அருகே காத்திருக்கிறது.

இன்னும் சிறிது நேரத்தில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கு வருவார்கள். அண்ணலின் சிலைக்கு

அழகு மலர் மாலை அணிவிப்பார்கள். பின்னர் அங்கிருந்து லஸ் முனைவரையில் ''அமைதி நடையைத்'' தொடங்குவார்கள் என்று ஆர்வத்தோடு காத்திருந்த கூட்டம் அது.

அதன்படி முதல்வர் வந்தார்—இந்திய நாட்டின் மூத்த மகனுக்கு மாலை அணிவித்தார். பின்னர் அனைத்துலக இளைஞர் அமைதி அணியினருடன் அவரது ''அமைதி நடை'' தொடங்கியது. அது இந்த விழாவின் தொடக்கமாகும்.

அதே சமயத்தில் அரசினர்த் தோட்டத்தில் உள்ள காந்தி இல்லத்தில் ராட்டைகள் சுழலத் தொடங்கின. சக்கர வடிவான அந்தச் சிறு கருவியைக் கொண்டு சக்தி மிகுந்த ஒரு சாம்ராஜ்யத்தையே வெற்றி கண்டவரல்லவா அண்ணல் காந்தியடிகள்!

அந்த நினைவாக—அவருக்கு அஞ்சலியாக மாலை வரை இடைவிடாது நடைபெறுவதற்கான நூற்பு வேள்வியும் அந்தக் காலைப் பொழுதில் தொடங்கியது.

பெருமகனுக்கு எடுத்த பெரிய விழாவின் எளிமையான தொடக்கம்.

* * *

அரசினர் கலைக்கல்லூரி அருகே ........ மணி 4·15.

அணிவகுத்தாற்போல் நிற்கும் ஆயிரமாயிரம் மக்களுக்கு மத்தியில் சிக்கிக் கொண்ட அந்த ஆறு சிறுவர்களும் முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்து இடம் பிடித்துக் கொள்கிறார்கள். இரு புறங்களிலும் பார்க்கிறார்கள். வெள்ளம்—வெள்ளம்— மக்கள் வெள்ளம்.

அண்ணா சாலையின் ஒரு கோடியில் சிறிய புள்ளிகள் போல் இரண்டு கார்கள் வருவது தெரிகிறது. தொடர்ந்து கை தட்டலும்—வரவேற்பு முழக்கமும்...... மகிழ்ச்சி ஆரவாரமும்.

அறிவிப்பு கேட்கிறது.

''இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும்—யாரும் கொண்டாடாத அளவுக்குக் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவினைத் தமிழகத்தில் சிறப்புறக் கொண்டாடுவதற்குக் காரண நாயகராம் முதல்வர் டாக்டர் கலைஞர் வந்து கொண்டிருக்கிறார்...''

முதல்வர் அவர்கள் வந்து அமர்ந்த சில மணித்துளிகளில் மேதகு ஆளுநர் திரு கே. கே. ஷா அவர்கள் வந்து சேர்ந்தார்கள். முதல்வர் அவர்களின் முறைமையான வரவேற்புரைக்குப் பின்னர் ஆளுநர் ரத்தினச் சுருக்கமாகப் பேசினார்.

''தமிழ் மக்களின் பேரன்புக்குப் பாத்திரமான மக்கள் தலைவர் ஒருவர் முதலமைச்சராக இருக்கிறார். அவரது தலைமையின் கீழ்த் தமிழக அரசானது இவ்வளவு சீரும் சிறப்புமாகக் காந்தி அண்ணலின் பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடுவதால், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லாத பெருமை தமிழ் நாட்டிற்குக் கிட்டியுள்ளது'' என்றார் ஆளுநர்.

அவரது சிற்றுரை முடிந்ததும் நெடுந்தொலைவிலிருந்து சிந்தை-அணு ஒவ்வொன்றினையும் சிலிர்க்கச் செய்திடும் நாயன ஓசை கேட்டது.

அத்தனை மக்களும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு வந்து கொண்டிருக்கிறது. அந்த அணிவகுப்பினை முன்னின்று நடத்திவரும் அரிய வாய்ப்பினைத் திருவையாறு நாதசுரக் கல்லூரி மாணவர்களுக்கு அளித்திருந்தது தமிழக அரசு. ஏனெனில் நாதசுர இசைக்கலை, தமிழர்களின் பழமையான கலைகளில் ஒன்றல்லவா!

முன்பெல்லாம் குடியரசு நாளில் மட்டும் தான் இத்தகைய அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு நடைபெறும். ஆனால் இன்றைய தமிழக அரசானது, இந்தக் குடியரசு நாளுக்கே காரணமான குணக்குன்றாம் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவிலும் அலங்கார வண்டிகள் அணிவகுப்பினை ஏற்பாடு செய்துவருகிறது.

அணிவகுப்பில் வந்த அலங்கார வண்டிகள் ஒன்றா-இரண்டா? ஐம்பதுக்கும் மேல். அரசின் பல்வேறு துறைகளோடு, பல தனியார் நிறுவனங்களின் சார்பில் இந்த வண்டிகள் அனுப்பப்பட்டன.

ஏ. எல். எஸ். நிறுவனம் ஏ. வி. எம். நிறுவனம், மகாலிங்கம் நிறுவனம், அசோக் லேலண்டு நிறுவனம், வாகினி, ஜெமினி, சத்யா திரைப்படப் பிடிப்பு நிறுவனங்கள், ஒமேகா கேபிள்ஸ் நிறுவனம், பிரிட்டானியா நிறுவனம், சத்ய நாராயணா நிறுவனம், இ. ஐ. டி. பாரி நிறுவனம், அமால்கமேஷன்ஸ் நிறுவனம், பின்னி நிறுவனம் ஆகிய தனியார்த் துறை நிறுவனங்கள் தமிழக அரசு கொண்டாடிய இந்த விழாவில் சிறப்பான பங்கேற்று அண்ணலுக்குத் தங்கள் அஞ்சலியையும் தெரிவித்துக் கொண்டன.

ஒவ்வொரு அலங்கார வண்டியும் கண்களுக்கு மட்டுமல்ல—கருத்துக்கும் விருந்தாக அமைந்தது.

அண்ணலின் அன்புக் கொள்கையை ஒரு வண்டி அழகுற விளக்கியதென்றால் — அரிசனங்களை அழைத்துக் கொண்டு அவர் ஆலய நுழைவு நடத்தியதை மற்றொரு வண்டி சித்திரித்தது.

ஒரு வண்டியில் உப்புச்சத்தியாக்கிரகம்—மற்றொரு வண்டியில் உரிமை வேண்டி அவர் நடத்திய அமைதிப் போராட்டம்.

அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளை அணு அணுவாக ஆய்ந்து எடுத்ததுபோல், ஒவ்வொரு வண்டியும் ஒரு கருத்துக் கருவூலமாகவே அமைந்திருந்தது.

காந்தியடிகளின் சமுதாய—பொருளாதார—கிராம முன்னேற்றக் கொள்கைகளைத் தமிழக அரசு எந்தெந்த வடிவில் எவ்வளவு முனைப்போடு செயல்படுத்தி வருகிறது என்பதைத்—தமிழக அரசின் பல்வேறு துறைகளின் அலங்கார வண்டிகள் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டிய அழகே தனி.

வண்டிகளின் அணிவகுப்பின் இடையே, பள்ளி மாணவர்கள்—கல்லூரிக் காளையர்கள்—சாரணர் — மகளிர் — தேசிய மாணவர்ப் படையினர்—சீரணிப் படையினர் என்று பலரும் அணிவகுத்து வந்த சிறப்பே சிறப்பு...!

இந்த அணிவகுப்பானது குறிப்பிட்ட ஒரு இடத்தைக் கடப்பதற்கு ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் ஆயிற்று. அண்ணா

சாலை, வாலாஜா சாலை, திருவல்லிக்கேணி நெடுஞ் சாலை, பைகிராப்ட்ஸ் சாலை வழியே இந்த அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு கடற்கரைக்கு வந்து சேர்ந்த பொழுது—

நீலத்திரை கடலுக்குக் நிகரான மக்கள் கடல் ஒன்று சீரணி அரங்கத்தின் முன்பு குழுமியிருந்தது.

சீரணி அரங்கம் : அதன் உள் சுவரில் பெரிய அளவில் காந்தியடிகளின் புன்னகை முக ஓவியம் . . சுற்றிலும் அலங்காரச் சர விளக்குகள் ... கண்டவர் மெய் சிலிர்த்தனர்.

தொகை தொகையாக வந்து குழுமி விட்டனர் இலட்சக்கணக்கான மக்கள்—சிறிது நேரத்தில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகி விடும் என்ற ஆர்வத்தில். அது வெறும் பொதுக்கூட்டம் அல்ல - அண்ணல்காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவினைத் தனிப்பட்டதோர் அரசியல் கட்சியின் விழாவாக மட்டும் ஆக்கிவிடாமல், அனைத்துக் கட்சியினரும் பங்கு கொள்ளும் விழாவாக ஆக்கிய தமிழக அரசின் மாண்பினை உணர்த்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒருமைப்பாட்டுக் கூட்டம் அது.

'' நீராரும் கடலுடுத்த'' என்று தேனெனும் குரலெடுத்துத் திரு டி. எம். சௌந்தரராஜன் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடிய பின்னர், பொதுக் கூட்டம் தொடங்கியது.

தொடக்கத்திலேயே. ஆளுநர், சட்டப்பேரவைத் தலைவர், கல்வி அமைச்சர் ஆகிய மூன்று நடுவர் தீர்ப்பின்படி, அலங்கார வண்டிகள் அணிவகுப்பில் கலந்து கொண்ட அரசுத் துறை வண்டிகளுள் மீன் துறைக்கு முதற் பரிசும், கூட்டுறவுத் துறைக்கு இரண்டாவது பரிசும், மின்சார வாரியத்திற்கு மூன்றாவது பரிசும் தனியார் துறை வண்டிகளுள் அமால்கமேஷன்ஸ் நிறுவனத்திற்கு முதற் பரிசும், சத்தியா ஸ்டுடியோவினருக்கு இரண்டாவது பரிசும், ஏ. எல். எஸ் நிறுவனத்தினருக்கு மூன்றாவது பரிசும் வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காந்தியடிகளுக்கு ஒரு காணிக்கையும் செலுத்தினர்.

அது அன்புக் காணிக்கை; அரிசன மக்களுக்கு உதவிடும் அரிய காணிக்கை!

கடந்த ஆண்டு . காந்தியடிகள் பிறந்த நாள் விழாவின் பொழுது முதல்வர் ஓர் அறிவிப்புக் கொடுத்தார். மாவட்ட அளவில் கல்லூரிப் புகுமுகவகுப்பில் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறுகின்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கும், மாணவிக்கும் தமிழக அரசு பரிசுப் பணமாக ரூபாய் 500-ம், தொடர்ந்து மேற்படிப்புப் படிப்பதற்காக மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் ஆண்டொன்றுக்குப் பத்து மாதங்களுக்கு ஐந்தாண்டுக்கால அளவுக்குத் தமிழக அரசு உதவி நிதியும் கொடுக்கும் என்று . கடந்த ஆண்டில் முதல்வர்கூறிய அறிவிப்புக் கேற்ப, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவிக்குக் காந்தியடிகள் நினைவுக் கல்விச் சலுகை வழங்கப்பட்டது.

இதற்குப் பின்னர் சட்டமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் அருமையான சொற்பொழிவு தொடங்கியது.

முஸ்லீம் லீகைச் சேர்ந்த திரு திருப்பூர் மொகிதீன், நிறுவன காங்கிரசைச் சேர்ந்த திருமதி டி. என். அனந்தநாயகி, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் எச். வி. ஹண்டே, தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த திரு டி. கே. சண்முகம், பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு ஏ. ஆர் பெருமாள், உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த திரு எஸ். எஸ். ராமசாமி, சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் காந்தியடிகளின் சீரிய லட்சியங்கள் பற்றியும் அவர்தம் பிறந்த நாள் விழாவினைச் சீரும் சிறப்பும் மிளிரக் கொண்டாடும் தமிழக அரசின் நன்முயற்சி பற்றியும் பாராட்டிக் கருத்துரை வழங்கினார்கள்.

தி.மு.க. சார்பில் கருத்துச் சிறப்புரை வழங்கிய கல்வி அமைச்சர் நாவலர் பேசும் பொழுது—

'' நான் இப்போது ஒரு கருத்தைப் பற்றி எழுதும் போது, இதற்கு முன்னால் என்ன எழுதினேன் என்பதை ஒத்திட்டுப் பார்ப்பதில்லை. நிலைமைகள், சூழ்நிலைகள் இவற்றிற்கேற்பக் கருத்துக்களும் மாறக் கூடியனவே. அந்த மாறுபாட்டிற்கு அந்தந்த நேரத்தில்—சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள பிரதிபலிப்புகளே அமைந்திருக்க முடியும். . . . . . .'' என்று காந்தியடிகள் ' யங் இந்தியா ' பத்திரிகையில் எழுதியிருந்ததை எடுத்துக் காட்டி, '' தமிழக அரசானது இயன்றவரையில் காந்தியடிகளின் கொள்கையை எந்தெந்த வகையில் கடைப்பிடித்து வருகிறது '' என்பதை அழகுற விளக்கினார்.

அடுத்து முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசினார்கள்.

அவருக்கே உரிய சொல் நயம், உணர்ச்சி வேகம்—வாதத்திறமை இவற்றோடு முதல்வர் வழங்கிய பேருரை காந்தியடிகளின் கனவைத் தமிழக அரசு நனவாக்கி வரும் சிறப்பினை எடுத்துக் காட்டியது.

முதல்வரின் பேருரை, கருத்துக்கு அளித்த விருந்தினைத் தொடர்ந்து இசையமைப்பாளர்களாகிய திருவாளர்கள் சங்கர்-கணேஷ் ஆகியோர் தம் குழுவினருடன் செவிக்கு விருந்தளிக்கத் தொடங்கினார்கள்.

திரு டி.எம். சௌந்தரராசன் திரு சீர்காழி கோவிந்தராசன், திரு வீரமணி, செல்வியர் எல். ஆர். ஈஸ்வரி, ராதா, அஞ்சலி ஆகியோரின் காந்தியடிகளைப் பற்றிய இன்னிசைப் பாடல்களுக்குப் பிறகு நாட்டுப் பண் பாடி, பொதுக் கூட்டமும்—அத்துடன் காந்தியடிகளின் 103-வது பிறந்த நாள் விழாவும் முடிந்த பொழுது இரவு பதினொரு மணிக்கு மேல் ஆகிவிட்டது.

வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கள் கூட்டம் காந்தியடிகளின் இனிய நினைவுகளைச் சுமந்து கொண்டு கலைந்து சென்றது.

அனகாபுத்தூரிலிருந்து வந்திருந்த அந்த ஆறு சிறுவர்களும், தங்கள் ஊரை நோக்கிப் புறப்பட்டனர்.

காந்தியடிகள் வாழ்ந்த தலைமுறையைச் சேர்ந்தவர்களல்ல அவர்கள். அதற்குப் பிறகு தோன்றிய ஒரு இளந் தலைமுறை. இளந் தலைமுறையினரின் உள்ளங்களில் காந்தியடிகளின் நினைவு என்னும் தீபத்தை ஏற்றி வைத்திருக்கிறது தமிழக அரசு.



காந்தி இல்லத்தில்



இடைவிடாத நூற்பும், வழிபாடும்





# சென்னையில் காந்தியடிகள் 103 வது பிறந்த நாள் விழா







# அணி வகுப்பில் வந்த அலங்காரத் தேர்கள்


தமிழ்நாடு செய்தித் துறை
மகளிர் நலத்துறை
அண்ணலுக்கு அஞ்சலி
















## சரண் அரங்கத்தில்...



## முதல்வர் தலைமையில்










## அனைத்துக் கட்சியினர் பொதுக் கூட்டம்

தனியார் துறை அலங்கார ஊர்திக்குப் பரிசளிப்பு





இசை நிகழ்ச்சியில் பங்கு பெற்றோருக்குப் பரிசளிப்பு

# இசையரங்கு



# அமிழ்தும் அருங்குறளும்!



சு. செல்லப்பன்

உண்டவர்க்கு இறவாத் தன்மையைக் கொடுப்பது ; இனிமை மிக்கது ; கிடைத்தற்கரியது என்றெல்லாம் சொல்லப்படும் அமிழ்தத்தை மண்ணுலகோர் கற்பனையாகக் கதைகளில் கண்டுள்ளனரேயன்றி நேரிற் கண்டதில்லை. அது விண்ணுலகில் இருப்பதாகக் கூறப்படுகிறது. " பொய்யொன்று கூறுவதால் விண்ணுலகம் அமிழ்தொடு கிடைப்பதாக இருந்தாலும் நீ அதைச் சொல்லாதவன் ; மெய்யுடன் நீங்கா நட்புக் கொண்டவன் " என்று பாண்டியன் நெடுஞ்செழியனை,

" உயர்நிலை யுலகம் அமிழ்தொடு பெறினும்

பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே "

என மதுரைக் காஞ்சிப்புலவர் மாங்குடி மருதனார் பாராட்டுகின்றார்.

இந்த உலகம் நின்று நிலவுவதற்குப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி கூறும் காரணம் எண்ணி மகிழ்தற்குரியது. தேவர்க்குரிய அமிழ்தமே ஆனாலும் தனித்து உண்ணுதலிலர் ; தமக்கென இன்றிப் பிறர்க்கென உழைக்கும் பெற்றியார் இருப்பதாலேயே இவ்வுலகம் சிறப்புடன் வாழ்கிறது ; நிலை பெற்றிருக்கிறது !

" உண்டாலம்ம இவ்வுலகம் ; இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத் தமியர் உண்டலு மிலரே — — — — — — — — — — — — — — — —

தமக்கென முயலா நோன்தாள்

பிறர்க்கென முயலுநர் உண்மை யானே

—(புறம். 182).

என்று குறிப்பிடுகின்றார்.

பொருளீட்டச் சென்ற தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற கார்காலமே வந்துவிட்டது ; ஆயினும் தலைவன் வாராமையைக் கண்ட தலைவி வருந்துகிறாள். அப்போது தோழி, " அன்னாய்! வருந்தாதே ! பெறற்கரிய மேலுலகத்தோடு அமிழ்தமே பெறுவதாக இருந்தாலும் நம் தலைவர் உன்னைப் பிரிந்து அங்குத் தங்கார் ; விரைவில் வந்துவிடுவார் "

' அரும்பெறல் உலகம்

அமிழ்தொடு பெறினுஞ்

சென்றுதாம் நீடலோ இலரே "

—(அகநானூறு).

என்று கூறித் தலைவியைத் தேற்றுகிறாள்.

தலைவன் தலைவியை வரைந்துகொள்ள வருகின்ற நற்செய்தியைச் செவிலி, தோழிக்கு அறிவிக்கின்றாள். தோழி அதைத் தலைவிக்குக் கூறி, ' அன்னை பெறற்கரிய அமிழ்தத்தையும் துறக்கத்தையும் பெறுவாளாக '

" அரும்பெறல் அமிழ்தம்

ஆர்பதம் ஆகப்

பெரும்பெயர் உலகம்

பெறீஇயரோ அன்னை "

—(குறுந்தொகை).

எனச் செவிலியை வாழ்த்துகின்றாள்.

மேலே கூறியவைகள் அமிழ்து விண்ணுலகில் இருப்பது என்பதைத் தெரிவிக்கின்றன. ஒரு பண்பு அல்லது தன்மையைக் குறிக்க நேரும்போது அதில் விஞ்சி நிற்பது எடுத்துக் காட்டாக்கப்படும். கசப்பைக் கூறும்போது எட்டிக்காய் நினைவில் வருவது இயல்பு ; அதே போன்று சுவை மிக்கனவாய், கிடைத்தற்கரியனவாய் உள்ளவற்றை

"அமிழ்து" என்று குறிப்பிடுவது வழக்கமாயிற்று. கீழேயுள்ள சில எடுத்துக்காட்டுக்கள் இதற்கு விளக்கமாக அமைகின்றன.

இனிய மொழியைப் பேசும் நா, 'அமிழ்து பொதி செந்நா' என்று பாராட்டப்படுகிறது. தேமொழி மாதரார் எயிறு ஊறும் நீரைச் சுவைக்கின்ற காதலர், 'அமிழ்துபொதி துவர்வாய்', 'அமிழ்தம் ஊறும் செவ்வாய்', 'ஊறுநீர் அமிழ்தேய்க்கும் எயிற்றாய்' என்று கூறி மகிழ்கின்றனர். தம் முயற்சியால் கிடைப்பது நீருணவேயாயினும் அஃதே அமிழ்தாகி இன்பம் தரும் என்பதைத் "தாளாண்மை நீரும் அமிழ்தாய்விடும்" என்று நாலடிப் பாடல் வரி அறிவிக்கிறது. உண்ண உண்ண அமையாத மணம் கமழும் தாளிப்பையுடைய உணவு, அமிழ்தத்தைச் சுவையால் வெல்லும் தன்மை. 'அமிழ்தட்டானுக் கமழ்குய்யடிசில்' எனக் கூறப்படுகிறது. இளங் குழந்தைகளின் தளர் நடையைக் காண்பது இனிது; அவர் மழலை கேட்டல் அமிழ்தினும் இனிது!



" குழவி தளர்நடை காண்டல் இனிதே
அவர்மழலை கேட்டல் அமிழ்தின்
இனிதே "

என்பது சிறுபஞ்சமூலச் செய்யுள். இவை கொண்டு இனிமையானவையும் இன்றியமையாத் தன்மை கொண்டவையும் 'அமிழ்து' என்று அழைக்கப்படுகின்றன என அறிகிறோம்.

திருக்குறள் தமிழ் அமிழ்து. இந்த அமிழ்தினை உண்ணுகின்ற பேறு பெற்ற நாம் வேறு எந்த அமிழ்து பற்றியும் எண்ணத் தேவையில்லை. இத்தகைய சாவா இலக்கியங்கள் தமிழிலிருப்பதாற்றான்,

" இருந்தமிழே உன்னால் இருந்தேன் —வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் "

என்று 'தமிழ்விடுதூது' ஆசிரியர் தருக்குடன் குறிப்பிடுகின்றார். "திருக்குறட் கருத்து உண்ண உண்ணத் தெவிட்டாதது. குறட்சுவை, அமுதச் சுவையினும் சிறந்தது. எவ்வாறெனில் அமிழ்தச் சுவையைத் தேவர்கள் மட்டுமே அறிவர். ஆனால் திருக்குறட் சுவையை எல்லா உலகமும் அறிந்து போற்றுகிறது" எனத் திருவள்ளுவ மாலையில் புலவர் ஆலங்குடி வங்கனார் குறிப்பிடுகின்றார்.

" வள்ளுவர் பாட்டின்
வளம்உரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும்
ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர்
உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து

இப்பாடலுக்கு உரை எழுதியுள்ள திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் "அமிழ்தம் வாயுள் பெய்தவழி நாவில் பட்ட சிறிது பொழுது அளவே தீஞ்சுவை பயப்பது; இப்பாட்டு (குறள்) நெஞ்சின்கண் நிலைபெற்று ஒழிவின்றித் தீஞ்சுவை பயத்தலின் இஃது அமிழ்தினினும் சிறந்த தாயிற்று" என்பார்.

மழையின்றேல் உலகில் எதுவுமில்லை; உயிரினம் எதுவும் வாழமுடியாது; புல், பூண்டு, மரம், செடி, கொடிகள், ஊர்வன, பறப்பன, விலங்குகள், மனிதர்கள் யாருமே இருக்க முடியாது. நீர், உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு தானும் உணவாக அமைந்து உயிர்க்குலத்தை வாழ வைக்கிறது. வான் மழை இல்லையேல் வையகம் இல்லை. எனவே திருவள்ளுவர் மழையை அமிழ்தம் என்கிறார்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று"

—(குறள் 11).

உரையாசிரியர் பரிமேலழகர், "அமிழ்தம் உண்டார் சாவாது நிலை பெறுதலின், உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்றார்" எனக் குறிப்பிடுகின்றார். எல்லிஸ் துரை அவர்கள், "மழையையே உண்மை அமிழ்தமாகக் கொள்ள வேண்டும்; வேறு அமிழ்தம் இல்லையென்பது திருவள்ளுவர் கொள்கையாக இருக்கும்" என்கிறார். மழை அமிழ்தாகக் குறிக்கப்படுவதை "அமிழ்துதிகழ் கருவிய கணமழை" என்ற பதிற்றுப் பத்துச் சொற்றொடராலும் அறிய முடிகின்றது. மழையையே அமிழ்து எனக் குறிப்பிட்டுப் பாரதிதாசன் அவர்களும் பாடுகிறார்கள்.

" வான்நின்று மண்ணில் வந்து
மக்களைக் காக்கும்; அஃது
தேன்அன்று கரும்பும் அன்று;
செந்நெலின் சோறும் அன்று;
ஆன்அருள் பாலும் அன்றே;
அதன்பெயர் அமிழ்தாம்! தொன்மை
ஆனபேருலகைக் காக்க
அமிழ்வதால் மழைஅஃதேயாம் "

விண் நின்று அமிழ்வதால் மழைத்துளி 'அமிழ்தம்' எனப்படுவதாகப் பாவேந்தர் பாரதிதாசனார் கூறுகின்றார். மொழியியல் அறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களும், இருவகையுணவாய் விளங்கும் மழையே அமிழ்தம் எனப் பெயர்பெற்றுள்ளது என்பதை விளக்குகிறார்கள். அவர், 'அமிழ்தம் என்றது சாவா மருந்தாகிய இருவகை யுணவை' எனக் குறிக்கிறார். உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத சோறும் நீரும் தொடர்ந்த பசிதகை (தாகம்) யால் நேரும் சாவைத் தவிர்த்தலால் இருவகையுணவை இருமருந்து என விளக்கித், தம் கருத்துக்கு அரணாக "இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்" என்ற புறநானூற்று வரியை மேற்கோள் காட்டுகிறார். வெந்து மலர்ந்த சோற்றுப் பருக்கை அவிழ் எனப்படும் என்று குறிப்பிட்டு, இந்த அவிழ் என்ற சொல்லே, அவிழ்—அவிழ்து—அவிழ்தம்—அமிழ்தம் என்றாகிறது எனப் பாவாணர் அவர்கள் விளக்குகிறார்கள். வள்ளுவர் கருத்துப்படி 'அமிழ்து' என்று நாம் உணரத்தக்க வகையில் இருப்பது மழையேயாம்!



தொட்டால் இனிக்கும் சுவைக் கட்டியாகிய குழந்தையின் எச்செயலும் பெற்றோருக்கு இன்பம் நல்குவதே; ஆயினும் சோற்றில் கையிட்டு அளைந்து மேலும் கீழும் சிதறி உணவுண்ணும் காட்சி இன்ப மயக்கம் ஊட்டுவதாம். தத்தித் தளர் நடை பயிலும் குழந்தையின்முன் உணவைப்படைத்தால், அது கோழி தரையைக் கிளறுவதுபோல் சோற்றைக் குதறி மேலெல்லாம் இறைத்துக் கொண்டு சோறாடு கோலத்தில் காண்போரைச் சொக்கச் செய்யும். ஈன்றெடுத்த இளமகவின் தளிர் விரல்களினால் கலக்கிக் குழப்பப்பட்ட உணவு, பெற்றோர்க்கு அமிழ்தினும் இனியதாகி விடுகிறது. கூழினை அமிழ்தாக்கும் பெருஞ்சிறப்பு, குழந்தைகளின் பிஞ்சு விரல்களில் பொதிந்து கிடப்பதை வள்ளுவர் மகிழ்ந்து பாடுகிறார்.

"அமிழ்தினும் ஆற்ற
இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

—(குறள் 64).

'கூழ்' என்பது இங்கு உணவுக்குப் பொதுப்பெயராய் உள்ளது. இதையே இழிந்த உணவாகக் கொண்டு, மக்கள் தம் கையால் அளைந்த கூழும் அமிழ்தினும் இனிதாகிவிடும் என்று கூறுவதும் பொருந்தும் என்பர் அறிஞர்.

வள்ளுவரின் "சிறுகை அளாவிய கூழ்", பின்னர்த் தோன்றிய புலவர்களின் சிந்தையைக் கவர்ந்து சிறந்த பாடல்களைத் தோற்றுவிக்கின்றது. குலசேகர ஆழ்வார் கண்ணனைச் சேயாகப் பெற்று மகிழத் துடிக்கும் தாய்நிலையில் தன்னை வைத்துப் பாடுகின்றார். தவழ்ந்து எழுந்து தளர் நடை பயின்று, செம்மணணில் ஆடிப் புழுதி படிந்த கோலத்தோடு வரும் குழந்தை கண்ணனை, மார்போடணைத்து மகிழத் துடிக்கிறாள் அத்தாய். மண் படிந்த மேனி அவளுடைய மார்புக்கு மகிழ்வூட்டுகிறது. புழுதி படிந்த விரல்களில் அவன் வாரியுண்ட சோற்று மிச்சிலை உண்டு மகிழத் துடிக்கிறது தாயுள்ளம்! ஆழ்வார் பாடல் இவ்வரிய ஓவியத்தை நமக்குத் தருகிறது;

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணு
தவழ்ந்தெழுந்து தளர்ந்ததோர்
நடையால்
மண்ணில் செம்பொடி ஆடி வந்துஎன்றன்
மார்பில் மன்னிடப் பெற்றிலேன்
அந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரியாய்க் கொண்ட அடிசிலின்
மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ! கொடு வினை
[யேன்
என்னையேன் செய்யப்பெற்றதெம்
மோயே!

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பாவேந்தர் பாரதிதாசனார், 'சிறுகை அளாவிய கூழைக்' கொண்டு ஒரு சிறு கதையையே படைத்துக் காட்டுகிறார். வேடப்பன், நகைமுத்து என்ற இருவரின் இல்லறப்பயன், 'அமிழ்து' என்ற பெண்மகவு. ஒரு நாள் அமிழ்து தூங்கியெழுகிறாள்; தத்தி நடந்து தாழ்வாரத்தை அடைகிறாள். அங்கேயிருந்த தந்தையின் மைக்கூடு அவள் கண்ணில் படுகிறது. எடுத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் குறுக நடக்கிறாள். முல்லைக் கொடியின் அடியில் மையைக் கவிழ்த்து மண்ணோடு பிசைகிறாள். மலர்க்கை 'மை'க்கை ஆகிறது. இக்கோலத்தோடு வீட்டினுள் நுழைகிறாள். தந்தை தயிர்ச்சோறு உண்டு கொண்டிருக்கிறான். அமிழ்து தந்தையின் அருகே அமர்ந்து அவன் உண்ணும் சோற்றைத் தன் கையால் அளைகிறாள். நிலா நிறத் தயிர் நீலத் தயிராகிறது. 'ஆ' காட்டச் சொல்லி அப்பனுக்குச் சோறு ஊட்டுகின்றாள் அமிழ்து. அப்பனும் வாய் திறந்து அதை ஆவலோடு உண்கிறான். இதைக் கண்டு நிற்கும் தாயின் முகம் களிப்பால் மலர்கிறது. பாடுகிறார் பாவேந்தர்!

அறையில் தூங்கி யிருந்த அமிழ்து
சிறகுவிரித் துதறிச் செங்கா லன்னம்
நடைதொடங் கியதென நடந்து, தாழ்
வாரத் (து)

இடையி லிருந்தமைக் கூட்டை எடுத்து
கொல்லையின் முல்லைக் கொடியி னடியில்

# விவசாயத்திற்கும், வீட்டிற்கும் கிராமகுடிநீர்த்திட்டங்களுக்கும்

## பலவித ஈ·சன் பம்புகள்




## ஈ·சன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்

**6-7 செகண்ட் லேன் பீச், சென்னை-1. தந்தி: EASUN போன்: 29321**

சாய்த்து நீலம் சார்ந்த சேற்றால்
சிற்றில் ஒன்று செய்து முடித்தபின்
தந்தை உண்ணும் தயிரின் சோற்றை
அங்கையால் அள்ளி 'ஆ, ஆ' என்றாள்
அப்பனும் வாய்திறந் ததைவாங்கி
உண்டான் !

தொடர்ந்து நடந்த இந்தத் தொண்டு !
சின்னவள் அன்னை யான திறத்தை
நகைமுத்து கண்டு மிகமகிழ்ந் திருந்தாள்
சேறும் சோறும் தந்தைக்குத் தேனே !
நீலத் தயிரும் நிலாநிறத் தயிரே !
'அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்' எனச் செப்பிய
வள்ளுவர் வாய்ச்சொல் பொய்என
விள்ளுவர் உளரோ விரிநீர் உலகில் !



வள்ளுவர் வாய்ச்சொல்லுக்கு இவ்வகவல் வளமானதொரு விரிவுரையாக அமையக் காண்கிறோம்.

விருந்தோம்பல் தமிழினத்தின் தலையாய பண்பு. விருந்தினரை உண்பியாது தாமுண்பது சாதலின் இன்னாதது என்பது அவர்தம் கொள்கை. தாம் உண்பது சாவாத் தன்மையைத் தரவல்ல மருந்தாக இருந்தாலும், விருந்து புறத்தேயிருக்கத் தனித்து உண்பது முறைமையாகாது.

"விருந்து புறத்ததாத்
தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"
—குறள் 82).

"அமிழ்தமே ஆனாலும் விருந்திருக்கும் போது தனித்து உண்ணற்க", 'மருந்தேயாயினும் விருந்தோடுண்க' என்பது தமிழர் கொள்கை என்பதை இக்குறள் விளக்குகின்றது.

அவையின் தன்மையை அறிந்து பேச வேண்டும் என்பதை வலியுறுத்தத் திருவள்ளுவர் 'அவையறிதல்' என்ற அதிகாரத்தை வகுத்துள்ளார். பேசுபவர், கேட்பவரின் திறத்திற்கேற்பப் பேச வேண்டும். அவையின் தன்மையை உணராமல் பேசுவோர் சொல்லும் திறமறியாதவராவர். அறிவுடையோர் நிரம்பியுள்ள அவையில் நம் நூலறிவும் சொல்வன்மையும் தோன்றப் பேசவேண்டும். கூர்த்த அறிவில்லார் கூடியுள்ள அவையைக் கருத்து நிறைந்த பேச்சுக் கவராது. அங்கே அவர்கள் மதிக்கும் வண்ணம் எளிமையாகப் பேசுவதுதான் முறை; நம் அறிவின் ஆழத்தைக் காட்டிப் பயனில்லை. இங்ஙனம் அவையறிந்து பேச வேண்டியதன் அவசியத்தைக் கூறும் குறளாசிரியர் கற்றறிந்த ஒருவர் தமக்கு ஏற்ற அவையின்கண் பேசுவதுதான் பொருத்தமே தவிர, புல்லவையுள் பேசுவது பயனற்றதாகும் எனக் குறிப்பிடுகின்றார். தாழ்ந்தோர் அவைக்கண் உயர்ந்த சொற்களைப் பேசுதல் தூய்மையில்லாத முற்றத்தின்கண் அமிழ்தத்தைக் கொட்டியதற்கு ஒப்பாகும் என்பது அவர் கருத்து.

"அங்கணத்துள் உக்க
அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்"
—(குறள் 720).

உண்பவர் கையில் கிடைத்தால் அமிழ்தம் பயன்படும். தரையிற் சிதறும்போது அவ்வமிழ்தத்தால் தரை எவ்விதப் பயனையும் அடையப் போவதில்லை; பயன்பட வேண்டிய அமிழ்து அங்குப் பயனற்றுப் போகின்றது. நல்லோர் அவையில் நல்லோர் பேசுதல் அமிழ்தத்தை நுகர்பவர் கையில் கொடுப்பதற்கு ஒப்பாகும்; அப்பேச்சைக் கேட்கும் தகுதியில்லாதவர் நிறைந்துள்ள அவையில் பேசுதலோ தரையில் சிந்திய அமிழ்தம் போலப் பயன்படாதொழியும்.

அங்கணம் என்பதற்குச் சாக்கடை என்று பொருள் கொள்ளுதல் 'முற்றம்' என்று கொள்வதைவிடப் பொருத்தமாம்.

"ஊரங்கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்" என்ற நாலடிப் பாடலில் அங்கணம் என்ற சொல் சாக்கடை என்ற பொருளில் ஆளப்பட்டிருப்பதை அறியலாம். "அங்கணம் சேறு முற்றமாஞ் சலதாரைக்குப் பேர்" என்று நிகண்டும் சாக்கடைக்கு அங்கணம் என்ற பெயர் இருப்பதைத் தெரிவிக்கிறது. முற்றத்தில் சிதறிய அமிழ்து மக்களுக்குப் பயன்படாவிட்டாலும் எறும்பு, ஈ போன்ற உயிரினங்கள் மொய்த்துண்ணவாவது பயன்படும். அதுவே சாக்கடையில் விழுந்துவிட்டால் எதற்கும் பயன்படப்போவதில்லையல்லவா? தக்கார் அல்லார்முன் பேசுதல் எந்த வகையிலும் பயன்தராது என்பதை அது சாக்கடையிற் சாய்க்கப்பட்ட அமிழ்து என்று கொள்வது பொருத்தமேயன்றோ !

தலைவன் தலைவியைப் பிரிந்திருக்கின்றான். அப்பிரிவு அவனை வாட்டுகிறது; வதைக்கிறது. தீ தொட்டால் சுடும்; விட்டால் சுடாது. தலைவியோ தொட்டால் குளிர்வதும் விட்டாற் சுடுவதுமான புதுமைத்

தியாக இருக்கிறான்; பிரிவினால் மழையற்ற பயிர்போல வாடிக் கிடக்கும் தலைவன் தலைவியின் தோள்களைத் தொட்ட மாத்திரத்தில் அவனுடைய வாட்டம் பறக்கிறது; உடல் குளிர்கிறது; உயிர் தளிர்கிறது. வாடியிருக்கும் தன் உயிரைத் தளிர்விப்பதால்—சாவினின்றும் தன்னைக் காக்கின்ற தன்மையால்—தலைவியின் தோள் அவனுக்கு அமிழ்தமாகிறது.

"உறுதோறு உயிர்தளிர்ப்பத்
தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்"
—(குறள் 1106).

தென்றற் கொடுமையாலும், சந்திரன்



கொடுமையாலும் வற்றின சரீரத்தை நாயகி தீண்டலால் சரீரம் தளிர்க்கையினாலே, நாயகிக்கு அமுதினால் பண்ணின தோள்" எனப் பரிதியார் இக்குறளுக்கு உரை பகர்கின்றார்.

வான் மழை அமிழ்து! அமிழ்தேயாயினும் விருந்திருக்கத் தாமே உண்ணுதல் ஆகாது! மழலை மக்கள் கைவிட்டளைவது கூழேயாயினும் பெற்றோர்க்கு அஃது அமிழ்தம்! தகாதார் முன் தகவுடையார் பேசுதல் சாக்கடையிற் சாய்த்த அமிழ்தமாகும்! பிரிவினால் வாடும் தலைவனுக்குத் தொட்டால் உயிரளிக்கும் தலைவியின் தோள் அமிழ்தாகிறது!—என்ற கனித் தமிழ்க் கருத்தமிழ்தை—குறளமிழ்தை—வாரி உண்போம்! வரைவிலா இன்பம் அடைவோம்!


உறுதிக்கும்
உழைப்பிற்கும்
செட்டிநாடு
சிமெண்ட்
எங்கும் கிடைக்கிறது

தயாரிப்பாளர்கள் :
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256.
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.



நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய
எல்லாமே
இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்




**தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், நடப்பு 1971–72 கல்வியாண்டுக்குத் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளுக்கென வெளியிட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட பாடப் புத்தகங்கள் வகையில் அச்சிடப்பட்ட மொத்தப் பிரதிகள் ஒரு கோடியே 21 லட்சத்துக்கு மேல் ஆகும். அடுத்த ஆண்டுக்குக் கிட்டத்தட்ட மூன்றரைக் கோடிப் புத்தகங்களை வெளியிட வேண்டியிருக்கும். பள்ளிப் பாடப் புத்தகங்கள் ஏறத்தாழ அனைத்துமே அடுத்த ஆண்டிலே நாட்டுடைமையாக்கப்பட்டு விடும்.**

தமிழகத்தில் 'கல்லூரித் தமிழ்க் குழு' வின் பணியை மிக விரிந்த அளவில் செயல்படுத்த வேண்டும் என்ற முடிவுடன் தமிழ் வெளியீட்டுக் கழகம் 1962 ஏப்ரல் முதல் நாள் தோற்றுவிக்கப்பட்டது. கலை, அறிவியல் துறைகளில் தேவையான நூல்களைத் தமிழில் பெருமளவுக்கு வெளியிடுவதுடன், மருத்துவம், பொறியியல், சட்டம், தொழில் துறை ஆகியவைகளிலும் வேண்டுமான நூல்களை வெளியிடுவதே குறிக்கோளாக இருந்தது. கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்களாகப் பயன்படும் முறையில் தனி நூல்களாகவும், சிறந்த ஆங்கில நூல்களின் மொழி பெயர்ப்பாகவும் வெளியிட்டு வந்தது.

1970-ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது. இந்த நிறுவனம் இதுவரை சுமார் 269 நூல்களைத் தமிழில் வெளியிட்டுள்ளது. இவற்றுள் 72 நூல்கள் பி. எஸ்ஸி. பட்டப் படிப்புக்கும் 17 நூல்கள் புகுமுக வகுப்புக்கும் பாட நூலாக வைக்கப்பட்டுள்ளன. எஞ்சிய நூல்கள் பொது நூல்களாகவும் பட்டப் படிப்புக்குப் பார்வை நூல்களாகவும் பயன்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளுக்கென 1971–72 கல்வியாண்டில் வெளியிடப்பட்ட—தேசிய மயமாக்கப்பட்ட பாடப் புத்தகங்கள், பல்வேறு வகைகளிலும் அச்சிடப்பட்ட மொத்தப் பிரதிகள் 1 கோடி 21 லட்சத்துக்கு மேல் ஆகும். இவற்றுள் 1-லிருந்து 10-ஆம் வகுப்பு வரை தமிழ்ப்பாட நூல்கள் வகையில் மொத்தப் பிரதிகள் 67,30,000. நான்காம் வகுப்பிலிருந்து 10-ஆம் வகுப்புவரை ஆங்கிலப் பாட நூல்கள் வகையில் மொத்தப் பிரதிகள் 19,90,000; மூன்றாம் வகுப்பிலிருந்து 11-ஆம் வகுப்பு வரை கணக்குப் பாட நூல் வகையில் மொத்தப் பிரதிகள் 18,97,000. மற்றும் அறிவியல், வரலாறு, புவியியல் வகையில் 11-ஆம் வகுப்புக்கு அச்சிட்ட பிரதிகள் 8,10,000. ஆங்கிலக் கையேடு மூன்றாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரை மொத்தப் பிரதிகள் 1,60,000; மற்றும் 4, 5, 6-ஆம் வகுப்புகளுக்கு ஆங்கிலப் பயிற்சிப் புத்தகங்கள் வகையிலும் 10-ஆம் வகுப்புக்கு உயிரியல் விருப்பப் பாடத்துக்குமாக அச்சிட்ட மொத்தப் பிரதிகள் 5,20,000 ஆகும்.

> மாணவர்கள் என்றால் யார்? அவர்கள் நமது ரத்தத்தின் ரத்தம், நமது சதையின் சதை, நமது குடும்பத்தின் பிள்ளைகள். நமது எதிர்கால உருவங்கள். அவர்கள் ஒன்றை (ஒரு நன்மையை) விரும்புகிறார்கள் என்றால் என்னால் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நான் நிறைவேற்றிக் கொடுக்க முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டியது ஜனநாயகக் கடமையென்று கருதுகிறேன்.
>
> —பேரறிஞர் அண்ணா.

பாட நூல் நிறுவனம் மேற்குறிப்பிட்ட பிரதிகளை அச்சிடுவதற்கு 1970-ஆம் ஆண்டு இறுதியில் தக்க முன்னேற்பாடுகளைச் செய்திருந்தது. அச்சிடும் வேகத்திலே சிறிதும் தடங்கலின்றி உரிய காலத்தில் புத்தகங்களை அச்சிட்டுக் கொடுக்க முடிந்தது.

வருகின்ற கல்வியாண்டிற்கு, கணக்கு, இயல்பியல், வேதியல், வரலாறு ஆகிய விருப்பப் பாடங்களைத்தவிர, மற்ற எல்லாப்பாடங்களுக்கும் பாட நூல் நிறுவனமே பாடப் புத்தகங்களை வெளியிடும். அடுத்த ஆண்டிற்குக் கிட்டத்தட்ட 3½ கோடிப் புத்தகங்களை வெளியிட வேண்டியிருக்கும். பள்ளிப்பாடப் புத்தகங்கள் ஏறத்தாழ அனைத்துமே அடுத்த ஆண்டிலே தேசிய மயமாக்கப்பட்டுவிடும்.

மாநில மொழிகளில் கல்லூரிப் பாட நூல்களை வெளியிட மத்திய அரசு, ஒரு கோடி ரூபாய் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினையொட்டி இவ்வாண்டு எல்லாத் துறைகளிலும் மேலும் சுமார் 402 பாட நூல்களை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேதியல், கணிதம், இயல்பியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், மனையியல், உளவியல், பொருளியல், அரசியல் நிலவியல், புள்ளியியல் ஆகிய 13 துறையியல்களில் நூல்களை எழுதும் பணி, பல துறைகளைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர்களிடமும் உதவிப் பேராசிரியர்களிடமும் மற்றும் பல வல்லுநர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது;




"அம்மா! நீங்க நீண்ட நாட்களாக ஒரு எவர்சில்வர் கரண்டி வாங்கி வா! வாங்கி வா! என்று சொல்லி வந்தீர்களல்லவா?" என்று கேட்டுக் கொண்டே வீட்டின் உள்ளே நுழைந்தான் மணி.

"வாங்கி வந்துவிட்டாயா?" என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டே, செய்துகொண்டிருந்த வேலையைப் போட்டு விட்டு வந்தாள் அந்த ஏழைத் தாய்.

"இந்தாங்க அம்மா! நன்றாக இருக்கிறதா பாருங்கள்!" என்று கூறித் தன் கையில் இருந்த எவர்சில்வர் கரண்டியைத் தன் தாயின் கையில் கொடுத்தான் மணி. எவர்சில்வர் கரண்டியைத் தன் கையில் வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தத் தாய். பெருமதிப்புள்ள ஒரு பொருளைப் பெறும்போது ஏற்படும் பெருமகிழ்ச்சி அந்த அன்புத்தாயின் முகத்தில் மலர்ந்ததைக் கண்ட மணி, "எவர்சில்வர் கரண்டியைக் கண்டே இவ்வளவு மகிழ்ச்சி பெறுகின்றீர்களே அம்மா! பொன் நகையைக் கண்டால் எப்படி மகிழ்வீர்களோ?" என்று கேட்டான்.

"உன் அப்பா போக்குவரத்துத் துறையில் மெக்கானிக், உன் அண்ணன் டிரைவர், நீயோ பஸ் கட்டும் தொழிலாளி. நீங்க 3 பேரும் வேலை பார்த்தும், 9 பேர் உள்ள நம் குடும்பம் ஏழ்மையாகவே உள்ளது. இப்படி ஒரு எவர்சில்வர் கரண்டி வாங்க வேண்டும் என்று எத்தனை ஆண்டுகளாக உன் அப்பாவிடம் சொல்லி வந்தேன் தெரியுமா? ஆனால் அவர் அகப்பை போதாதா?, அலுமினியக் கரண்டி போதாதா? என்று கூறித் தட்டிக் கழித்து விட்டார். நீயாவது வாங்கி வந்தாயே! கரண்டி நன்றாக இருக்கிறது. விலை என்னப்பா?" என்று நீண்ட நாள் ஆசை நிறைவேறிய மகிழ்ச்சியுடன் அந்தத் தாய் கேட்டாள்!

"பணம் கொடுத்து வாங்கவில்லையம்மா? எங்கள் தொழிற்சாலையில் இதை எனக்குப் பரிசாகக் கொடுத்தார்களம்மா! அதுவும் இந்தக் கரண்டியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் தன் கையினால் வழங்கினாரம்மா!" என்று பெருமையுடன் கூறினான் மணி.

"போயும் போயும் எவர்சில்வர் கரண்டியையா பரிசாகக் கொடுத்தார்கள்?" என்று கேட்டுக் கொண்டே வேலையிலிருந்து திரும்பி வந்தார் மணியின் தந்தை இராமசாமி.

"தட்டுக் கொடுக்காமல், கரண்டி கொடுத்தார்களே! அதுவரைக்கும் விசேடம் இல்லையா அப்பா!" என்று சொன்னான் சாப்பிட்டுக் கொண்டிருந்த மணியின் அண்ணன் பாலு.

"அண்ணே! கரண்டியைப் பரிசாகக் கொடுத்தது உங்களுக்குக் கிண்டலாகத் தெரியலாம். உங்களைப் போலத்தான் எங்கள் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் சிலர், முதலில் கேலி பேசினார்கள். கரண்டியைப் பரிசாகக் கொடுத்ததன் நோக்கத்தை மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் விளக்கிய பின்புதான், கரண்டி கொடுத்ததன் தத்துவம் அவர்களுக்குப் புரிந்தது.

"அப்படி என்னப்பா பெரிய தத்துவம் அடங்கியுள்ளது?" என்று கேட்டான் பாலு.

"பானையில் இருந்தால்தானே கரண்டியில் வருவதற்கு" என்ற திருந்திய பழமொழியின் தத்துவத்தை நினைவுப்படுத்தவே கரண்டியைப் பரிசாகக் கொடுத்துள்ளார்கள். பானை என்பது அரசாங்கத்தின் கருவூலத்தைக் குறிக்கும். அரசாங்கக் கருவூலம் என்ற பானையில் பணம் என்ற அரிசி போடப்பட்டிருந்தால் தான், தொழிலாளர்கள் கோரிக்கை என்ற கரண்டியை விடும்பொழுது சோறு என்னும் பயன் கிடைக்கும். அரசாங்கக் கருவூலம் என்ற பானை காலியாக இருந்தால், கோரிக்கை என்னும் கரண்டியை விடும்பொழுது சோறு என்னும் பயன் கிடைக்காது. அதாவது அரசாங்கக் கருவூலம் காலியாக இருந்தால் தொழிலாளர்களின் கோரிக்கைகள், எவ்வளவுதான் நியாயமானதாக இருந்தாலும் வெற்றி பெறாது; கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்தாலும், நிதிப்பற்றாக் குறையின் காரணமாகக் கோரிக்கைகள் நிறைவேறாமற் போய் விடுகின்றன. எனவே, அரசாங்கக் கருவூலத்தில் நிதி குவிய அரசாங்கத் தொழிற்சாலைகளை இலாபகரமாக நடத்த வேண்டும் என்ற தத்துவத்தைப் புகட்டவே கரண்டி கொடுக்கப்பட்டுள்ளது" என்று மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் விளக்கினார் என்று மணி கூறினான்.

"தத்துவம் நன்றாகத்தான் இருக்கு. ஆனா நம்ம போக்குவரத்துத் துறையில் பொதுவாக இலாபம் எடுப்பது அவ்வளவு சுலபமல்ல!" என்றான் பாலு.

"ஆமாண்டா! உன்னைப்போல 'பிரேக் டவுன்' என்று சொல்லி

கண்ட இடத்தில் வண்டியை நிறுத்திவிட்டால் போக்குவரத்துத் துறைக்கு நட்டம் வராமல் இலாபமா வரும்?'' என்று கூறி பாலு செய்த தவற்றை இடித்துக் காட்டினர் இராமசாமி.

''நீங்கள் சொல்வது சரியல்ல அண்ணே! போக்குவரத்துத் துறையின் ஓர் அங்கமான குரோம்பேட்டையில் உள்ள மத்தியத் தொழிற்சாலை இலாப கரமாக நடக்குதண்ணே! இதைக் குறிப்பிட்டு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் தொழிற்சாலையின் தொழிலாளர்களை யெல்லாம் மிகவும் பாராட்டிப் பேசியதுடன், போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் டிரைவர்களும் கண்டக்டர்களும் எங்களைப் போல் திறமையாகப் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்'' என்ருன் மணி.

கடமை தவறியதாக இடித்துக் கூறிய அப்பாவின் தாக்குதலைத் தாங்க முடியாத பாலு, மணி கூறியதைக் கேட்டதும் அயர்ந்து விட்டான். அவன் மனச்சாட்சி அவனை உறுத்தியது. மேலும் சாப்பிட மனமின்றிக் கையைக் கழுவிக் கொண்டு எழுந்து விட்டான்.

''நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்ன பேசினர்?'' என்று கேட்டார் இராமசாமி.

'' அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் கார் உற்பத்தி செய்பவர்கள் தங்கள் புது மாடலை விளம்பரப்படுத்துவதற்காக விழா நடத்துவார்கள். அதுபோல இங்கேயும் 3,001-வது பேருந்தின் வெள்ளோட்ட விழாவை நடத்துகிருர்கள்.

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பார்கள். அதுபோல குரோம்பேட்டை தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இது ஒரு மாபெரும் சாதனை விழாவாகும்.

இப்போது 2,105 பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. நாட்டுடைமையாக்கப்பட்டதன் மூலம் 700 பேருந்துகள் வர இருக்கின்றன. ஆகவே நீங்கள் 3,000 பேருந்துகளுக்குப் பொறுப்பாளர்களாக இருக்கப் போகின்றீர்கள்.



3,001-வது பேருந்தின் வெள்ளோட்டத்தை போக்குவரத்து அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைக்கிருர்கள்.

இனி ஆண்டிற்கு 1,000 பேருந்துகளைக் கட்டித்தர வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதுவரை பேருந்துகளுக்கு பாடி கட்டினல் 40 சதவீதம்தான் ஊக்க போனசாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இனிமேல் ஆண்டிற்கு 1,000 பேருந்துகளைக் கட்டினல், ஊக்க போனஸ் என்ற நிலையை மாற்றி, இனி எவ்வளவு பேருந்துகளைக் கட்டுகிறீர்களோ அந்த அளவுக்கு ஊக்க போனஸ் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினர்'' என்ருன் மணி.

''உங்கள் தொழிற் சங்கத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையா?''—என்று கேட்டார் இராமசாமி.

''தொழிற்சங்கத்தைப் பற்றி மிகவும் அருமையான கருத்துக்களை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். தொழிலாளர்களின் கடமையைப் பற்றி நன்கு விளக்கினர். 'தொழிற் சங்கத்தில் உள்ளவர்கள் தங்களுக்கு நியாயம் என்று பட்டதைக் கேட்கலாம். அதுபோலவே அரசும் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும்' என்ருர்.

'பொதுத்துறையைப் பொறுத்தவரையில் மக்களுக்குப் பணியாற்றுவதற்காக, மக்களால் கட்டளை இடப்பட்டவர்கள் நாம். நமக்கு நாட்டு மக்கள்தான் முதலாளி' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது நெஞ்சைத் தொடுவதாக இருந்தது.

'இது அரசுத் துறைதானே! இது அப்படித்தான் இருக்கும் என்று சொல்லக்கூடியவிதத்திலே இல்லாமல் நீங்கள் நல்ல பெயர் எடுத்துக் கொடுக்க வேண்டும்' என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்' என்று மணி கூறினன்.

அதுவரை பேசாமல் இருந்த பாலு, ''அதிருக்கட்டும், நீங்கள் கோரிக்கைகள் எதையும் கூறவில்லையா?'' என்று கேட்டான்.

''25 கோரிக்கைகளைக் கொடுத்தோம். இந்தக் கோரிக்கைகளுக்கு நானே தீர்ப்புச் சொல்லி விட முடியாது; முதல் அமைச்சருடன் கலந்துகொண்டு காரிய மாற்ற வேண்டும்' என்று கூறிய போக்குவரத்து அமைச்சர் அவர்கள் எங்களின் நான்கு முக்கிய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிவிடுவதாக உறுதி கூறினர்'' என்ருன் மணி.

''3,001 பஸ் கட்டிக் கொடுத்ததற்கு ஏதேனும் போனஸ் கொடுப்பதாக அறிவித்தாரா?'' என்றார் இராமசாமி.

''போனஸ் பற்றி அவர் அறிவித்தது மிகவும் பாராட்ட வேண்டிய ஒன்று அப்பா! இது வரை ஒவ்வொரு 1,000 பஸ் கட்டி முடிந்ததும் தொழிலாளர்களுக்கு ஒரு சிறு தொகை ஊக்கப் போனசாக வழங்கப்பட்டு வந்தது. அந்த வகையில் ரூபாய் 2,500 வழங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்தத் தடவை நாங்கள் 3,001-வது பஸ் கட்டியுள்ளதை முன்னிட்டு, தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸாக ரூபாய் 2,500 என்று இருந்ததை மாற்றி ரூபாய் 5,000 ஆக வழங்கப்படும் என்றும், அத்துடன் இத்தொழில் சாலைக்குத் தேசிய பாதுகாப்பு விருதாகக் கிடைத்த ரூபாய் 2,500-மும், மாநில அரசுச் சார்பில் ரூபாய் 2,000-மும் வழங்கப்படும் என்றும் அறிவித்தார்'' என்றான் மணி.

''தீபாவளி போனஸ் சீக்கிரம் கிடைக்குமா தம்பி?'' என்று மணியின் தாயார் கேட்டார்.

தீபாவளிப் பண்டிகைக்குச் சில நாட்கள் முன்னதாகவே போனஸ் கொடுக்க, தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேசி, ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

''பஸ் பாஸ் பற்றிக் கேட்கப் போவதாகச் சொன்னீர்களே, அது என்னவாயிற்று?'' என்றான் பாலு.

''பெருந்துத்துறையின் தொழிலாளர்கள் எல்லாரும் பஸ் பாஸ் கேட்கிறார்கள். எல்லாருக்கும் கொடுக்க முடியுமா என்பதை யோசித்து வருகிறோம். ஆனால் குரோம்பேட்டை தொழிற்சாலை லாபத்தில் நடப்பதால் பஸ் பாஸ் தர முடிவு செய்து இருக்கிறோம்'' என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

''திருமணக் கடன் பற்றிக் கேட்டீர்களா? என்றார் மணியின் தாயார்.

''தொழிலாளர்கள் யானை என்றாலும் கடனுக்குக் கொடுத்தால் வாங்கிக் கொள்வார்கள். அதைக் கட்டிவைத்துத் தீனி போட வேண்டும் என்று எண்ணமாட்டார்கள் என்று சொல்வார்கள். ஆகவே நீங்கள் கேட்பதைக் குறைவாகக் கேட்க வேண்டும்' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு திருமணக் கடனுக்காக ரூபாய் 2½ இலட்சம் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான உத்தரவை அரசு விரைவிலேயே பிறப்பிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

''அப்படியானால், 3,001-வது பேருந்தின் வெள்ளோட்ட விழா, குரோம்பேட்டை மத்திய தொழிற்சாலையில் பணியாற்றும் 1,172 தொழிலாளர்கள் வாழ்வின் நல்லோட்ட விழாவென்றே சொல்லலாம் போலிருக்கிறதே'' என்றான் பாலு.

''ஆமாம் அண்ணா! என்றான் மணி.

தந்தையுடன் மணி சாப்பிட அமர்ந்தான். மணியின் தாயார் எவர்சில்வர் கரண்டியினால் சாப்பாட்டிற்கு ரசத்தை ஊற்றினார்கள். தந்தையும், தனயனும் அமுதமெனச்சுவைத்துச் சாப்பிட்டனர். அதைக்கண்ட டிரைவர் பாலுவுக்குத் தானும் திறமையாகப் பணியாற்றி ஏதேனும் பரிசு பெற வேண்டும் என்ற ஊக்கம் பிறந்தது!


# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**

FDSEI-1513TM

# எதிர்கால ஆற்றல்

## பொருள்களின் நான்காம் நிலை

ஏ. ஆர். இராமராஜு, எம். எஸ்ஸி

இதுநாள் வரை, நாமறிந்த பொருள்கள் எல்லாம் சாதாரணமாகத் திடநிலை, திரவநிலை, வாயுநிலை என்ற முப்பெரும் நிலைகளில் மட்டுமே காணப்படுகின்றன என்பதைச் சிறுரும் அறிவர். ஆனால், அண்மைக் காலத்தில் பொருள்களுக்கு ஒரு புதிய நாலாம் நிலையும் உண்டு என்ற உண்மையைக் கண்டறிந்துள்ளனர். இது ஒரு வியப்பான செய்தியாகவும், கற்பனைக் கெட்டாத ஓர் உண்மையாகவும் உள்ளது. ஏனெனில், பனிக்கட்டி, நீர், நீராவி என்றால் நமக்குத் தெளிவாகப் புலனாகின்றது. இதற்கு மேலும் ஒரு நிலை அதாவது நான்காம் நிலை ஒன்று உண்டு என்றால் நம் மனத்தில் உடனடியாக எழக் கூடிய வினாவும் ஒன்று உண்டு. 'அந் நிலையில் பொருள்கள் எப்படி இருக்கும்? அதை நாம் பார்க்கவோ, உணரவோ முடியுமா?' என்பதுதான் அவ் வினா. அதுவே பிளாஸ்மா நிலை (Plasma state) என்பது. இந் நிலையில் வெப்பம் அதிகமாக இருக்கும்.

இப் பிரபஞ்சத்தில் (Universe) பிளாஸ்மா நிலையே முதன்மையாக இருக்கும் பேறு பெற்றுள்ளது. பிரபஞ்சத்தில் 99.9 விழுக்காடு பொருள்கள் யாவும் பிளாஸ்மா நிலையில் உள்ளன. சுருக்கமாகக் கூறினால், பிளாஸ்மா என்ற கடலில் மிதக்கக் கூடிய ஒரு வாய்வுக் குமிழில் தான் நாம் உண்மையில் வாழ்கின்றோம் எனவும் கூறலாம்.

ஞாயிறு, நட்சத்திரங்கள் மற்றும் வானத்தில் உள்ள பொருள்கள் யாவும் இந்த நான்காம் நிலையிலேயே உள்ளன. இவைகளில் இடைவிடாது மிகப் பெரிய ஆற்றல் உண்டாக்கப்பட்டுவருகிறது. குறிப்பாக நமக்கு அண்மையில் உள்ள நட்சத்திரமாகிய சூரியன் ஏறத்தாழ சுமார் 10 மில்லியன் ஆண்டுகளாக ஒரு வினாடிக்கு ஒரு கிராமிற்கு 2 எர்க்ஸ் (Ergs) என்ற அளவீட்டில் வெப்ப ஆற்றலை வெளிவிடுகிறது என்று கண்டுள்ளார்கள். இது மீண்டும் தொடர்ந்து நடைபெறும். இங்ஙனமாக வெளியிடக்கூடிய அளப்பிலா ஆற்றல் எங்ஙனம் உண்டாக்கப்படுகிறது என்ற வினாவிற்குச் சரியான விளக்கம் 1929-ஆம் ஆண்டு கௌட்டர் மென், அட்கின்ஷன் என்ற இருவரும் முதன் முதலாகக் கொடுத்தார்கள். மிக அதிகமான வெப்ப நிலையில் இரு மெல்லிய அணுக்கள் சேர்க்கை ஏற்படும். அதாவது பிளாஸ்மா நிலையில் அணுச் சேர்க்கை நிகழும். அதனால் கனமான ஓர் அணு ஏற்படுகிறது. அதே சமயத்தில், இவைகளில் பொருண்மை அணுச் சேர்க்கை முன் அதிகமாகவும், பின் கனமான புதிய அணுவின் பொருண்மைக் குறைந்தும் இருக்கும். அப் பொருண்மைக் குறைவு அதற்கேற்ற ஆற்றலாக மாற்றப் படுகிறது. அதனை 'ஐன்ஸ்டின் சமன்பாட்டின்' உதவியால் ($E = mc^2$) விளக்கலாம்.

தற்காலத்தில் மனிதனுக்குக் கிடைத்து வருகின்ற ஆற்றல் மிகத் துரிதமாக மிகுந்த அளவில் குறைந்துகொண்டே வருகிறது. இப்போது உலகம் முழுவதும் தொழில் மயமாகிக்கொண்டிருக்கிறது. அதற்கான ஆற்றலை மனிதன் நிலக்கரி, எண்ணெய் சில வாயுக்கள் ஆகியவற்றில் இருந்து பெற்று வந்தான். இப்போது உள்ள எரிபொருட்கள் இன்னுமோர் நூற்றாண்டிற்கு மட்டுமே போதுமானதாக இருக்கிறது என்று கண்டுள்ளார்கள். அணுச் சிதைவின் மூலம் ஆற்றல் பெறலாம். ஆனால், அதற்குத் தேவையான எரிபொருள்களின் இருப்பும் ஓர் அளவுக்குத்தான் மனிதனுக்குத் துணை நிற்கும். ஆனால் புதிய முறையில் ஆற்றலைப் பெறவேண்டிய ஒரு நிலை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. அதனால் கட்டுப்படுத்தப் பட்ட அணுச் சேர்க்கை என்ற முறையில் பிளாஸ்மா நிலையில் எல்லையற்ற ஆற்றலைப் பெற முடியும் என்று கண்டுள்ளார்கள்.

சென்ற பன்னிரண்டு ஆண்டுக் காலமாக இது சம்பந்தப்பட்ட இடைவிடாத ஆய்வுகளும், முன்னேற்றங்களும் உலகத்தின் பல பாகங்களில் நடைபெற்று வருகின்றன.

இவ் வணுச் சேர்க்கை பிளாஸ்மா நிலையில் நிகழ, மிகத் தேவையான மூலப் பொருள் கன ஹைடிரஜன் (Heavy Hydrogen) அல்லது டியூட்டீரியம் (Deuterium) ஆகும். இரு டியூட்டீரியம் அணுச் சேர்க்கையில் அளப்பற்ற ஆற்றல் கிடைக்கிறது. நாற்பது லிட்டர் கடல் நீரில் இருந்து ஒரு கிராம் அளவு டியூட்டீரியம் கிடைக்கிறது. கடல் நீர் பெருமளவில் கிட்டுகிறது. அதனால் டியூட்டீரியம் மலிவாகவும் கிடைக்கும். ஒரு கிராம் டியூட்டீரியத்திலிருந்து சுமாராக 10 எர்க்ஸ் அளவு ஆற்றல் பெற முடியும். ஒரு கிராம் மதிப்புள்ள டியூட்டீரியத்தைக் கொண்டு 300 காலன் கேஸ்லினிலிருந்து கிடைக்கக்கூடிய ஆற்றலைப் பெறலாம். அணுச் சேர்க்கை முறை சீராக்கப்பட்டு விட்டால் தேவையான அளவுக்கு மேல் ஆற்றல் குறைவின்றிக் கிட்டும். அதனால், பிளாஸ்மாவை எப்படி உண்டாக்குவது, அதனை எப்படிக் காப்பது, அதனை நம்மிச்சைப்படி எப்படிக் கையாளுவது, அதனை மனித குலத்திற்கு எவ்வாறு தொண்டு செய்ய வைக்க முயலுவது என்பன பற்றி ஆய்வுகள் பல கோணங்களில் நடைபெறுகின்றன.

1955-ஆம் ஆண்டில் ஜெனிவாவில் "அணு ஆற்றலின் பயன்கள்"

அவசரமான
காலைவேளையில்
ஐந்து செகண்டு
ஒதுக்குங்கள்






புத்துயிரளிக்கும்
நெஸ்கா:பே
ஒரு கப் தயாரித்து
அருந்துங்கள்!

முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

# நெஸ்கா:பே

உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!




ஒரு நெஸ்லே தயாரிப்பு

NCE 6367

என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதற்கு முன்னரே ரகசியமாக பிளாஸ்மா பற்றிய ஆய்வுகள் நடைபெற்றன என்றும், இன்னும் 20 ஆண்டுகளில் அணுச் சேர்க்கை முறையில் ஆற்றலைப் பெறலாம் என்றும் காலஞ்சென்ற நமது நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஹோமி ஜஹாங்கீர் பாபா என்பார் முன்பே அறிவித்து விட்டார்.

நிலைமின் விலகலின் காரணமாக ஏற்படும் தடங்களை மீறி இரண்டு மெல்லிய அணுக்கள் ஒன்றையொன்று மிக நெருக்கமாக அணுகினால்தான் அணுச் சேர்க்கை ஏற்படக் கூடும் என்பது தெளிவாகும். மில்லியன் பாகைகள் அளவில் வெப்பத்தை உண்டாக்குதல் என்பது இச் சேர்க்கை நிகழ இன்றியமையாததொன்றாகும். இதனால் பிளாஸ்மா நிலை மிகவும் இன்றியமையாததொன்று என்பது பெறப்படுகிறது.

## பிளாஸ்மா:

பொதுவாக பிளாஸ்மா என்றால் அயனிகள் (Ions) நிறைந்த வாயு என்று கூறலாம். அதன் வெப்ப நிலை மிக அதிகம். அவற்றில் நேர் மின்னேற்றம் கொண்ட அயனிகளும் எதிர் மின்னேற்றம் கொண்ட எலக்ட்ரான்களும் ஓரளவு சம எண்ணிக்கையில் இருக்கும். சாதாரணமாக, அந்நிலை மின்னேற்ற மேதுமில்லா நிலைபோல் தோற்றமளிக்கும்.




ஒரு வாயு, வெப்பத்தினாலோ அல்லது மின்னோட்டத்தினாலோ பிளாஸ்மா நிலையை அடையமுடியும். முதலில் வாயுவில் உள்ள மூலக் கூறுகளும் அணுக்களும் அயனிகளாக மாற்றப்பட வேண்டும். வெப்பத்தின் ஆற்றலால் அல்லது மின்னோட்டத்தின் ஆற்றலால் அவைகள் உந்தப்பட்டுத் தன்னுள் உள்ள ஒரு எலக்ட்ரானை இழந்து நேர் மின்னோட்டம் கொண்ட அயனிகளாக மாறுபடுகின்றன. இந்நிலையில் மின்னேற்றமில்லாத வாயு மூலக்கூறுகளும், அணுக்களும் அதில் கலந்து இருக்கலாம். ஆனால், பிளாஸ்மா நிலையில் மின் கடத்தும் திறன் நன்கு புலப்படும். காந்தப் புலனால் பிளாஸ்மா நிலைக்குப் பாதிப்பு ஏற்படலாம். வாயுக்கு மின் கடத்தும் திறன் இல்லை. காந்தப் புலனால் வாயுக்கு ஒரு கேடும் ஏற்படாது.

சூரியனும் பிற நட்சத்திரங்களும் பிளாஸ்மா நிலையில் உள்ளன. நம்மைச் சுற்றிலுமுள்ள குழல் விளக்கு (Mercury Lamp) மற்றும் நியான் விளக்கு (Neon Lamp) ஆகியவற்றில் உள்ள வாயுக்கள் வெப்பநிலை மிக அதிகரிக்கப்பட்டு அவை பிளாஸ்மா நிலையில் உள்ளன.

## பிளாஸ்மா தயாரிக்கும் முறை:

ஆய்வுக் கூடத்தில் குறைந்த வெப்ப நிலையில் குறைந்த அழுத்தத்தில் குளிர்ந்த மின்வாயைப் பயன்படுத்தி மின் உமிழ்பு குழாயைக் (Discharge tube) கொண்டு 'பிளாஸ்மா' தயாரிக்கலாம். பொதுவாக நேர்மின் வாய்க்கு, நேர்மின் உயர் அழுத்தத்தை (சில நூற்றுக்கணக்கான வோல்ட்கள்) செலுத்த வேண்டும். இதில் எதிர் மின் வாய் பூமியுடன் இணைந்திருக்க வேண்டும். AB என்ற பகுதிக்கு குரூக்கின் (Crooks Dark's Space) இருள் இடைவெளி என்றுபெயர். BC என்ற பகுதி பிளாஸ்மா பகுதியைக் குறிக்கும். இப்பகுதிக்கு மேல் உள்ள மின்படலம் மிகச் சிறியதாகவும் ஒரே சீராகவும் இருக்கும். இப்பகுதிக்கு அதிக மின் கடத்தும் திறன் உண்டு என்பதும் புலனாகிறது. AB CD என்ற பகுதிகள் உறைகளாக இருக்கின்றன. ஆகவே, எதிர்க் கனல் ஒளிப்பகுதி, பாரடேயின் இருள் இடைவெளிப் பகுதி, நேர்க் கனல் ஒளிப்பகுதி, ஆகியவைகளை பிளாஸ்மா என்று கூறலாம்.

மற்றொரு வழியிலும் பிளாஸ்மா தயாரிக்கலாம். இம்முறை லாங்மூயர் (Langmuir), டாங்ஸ் (Tonks) என்ற இருவரால் பயன்படுத்தப்பட்டதாகும், வாயு ஊடகத்தில் எதிர்மின் வாயாக வெப்பப்படுத்தப்பட்ட டங்ஸ்டன் (Tungston) மின்னிழையைப் பயன்படுத்தியும் பிளாஸ்மா தயாரிக்கலாம்.

மூன்றாவதாக ஒரு முக்கியமான முறையிலும் பிளாஸ்மா தயாரிக்கலாம். அதைத் தயார் செய்யும் கருவிக்கு பிளாஸ்மா ஜெட் (Plasma Jet) அல்லது ஜெரிடியன் ஆர்க் (Geridian Arc) என்று பெயர். இது உலோகத் தொழிற்சாலைகளில் மிகவும் பயன்படுத்தப்படுகிறது. இக்கருவியில் A, B என்ற இரு மின்வாய்களுக்கு இடையில் ஆர்க் உண்டாக்கப்படுகிறது. இந்த ஆர்க் அதிக அளவு மின்சாரம்கொண்ட ஆர்க் ஆகும். இங்கு எதிர்மின் வாய் B, அதிக ஒளிவிலகல் கொண்ட பொருள்களான டங்ஸ்டன், மாலிபீடினம் போன்ற பொருள்களால் ஆனவை. மின் வாய்களில் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு இடையூறு விளைவிக்காமலிருக்க ஆர்கான்போன்ற மந்த வாயு உள்ளே செலுத்தப்படுகிறது. அதிக அழுத்தமுள்ள ஒரு வாயு உருளையில் இருந்து தொடர்ந்து இவ்வாயு பெறப்படுகிறது. நேர்மின் வாயில் உள்ள சிறிய துவாரத்தின் வழியே வெப்பத்தோடு பிளாஸ்மா வெளியேறும் போது நேர்மின்வாய் அதிக வெப்பத்தால் தாக்கப்படுகிறது. பிளாஸ்மாவின் அதிக வெப்ப நிலைக்குக் காரணம் அது தாங்கியுள்ள மித மின்னோட்டமேயாகும். நேர்மின்வாய் அதிக வெப்பத்தைத் தன்னைச் சுற்றியுள்ள நீருக்குக் கொடுத்து விடுகிறது. நேர்மின் வாயைச் சுற்றி நீர் பாயும்படியான ஓர் அமைப்பு உள்ளது. இம் முறையில் வெப்பத்தின் அளவை 30,000 முதல் 50,000° (கெல்வின்) உற்பத்தி செய்யமுடியும்.

## பிளாஸ்மா கொள்கலன்:

பிளாஸ்மாவிற்குத் தேவையான வெப்ப நிலையை அடைவதற்குள் எல்லாப் பொருள்களும் ஆவியாகி விடுகின்றன. ஆனால், இது ஒரு முக்கியமான பிரச்சினை அல்ல. பிளாஸ்மாவின் வெப்பநிலை சுமார் நூறு மில்லியன் பாகைகளாகும். இவ்வளவு அதிக வெப்ப நிலையில் பிளாஸ்மா இருந்தாலும் கூட,

குறைந்த அழுத்தத்தின் காரணமாகப் பிளாஸ்மாவினுள் வெப்பம் அதிகமாக இருப்பதில்லை. ஆனால், பிளாஸ்மா கொள்கலனின் சுவர் மீது பட்டால் வெகு விரைவில் தன் வெப்பம் முழுமையையும் இழந்து விடுகிறது. இதுவே, மிக சிக்கலான பிரச்சினையாகும். இதன் காரணமாகவே பிளாஸ்மாவைக் கொள்கலனின் சுவர் மீது படாது பாதுகாப்பாக இருக்கும்படிக் கவனித்துக் கொள்ள வேண்டும். அதனால் அறிவியல் வல்லுநர்கள் ஒரு சீரிய கொள்கலனை உண்டாக்கினர்.

அக் கொள்கலன் கண்ணுக்கும் புலப்படாது. மேலும், அது எப்பொருளாலும் ஆனதல்ல. இதற்கு, ''காந்த சீசா'' (Magnetic Bottle) என்று பெயர். இக்கொள்கலனில் சுவர்கள் காந்தப் பலன் விசைக் கோடுகளால் (Magnectic field line) ஆனது. ஆனாலும், இக்கொள்கலம் பிளாஸ்மாவை ஒரு சிறிதும் தன்னிடத்துத் தப்பித்துச் செல்லாமல் பாதுகாக்க இயலவில்லை. இதைச் சரி செய்ய இடைவிடாது ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதிக ஆற்றல் வாய்ந்த காந்தபுலனுடைய சீட்டா ( Zetozen energy Thermonuclear Assembly) என்ற கொள்கலனை பிரிட்டிஷ் வல்லுநர்கள் தயாரித்துள்ளார்கள். இக்கருவியைக் கொண்டு பிளாஸ்மாவின் அதிக அளவு வெப்ப நிலை (5 மில்லியன் பாகை) வரை அடையலாம் என்று கண்டுள்ளார்கள்.

## பிளாஸ்மாவின் பயன்கள் :

பிளாஸ்மா ஜெட் ( Plasma Jet ), பிளாஸ்மா டார்ச் (Plasma torch) பிளாஸ்மா புல்லட் ( Plasma Bullet ) இரசாயன முறையில் 5,500. பாகை வெப்ப நிலை வரை தான் உண்டாக்க இயலும். ஆனால், பிளாஸ்மா ஜெட் மூலம் இதைப் போல் 5 மடங்கு அதிக வெப்பநிலை வரை உண்டாக்கலாம். இதன் விளைவாகப் பல பயன்கள் உண்டு. மிகக் குறுகிய காலத்தில் இரும்பு போன்ற உலோகங்களைத் துண்டாக்க இச் சாதனம் பயன்படுகிறது. விண்வெளிக்கலங்களுக்குத் தேவையான உந்து விசையை (Propellant) பிளாஸ்மா ஜெட் மூலம் பெற இயலுகிறது.

மிக எளிதாகச் செய்யக் கூடியதும், இயக்கக்கூடியதுமான பிளாஸ்மா டார்ச்(Plasma Torch) என்ற ஒரு சாதனம் ஒரு சீரான மிகுந்த வெப்பங்கொண்டபிளாஸ்மாவைக் கொடுக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் இதனை நம் நாட்டு டிராம்பே அணுசக்தி நிலையத்தார் (Atomic Energy Establishment) தயாரித்தார்கள். அதன் பிறகு, பிளாஸ்மா ஜெட் ஒன்றையும் செய்து முடித்தார்கள். இத் துறையில் நம் நாடும் அமெரிக்கா, இரஷ்யா போன்று முன்னேறி வருகிறது. இது நமக்கு மிகவும் பெருமை தருவதாகும்.

பிளாஸ்மா புல்லட்டுகள் (Plasma Bullet ) மின்சாரத் துப்பாக்கியால் சுடப்பட்டு அவை வினாடிக்கு 120 மைல் வேகத்தில் செல்கின்றன. இவை காந்தப் புலன்வழியாகச் செல்லும் போது உருமாறி பிளாஸ்மாய்டுகள் (Plasmoids) ஆக மாறுகின்றன. இதன் மூலம் பல உண்மைகளைக் கண்டறிய ஏதுவாகும்.

## காந்த இயக்க நீரியல் இயற்றி

பிளாஸ்மா மூலம் ஆற்றலைப் பெறஇயலும். இதுவன்றி வெப்ப ஆற்றலை மின் ஆற்றலாக நேரடியாக மாற்றவும் முடியும் என்று கண்டார்கள். இத்துறையில் பிளாஸ்மா பெரும் பங்கு வகிக்கிறது. இம்மாற்றம் ''காந்த இயக்கிய நீரியல்'' [Magneto hydrodynamic generator (M.H.D.)] இயற்றியால் ஏற்படுகிறது.




இவ்வியற்றியில்வெப்பம்மிகுந்த பிளாஸ்மா காந்தப் புலனின் குறுக்கே செலுத்தப்படுகிறது. பிளாஸ்மா ஒரு மின் கடத்தும் பொருள். காந்தப் புலனில் ஒரு கடத்தி வேகமாக நகருமானால் மின் இயக்கு விசை உண்டாக்கப்படுகிறது. இவ்விசையைத்தகுந்த மின்வாய்கள் மூலம் பெறலாம். இதன் செயல் டி. சி.மின் இயற்றியைப் போல் உள்ளது. அதில் திடப் பொருள் கடத்தியை பயன்படுத்துகிறார்கள்.

## பிளாஸ்மா கொடுக்கும் தொல்லை

விண் வெளிக் கலன்கள் சந்திரனுக்கு அனுப்பப்படுகின்றன. மனிதனைக் கொண்டுள்ள கலன்கள் திரும்பி வரும்போது உராய்வினால் அதிக வெப்பமுடைய பிளாஸ்மாஉண்டாக்கப்படுகிறது. இந்த பிளாஸ்மாவினுள் அதிக அதிர்வு எண் கொண்ட மைக்ரோ அலைகளும் ஊடுருவிச்செல்ல இயலாது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு இயக்கு நிலையத்திற்கும் பூமிக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் விண்வெளி வீரர்களுக்கும் இடையே உள்ள வானொலித் தொடர்பு தடைப்பட்டு இருக்கும். இதற்கு ஒரு மாற்றுமுறை கண்டு பிடிப்பதற்கு அறிவியலார் பிளாஸ்மாவினுள் மின்சாரத்தை ஓடவிட்டு அதனை வெப்பப்படுத்தினார்கள். ஆனால், இதிலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. பிளாஸ்மா ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலை வரை ஏற்பட்டு, அதன் பின் கடத்தும் திறன் ( Conductivity) இழுக்க நேரிடுகிறது. அப்போது மின்சாரம் பிளாஸ்மாவினுள் ஓடு

வது நின்று விடுகிறது. அதனால் மின்சாரம் பாயும் கம்பி மட்டுமே உருகு நிலைவரைவெப்பப்படுத்தப் பட்டு உருகி விடுகிறது. இதனால் பல்வேறு வழி முறைகள் தேடப் பட்டன. இப்போது பிளாஸ்மா வின் வெப்ப நிலையைக் கோடிக் கணக்கான பாகை வரை வெப்பப் படுத்த முடியும். ஒரு பிரச்சினை தீரும் போது மறு பிரச்சினை எழு வது உலக இயல்பு. அதன் படி பிளாஸ்மாவின் வெப்ப நிலையும், அடர்த்தியும்உயரும்போது அதில் ஒரு மாதிரியான நிலையா நிலை (Instability) ஏற்படுகிறது.

இந்தியாவில் சக்காரோவ் (Sakharov) என்பாரும், டாம் (Tamm) என்பாரும் காந்தப் புலத்தின் துணை கொண்டுபிளாஸ் மாவைத் தேக்கி வைக்க இயலும் என்ற உண்மையைக்கண்டு பிடித் துள்ளார்கள். அவர்களே அதே போல் பிளாஸ்மாவின் நிலையா நிலையைத் தடுக்கவும் காந்தப் புலனால் முடியும் என்று கண்டுள் ளார்கள். பிளாஸ்மா வெப்ப அணுச் சேர்க்கை முறை பிற் காலத்தில் நன்கு வளர நிறைய இடமுண்டு. அத்துறையில் நன்மை பல விளைய உள்ளன என்ற நிலை இன்று இருந்து வருகிறது. வல்லுநர்கள் கடினமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். பேச்சு, சமிக்ஞை மனத்தினால் கருத்தைஅறிவித்தலே (telepathy) இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவாக இருக்குமென்று சிலர் கருதுகிறார் கள்.



அயனி மண்டல பிளாஸ்மா

நம் பூமியைச் சுற்றி அயனி மண்டலப் பிளாஸ்மாஇருக்கிறது. இது இல்லாவிடில் நாம் வானொ லியின் பயனை அனுபவிக்க முடி யாது.

'A' நிலையத்திலிருந்து வரும் ரேடியோ அலைகளை அயனி மண் டலப் பிளாஸ்மா பிரதிபலித்து 'B' நிலையத்திற்கு அனுப்புகிறது.

A நிலையத்தில் இருந்து ரேடி யோ அலைகள் பூமியைச் சுற்றி யுள்ள அயனி மண்டலத்தால் பிரதிபலித்து 'B' நிலையத்திற்கு அனுப்புகிறது. பொதுவாக இவ்வலைகள் பூமியின் வளைவு கார ணமாகத் திரும்பி வர இயலாமல் அயனி மண்டலத்தில் பிரதிபலிக் கும். மேலும், இதனுடைய அதிர்வு எண்ணைக் (WC) கண்டு பிடிப்பதன் மூலம் பிளாஸ்மாவில் உள்ள மின்அணுவின் கன அடர்த் தியைக் காணலாம்.

இக்காலத்தில் பிளாஸ்மா அணுச்சேர்க்கைமுறை, ஆராய்ச்சி நிலையில் இருந்து வருகிறது. பிளாஸ்மா அணுச் சேர்க்கைக்குத் தேவையான வெப்பநிலை மிக உயர்ந்த நிலையில் இருக்க வேண் டும்.

பிளாஸ்மா வெப்ப அணுச் சேர்க்கை முறை பூரணத்துவம் அடைந்து விட்டால் நமக்கு ஆற்றலைப் பற்றிய கவலையே இல்லாமல் பல நூற்றாண்டுகள் வாழ இயலும்.


**நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்**
**நெ. ஜே. 90 "கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம்" உதகமண்டலம்**

தந்தி: நில்போபாங்க் தொலைபேசி எண்: 2420
கிளைகள்: கோத்தகிரி, குன்னூர், கூடலூர்
தொலைபேசி எண்: 332, 2684, 24

| | (லட்சம்) |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. | 40·00 |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் .. | 29·87 |

**வட்டி விகிதம்**

| | |
|---|---|
| (1) சேவிங்ஸ் பாங்கு கணக்கு .. | 4% |
| (2) பிராவிடண்ட்பண்டு டெபாசிட்டு | 5% |

**நிரந்தர டெபாசிட்டுகள்**

| | |
|---|---|
| (1) 1 மாதம் முதல் 3 மாதங்களுக்குள்ளாக | $3\frac{1}{2}$% |
| (2) 3 ,, ,, 6 ,, | $4\frac{3}{4}$% |
| (3) 6 ,, ,, 12 ,, | $5\frac{1}{4}$% |
| (4)12 ,, ,, 24 ,, | $6\frac{1}{4}$% |
| (5)24 ,, ,, 36 ,, | $6\frac{3}{4}$% |
| (6)36 ,, ,, 60 ,, | $7\frac{1}{4}$% |
| (7)60 ,, ,, 84 ,, | $7\frac{1}{2}$% |
| (8) 84 மாதங்களுக்குமேல் | $7\frac{3}{4}$% |

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டு களுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே.மாதாகவுடர், எம்.பி., இரா.சு.வேலாயுதம், பி.ஏ.
பெருந்தலைவர். துணைப்பதிவாளர்-செயலாளர்.


## வெண்பாப் போட்டி-21

**ஈற்றடி: ஞாலமே காட்டிடும் நன்றி**

முடிவுத் தேதி 1—11—1971

பரிசு: ஓராண்டு **'தமிழரசு'** அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),

"தமிழரசு" அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை-2.

**குறிப்பு:** அஞ்சலட்டையில் வரும் வெண்பாக் களே ஏற்றுக்கொள்ளப்படும்.



# யாதும் ஊரே யாவரும் கேளிர்!

ம. நடராசன். எம். ஏ.,

" தென்னாடுடைய சிவனே
போற்றி
என்னாட் டவர்க்கும் இறைவா
போற்றி
பராய்த்துறை மேவிய பரனே
போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே
போற்றி.''

என்ற பாடலில் திருச்சிராப் பள்ளியையும் — திருப்பராய்த் துறையையும் இணைத்துப் பாடிச் சிவனடியார்கள் மகிழ்ந்த காலம் ஒன்று உண்டு. அப்பரும், சம்பந் தரும், மாணிக்கவாசகரும், அருணகிரிநாதரும் பாடிப் பரவிய புண்ணிய இடம். அத்தகைய பாடல்கள் பெற்ற சைவத்திருத் தலமான திருப்பராய்த்துறையில் இன்று சைவத்தோடு கலந்த 'சன் மார்க்க' முறையில் நடைபெறும் கல்வி நிலையந்தான் இராம கிருஷ்ண குடில் என்பதாகும். திருச்சியிலிருந்து மேற்கே 10 கல் தொலைவில் அகண்ட காவேரியின் அழகைப் பருகிய வண்ணம் அமைந்துள்ள தென்கரையில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந் திருக்கிறது—அமைதி நிறைந்த இவ்வழகிய ''குடில்''. சரித்திரத் தில் சாந்தி நிகேதனத்தைப் பற்றிப் படித்திருக்கிறோம்; அச் சாந்திநிகேதனத்தையும் விஞ்சு கின்ற முறையில் நம் தமிழகத்தே தன்னிகரற்ற முறையில் ''குரு குல ஆசிரம வாழ்க்கை'' இக் குடிலில் நடைபெற்று வருகிறது.

## கொள்கை வகுத்த குடிலின் தந்தை

''அன்ன சத்திரம் ஆயிரம்
வைத்தல்;
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம்
கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி
வித்தல்''

என்பதற்கிணங்க மட்டுமல்ல இதற்கு மேலும் பலபடி சென்று பாங்குற உதவுவதுதான் பராய்த் துறை '' குடில் '' எனில் மிகை யாகாது. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் எனும் இம் மூன்று அடிப்படைத்தேவை களையும் தந்து இவற்றிற்கு மேலாக எழுத்தறிவிக்கும் இறை தொழிலை ஈடிணையற்ற முறையில் நாளும் செய்து வருகிறது.

'' உணர்ச்சியை முழுமைப் படுத்தும் காரியத்தில் நண்பர் ராமசுவாமி அவர்கள் நல்லமுறை யில் வெற்றி பெற்றிருக்கிறார் என்ற காரணத்திற்காக அவரை நான் போற்றுகிறேன்'' என்று மறைந்த மாமேதை 'அண்ணா' அவர்கள் 1967-ஆம் ஆண்டு குடில் ஆண்டு விழாவில் பேசுகை யில் குறிப்பிட்டார்கள். இத்தகு பெருமைக்குரிய பெரியவர் திரு ராமசாமி அவர்கள் 1949-ல் ஏகாங்கியாக இருந்து, அன்பர் களின் உதவியால் 56 சென்ட் நிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'குடில்' இன்று 50 ஏக்கரா பூமி யைத் தனதாக்கிக் கொண்டு, பல லட்ச ரூபாய் மூலதனத்தில் 'இண்டஸ்டிரியல் எஸ்டேட்' ஒன்றையும் அண்ணா அவர்களின் திருக்கரத்தால் திறக்கப் பெற்றுத் திகழ்கின்றது.

## அனாதைகளின் அரும்புகலிடம்

'' ஏழை மக்கள்தான் நான் வணங்கும் கடவுள். அவர்களுக்குக் கல்வி இல்லை, கஞ்சி இல்லை, கந்தையில்லை. முன்னேற்றம் அடைவது எப்படிஎன்பதே அவர் களுக்குத்தெரியாது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளை யார் தான் செய்து கொடுப்பார்கள்? யாரொருவர் இம்மாதிரி ஏழை மக்களின் பொருட்டு நெஞ்சு













புண்ணுக வருந்துகிருரோ அவர்தான் மகாத்மா” என்ற விவேகானந்தரின் விவேக உரையால் ஈர்க்கப் பெற்ற பிரம்மச்சாரி ராமசாமி அவர்கள், இறைவனைத் தேடி எங்கும் செல்லாது, ஆண்டவனுக்கெனத் தனி ஆலயம் கட்டாது ‘ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கிருன்’ எனவே ஏழைகளை, ஆதரவற்ற அனுதைகளை அழாமல் பார்த்துக் கொள்வதே, தான் ஆண்டவனுக்குச் செய்யும் அருந் தொண்டாகக்கருதி 1—6—1954 அன்று 5 அனுதை மாணவர்களுடன் குருகுலம் தொடங்கினுர். இன்று 350 மாணவர்களைப் பெற்றுப் பெருந்தொண்டு புரிந்து பெருமையுடன் விளங்குகிறது.

“இல்லை, இல்லை! இனி தனக்கென உலகில் எவருமே இல்லை, உற்ருர் பெற்ருர் ஒருவரும் இல்லை” என்ற நிலையில் தமிழகத்தில் உள்ள அனுதைக் குழந்தைகளைப் பொருள் பெருது சேர்த்துக் கொண்டு ஆதரவளித்து வரும் ஒரே இல்லம் இக் குடில் தான். “இனி இங்குப் புகலிடம் பெறக்கூடிய நிலையிலுள்ள, தாய் தந்தை இருவருமேயற்ற ஏழை அனுதைச் சிறுவர்களே தமிழகத்தில் இல்லை” என்ற நிலையினை ஏற்படுத்தும் முகத்தான், ஆண்டுதோறும் நிபந்தனை, ஏதுமின்றி எச் சமயத்திலும் அனுதைகளைக் குருகுலத்தில் ஏற்றுக் கொள்கிறது இக்குடில்.

## மாணவர்களின் அன்ருடக் கடமைகள்

குருகுல மாணவர்களுக்கென்றே அரசு அனுமதி பெற்ற சீனியர் பேசிக், போஸ்ட் பேசிக் பள்ளிகள் (உயர்நிலைப்பள்ளிவரை) குடிலில் நடைபெற்று வருகின்றன. 12 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

“மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே !
மரத்தை வெட்டிமனை செய்குவீரே !
உண்ணக் காய்கனி தந்திடுவீரே !
உழுது நன்செய் பயிரிடுவீரே !
எண்ணெய், பால்நெய் கொணர்ந் திடுவீரே!
இழையை நூற்றுநல் லாடை செய்வீரே ?

என்று பாரதி பாடியபோது இத்தனையும் செய்ய ஒருவனுக்குப் பயிற்சி கிட்டுமா, என்று பாரதி கூடச் சிந்தித்திருக்கக் கூடும். ஆனுல் இவ்வாறு பல்வேறு வேலைகள் செய்திட, அன்ருடம் படிப்போடு, நடைமுறைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாள்தோறும் காலை 4-45 மணி அளவில் எல்லா மாணவர்களும் துயிலெழுகிருர்கள். 5-00 மணிக்குக் கடவுள் வழிபாடு செய்கின்றனர்.

5-15 மணி முதல் 6-15 வரை படிக்கிருர்கள்.

6-15 மணி முதல் 7-15 வரை துப்புரவு செய்தல், பாத்திரங்களைச் சுத்தம் செய்தல், சமையல் செய்தல் போன்ற வேலைகளைச் செய்கிருர்கள்.

7-15 மணி முதல் 8-15 வரை காவிரியில் நீராடல், துணிகளைத் தூய்மை செய்தல்.

8-15 மணி முதல் 8-30 வரை வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் வழிபாடு செய்யும் கூடத்தில் எல்லா மதக் கடவுளர்களின் படமும் வைக்கப் பெற்றுள்ளன.

8-30 மணி முதல் 9-30 வரை உணவு உட்கொள்கிறார்கள்.

9-45 மணி முதல் 12-45 வரை பள்ளி சென்று பயில்கிறார்கள்.





12-45 மணி முதல் 1-00 வரை கைகால் சுத்தம் செய்து பின்னர் வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள்.

1-00 மணி முதல் 2-00 வரை நண்பகல் உணவு உட்கொள்கிறார்கள்.

2-15 மணி முதல் 3-30 வரை மாலைநேர வகுப்பு.

மாலை 3-45 மணி முதல் 4-30 வரை வாரத்தில் மூன்று நாட்கள் விளையாட்டிலும் மூன்று நாட்கள் வயல்வெளியிலும் வேலை செய்கிறார்கள். இரவு 7-30 மணிவரை படிக்கிறார்கள். இரவு உணவிற்குப் பிறகு வழிபாடு முடித்து உறங்கச் செல்கின்றனர்.

### விவசாயம்

குடிலுக்குச் சொந்தமான 10 ஏக்கர் நன்செய் நிலத்தில் நெல்லும், காவிரிப் படுகையில் 6 ஏக்கரில் காய்கறித் தோட்டமும், சுமார் 15 ஏக்கர் மணற் பாங்கான நிலத்தில் தென்னந் தோப்பும், 5 ஏக்கரில் மாந் தோப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நிலத்தை உழுவது, நாற்று நடுவது, களை பறிப்பது, நீர் பாய்ச்சுவது போர் அடிப்பது போன்ற எல்லா விவசாய வேலைகளையும் மாணவர்களே செய்கின்றனர். இதனால் இவர்கள் படிப்பு, கெடுவதில்லை. ஆரம்பத்தில் 1,000 தென்னைகள் எழுப்பப்பட்டுள்ளன. காந்தி நூற்றாண்டு விழா நினைவாக 1,000 கன்றுகள் மாணவர்களால் இரண்டே நாளில் வைக்கப் பெற்றன. 1961-ல் பத்து ஏக்கர் நிலத்தில் சவுக்குக் கன்றுகள் நடப்பட்டு, 1966-ல் 40,000 ரூபாய்க்குச் சவுக்கு வெட்டி விற்பனைசெய்யப்பட்டன. இதில் முழுக்கவும் ஈடுபடுத்தப்பட்டோர் இங்குள்ள மாணவர்களே ஆவர். இவ் வருவாயைக் கொண்டுதான் தென்னைகள் வைக்கப்பெற்றன. 2,500 தென்னைகளும் பலன்தர முற்படும்போது ஆண்டிற்கு ரூ. 1 லட்சம் வருமானம் கிட்டுமெனக் குடில் சகோதரர் ரத்தினம் பெருமையுடன் கூறுகையில் இவ்வளவும் இச்சிறார்தம் உழைப்பினால் வரும் பலன்தானா என வியந்திட வேண்டியுள்ளது.

### குடிநீர் மேல்நிலைத் தொட்டி

குருகுல மாணவர்களுக்குச் சுத்தமான குடிநீர் கிடைக்கவும், காவிரி நதியில் குளிக்க இயலாத போதெல்லாம், குளிக்கவும், துணிகள் துவைக்கவும், நந்தவனம், செடி, கொடி, மரங்களுக்கெல்லாம் தண்ணீர் பாய்ச்சவும், ப்ளஷ் அவுட் கக்கூஸ்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்கவும், மற்றும் அவசியமான இடங்களிலும் குழாய்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. நாற்பது அடி ஆழத்தில் (பில்டர் பாயிண்ட்) வடிமுனைக் குழாயிறக்கி, எலெக்ட்ரிக் மோட்டார் பம்ப் செட் வைத்து நீர் இறைக்கப்படுகிறது. எல்லா வகைக் கழிவு நீரையும் ஒன்று சேர்த்து மாட்டுப் பண்ணைக்கும் அப்பால் குழாய் மூலம் கொண்டு போய் நிலத்தில் பாய்ச்சி, சீமைப்புல் தோட்டம் உண்டாக்கப் பட்டிருக்கிறது.



### குடில்போக்குவரத்தும் தொழிற் பயிற்சி நிலையமும்.

ஆல மரம் போல் மிகப் பெரிய அளவில் வளர்ந்து விட்டிருக்கும் இந் நிறுவனம் நிர்



வாகச் செலவிற்கு ஆண்டு தோறும் மூன்று லட்சம் ரூபாய் செலவிடுகிறது. சராசரி ஒரு மாணவனுக்கு ஓர் ஆண்டில் செய்யப்படும் பல்வேறு செலவுகள் ரூ. 500 ஆகும். அரசு வழங்கும் தொகை ரூ. 144. அரசாங்கம் தரும் உதவிக்கு மேல் செலவு ஆவதால், தனியார் நன்கொடைக்கு ஆண்டு தோறும் காத்திருக்கவேண்டியுள்ளது. இந்நிலைபோக்கிடவும், பள்ளி இறுதி வரை பயின்றவர்க்குத் தொழில் நுட்ப அறிவை வழங்கிடவும் ஏற்ற முறையில் ''ராமகிருஷ்ண இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்'' எனும் அமைப்பு உருவாக்கப் பெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சரான ஆண்டு தொடங்கி வைத்தார்கள். இங்கு ஆயிரக்கணக்கான பம்புசெட்டுகள் தயாரிக்கப்படுவதுடன் அவைகள் குறைந்த விலைக்கு லாப நோக்கின்றி விவசாயிகளுக்கு விற்கப் படுகின்றன. அத்துடன் குடில் பேருந்துப் போக்குவரத்தும் மக்கள் நலனுக்காக நன்முறையில் நடத்தப்பட்டுவருகின்றது. 1949-ல் தொடங்கப்பட்டது முதற்கொண்டு இது நாள் வரை ஏறத்தாழ ரூ. 50 லட்சம் வரை இவ்வமைப்பின் பல்முனை வளர்ச்சிக்கும் செலவிடப்பட்டுள்ளது. எல்லாவிதக் கட்டடங்கள் கட்டுவதற்கும் ஆன செலவு சுமார் ரூ. 12 லட்சமாகும். ஆசிரியர் குடியிருப்பு ரூ. $1\frac{1}{2}$ லட்சம் செலவில் தற்பொழுது கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. ஆண்டுத் தேவைக்கான நெல்லைச் சேமித்து வைக்க, 3,000 மூட்டைகள் கொள்ளளவுள்ள நெற்களஞ்சியம் ஒன்று ரூ. 65,000 செலவில் கட்டப்பட இருக்கிறது.

அண்ணா புகழ்ச்சி:—கொள்கை வழி நிற்கும் குடில் நிறுவனத்தின் குன்றா உழைப்புக்கண்டு மகிழ்ந்து அழகில் மயங்கிப் பின் வருமாறு குறிப்பிட்டார் அண்ணா.

''நம்முடைய ஆசைகளை அடக்கிக் கொண்டு, அடுத்த



தலைமுறைக்கு வசதியைத் தேடிக் கொடுக்கவேண்டும். அப்படிப் பட்ட மன அடக்கத்தை, அப்படிப் பட்ட தன்னலமற்ற தன்மையை, உழைக்கின்ற தன்மையை இந்தக் குடில்தருவதிலேயே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். மாணவர்கள் இங்கு உழைப்புத் திறமையைப் பெறுகிறார்கள்; அறிவுத் திறமையைப் பெறுகிறார்கள்''

இது எவ்வளவு உண்மை என்பதை இதனை நேரில் காண்போரே உணர முடியும்.

சாதாரணமாக ஒரு மாணவன் கல்விக் கூடத்தை விட்டு வெளியேறும்போது, உழைக்கத் தெரியாதவனாக உலகம் இன்னதென்றே அறியாதவனாக இருக்கின்றான். ஆனால் இக்குடிலில் படித்துப் பயிற்சி பெற்று வெளியேறும் ஒரு மாணவன் தன்னை எந்தச்சூழ்நிலைக்கும் தயார் படுத்திக் கொண்ட நிலையில், உழைக்க முடியும், உயர முடியும் என்ற தன்னம்பிக்கையோடு வாழ்க்கையில் நுழைகிறான்.

எனவே இக்குடில் பத்து-பன்னிரண்டு தென்னை மரங்கள் உள்ள இடம் மட்டுமல்ல; நல்ல முத்துச் சுடர்போல நிலாவொளி முன்னே வரும் இடமட்டுமல்ல— கத்துங்குயிலோசை வந்து காதில் விழும் இடம் மட்டுமல்ல; சித்தம் மகிழ்ந்து தென்றல் வரும் இடம் மட்டுமல்ல;

குடில் குணக்குன்றுகளை உருவாக்கும் கூர்மதிக் கோயில்.



## அண்ணா சொன்ன கதை

ஒரு மன்னன் காலையிலே எழுந்து வீதியிலே ஓர் ஏழை போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டுத் திரும்பும் போது கதவு இடித்துத் தலையிலிருந்து ரத்தம்கொட்டியதாம்.

மன்னன் இரத்தம் சிந்துவதைக் கண்ட மந்திரி, ஏழையை இழுத்து வரச் சொல்லிக் கட்டளையிட்டார்.

'காலையில் உன் முகத்தைப் பார்த்ததால் அவர் ரத்தம் சிந்தினார்; ஆகவே பாவியாகிய நீ உயிர் வாழக் கூடாது' என்று மரண தண்டனை விதித்தார் மந்திரியார்.

உடனே ஏழை சிரித்தான்!

"ஏன் சிரிக்கிறாய்?"—மன்னன் கேட்டான் ஆத்திரத்தோடு!

"நீங்கள் என் முகத்தைப் பார்த்ததால் ரத்தம்மட்டும் சிந்தினீர்கள்! நான் உமது முகத்தைத்தான் பார்த்தேன். இப்போது என் தலையையே இழக்கிறேன்" என்றான் ஏழை!




## 18. நாட்டுக்கென் செய்தோம் நவில்

எத்தனைதான் கல்லூரி ! எத்தனைதான் பட்டங்கள் !
அத்தனையும் பெற்றும் அனுபவித்தும்—இத்தரையில்
ஏட்டுப் படிப்போ எழுத்தறிவோ இல்லாக்கை
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவதென்று
நொந்துபோய் உள்ளவர்கள் நோய்தீர்க்க—வந்தவுடன்
தீட்டினோம் திட்டமய்யா தீங்காக வேறிந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கே. ஒ. எஸ். பகுருதீன், மாங்குளம்.

வீடும் நலம்பெறவே விற்பனர்கள் வாழ்ந்திடவே
கூடும் கொடியவர்கள் தாழ்ந்திடவே—தேடியே
நாட்டின் உயிர்களெல்லாம் நல்வாழ்வு பெற்றிடவே
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—மு. கண்ணப்பன், சென்னை-2

மண்டும் புகழ்மலர மாண்பின் மணம்நுகரத்
தொண்டர் பணியே துணைநிற்கும்—ஒண்டொடியே !
ஏட்டில் பெயர்நிலைக்க இன்பம் நமையழைக்க
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் முத்து வேங்கடேசன், திருமயம்.

காற்றடித்தால் வீழ்கின்ற காய்வாழ்வை நச்சாமல்
மாற்றுரும் ஒப்புகின்ற மாப்பணியை—ஆற்றியதால்
ஏட்டில் தமிழ்நெஞ்சில் என்றும்வாழ் அண்ணனைப்போல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

நாட்டால் நமக்கென்ன நன்மை எனக்கருதி
ஏட்டறிவைப் பெற்றதனால் ஏதுபயன் ?—நாட்டினரை
வாட்டும் உறுதுன்பம் ஓட்டிடநாம் வாணாளில்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் பால. உலகநாதன், ஆரணி.

துஞ்சுபுலி ஒத்தே தொடர்ந்துபணி ஆற்றியபின்
பஞ்சுமலி மஞ்சம் படுத்திட்டோம்—அஞ்சுகமே !
வீட்டினள வோடே வெறும்பணி நின்றிட்டால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—அரங்கசாமி, கிழக்குத் தவுட்டுப்பாளையம்.

வெய்ய கொடுமையும், வேதனையும் பாராமல்
பொய்மைக் குழிபுதைந்த புல்லியராய்—அய்யகோ !
வீட்டிலிருந் துண்டுறங்கி வீணுரைத்த தன்றியிந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சமா. அருணன், சோழ கிராமணி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்—

நெல்லை ஆ. கணபதி,
டி. 165, டாடண்டர் நகர்,
சைதாப்பேட்டை,
சென்னை–15.

சிங்களத்தைப் பொன்கொழிக்கச் செய்த தமிழர்களை
இங்கிருக்க லாகா தெனவிரட்டும்—சிங்கள
நாட்டை அரசாளும் நாயகியே ! தீதுன்றன்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—குழ. அண்ணாமலை, கோவை.

முத்தத்தின் முத்திரையை முந்நூறு நாட்களுக்குள்
இத்தரையின் ஒருயிராய் ஈன்றெடுக்கும்—வித்தகத்தைக்
காட்டுதற்கும் ; தன்னலத்தைக் காப்பதற்கும் கற்றதன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் அ.வே. காசிநாதன், அமிர்தராயன்பேட்டை.

திண்ணையில் குந்தி திமிராகப் பேசிவிட்டு
மண்ணில் மரமாய் மடிவோனே !—திண்ணமுடன்
வீட்டுக் குதவாத வீணனே ! நம்வாழ்வில்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் வ. கலியமூர்த்தி, பிர்க்கலைக்காடு.

பகுத்தறிவுக் கல்விதந்து, பஞ்சநிலை போக்கி,
தொகுத்த கலப்புமணம் தோற்றி, —வகுத்திருந்த
கேட்டுக்கே வேட்டுவைத்துக் கீர்த்திபெற்ற செந்தமிழர்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

மாண்பிறவி யன்றோ மனிதப் பிறவிஇதை
வீண்பிறவி யாக்கி விடலாமோ ?—பூண்பாவாய் !
வீட்டுக்கென் செய்வதென வெந்தழிந்த தல்லாது
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நாரை. மாகுப் புலவர், வில்லிசேரி.

கன்றோடு நிற்பதில்லை ; காணும் பசுநமக்கும்
அன்போடு பால்தந்தே ஆதரிக்கும் !—அன்பே!நாம்
வீட்டோடு நிற்கின்றோம் ; வீண்வாழ்வு வாழ்கின்றோம் ;
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—மலை. மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

பாரதியார், காந்தியண்ணல், பண்பாளர் போற்றுகின்ற
பேரறிஞர் அண்ணா ; பெரியார்;நற்—சீருயர்த்திக்
காட்டிப் பணிசெய் கலைஞர்தம் சொற்படிநம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நெல்லை சி. தமிழ்வென்றி, சுத்தமல்லி.

'நாமிருவர் ; பிள்ளை நமக்கிருவர்' என்றரசு
சேமமுடன் வாழவழி செப்பிடினும்—நாமிருவர்
வீட்டைப் பெருக்கியிங்கு வேதனைகள் சேர்த்ததன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கோம்பை கா. செயபாலன், பி.இ., சென்னை-1.

கஞ்ச மலர்முகமே ! கற்கண்டே ! தேன்பாகே !
நெஞ்சங் கவர்கிளியே ! நீணிலவே !—மஞ்சமதில்
நாட்டுக்குப் பாரமாய் நாம்பலரைப் பெற்றதல்லால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நா. சுந்தரராசன், தர்மபு

மண்ணிற் பிறந்த மனிதருள் தாம்பிறந்த
மண்சிறக்கச் செய்தவர்கள் மாண்புடையோர்—கண்மணி
ஏட்டுச் சுரைக்காய்போல் இல்லாமல் நாம்பிறந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கோ. புகழேந்தி, புதுவை-4

நாளும் உழைத்துழைத்து நல்வாழ்வு கிட்டாமல்
வேலைக்கு வேலை வெறுப்படைந்து—தாளாமல்
வாட்டமுறும் ஏழை வறுமையைப் போக்காமல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் ந. அ. அண்ணாமலை, வடஆர்க்காடு

குண்டுமழை தாங்கிக் குலுங்கு நிலந்திருத்தி
மண்டுபுகழ் சப்பான் வளர்வதையே—கண்டும்நாம்
கூட்டங்கள் முற்றுகை கோரிக்கை என்பதல்லாமல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—இளங்கோ, ஆலங்குளம்

மண்டுதமிழ் உண்டு,புகழ் கண்டுதிகழ் நம்முதல்வர்
குண்டுவெடி கொண்டுசதி செய்பவர்பால்—விண்டுரைப்பர்
நாட்டமெல்லாம் மக்கள் நலமல்லால் தீமையுற
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—நெல்லை எஸ்.முத்து, திருநெல்வேலி-6.

நாட்டால் அரசால் நமக்கென் பயனென்றே
கூட்டிக் கழித்தே குறிபெருக்கித்—தேட்டமதில்
நாட்டமே கொள்ளும் நயமில் மனிதா ! நம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

பற்றும் பகைநெருப்புப் பாசறையைப் பாழ்செயினும்,
தொற்றும் பிணிநமரைச் சூழ்ந்திடினும்—வெற்றெலும்புக்
கூட்டுக்கே சோறூட்டிக் குந்திக் கிடந்ததன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் காவிரிக் கயலன், இளங்காடு.

செந்தமிழ் வேலுடையோன், தென்னாட்டுக் காந்தி,நம்
சிந்தைவாழ் தெய்வமாம் சிலரண்ணா!—இந்நாட்டில்
பாட்டாளி மக்களைப் பாராளச் செய்தார்;நாம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—அ. பெரியசாமி, பி.ஏ.,பி.டி., மம்சாபுரம்.

வங்கத்துச் சிங்க வரலாற்றைப் பார்த்தாயா ?
தங்கமகன் பேச்சைத் தலைக்கொண்டே—பொங்குகிறோர்!
வீட்டை உயிரை விளைநிலத்தை வேண்டார்போல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் சோம. சிவப்பிரகாசம், நாச்சியாபுரம்.

தன்னை விளைவிக்கும் தாரணிக்கு நல்லெருவாய்
மன்னும் பயிரினங்கள் மாய்வனபோல்—நன்னூலாம்
ஏட்டில் வரலாற்றில் ஏறிவிடு மாறுநாம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

இரண்டுக்கு மேல்என்றும் வேண்டாமே என்ற
திரண்ட கருத்தைத் தெரிந்தும்—முரண்பாடாய்
வாட்டம் வரும்வரைக்கும் மக்களைப் பெற்றோமே
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கலைப்பிரியன் மு. நாராயணன், சத்திரப்பட்டி.

பாட்டுக் கொருபுலவன் பாரதியின் ' பா ' கேட்டும்
நாட்டின்மேல் பற்றின்றி நாமிருந்(து),—ஓட்டுகின்றோம்!
ஓட்டுகின்றோம்! ஒப்பரிய நற்பொழுதை ; இன்றுவரை
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ஆ. இராசரத்தினம், பி.எஸ்ஸி.பிடி., தாமரங்கோட்டை.

உழைத்தேதான் உண்போன் ஒடுங்கக் கொடுமை
இழைத்தேதான் தின்போன் இனிதாய்த்—திளைத்திடவே
ஈட்டிய செல்வத்தை ஏழையர்க்குத் தந்திடற்கிந்
நாட்டிற்கென் செய்தோம் நவில்.

— ரா. கணபதி, உ. அம்மாப்பட்டி.

கூடிக் குலவித்தான் குட்டிகளும் போட்டுவிட்டு
தேடிநிதம் சோறிட்டுச் சோர்ந்திட்டோம்—ஏடநாம்
கூட்டி, வறுமைதனைக் குன்றாமல் செய்ததன்றி
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ஆதினம், விரசிகாமணி.

என்னுள் புதிராய் இருந்துவரும் என்உணர்வே!
உன்னைநீ முன்னர் உணர்ந்திடுக—உன்இயல்பால்,
நாட்டைக் குறைகூற நின் நாவை நீட்டுமுனர்,
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பூவை. வாலறிவன், பூலாம்பாடி.

மூடப் பழக்கத்தால் மூண்ட மடிமையிருள்
ஓடப் பகுத்தறிவை ஓதிநிதம்—நாடிதனை
மீட்ட பெரியார்போல் மெய்யறிஞர் அண்ணாபோல்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சு. நாராயணசாமி, தில்லைநகர்.

கண்ணாய்த் திருநாட்டைக் காத்தடிமைப் பூட்டுடைத்த
அண்ணலென வாழ்ந்தோமா? அன்பறிவாம்—அண்ணாபோல்
கேட்டை மனந்தெளிந்து கிள்ளி எறிந்தோமா ?
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—க. ஒப்பிலாள், திருச்சி-1.

இன்று நிறவெறியால் இன்னுயிரைத் தானிழந்து
கென்னடியார் அன்று கிளர்ந்தெழுந்து—சொன்னதுபோல்
நாட்டின்கண் ஏதேனும் நாடினமே அல்லாது
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பி.சௌ. கருப்பன் செட்டி, திருச்சி-16.

ஆடிக் களித்தோம் ; அறுசுவைகள் நாமுண்டோம் ;
கூடிக் கலந்தோம் ; குறைவின்றி—மாடியிலே
நீட்டிப் படுத்தங்கே நிம்மதியாய்க் கண்ணயர்ந்தோம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பி.எஸ். விசாலாட்சி, மதுரை-11.

தாயாய்க் கருணைத் தருவான கற்பகமாய்த்
தோயும் குருதித் துடிப்பினிலே—ஓயாது
மீட்டும் இசைகூட்டும் மேன்மைத் தமிழ்வழங்கும்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் காளியப்பன், பி.ஏ., காரைக்குடி-4.

ஈட்டும் பொருளெல்லாம் எங்கேயோ சென்றுறைய
வாட்டும் பசியோடும் வாழ்மக்கள்—கூட்டத்தின்
வாட்டமதைப் போக்கி வளம்பெருக்கும் சீர்மணக்க
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கனியமணி ஜே.வி. எஸ். சுவாமி, முத்துவயல்.

முக்கோண மந்திரத்தை முன்னமே நான்சொன்னேன்
எக்கோணம் ஆயென்ன வென்றாயே !—இக்கோணல்
வீட்டில் இடமின்றிப் பெற்றதல்லால் ; மேல்நமது
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—காங்கேயன், வெங்கல் பாளையம்.

உண்டோம் ; உறங்கினோம் ; நாளும் உடல்வளர்தோம் ;
தொண்டாற்றி, இந்நாளில் தொய்ந்தநம்—பண்டைநலம்
மீட்டுதற்(கு) என்செய்தோம் ? மேன்மைபெற் றோங்கிடநம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

ஈட்டினோம் செல்வங்கள், எட்டினோம் வானிலவை !
ஏட்டில் எழுதிட்டோம் இன்கவிதை —நாட்டமாய்
வீட்டுக் குறைதீர்த்தோம் வேறெதுவும் செய்தோமா ?
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—வை. வாணி, சென்னை-4.

ஆண்மயிலே! தேனே! அழகொழுக நாமிருவர்
செய்மையிலே கூடிச் செழிப்பதுபோல்—வாய்மையுற
ஏட்டுக்கென் செய்தோம்? எழுச்சிபெற் றேங்கிடத்தான்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பசுமலை வீர. முருகேசன், எம்ஏ., பி.டி., களிமங்கலம்.

கற்றோரும் கல்லாரும் கண்டு களிகூரப்
பிற்பட்டோர் வாழ்வுநலம் பேணுதலால்—நற்புகழை
ஈட்டும் கலைஞர்போல், இன்னமுதே! நாம்பிறந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

நாட்டின் நிலையெண்ணி நாம்பாடு பட்டோமா?
கேட்டை யழிக்கக் கிளர்ந்தோமா?—நீட்டுபுகழ்ப்
பாட்டைத் தமிழில் படைத்தோமா? ஏதமிழா!
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—பூ.அ. இரவிந்திரன், சுண்டப்பாளையம்.

செங்குருதி கொட்டிச் சிறைப்பட்டுச் செக்கிழுத்துத்
தங்கச் சுதந்திரத்தைத் தாம்பெற்றார்—இங்கேநாம்
வீட்டுக்(கு) உழைத்துழைத்தே வீழ்ந்ததன்றி நாம்பிறந்த
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சிவ. மு. சிவலிங்கம், பி.எஸ்.சி., சிவகாசி.

ஆண்டான் அடிமை அகற்றி ஒழித்தோமா?
தீண்டாமை தன்னைத் தீய்த்தோமா?—ஆண்டாண்டாய்
வாட்டமுற்றுத் தாழ்நிலையில் வாழ்ந்திடுவோர் சீர்பெறவே;
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—தமிழரசன், மகேந்திரபள்ளி.

தனியொருவன் நல்வாழ்வும் தாய்நாட்டின் மாண்பும்
இனிதுயர நாட்டினருக் கென்றும்—புனிதரெல்லாம்
தீட்டி வகுத்திட்ட திட்டங்கள் ஈடேற
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—தி. செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

தென்னகத்தின் தேன்குடமே! தென்பாண்டி நன்முத்தே!
முன்னகத்தே முற்றிவந்த முத்தமிழே—உன்நலத்தைக்
கேட்டிருந்தும் பாடமொழி ஆகுமோ என்றஇந்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் அ. கன்னையா, தொப்பூர்.

மண்ணகத்துத் தோன்றி மகிழ்வுடனே வாழ்ந்திருக்க
எண்ணற்ற நற்பொருளை ஈட்டிடினும்—கண்மணிபோல்
நாட்டமுடன் காத்திருந்து நாளும் நலமளிக்கும்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் க. ஆ. இராசன், சேலம்.

சுவைமிக்க உண்டியுடன் சுற்றத்தா ரோடே
எவைவரினும் வந்திடுக வென்றே—அவரவர்
பாட்டுக்கென் னென்றே பயமின்றி வாழ்ந்தாலும்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

தொழிலை வளர்த்தோமா? தொல்லை தவிர்த்தோமா?
மொழியை வளர்த்தோமா? மோகம்—ஒழித்தோமா?
வீட்டை வளர்த்தே வீணவதிப் பட்டதல்லால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—சொ. அழகப்பன், சென்னை-17.

ஆண்டுதோறும் பிள்ளை; அளவின்றித் துன்பங்கள்!
ஆண்டவன் தந்ததென்பார்! ஐயகோ!—மூண்டெழும்
கூட்டம் படைத்தோம்! கொடுமை இதைத்தவிர
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., சென்னை-5.

நாயும் தனைப்புரந்த நல்லோர்க்கும் நன்றிசெயும்
ஆயப் புகுந்தால் அவனியிலே—நேயமுடன்
நாட்டிலுள இன்பம் நமக்கீந்த அன்னையாம்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—ந. கருணாநிதி, வங்கனூர்.

நோயொன்றும் காணமல் நூறாண்டு வாழ்ந்தாலும்
போயடங்கும் யாக்கையிது; பொய்யல்ல—ஓயாது
வீட்டுக்(கு) உழைப்பதன்றி வேறுண்டோ? தாய்த்திரு
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—தடாகம் புஷ்பன், கோவை—2

நம்பெண்டிர் நம்பிள்ளை நஞ்சுற்றம் நம்முடைமை
நம்வாழ்வு என்றென்றே நாமெண்ணி—நம்பொழுதை
வீட்டுநலங் காக்க விரயஞ்செய் தோமல்லால்
நாட்டுக்கென் செய்தோம் நவில்.

—புலவர் மா. கணபதி, திருச்செங்கோடு.



# என் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

## 7. காவியமோ? ஓவியமோ?

மாதவன், ஒளிக்கடலில் மிதக்கும் கப்பலைப் போல் காட்சி தரும் அந்த அழகான மாளிகைவீட்டை அடைந்த பொழுது இரவு மணி எட்டு.

முன் தாழ்வாரத்தில் தம் மகளோடு உரையாடியவாறே அங்கும் இங்குமாய் உலவிய வண்ணம் இருந்தார் பேரின்பமுத்து.

அந்த நேரத்தில் அவர் அப்படி வீட்டில் இருக்கக் கூடும் என்று மாதவன் எதிர்பார்க்கவே இல்லை. வெளியே 'கிளப்' புகளுக்கோ, வேறு எங்குமோ சென்று விட்டு இரவில் பொதுவாக ஒன்பது-ஒன்பதரைக்கு மேல்தான் அவர் தமது இல்லத்திற்குத் திரும்புவது வழக்கம் என்று தேன்மொழி மட்டுமல்ல மற்றவர்களும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறான் அவன்.

இன்றோ. . . . தனக்காகவே அவர் காத்துக் கொண்டு நிற்பது போல் தோன்றியது மாதவனுக்கு ; அதற்குத் தகுந்தமாதிரிதான் அவருடைய கலகலப்பான வரவேற்பும் அமைந்திருந்தது. ஒரு வாரத்திற்கு முன்னர்த் தாம் கரடியாக உறுமியதை— கடுமையாகச் சீறியதை—யெல்லாம் அறவே மறந்து விட்டு முற்றிலும் புதிய மனிதராக—புதிய கனிவுடன்—அவர் வழங்கிய வாஞ்சை மொழிகள் அவனுக்கு மிகுதியான இனிப்பையே அளித்தன.

'. . . . இந்தத் தேன்மொழி என்னைப் பற்றி நிறையச் சொல்லி வைத்திருப்பாளோ ? . . . . தன் தந்தையை எனக்காகக் காத்திருக்கும் அளவுக்குக் கூட மாற்றி வைத்திருக்கிறாளே !'— மனத்திற்குள்ளேயே வியக்காமல் இருக்க முடியவில்லை மாதவனால்.

* * *

சிறிது நேரம் வெல்வெட்டுக் கம்பளம் விரிக்கப் பெற்ற, முன் கூடத்தில், சோபாக்களில் அமர்ந்தவாறே, மூவருமாகக் 'கிரிக்கெட்' ஆட்டத்திலிருந்து 'கிட்டிப்புள்' ஆட்டம் வரை ஓர் அலசு அலசி விட்டு உணவுக் கூடத்தினுள் நுழைந்த பொழுது அவனுக்காக அங்கே அறு சுவை விருந்தே காத்திருந்தது.

பால்கோவா நிறத்தில் பளபளக்கும் அந்தநீண்ட மேசையின் ஒரு புறத்தில் பேரின்பமுத்தும், எதிர்ப் புறத்தில் மாதவனுமாக அமர்ந்து கொண்டனர்.

''சண்பகம் எல்லாவற்றையும் இங்கே கொண்டு வந்து வச்சுட்டு நீ வெளியே போயிடு ; நாங்க முக்கியமான சில சேதியெல்லாம் பேசவேண்டியிருக்கு''—என்று சமையற்காரியை அங்கிருந்து அனுப்பி விட்டார் பேரின்பமுத்து. பிறகு தம் மகளின் பக்கம் திரும்பி, ''ஏம்மா, நீயும் உட்காரேன் ; மூணு பேருமா சேர்ந்தே சாப்பிடுவோம்'' என்றார்.

''வேண்டாம்பா ; நாமாக இருந்தால் பரவாயில்லை ; இன்னொரு விருந்தாளியும் வந்திருக்கும்போது, அவரையே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடுங்கள் என்று சொல்வது அழகாக இருக்குமா ?'' என்றாள் தேன்மொழி இள நகையுடன்.

''ஆமாம்மா ! அது சரி இல்லேதான் ; அப்போ நீயே பரிமாறிடு !''—என்றார் பேரின்பமுத்து சிரித்தவாறே.

மாதவனுக்கோ ஒரே மலைப்பாகவே இருந்தது. அந்தப் பெரிய நுனி வாழை இலையில் இப்படி வகைவகையான உணவுப் பண்டங்களை வடித்துத் தன்னைத் திணற அடிப்பாள் தேன்மொழி என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

அவனுடைய வாய் அந்தப் பண்டங்களை உள்ளுக்குத் தள்ளி வயிற்றை நிரப்பிக்கொண்டிருக்கும் அதே வேளையில், அவனுடைய கண்களோ . . . . ? தேன்மொழியின் பேரெழிலை இமைக்காமல் பருகி அவன் நெஞ்சை நிரப்பிய வண்ணமே அவை இருந்தன !

மெல்லிய கத்தரிப்பூச் சேலையுடுத்தி, முன்தானையை இடுப்பிலே செருகிக் கொண்டு, கரண்டியும் கையுமாக அவள் பரிமாறுகின்ற பக்குவமே, ஒரு தனி ஓவியமாக—தனிக் கவர்ச்சியாக—அவன் மனத்துக்கு மகிழ்வூட்டியது.

அவள் தன் அருகே வந்து மிக நெருக்கமாக நின்று தன் இலையிலே காய்கறிகளைத் தள்ளும் பொழுது,

‘‘எதற்கு இவ்வளவு தடபுடலான விருந்து?’’ என்று தணிந்த குரலில் கேட்டான் மாதவன்.

‘‘இந்த வீட்டு மாப்பிள்ளை ஆச்சே! சாதாரணச் சாப்பாடு போடலாமா?’’

—குறும்பு முறுவலுடன் குசுகுசுத்தாள் தேன்மொழி. அத்துடன்,

‘‘. . . .என்னையே பார்க்காமல் இலையிலே இருக்கிறதைப் பார்த்துத் தின்னுங்க; உங்களை ‘நல்லபிள்ளை’ என்று அப்பாவிடம் சொல்லியிருக்கிறேன்; அதைக் கெடுத்துக்காதிங்க, உங்க கண்ணாலே!’’

—என்றும் எச்சரித்தாள்.

நல்ல வேளையாக அப்போது பேரின்பமுத்துக்கு நன்றாகப் புரையேறிக்கொண்டு விட்டது; அதனால், அந்த இளஞ்சிட்டுகளின் வார்த்தைப் பரிமாறல்கள் அவருடைய செவியை எட்டியிருக்க வழியில்லை. நீரைப் பருகித் தொண்டையைச் சரி செய்துகொண்ட அவர்,

‘‘மாதவா!’’—என்று அழைத்தார்.

தேன்மொழி அவனைவிட்டு நகர்ந்து இப்பால் வந்துவிட, அவன் அவரை நிமிர்ந்து நோக்கினான்.

‘‘எதுக்கு இந்த விருந்துன்னு உனக்குக்கூட வியப்பா இருக்கும் இல்லையா? . . . . . . ஒரு முக்கியமான ஏற்பாட்டுக்கு முன்னறிவிப்புத்தான் இது. ஆனா, அது என்னான்னு நான் தெரிவிக்கிறதுக்கு முந்தி, நீ என்னை மன்னிச்சிட்டதா ஒரு வார்த்தை மனந்திறந்து சொல்லணுமே!’’

—அவருடைய இந்தச் சொற்களைக் கேட்டதும் மாதவனின் உடம்பே குன்றிக் குறுகிவிட்டது; திகைப்போடு கூடிய வெட்கத்தால் முகமும் வெளிறிவிட்டது.

‘‘நான் ரொம்பச் சின்னவன்; உங்க நிழல்லே உயிர்வாழ்கிறவன் உங்க மாதிரிப் பெரியவர்களைப் போய் . . . . .’’

—அதற்குமேல் என்ன கூறுவதென்றே தெரியாமல் திணறினான் மாதவன்.

உண்பதைக் கூட நிறுத்திவிட்டு அவனையே கண் கொட்டாமல் பார்த்தார் பேரின்பமுத்து.

‘‘உன்னோட இந்த அடக்கம் தாம்பா என் இருதயத்தை இன்னும் பிழிஞ்சு எடுக்குது. . . . . . . ஒரு மனிதன் பெரியவனா, சின்னவனா என்கிறதுக்கு அளவுகோல் அவன் மனமும் குணமும் தானே யொழிய, அவனோட பணமோ பகட்டோ இல்லே. என்கிட்டே எவ்வளவு பணம் இருந்து என்ன? அதனாலேயே நான் பெரிய மனிதன் ஆயிடுவேனா? அன்னைக்கு நான் எவ்வளவு மோசமா நடந்துக்கிட்டேன் .. ...ஆனா, அதுக்கு அந்தத் திரோபதையும் ஒரு காரணம். எனக்குப் பொதுவா ‘பெருநோய்’ கொண்டவங்களைக் கண்டாலே பிடிக்காது . . . .’’



அதற்குள் தேன்மொழி குறுக்கிட்டு—

‘‘எனக்கும் அப்படித்தான்; அவங்களைப் பார்த்தாலே எனக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வரும். ஆனா, சிலபேர் அவங்ககிட்டே எப்படித்தான் மனம் சகிச்சுப் பழகுறாங்களோ தெரியலே?’’

—என்று தன் தந்தைக்கு ஒத்து ஊதினாள்.

மாதவன் ஒரு பலாச்சுளையை எடுத்து வாயில் வைத்தவனாக,

‘‘இந்தச் சுளையிலே தேனும் ஊற்றி இருக்கோ?’’ — என்று தொடர்பில்லாத கேள்வியொன்றைத் தொடுத்தான்.

‘‘ஆமா, அது இனிக்கிறதிலே இருந்தே அதைக் கண்டுபிடிக்கத் தெரியலையா?’’—என்றாள் தேன்மொழி.

‘‘இந்தத் தேனைப் பிழிஞ்சு எடுக்கிற கூடு கூடச் சில சமயம் பெருநோய் கொண்டவங்க முகம்மாதிரி தான் தோணும், இல்லே’’—என்று வறட்சியாகச் சிரித்தான் அவன்.

தேன்மொழியின் மலர்ந்த முகம் சட்டென்று உலர்ந்து சுருங்கிவிட்டது. ஆனால் அவளைப் போல அவனது வார்த்தைகள்—வறண்ட சிரிப்பு—இவற்றிலே பொதிந்துள்ள உட்பொருளைத் துழாவிப் பார்க்கும் அளவுக்குக் கூர்மையோ பொறுமையோ இல்லை பேரின்பமுத்துக்கு. அவர் மேலே தொடர்ந்தார்:—

‘‘அது போகட்டும்; அன்னைக்கு நீ பணத்தைக் கொடுக்கலேன்னா அவ இந்த இடத்தை விட்டு நகர்ந்தே இருப்பாளா? அது மட்டுமா? இன்னும் இல்லாததும் பொல்லாததும் சொல்லி என் மானத்தையே வாங்கியிருக்க மாட்டாளா? அவ்வளவு சீக்கிரம் அவளை இந்த வீட்டைவிட்டு நீ அப்புறப்படுத்தினதுக்காக உனக்கு நான் நன்றியே சொல்லியிருக்கணும். நானோ முரட்டுத்தனமா — மூர்க்கத்தனமா — உன்னைப் பேசிட்டேன். ஆனா நீ .. .. ..? ஒரு வார்த்தை கூடச் சொல்லாமே, தலையைக் குனிஞ்சுக்கிட்டே போயிட்டே? அந்த உன் அடக்கத்தையும் பணிவையும் இப்ப நினைச்சாலும் . . . . . .’’

—திடீரென்று அவரது நெஞ்சம் நெகிழ்ந்து விழிகளை நீரில் மிதக்கவிட்டு விட்டது. குரலும் தழுதழுத்துவிட்டது. எனினும் சமாளித்துக் கொண்டு மேலே தொடர்ந்தார்:

‘‘உண்மையாத்தான் சொல்றேன், மாதவா? உன் சகிப்பு உணர்ச்சிங்கிற மழை வெள்ளத்திலே என் மனசிலே குவிஞ்சு கிடந்த குப்பை—கூளமெல்லாம் அடிச்சுக்கிட்டுப் போயிட்டதா ஒரு தெளிவை நான் உணர்கிறேன். தேன்மொழியும் உன்னைப்பத்தி நிறைய எடுத்துச் சொல்லிச்சு. இதுக்கிடையிலே எனக்கு அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சி ஒண்ணும் நடந்து போச்சு.’’




''என்னசார், அது?''

—திடுக்கிட்டுப் போய்க் கேட்டான் மாதவன்.

''நம்மோட நிறுவனத்துக்கு ஏராளமான கிளைகள் இருக்கிறது தான் உனக்குத் தெரியுமே? அவைகள் எல்லாத்தையும் என்னாலே அடிக்கடி போய்ச் சோதனை செய்ய முடியறதில்லே. அதைப் பயன் படுத்திக்கிட்டு ஒரு அலுவலகத்திலே உள்ள ''கேஷியர்'' ('' கருவூலக்காரர் '') பத்தாயிரம் ரூபாய்ப் பணத்தைச் சுருட்டிக் கொண்டுவிட்டார்.''

''அய்யய்யோ! அப்புறம்?''

''அப்புறம் என்ன? நான் மிரட்டிய மிரட்டல்லே எப்படியோ பணத்தைக் கொண்டு வந்து கட்டிட்டார். ஆனா, இந்த மாதிரி இனியும் நடக்கிறதுக்கு இடம் கொடுக்கக்கூடாது இல்லையா? அதுக்குத்தான் நம்மோட ஒவ்வோர் அலுவலகத்தையும் திடீர் திடீர்னு சோதனை செய்யவும் மற்ற சில என் அந்தரங்கமான பண விவகாரங்களைக் கவனிச்சுக்கவும் ''கண்காணிப்பாளரா'' — ஒருத்தரை அமர்த்திக்கிறதா முடிவுக்கு வந்திட்டேன். உடனே உன் நினைப்புத்தான் எனக்கு வந்தது. தேன்மொழியோட கலந்து பேசினப்போ அதுவும் நீதான் பொருத்தமான ஆள்னு சொல்லிடிச்சு. இல்லேம்மா?''

''ஆமாம்பா; இவர் மாதிரி நாணயம் உள்ளவரா—நம்பிக்கைக்கு உரியவரா — இருக்கிறவங்களைக் கண்டுபிடிக்கிறதேதான் கடினமா இருக்கே? நல்ல கத்தரிக்காய் என்று நம்பி வாங்கினதெல்லாம் சொத்தைக் கத்தரிக்காயாய்ப் போயிட்டுதே?''

''ஆமா, நானும் அப்படி ஒரு சொத்தைக் கத்தரிக்காயாக இருக்கமாட்டேன் என்று எப்படி நம்புறீங்க?''

—விளையாட்டாகச் சிரித்துக் கொண்டே கேட்டான் மாதவன்.

''அப்படிச் சொல்லாதே மாதவா! நானும் உன்னைப் போலக் கிராமத்திலேயிருந்து வந்தவன்தான். நீயும் முயலைப் பார்த்திருப்பே; நானும் பார்த்திருக்கிறேன். முக அமைப்பு ஒண்ணு இருக்கிறதாலே முயல் குட்டியை மூஞ்சுறுன்னு சொல்லிட முடியுமா? கொஞ்ச காலந்தான்னாலும் நீ எங்களோடு பழகியிருக்கிற பழக்கம் — வார்த்தையைக் காப்பாத்துகிற நாணயம்—வேலையைச் செய்து முடிக்கிற நேர்த்தி—வேகப்பட்டு விடாத பொறுமை—எல்லாத்தையும் ஆற அமர சிந்திச்சுப் பார்த்த பிறகுதான் நான் இந்த முடிவுக்கு வந்தேனே ஒழிய வேறே இல்லே......''

—பேரின்ப முத்து இவ்வாறு தம் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பொழுதே

சமையற்காரி சண்பகம் தலையை நீட்டினாள்;

"யாரோ அய்யாவுக்குப் பழைய நண்பராம்; சாப்பிடுருங்கன்னு சொல்லிப் பார்த்தேன்; கேட்க மாட்டேங்கிறாரு. சாப்பிடுற கையோடேயே வந்து போனில் பேசச் சொல்லுன்னு வற்புறுத்துறாரு. பேர் பொன்னம்பலமாம்"

—என்றாள்.

"ஓ, பொன்னம்பலமா? அவன் பொல்லாதவனாச்சே! உடனே போய்ப்பேசிடவேண்டியதுதான்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து போனார் பேரின்பமுத்து.

தனித்து விடப்பட்ட நிலையிலே தன் ஆருயிர்க்காதலனைக் கிறக்கத்தோடு நோக்கினாள் தேன்மொழி. அவளுடைய பளபளப்பான கருந்திராட்சைக் கண்களோடு தன் பார்வையையும் பதித்துத் திளைத்த மாதவன்,

"என்ன தேன்மொழி, இப்படி ஒரு முக்கியமான முடிவுக்கு உன் அப்பாவைக் கொண்டு போய்த் தள்ளிட்டே? உங்கள் நிறுவனத்திலே என்னைவிடப் பல ஆண்டுகள் பணிபுரிந்து அனுபவம் பெற்றவர்கள் எத்தனையோ பேர் இருக்கும்போது, என்னைக் கொண்டுபோய் அந்தப் பொறுப்பான பதவியிலே அமர்த்தினால் அவர்கள்எல்லாரும் பொறாமைப் பட மாட்டார்களா?"

—என்றான்.

"அதற்கென்ன செய்கிறது? அவரவர்களுக்குள்ள தகுதிக்கும் திறமைக்கும் தகுந்தபடி தானே பதவிக்கும் ஆசைப்படணும்? பூப்போல மிருதுவா இருக்கிற 'பேட்மின்டன்' பந்தை வைத்துக் கொண்டு நாம் 'டேபிள் டென்னிஸ்' ஆட முடியுமா? இல்லே, 'டேபிள் டென்னிசு'க்குள்ள சின்ன மட்டையைக் கொண்டு 'கிரிக்கெட்' பந்தைத்தான்அடிக்க முடியுமா? இதிலே பொறாமைப்பட்டு என்ன நடக்கும்? மேலும் அப்பா ஏற்படுத்த நினைக்கிற புதிய பதவிக்கு வெறும்அனுபவம் மட்டும் போதாதே! நாணயம்—நன்னடத்தை—நேர்மை—கூர்மை—இன்னும் எவ்வளவோ வேணுமே? அதோட, நீங்க ஏன் அவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படணும்?"

"அதுக்கில்லே தேன்மொழி. உன் அப்பா எப்படியோ என்னை நிரம்பத் திறமை உள்ளவனு நினைக்கிறார். ஆனா, பக்கத்திலே நெருங்கி வந்த பிறகு என் பலவீனங்கள் வெளிச்சமாகி, என்னை அவர் அலட்சியப்படுத்தக் கூடிய நிலைமை உருவானால் என்ன செய்கிறது என்கிற அச்சந்தான் எனக்கு; பொதுவா, அழகான ஓவியந்தான் என்றாலும் எட்டி இருந்து பார்க்கிற போது தெரிகிற தனிப்பொலிவு கிட்டே வைத்துப் பார்க்கிறபோது தெரியாதில்லையா?"

"உங்களை ஓவியமா மட்டும் நான் பார்க்க வில்லையே!"

"பின்னே?"

"காவியமாகவும் உங்களை நான் பார்க்கிறேன். காவியங்கள் நம்மை விட்டு எட்டி இருக்கலாமா? கிட்டேயே தான் இருக்கணும்; அப்போது தான் அவை நம் கருத்திலே பதியும்; இனித்துக் கொண்டேயும் இருக்கும். உங்களையும் ஒரு காவியமாகவே தான் என் கிட்டேயே நான் வைத்துக்கொள்ள ஆசைப் படுகிறேன். அதோட, உங்களிடம் இயற்கையாகவே திறமை இருக்கும்போது நீங்க ஏன் தன்னம்பிக்கை இல்லாமல் தாழ்வு மனப்பான்மைக்கு இடங்கொடுக்கணும்?"

—தேன்மொழி இவ்வாறு அவனைத் தேற்றிக் கொண்டு இருக்கும்பொழுதே—

தொலைபேசியில் பேசிவிட்டுத் திரும்பிய பேரின்பமுத்து,

"உங்கள் ரெண்டு பேருக்கும் ஒரு தித்திப்பான செய்தி; என்னுடைய பழைய நண்பன் பொன்னம்பலம், நம்ம மாநில விளையாட்டுக்கள் கழகத்துக்கு இப்பத்தான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறானாம். அவனுக்கு உங்க ரெண்டு பேரோட 'டேபிள்டென்னிஸ்' ஆட்டத்திலேயும் ரொம்ப ஈடுபாடாம். . . . . சீக்கிரமா தெற்கு மாநிலங்களுக்கிடையே மைசூரில் நடக்கப் போகிற பந்தயத்துக்கு உங்க ரெண்டு பேரையும் அனுப்பலாம்னு மத்தக் கழக உறுப்பினர்கள் கிட்டே சொன்னானாம்; அவங்களும்ஏத்துக் கிட்டாங்களாம். ஆகையாலே நீங்க ரெண்டு பேரும் இன்னும் கொஞ்சநாளிலே மைசூர் போகப் போறீங்க!"

—என்று உவகை பொங்கக் கூறினார்.

அதைக் கேட்டதும், மாதவனும் தேன்மொழியும் அடைந்த மகிழ்ச்சி வெள்ளத்திற்குக் கேட்க வேண்டுமா?

* * *

மைசூரில் நடைபெற்ற 'டேபிள் டென்னிஸ்' இரட்டையர்ஆட்டப் பந்தயங்களில் தமிழ் நாட்டின் பெருமையைத் தலைநிமிரச்செய்து விட்டார்கள் மாதவனும் தேன்மொழியும். மற்ற மாநிலங்களிலிருந்து வந்த அணிகளையெல்லாம் மிக எளிதாகவே அவர்கள் தோற்கடித்து வெற்றி வாகையினைச் சூடினர்.



அதுவும், கடைசி நாள் ஆட்டத்தின் போது, அவர்கள் காட்டிய அற்புதமான திறமை—சுறு சுறுப்பு—நளினம்—நிதானம், எல்லாரையுமே மூக்கின் மேல் விரல் வைக்கச் செய்தன; வியப்புக்கடலிலே தள்ளின.

மைசூரில் வாழ்கின்ற தமிழர்கள்

மட்டுமின்றி கன்னடர்களும் கூட, தங்களுடைய பழைய திராவிட இன உணர்வை மறந்துவிடாதவர்களாகத் தமிழக விளையாட்டு வீரருக்கும் வீராங்கனைக்கும், அடிக்கடிக் கரவொலிகள் எழுப்பி ஊக்கமூட்டினர்; உற்சாகம் அளித்தனர்.

ஆட்டம் முடிந்ததுமே மலைமலையாக மாலைகளைக் கொண்டுவந்து சூட்டி அவர்களைத் திணறும்படியாகவும் செய்து விட்டார்கள், அந்தத் திராவிட உடன்பிறப்புக்கள்.

அன்று தாங்கள் இருவரும் சேர்ந்து ஈட்டிய வெற்றிக்கனியை நினைந்து நினைந்து தேன்மொழிக்கு உள்ளமெல்லாம் புல்லரித்தது. எங்காவது மாதவனோடு தனியாகச் சென்று மிகத் திறமையாக ஆடிய அவனது விளையாட்டு நுணுக்கங்களையெல்லாம் வியந்து பேசி—நினைவு கூர்ந்து—அந்த மகிழ்ச்சியினைக் கொண்டாட வேண்டும்போல் அவள் மனம் குறுகுறுத்தது.

அப்போது மணி ஆறு தான் ஆகிக் கொண்டிருந்தது.

தன் அப்பாவின் படகு போன்ற 'பிளைமவுத்' காரில் ஏறியமர்ந்த அவள்,

''என்ன, இன்னொரு தரம் கண்ணம்பாடி அணைக்கட்டுக்குப் போய் வருவோமா? எதுக்கு அதுக்குள்ளே ஓட்டலுக்குப்போய் அடைபட்டுக் கிடக்கணும்?'' என்று கொஞ்சலாகக் கேட்டாள்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன்!'' என்றான் மாதவன்.

கார் பறக்கத் தொடங்கிற்று, கண்ணம்பாடி அணைக்கட்டை நோக்கி!

அன்று சனிக்கிழமையாதலால் அந்த நீளமான அணைக்கட்டின் அடிவாரப் பகுதி முழுவதும், ஒரே ஒளிக்கடலாகவே காட்சியளித்தது.

வான மண்டலத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் நிலவுக் கன்னிகள் கீழே இறங்கிவந்து நீச்சலடிப்பதைப்போல் வண்ண வண்ண மின் விளக்குகள் ஒளி வெள்ளத்தை வாரி இறைத்த வண்ணம் சிரித்தன.

பசுமை கொழிக்கின்ற—மலர்கள் சிரிக்கின்ற—அந்த மண்ணுலகச் சொர்க்கத்திலே ஒளி மழையிலே நனைந்தவாறே, மாதவனின் மிடுக்கான உடலோடு ஒட்டி நடப்பதிலே ஒரு தனி இன்பமே கண்டாள் தேன்மொழி.

அணையின் பெருஞ்சுவரை ஒட்டிக் கரத்தின் குடமேந்தி நிற்கும் காவிரி அன்னையின் சிலைப் பக்கம் வந்ததும் தேன்மொழி தேங்கி நின்றாள். மாதவனின் தோளையும் அழுத்திப் பற்றி அவனை மேலே நடக்க விடாமல் தடுத்து நிறுத்தினாள்.

''இந்தச் சின்னச் சிலை ரொம்ப அழகாக இருக்குது இல்லே?''
—என்று முறுவலோடு கேட்டாள்.

''ஆமா, உன் முகத்தைப் போலவே ரொம்ப அழகாகத்தான் இருக்குது.''
—என்று நகைத்தான் மாதவன்.


தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ. 8.00
அரை ஆண்டு ரூ. 4.00
தனிப்பிரதி 35 காசுகள்
விவரங்களுக்கு
நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2


தேன்மொழிக்கு வேறு என்ன நினைப்பு வந்ததோ?

''சரி நில்லுங்கள்; இதோ வந்து விட்டேன்.''
—என்று சிட்டாகப் பறந்து சென்றாள்.

தங்களுடைய 'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்தைக் கண்டு களித்தவர்கள் சூட்டிய மாலைகள் காரின் பின்னிருக்கையில் தான் கிடந்தன; அவற்றில் சிலவற்றை எடுத்துக் கொண்டு திரும்பவும் ஓடி வந்தாள் மாதவனை நோக்கி.

ஒரு சிறிய மல்லிகைப் பூ மாலையை அந்தக் காவிரித் தாயின் சிலைக்கு அணிவித்துக் கும்பிட்டாள்.

பிறகு . . . . .

தன் பூங்கரத்தில் தொங்கிய இன்னொரு ரோஜாப் பூ மாலையைச் சட்டென்று மாதவன் கழுத்திலே போட்டுவிட்டாள்.

திகைத்துப் போனான் அவன்!

அந்தத் திகைப்பிலிருந்து அவன் மீள்வதற்குள்ளேயே, இன்னொரு ரோஜாப்பூ மாலையை அவன் கைகளிலே திணித்து, தன் தலையைத் தாழ்த்தி, அதனைத் தன் கழுத்திலே சூட்டுமாறு செய்துவிட்டாள் தேன்மொழி.

மற்றவர்கள் சிலர் தங்களை வேடிக்கை பார்ப்பதைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை; அதற்காக வெட்கப்படவும் இல்லை.

''என்ன, தேன்மொழி, இது! சின்னக் குழந்தை மாதிரி—விளையாட்டுத்தனமா—''

—என்று மாதவன் கூறும் பொழுதே சற்றுத் தொலைவில் வந்துகொண்டிருந்த ஒரு பெண்ணின் மீது அவன் பார்வை விழுந்தது. அவள் அருகில் நெருங்கியதும் — திடுக்கிட்டுப் போனான் அவன்!

(தொடரும்)

## உறுதியான கட்டடங்கள்: பொதுப்பணியில்- 2


SANKAR I C CEMENT



சிமெண்ட் கான்கிரீட் சாலை

சாலச் சிறந்த சாலைகள் அமைக்க

# சங்கர் சிமெண்ட்

IS: 269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1447TM R




நாளையத் தலைமுறை

1 அன்னைதாள் வணங்கு
2 ஆற்றுயர் தந்தைக்கு
3 இன்சொல் மொழியும்
4 ஈவார் மேலோர்
5 உண்மை உரைமேல்
6 ஊதியம் தேடு
7 எண்ணித் துணிவாய்
8 ஏர்த்தொழில் செய்மேல்
9 ஐயம் அறச்செய்
10 ஒன்றே குலம்நாம்
11 ஓதுயர் நன்னூல்
12 ஔடதம் தேர்ந்துண்
13 கலைகள் பயிலு
14 காண்பது சொல்நலம்
15 கிளிபோல மொழியும்
16 கீதங்கள் பாடு
17 குணமுடன் பழகு
18 கூடுநல் இடமே
19 கெடுப்பது நினையேல்
20 கேடெதும் செய்யேல்
21 கையுழைத் துண்மேல்
22 கொடுப்பது மேலாம்
23 கோழையாய் வாழேல்
24 கௌரவம் தேடு
25 சஞ்சலம் நிக்கு
26 சாதி மதிமேல்
27 சினம்பழி போக்கு
28 சீராய் நடப்பாய்
29 சுயநலம் விடுப்பாய்
30 சூதிடம் கூடேல்
31 செய்வினை புகழ்மேல்
32 சேமித் தறஞ்செய்
33 சைவம் பழகு
34 சொகுசாய் இருப்பாய்
35 சோதனை வெல்வாய்
36 சௌந்திர உடைபூண்
37 தற்பெரு மைவிடு
38 தாவின பந்து
39 தினமும் குளிப்பாய்
40 தீவிர மனங்கொள்
41 துணையுடன் வழிபோம்
42 தூய்மை அகம்படை
43 தெருவழி சுற்றேல்
44 தேடேல் பழியை
45 தைரியம் உளம்கொள்
46 தொகுத்தே வாழ்வாய்
47 தோழமை கண்டிணை
48 பயில்வாய் கல்வி
49 பாதகம் செய்யேல்
50 பிறரைப் பழியேல்
51 பீடைகள் போக்கு
52 புகழுற வாழ்வாய்
53 பூசல் தவிர்ப்பாய்
54 பெரியார் துணைக்கொள்
55 பேதமை ஒழிப்பாய்
56 பைந்தமிழ் புவிமேல்
57 பொறுமை வெல்லும்
58 போதைகள் போக்கு
59 பௌத்திரம் அணிபொன்
60 நன்றே செய்வாய்
61 நாடே தாயாம்
62 நித்திரை போக்கு
63 நீந்திப் பழகு
64 நுண்மதிபடை வெல்
65 நூதனம் கண்டிணை
66 நைந்தது உண்ணேல்
67 நொண்டப் பழியேல்
68 நோன்புதைப் பொங்கல்
69 மதியால் விதிவெல்
70 மானம் அழியேல்
71 மிதமாய் உண்ணேல்
72 மீட்பாய் அபயம்
73 முகங்கடுத் துரையேல்
74 மூர்க்கம் அடக்கு
75 மையல் தவிர்ப்பாய்
76 மொத்தமாய் அழியேல்
77 மோகம் விலக்கு
78 மௌனம் துணைகொள்
1971—72-ஆம் ஆண்டின் எஞ்சியுள்ள மாதங்களுக்குக்கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தம் 22-10-71-ஆம் தேதி பிற்பகல் 3-00 மணிவரை தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களின் சார்பாகவும் வரவேற்கப்படுகின்றன. விலைகள் மெட்ரிக் அளவைகளில் மட்டுமே குறிப்பிடப்பட வேண்டும்.

நிறுவனங்கள் :— சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை, முதலிய இடங்களிலுள்ள மத்திய சிறைகள் மற்றும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி மற்றும் பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம்.

ஒப்பந்தங்கள் மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் ஒப்புகைப் பதிவஞ்சலில் (By Registered Post - Ack Due) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். உறையின் மேல் ''.. .............. க்கு (இங்கு எந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தமோ அந்த நிறுவனத்தின்பெயரைக் குறித்து) உணவுப் பொருட்கள் முதலியன வழங்குவதற்கான ஒப்பந்தம் என்று தவறாமல் எழுதி, தமிழ்நாடு சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அவர்களின் பெயருக்கு அனுப்ப வேண்டும்.

ஒப்பந்தங்கள் சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர் அலுவலகத்தில் 23—10—1971 முற்பகல் 10-30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நமூனக்கள், ஒப்பந்த விதிகள், வழங்க வேண்டிய உணவுப் பொருட்களின் விவரக் குறிப்பீடுகள் முதலியவைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கண்காணிப்பாளரிடமிருந்து மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுகொள்ளலாம். இவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**இ.பி.டி. தாமஸ்,**
சிறைத்துறைத் தலைமைப் பார்வையாளர்-பொறுப்பு,
குறளகம், சென்னை-1.

*10—9—1971*

(த-1)

## வேலைவாய்ப்பு

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 16—11—1971 அன்று மாலை 5-00 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

தொழில் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு தொழில் சார் நிலைப்பள்ளி ஆகியவற்றில், விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சிப் போதகருக்கான தற்காலிகப் பதவிகள்—4 நியமனங்கள்.

குறிப்பு : நான்கு நியமனங்களிலும் ஒன்று பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள நியமனங்களுக்குப் பெண்களும் மனுச் செய்யத் தகுதிபடைத்தவர்களாவர்.

சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூபாய் 275—10—375—15—450.

வயது : 1—7—1971-ல் 35 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

தகுதி : 1. பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தில் உடற் கல்வி டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

உடற்கல்வி (மேல்நிலை) ஆசிரியர் சான்றிதழ் பெற்று ஓர் ஆண்டுக் காலத்திற்குக் குறையாமல் கற்பித்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2. கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேற்பட்ட பொதுக் கல்வித் தகுதி பெற்றுள்ள தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. இதர தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி வகுப்பினருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினுல் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய புதல்வர்கள், திருமணமாகாத அவர்களின் புதல்விகள், மற்றும் தேசிய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜென்ட் மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னுள் தேசிய மாணவர் படையினர் ஆகியோருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து படை கலைக்கப்பட்டதால் திரும்பியவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானுலும், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடி பெயர்ந்தவர்களாக இருப்பினும், இலங்கை, பர்மா, ஆகியவற்றிலிருந்து திரும்பி அனுப்பப்பட்டவர்களாக இருப்பினும், வயது வரம்பு உட்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும், இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவியின் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 சென்டி மீட்டர் நீளமுள்ள சுய விலாசமிட்ட 35 காசு அஞ்சல் தலை ஒட்டிய '' நூல் அஞ்சல் '' என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த-4)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பகுதி) சென்னை-25

வேலையின் பெயர்—

வேலை எண் 1.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக ஆடிட்டோரிய கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 2.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக நூலகக் கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 3.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காக உலோகவியல் 5 ஆண்டு பட்டப்படிப்பிற்கான கூடுதல் கட்டடம் கட்டுதல்.

வேலை எண் 4.—சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்காகச் சமையற்கூடம், சாப்பிடும் இடத்திற்கான கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைகளைக் கீழே குறிப்பிட்டுள்ளபடி செய்வதற்காக, தொழில் நுட்பக் கல்விப்பகுதிகளில் வேலைகளை மேற்கொள்வதற்காகப் பதிவு செய்துகொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-30 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிக்காரர்கள் முன்னிலையில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

| | வேலை எண் 1. | வேலை எண் 2. | வேலை எண் 3. | வேலை எண் 4. |
|---|---|---|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகை | ரூ. 5,750 | ரூ. 4,500 | ரூ. 5,000 | ரூ. 2,500 |
| 3 மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை. | ரூ. 20 மற்றும் விற்பனை வரி | ரூ.20 மற்றும் விற்பனை வரி. | ரூ.20 மற்றும் விற்பனை வரி. | ரூ.20 மற்றும் விற்பனை வரி |
| 4 வேலையை முடிக்க வேண்டிய காலம் .. .. .. | 10 மாதங்கள். | 8 மாதங்கள். | 10 மாதங்கள். | 8 மாதங்கள் |
| 5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கிடைக்கக் கூடிய நாட்கள். | 4–10–1971 முதல் 16–10–1971 | 4–10–1971 முதல் 16–10–1971 | 4–10–1971 முதல் 16–10–1971 | 4–10–1971 முதல் 16–10–1971 |
| 6 ஒப்பந்தப் புள்ளிகளைக் கொடுக்க வேண்டிய நாள் .. | 19–10–1971 மாலை 3-00 மணி. | 19–10–1971 மாலை 3-00 மணி. | 19–10–1971 மாலை 3-00 மணி. | 19–10–1971 மாலை 3-00 மணி. |
| 7 ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்கத் தகுதி வாய்ந்த பிரிவு ... | 2-ம் பிரிவும் அதற்கு மேலும். | 2-ம் பிரிவும் அதற்கு மேலும். | 2-ம் பிரிவும் அதற்கு மேலும். | 2-ம் பிரிவும் அதற்கு மேலும். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P. W. Remittances III Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், மண்டலப் பொறியியற் கல்லூரிக் கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியைத் தனிச்சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII.Sales-tax (b) Receipts under State Sales-tax General Sales-tax" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். ஒப்பந்தப் புள்ளி அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலானை இணைத்துக் கொடுத்தால்தான் ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அலுவலக கட்டுமானப் பகுதி வேலைகளை மேற்கொள்ள உரிய பிரிவில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத்தொகையைச் சலான் வடிவிலும், ஷெட்யூல்டு வங்கிகளின் 'கால் டிபாசிட்' வடிவிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில், 5 சதவிகிதம் குறைத்து அல்லது அடிப்படை மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ, அந்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புகிறவர்கள் உரிய பிரிவுகளில் பெரிய கட்டுமான வேலைகளை மேற்கொள்ளுவதில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எவ்விதக் காரணமும் கூறாமல், எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் நிராகரிக்கத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

**தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்,**
சென்னை-25.

(த.3)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு
### குடிநீர் வடிகால் வாரியம்

அறிவிப்பு எண் : 317/டி 2/71 டி 2

நாள் : 15—9—1971

இறக்குமதியான உருக்கை, சென்னைத் துறைமுகத்திலிருந்து தென்ஆர்க்காடு மாவட்டம் பண்ருட்டி அருகே பணிக்குப்பம் வீராணம் திட்ட பாக்டரிப் பகுதிக்குக் கொண்டு செல்லும் வேலைக்காகத் தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (உரிய வடிவங்களில்), மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, வீராணம் திட்ட சர்க்கிள், சேப்பாக்கம், சென்னை-5, அவர்களால் பொதுப்பணித் துறையில் செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் உரிய பிரிவினரிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—கே 2

கட்டுத் தொகை—ரூ. 5,500

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 10-இத்துடன் விற்பனை வரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்—5—10—1971-லிருந்து 25—10—1971 வரை.

ஒப்பந்தப் புள்ளித் தேதி: 30—10—1971.

நிபந்தனைகள், இதர விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
T.W.S. & D.B
வீராணம் திட்ட வட்டம், சென்னை-5.

(த-7)

## கோவை நகராட்சி

கீழ் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 27—10—1971-ந் தேதி மாலை 3 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தப்புள்ளிகளின் மேலுறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், கோவை நகராட்சி என்று விலாசமிட்டு அனுப்பி வைக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் 27—10—1971 தேதி மாலை 3-30 மணிக்கு ஆணையர் அல்லது அவர் அங்கீகாரம் பெற்றவரால் திறக்கப்படும். இவ்வேலைகளுக்கான ஷெட்யூல் பாரங்கள், நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை அதற்குண்டான தொகையை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பொதுப்பணிப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | வரை குறிப்பு விலை. | முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| | | ரூ. | | |
| 1 | கோவையில் டாடாபாத்தில் 6 கடைகள் கட்டுதல். | 1,000 | 10·35 | 5 மாதம். |
| 2 | கோவையில் ரங்கே கவுடர் வீதியில் குடோனும் அதன் மேல் மாடியில் ஆபீசும் கட்டுதல். | 1,130 | 10·35 | 6 மாதம் |
| 3 | கோவை சித்தாபுதூரில் உள்ள உயர் நிலைப்பள்ளியில் முதல் மாடிக்கட்டடம் கட்டுதல். | 3,450 | 15·53 | 8 மாதம். |
| 4 | ரங்கநாதபுரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மேல் மாடிக்கட்டடம் கட்டுதல். | 3,525 | 15·53 | 8 மாதம். |

(த. 29)

**ஆணையர்,**
கோவை நகராட்சி.

### பரிசு

## குழந்தைகளுக்கான இலக்கியங்களுக்குப் பரிசுகள்

**மாநில அரசினர் நடத்தும் 11-வது பரிசுப் போட்டி**

குழந்தைகள் படிப்பதற்குத் தக்க சுவையான இலக்கியத் தேர்விற்கு ஆசிரியர்களிடமிருந்தும், வெளியீட்டார்களிடமிருந்தும் தமிழில் நூல்கள் வரவேற்கப் படுகின்றன. ஏறத்தாழ பத்து நூல்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு நூலுக்கும் ரூபாய் ஐந்நூறு பரிசு கொடுக்கப்படும்.

போட்டிக்கு அனுப்ப விரும்பும் நூல்களைக் கீழ்கண்ட முகவரிக்கு 25—10—1971 அன்றோ அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்க வேண்டும். 25—10—1971க்கு பின்னர் வரும் எந்த நூலும் எக்காரணத்தைக் கொண்டும் போட்டிக்கு ஏற்றது ஆகாது.

முகவரி: நேர்முக உதவியாளர் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம், சென்னை–6.

மேற்குறிப்பிட்ட முகவரிக்கு 35காசு தபால் தலை ஒட்டிய, தங்கள்முகவரி எழுதிய உறையை அனுப்பிப் போட்டிக்குரிய விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பள்ளிக் கல்வி இயக்குநர்,**
சென்னை-6.

(த-28)

### ஏல விற்பனை

## தமிழ்நாடு தீ அணைப்புத்துறை

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம். எஸ். ஒய். 7043 (ஜி. எம். சி. 1953ஆம் வருட மாடல்) கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் தீயணைப்பு நிலையத்தில் 1971ஆம் வருடம் அக்டோபர் மாதம் 25-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். விற்பனை நிபந்தனைகளை கீழே கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**வி. ஜெயபெருமாள்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர்,
கடலூர்.

(த-55)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

ஒப்பந்தப் புள்ளி எண். டி.7/71-72 நாள் 22—9—1971.

வேலையின் பெயர்—கடலூர் துறை வளர்ச்சித் திட்டத்திற்காக, கடலூரில் டிரான்ஸ்பார்மர் இல்லம் கட்டுதல்.

1. தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை—வரைவுகள், நீர்நிலைப் பணி வட்டம்—சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்த முறை—முழுத் தொகை.

3. அ. கட்டுத் தொகை—ரூ. 2,500

ஆ. கூடுதல் காப்புத் தொகை—ரூ. 2,500 அல்லது மேற்பார்வைப் பொறியாளர் குறிப்பிட்டபடி.

4. ஒப்பந்தப் புள்ளிகளின் விலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

5. ஒப்பந்தப் புள்ளி விற்பனை வரி—ரூ. 0·60 (காசு அறுபது மட்டும்).

6. வேலையை முடிக்க வேண்டிய காலம்—5 மாதங்கள்.

7. ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், வரைவு, நீர் நிலைப் பணி வட்டம்—சேப்பாக்கம், சென்னை-5 என்ற முகவரியில் 5—10—1971 லிருந்து 22—10—1971 வரை கிடைக்கும்.

8. மேலே 4, 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளி பத்திரத்தின் விலை, விற்பனை வரி ஆகியவை, அரசு கருவூலத்திலாவது, ரிசர்வ் பாங்கிலாவது "P.W. Remittances, Marine Works Division, Cuddalore" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். 5-ல் குறிப்பிட்டுள்ள விற்பனை வரியும் அதே செலானில் "II Sales Tax—(B) Receipt under State Sales Tax Act General Sales Tax." என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். மேற்கண்ட செலானை கொடுத்தால்தான் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். இச் செலானின் தொகைத் திருப்பித் தரப்படமாட்டாது.

9. ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, கட்டுத் தொகையைக் கட்டினால்தான் ஒத்துக்கொள்ளப்படும்.

10. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், இந்தத் துறையினால் [illegible] குறிப்பிட்ட படிவ முறையுடன் மூடி முத்திரை [illegible] உறைகளில் வேலையின் பெயரையும் குறிப்பிட்டு [illegible] வேண்டும்.

11. ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லாவற்றையுமோ நிராகரிக்கும் உரிமை, மேற்பார்வைப் பொறியாளர், வரைவு, நீர் நிலைப் பணி வட்டத்திற்கு உண்டு.

12. மேலே, 9, 10 குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள்படி [illegible] அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஏ. இ. சாந்தப்பன்,

மேற்பார்வைப் பொறியாளர், வரைவு,
நீர்நிலைப் பணி வட்டம்.

(த.26)

## விற்பனை

### திருச்சி வீட்டுவசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

60 அடி சாலையைப் பார்த்து அமைந்திருக்கும், 150 மனைகள் முன்பு ஏலத்தில் விடுவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டவை, தற்போது ஒதுக்கீடு மூலமாக விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனையும் $1\frac{1}{2}$-யிலிருந்து 2 கிரவுண்ட் (ground) அளவுள்ளன. ஒரு கிரவுண்டு விலை ரூ. 3,600. ஓரத்திலுள்ள மனைகள் கிரவுண்டு ரூ. 4,100 வீதம் விற்கப்படும்.

விருப்பமுள்ளவர்கள், இதற்கான விண்ணப்பப் படிவத்தில் அடியில் கையெழுத்திட்டவரின் முகவரிக்கு 31—10—1971 அல்லது அதற்கு முன்னரே விண்ணப்பம் செய்ய வேண்டும். விண்ணப்பப் படிவத்தையும், விவரத்தையும் 5 ரூபாய் பணம் கட்டி பெற்றுக்கொள்ளலாம். (பதிவு அஞ்சலில் செலுத்த ரூபாய் 6.50).

ஆர். வெங்கடாச்சார்,
நிருவாகப் பொறியாளர்,
&
நிர்வாக அலுவலர்,

சர்க்யூட் ஹவுஸ்ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.

தேதி: 25—9—1971.

(த. 20)

## விற்பனை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்
கல்லூரித் தமிழ் பாடநூல்கள்
புத்தகக் கிடங்கு

நுங்கம்பாக்கம், சென்னை

வாரீர்! காணவாரீர்!! பயன் பெறுவீர்!!!

புத்தக விற்பனை :—

காலை 10 மணி முதல்
மாலை 4—30 மணி வரை.

மகளிர் கிறித்துவக் கல்லூரி அருகில் (பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு அண்மையில்).

(த. 12)

## தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகம் கட்டுமானப்பகுதி சென்னை–25

வேலையின் பெயர்.—சென்னை, அடையாற்றில் உள்ள படத் தொழில் நுட்ப நிலையத்திற்குத் தச்சுத் தொழிற்சாலை, கார் நிறுத்துமிடம் அமைத்தல்,

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற் கூறிய வேலையைச் செய்வதற்காகத் தொழில் நுட்பக் கல்வி பகுதியில் III மற்றும் அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் பதிவு செய்துகொண்டுள்ள உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிட மிருந்து இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களால் 25—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளி தாரர்களின் முன்னிலையில் இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்த வடிவம் | மொத்தத் தொகை. |
| 2 | கட்டுத் தொகை .. | ரூ. 2,500 |
| 3 | மாதிரி வரை படத்துடன் ஒப்பந்தப்புள்ளிப் பத்தி ரங்களின் விலை. | ரூ. 20·00 (விற்பனை வரி. உட்பட) |
| 4 | வேலையை முடிக்க வேண் டிய காலம். | .. 6 மாதங்கள். |
| 5 | ஒப்பந்தப் புள்ளிப் பத்தி ரங்கள் மேற்கூறிய அலு வலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கும் தேதிகள் | 11—10—1971 முதல் 23—10—1971 வரை. |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை (எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோஅல்லதுஇந்திய ரிசர்வ் வங்கியிலோ "P.W.D. Remittances—III. Other Remittances" என்ற தலைப்பில் நிர்வா கப்பொறியாளர், மண்டலப் பொறியியற்கல்லூரிகோட்டம், திருச்சி அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும். விற்பனை வரியை தனிச்சலானில் அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XII. Sales-tax (b) Receipts under State Sales-tax Act-General Sales-tax" என்ற தலைப்பில் செலுத்தவேண்டும். ஒப்பந்த அட்டவணை வேண்டுமென்ற வேண்டுகோள் கடிதத்துடன் சலான்களை ஒப்படைத்த பின்பே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அகத்தின் கட்டுமானப் பகுதியில் உரிய பிரிவில் பதிவு செய்துகொள்ளாத ஒப்பந்தக் காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டா.

கட்டுத்தொகை சலான் வடிவிலும், ஷெட்யூல்டுபாங்கு களின் '' கால் டிபாசிட் '' தொகை வடிவிலும் ஏற்றுக் கொள்ளப்படும். அரசு புரோநோட்டுகள், மாநில மின்சார வாரிய பாண்டுகள், தேசீய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியவை கட்டுத்தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5சதம் குறைத்தோ அல்லது அடிப்படை மதிப்புக்கோ இதில் எது குறைவாக உள்ளதோ அந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்படும். நாட் டுடமையாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் காரண்டி மட்டுமே கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வடிவத்திலும் கட்டுத்தொகை ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புகின்றவர்கள் உரிய பிரிவில் பெரிய கட்டுமான வேலைகளை மேற்கொள்ளுவதில் குறைந்த அளவு 3 ஆண்டு அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையுமோ எவ்விதக் காரணமும் கூறாமல் நிராகரிக்க இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி, சென்னை-25 அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

**இயக்குநர்,**
தொழில் நுட்பக் கல்வி, சென்னை.

(த.2)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும், அதன் பொருட்டும் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, துறைக்குரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், இத் துறையில் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், பொதுச் சுகாதாரப் பொறியியல் வட்டம், சென்னை-8 அவர்களால் 3-11-1971 மாலை 3.00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-30 மணிக்கு மேல் மேற்கண்ட, மேற்பார்வைப் பொறியாளரால் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| தொடர் எண்ணும், வேலையின் விவரமும். | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. | வேலையை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் விலை. |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. |
| 1 திருக்கோயிலூர் நீர் வழங்கு திட்டம் III-வது கட்டம்-மேல் மட்டப் பகுதிகளுக்காக 4.00 லட்சம் லிட்டர் திறன் உள்ள ஆர்.சி.சி. மேல்மட்ட சர்வீஸ் ரிஸர்வாயர் கட்டுதல். | மொத்தத் தொகை. | 2,630 | 8 மாதங்கள். | 10.35 |
| 2 திருக்கோயிலூர் நீர் வழங்கு திட்டம் III-வது கட்டம், கீழ்மட்டப் பகுதிகளுக்காக 2.00 லட்சம் லிட்டர் திறன் உள்ள ஆர். சி. சி. மேல் மட்ட சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல். | மொத்தத் தொகை. | 1,265 | 8 மாதங்கள். | 10.35 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், பொது சுகாதார, பொறியியல் 28, ராஜாஜி தெரு, ஸ்ரீனிவாசபுரம், தஞ்சாவூர் அவர்களுக்கு எழுதிப் பெறலாம். பத்திரங்களுக்கான தொகையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமோ உடன் செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கட்டணம், எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படாது. ஒப்பந்தப் புள்ளிகள் எதையும் அல்லது அனைத்தையும் எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க அல்லது ரத்துச் செய்ய மேற்பார்வைப் பொறியாளர், பொது சுகாதாரப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களுக்கு உரிமை உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

பொது சுகாதாரப் பொறியியல் வட்டம், சென்னை-8.

(த.39)

## ஏல விற்பனை

### தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை

வில்லிஸ் ஜீப் (எம்.டி.எச். 1679) ஒன்று 29–10–1971 மாலை 4 மணிக்கு கோயில்பட்டி மண் சோதனை ஆய்வுக்கூட, உதவி மண் பரிசோதனை வல்லுநரால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வேலை நாட்களில் மேற்கண்ட அலுவலகத்தில் வண்டியைப் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி ஏலக் கோரிக்கையை ஏற்கவோ, நிராகரிக்கவோ, ஏலத்தை ரத்துச் செய்யவோ, ஒத்திவைக்கவோ வேளாண்மைத் துறைக்கு உரிமை உண்டு.

ஏல நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை மேலே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெறலாம்.

**இயக்குநர்,**
**வேளாண்மைத் துறை.**

சென்னை-5.
(த.44)



16-10—12

## ஒப்பந்தப் புள்ளி

### கோயம்புத்தூர் வீட்டு வசதி பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை)
**ஒப்பந்தப்புள்ளி எண் 38/71-72/டி 3**

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் 27-10-1971-ஆம் நாள் பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க் கையொப்பமிட்டவரால் வரவேற்கப் படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களை கோட்டக் கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் 20-10-1971-ஆம் நாளிலிருந்து 26-10-1971-ஆம் நாள் வரை காலை 10-30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையினைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். பிணைப்புத் தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேர வேண்டிய நாளான 27-10-1971-ஆம் நாள் பிற்பகல் 1.00 மணி வரைதான் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 27-10-1971-ஆம் நாள் பிற்பகல் 3-30 மணியளவில் ஒப்பந்தப் புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் செயற்பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வீடு கட்டும் திட்டம்
சர்ச்ஹில் பகுதி—உதகமண்டலம்—நீலகிரி மாவட்டம்

| வரிசை எண்ணும், வேலையின் விபரமும். | வேலையின் சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. | நமூனுக்களின் விலை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. இரண்டு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட (2 in 1) கட்டடங்கள், எட்டு (Blocks) கட்டுவது. | 1,87,000 | 2,820 | ரூ. 10-ம் மற்றும் மூன்று சத விற்பனை வரி. |
| 2. இரண்டு குடியிருப்புகளுக்கான இரண்டு அறை கொண்ட (2 in 1) கட்டடங்கள் எட்டு, (Blocks) கட்டுவது. | 2,35,000 | 3,540 | ,, |

**இல. அரங்கநாத சாஸ்திரி,**
செயற்பொறியாளர்-
கோவை வீட்டுவசதிப் பிரிவு,
கோவை.

11/22, திவான்பகதூர்சாலை,
இரத்தனசபாபதிபுரம்
(அஞ்சல்),
கோவை-2.

## ஏலம்

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

இந்திரா நகர் திட்டப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைகளில் (26 கடைகள்) குத்தகை உரிமையும், ஒரு உணவகத்தின் குத்தகை உரிமையும் அந்த இடமுள்ள பகுதியில் 30-10-1971 காலை 10·00 மணிக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் துணைத் தலைமை ரெவின்யூ அலுவலரால் ஏலம் விடப்படும்.

ஏலம் கோர விரும்புவோர், ஏலத்திற்கு முன்னதாக ரூ. 50 கட்டுத் தொகை கட்ட வேண்டும். மேற்கொண்டு விவரங்களைத்தலைமை ரெவின்யூ அலுவலரிடமிருந்து பெறலாம்.

இந்திரா நகரில் 20 தனி நபர் குடியிருப்புகள் ஒதுக்கீடு பெறுவதற்காகவும் பொது மக்களிடமிருந்து மனுக்கள் கோரப் படுகின்றன.

**ஏ. ராஜதுரை,**
தலைமை ரெவின்யூ அலுவலர்,
36, அண்ணாசாலை,
சென்னை-35.
(த.50)

## ஏல விற்பனை

### காஞ்சிபுரம் நகராட்சி

1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் புதன் கிழமை மாலை 3-00 மணிக்கு நகராட்சிக்குச் சொந்தமான 10 இரும்பு ரோலிங் சட்டர்கள் நகராட்சி அலுவலகத்தில் ஏலம் போடப்படும். ஏலம் கேட்கும் நபர் ரூ. 100 பொறுப்புத் தொகை செலுத்தி ஏலம் கேட்க வேண்டும். இதர நிபந்தனைகளை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளவும்.

**த. ஆ. சிவசுப்பிரமணியன்,**
ஆணையர்.
நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்.
4-10-1971
(த.59)

## ஒப்பந்தப் புள்ளி

### தொடர் உருக்கு வார்ப்புத் தொழிற்சாலே

### தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழில் பிரிவு

தமிழ்நாடு அரசினர் நிறுவனம் தபால் பை எண் 5, அரக்கோணம், வட ஆர்க்காடு மாவட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 11140/பி./c/Elec./71–2.

வட ஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்புத் தொழிற்சாலே பிராஜக்ட் பொறியாளர், அவர்களால் குடியிருப்புகளுக்காக உள் மின்சார அமைப்புகளுக்காக மின்சார சாதனங்கள் வழங்க 15–11–1971 மாலே 3·00 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலே 3-30-க்கு பிராஜக்ட் பொறியாளரால் அல்லது அவருடைய பிரதிநிதியால், அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலேயில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளியுடன் தரப்படவேண்டிய கட்டுத் தொகை குறுப்பிடப்பட்ட மதிப்பில் $2\frac{1}{2}$ சதவிகிதம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 16–10–1971-லிருந்து அரக்கோணத்தில் இத்தொழில் பிரிவின் அலுவலத்தில் விற்கப்படும். ஒரு செட்டுக்கு விலே ரூ. 5 ரொக்கமாகவோ மணியார்டர் மூலமோ இதனேச் செலுத்த வேண்டும். இத் தொகை திருப்பித் தரப்படாது. 12–11–1971-க்குப் பிறகு ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விற்கப்படாது.

காரணம் எதுவும் கூறுமல் எந்த ஒப்பந்தப்புள்ளியையும் முழுதுமாகவோ, அல்லது பகுதியாகவோ ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ பிராஜக்ட் பொறியாளருக்கு உரிமை உண்டு.

**பிராஜக்ட் பொறியாளர்.**

(த. 45)

## ஏல விற்பனே

(ந.க. எண் 53913/பி2/71.)

வாரிசுதார் இல்லாத சொத்துக்கள் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 28-ஆம் தேதி வியாழக்கிழமை காலே 10·30 மணியளவில் என்னுடைய அலுவலகத்தில் பகிரங்கமான ஏலத்தில் விற்கப்படும். பொருள்களின் பட்டியலே 26–10–1971 செவ்வாய்க்கிழமை அன்றும் 27–10–1971 புதன்கிழமை அன்றும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஆணேயர்.

(த. 58)

## ஒப்பந்தப் புள்ளி

### தூத்துக்குடி துறைமுக வாரியம்

தூத்துக்குடித் துறைமுகத்தின் வடக்குப் பகுதியில் சிமெண்ட் காங்கிரீட் சிலாப்புகளேப் பாவுதல் (காண்டிராக்ட் மதிப்பு—ரூ. 23,000) என்ற வேலேக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அனுபவம் வாய்ந்த காண்டிராக்டர்களிடமிருந்து 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் நாளன்று பிற்பகல் 4-00 மணி வரை தலேவர், தூத்துக்குடித் துறைமுக வாரியம், அவர்களால் வரவேற்கப்படுகின்றன. தூத்துக்குடித் துறைமுக வாரியத்தில் பதிவாகியுள்ள காண்டிராக்டர்களது ஒப்பந்தங்களேத் தவிர இதர எந்த நபர் ஒப்பந்தமாவது ஏற்கப்பட்டால், அவர் தற்காலிக உத்தரவு கிடைத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், துறைமுக சகல விதி முறைகளேயும் அனுசரித்து, தமது பெயரை பதிவு செய்து கொள்ளவேண்டும். இல்லேயேல் வேலேக்கான உத்தரவு ரத்துச் செய்யப்படும். மற்றும் அவர் செலுத்திய முன் பிணே வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப் பத்திரங்களே கீழ்க் கையொப்ப மிட்டுள்ளவரிடமிருந்து 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26-ஆம் தேதி வரை பிரதி ஒன்றுக்கு ரூ. 10 செலுத்திப் பெறலாம். இத்தொகை திருப்பித்தரப்படமாட்டாது.

டி.டீ. ராமச்சந்திரன்,
துறைமுக அதிகாரி,
காரியதரிசி.
துறைமுக வாரிய அலுவலகம்,
தூத்துக்குடி-1.

(த. 56)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு அரசு

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், தபால் பெட்டி எண் 55, திருச்சிராப்பள்ளி-1.

### சிறு ஒப்பந்த ரத்து அறிக்கை

வேலேயின் பெயர்—திருச்சி மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடி அரசினர் மருத்துவ மனேயில் 16படுக்கைகள்கொண்ட ஒரு பகுதிக் கட்டடம் கட்டுதல்.

ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசித் தேதியாகிய 8–10–1971-க்கு உடைய மேற்கண்ட வேலேக்கான ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படுகிறது.

நா. முத்துகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
திருச்சி வட்டம்.

(த. 76)

## ஒப்பந்தப் புள்ளி

### மாயூரம் நகராட்சி

நகராட்சி சாலேகளேப் பராமரிக்க கருங்கல் ஜல்லி, சிகப்பு கப்பி ஆகியவை சப்ளே செய்ய ரூ. 6,000 மதிப்பீடுள்ள வேலேக்கு 25—10—1971 மாலே 4-00 மணி வரை ஆணேயர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளபடும். அந்த வேலேயின் விபரங்களே நகராட்சி கருவூலத்தில் ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனே வரியும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வீரைய்யன்,
ஆணேயர்.

(த.34)



16-10-12a

## தமிழ்நாடு கீழ்முக காவல் துறை

இராமநாதபுரம் மாவட்டம் ஆயுதப்படை பிரிவில் இரண்டு இளநிலை உதவி ஆய்வாளர்கள் பதவிக்கும், மதுரை வட பாகம் ஆயுதப் படைப் பிரிவில் ஒரு இளநிலை உதவி ஆய்வாளர் பதவிக்கும் தகுதி பெற்ற நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. நேர்முக தேர்வின்படி நியமனங்கள் செய்யப்படும்.

3. கீழ்க்கண்ட தகுதி உடையவர்கள் மட்டுமே ஆயுதப் படை இளநிலை உதவி ஆய்வாளர் வேலைக்கு தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

தகுதிகள்.

(அ) 1–7–1971 அன்று 18 வயது முடிந்திருக்க வெண்டும். ஆனல், 25 வயதுக்கு மேற்பட்டு இருக்கக் கூடாது.

(ஆ) இந்தியப் பாதுகாப்புப் படையில் ஏதாவது ஓர் பிரிவில் பணியாற்றியவர்களுக்கு பணிபுரிந்த காலத்தைக் கழித்து வரும் வயது 25-க்குக் கீழ் இருக்க வேண்டும்.

(இ) உடலளவு: உயரம் 5' 6'' (168 செ. மீட்டர்). மார்பு சாதாரண நிலையில் 34'' (86 செ. மீட்டர்). மார்பு விரியும் பொழுது: 2'' (5 செ. மீட்டர்)-க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

(ஈ) கல்வி: குறைந்த பட்சம் உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்வு ஆகியிருக்க வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் கீழ்க்கண்ட தேர்வு எண் பெற்றிருக்க வேண்டும்.

ஆங்கிலம்—40.

தமிழ்—40.

விஞ்ஞானம், கணிதம், சமூகப்பாடம்–குறைந்தது இரண்டு பாடங்களில் 35-ம் மூன்ருவதில் 30-ம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) மொழி: பிராந்திய மொழியில் (அதாவது தமிழ் மொழியில்) போதிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு.—இந்தியப் பாதுகாப்புப் படையில் ஏதாவது ஓர் பிரிவில் பணியில் இருந்து ஓய்வு பெற்ற அல்லது படை கலைப்பு காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஜூனியர் இந்தியன் கமிஷன் ஆபீசர்கள் மேற்படி பதவியில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணி புரிந்திருப்பார்களாயின் அவர்களுக்கு மேற்கண்ட வயது உச்சவரம்பு பொருந்தாது. அவர்கள் ஆங்கிலமும் தமிழும் படிக்க எழுதத் தெரிந்தவர்களாகவும் வயது 45-ஐப் பூர்த்தி செய்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

4. ஊதிய விகிதம்: ரூ. 250—10—400.

5. மேற்கண்ட நிபந்தனைகளைத் திருப்தி செய்தவர்கள் கீழேகண்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட காவல் துறை, கண்காணிப்பாளர்கள் மதுரை வட பாகம், மதுரை அல்லது இராமநாதபுரம் மாவட்டம், மதுரை அவர்களுக்கு மேலுரையில் எழுதி 20—10—1971-ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

### விண்ணப்பப் படிவம்

(Application Form)

1. மனுதாரரின் முழுப் பெயர் ..
(Full name of the applicant)

2. தகப்பனர் பெயர் ..
(Father's name)

3. பிறந்த இடமும், முழு முகவரியும்.
(Place of birth and full address)

4. தற்கால முகவரி ...
(Present address)

5. கல்வி .. .. ...
(Educational qualification)

6. கடைசியாகப் படித்த கல்வி நிலையத்தின் பெயரும், முகவரியும், அதன் தலைவரிடம் பெற்ற நன்னடத்தைச் சான்றிதழும்.
(Name of the last High School or institution in which studied. A conduct certificate obtained from the Head of the institution should be furnished)

7. பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தால் பிரிவும் அத்தாட்சியும்.
(If belonging to S.C., S.T. or B.C. name of caste. A certificate in proof of the caste should be furnished from a Revenue authority)

8. உயரம்—
மார்பு (சாதாரணம்) அளவு.
(Chest normal)
மார்பு விரியும்போது அளவு.
(Chest inspriation)

9. மற்ற விசேஷத் தகுதிகள் இருப்பின் உண்மை நகல்களுடன்.
(Additional qualification if any should produce certificate of proof in original)

குறிப்பு.—படிப்பு, ஜாதி இவைகள் அனைத்துக்கும் உண்மை நகல்கள் கெஜட் பதவியிலுள்ள ஒரு அதிகாரி ஒப்பம் செய்திருக்க வேண்டும். விண்ணப்ப படிவத்துடன், படிப்பு, ஜாதி இவைகளுக்குரிய அசல் சான்றிதழ்கள் இணைக்கக் கூடாது. உண்மை நகல்கள் மட்டும்தான் இணைக்க வேண்டும்.

N. B.—The copies and testimonials in proof of educational qualification, caste, etc. should be got attested by a Gazetted Officer, attached copies of certificates only to be attached with the application and original certificates should not be attached with the application form.

மேலே குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

10. தகுதி பெற்ற மனுதாரர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் பொழுது குறிப்பிட்ட இடத்திற்கு மனுதாரர் அவருடைய சொந்தச் செலவில் வந்து போக வேண்டும். நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

11. மனுதாரர் நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மேற்பணி பற்றி அவ்வப்பொழுது செய்யப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

சி. துரைராஜ்,

காவல் துறை கண்காணிப்பாளர், திருநெல்வேலி,
சேர்மன், தென் பிராந்தியத் தேர்வுக் குழு.

(த. 36)



## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

தக்கைகல் திட்டப் பிரிவு

எண்ணூர்—சென்னை-57

குறிப்பு எண் சி. சி. பி. 5/3429/71

கீழே குறிக்கப்பட்டுள்ள வேலைக்கு முத்திரையிடப் பட்ட ஒப்பந்த புள்ளிகள் (உறையின்மீது வேலையின் பெயரைக் குறித்து) பெருந்திட்ட அதிகாரி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப் பிரிவு, எண்ணூர்-57 அவர்களால் மாலை 3–00 மணிக்கு 25—10—71 அன்று வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் 25—10—71 அன்று மாலை 3–15 மணிக்கு ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்த நமூனுவின் விலை. |
|---|---|---|
| எரித்த சுண்ணும்பு எண்ணூரில் வழங்குதல் அளவு (முதலில் ஒரு நாளைக்கு 30 டன்கள் விதம்). | ரூ. 2,430 | ரூ. 10-ம் மூன்று சதம் விற்பனை வரியும். |

ஒப்பந்த நமூனுவின் விலை திரும்பப் பெற முடியாதது. ஒப்பந்த நமூனுக்களையும் மற்ற விபரங்களையும் எண்ணூரிலிருக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தக்கைக்கல் திட்டப் பிரிவு அலுவலகத்திலிருந்து 7—10—1971 முதல் 23—10—1971 முடிய எல்லா அலுவலக வேலை நாட்களிலும் காலை 9-45 மணியிலிருந்து மாலை 4-15 மணி வரையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த நமூனுக்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ, எவ்வித காரணமுமின்றி, மறுப்பதற்குத் திட்ட அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

பூ. தா. ஜெயராமன்,
திட்ட அதிகாரி,
தக்கைக்கல் தொழிற்சாலை.

இடம்: எண்ணூர், சென்னை-57.

தேதி: 30—9—1971.

(த. 35)

## விற்பனை

### மதுரை வீட்டு வசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மதுரை வீட்டு வசதிப் பிரிவு செயல்படுத்தும் மதுரை கிழக்கு புறநகர்ப் பகுதியாகிய தல்லாகுளம், சாத்தமங்கலம் ஆகிய பகுதிகளில் கீழ்த்தர மத்தியதர, வருவாய் உள்ளவர்களுக்கு கட்டியுள்ள இணைந்த வீடுகளும் (Flats) சாத்தமங்கலம் பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டு மனைகளும் ஞானஒளிவுபுரத்தில் கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்காக கட்டப்பட்டுள்ள இணைந்த வீடுகளும் தவணை, முழுமை விலை விற்பனைக்குத் தயாராக உள்ளன. மனு செய்வோர் 3—11—1971 தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும்படி அதற்குரிய மனு படிவங்களில் வைப்புத் தொகையுடன் அனுப்ப கோரப்படுகின்றன.

மேற்படி இடங்களில் நகர பஸ் வசதி, குடி தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், பாதாள கழிவு நீர் வசதி, உயர் நிலைப் பள்ளி வசதி, கடைகள், தபால் அலுவலகம் ஆகியவை உள்ளன.

**வீடுகள் ஒதுக்குவதற்குக் கீழ்க்கண்ட வரிசையில் முதலிடம் கொடுக்கப்படும்**

1. முழுத் தொகையும் ஒரே தவணையில் செலுத்துதல்.
2. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை ஒரு வருடத்தில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
3. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை மூன்று வருடத்தில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
4. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியைப் பத்து வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
5. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை 15 வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.
6. 25 சதவீதம் முதலில் செலுத்தி, மீதியை 20 வருடங்களில் மாதத் தவணையாகச் செலுத்துதல்.

**தயாராக உள்ள இணைந்த வீடுகளின் விபரம்**

**மத்தியதர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில்**

| வரைபட எண். | | | உத்தேச விலை. ரூ. | விஸ்தீரணம். சதுர அடி. |
|---|---|---|---|---|
| 3எ/68 | — | — | 25,000 | 852 |

**கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில்**

| | | | | |
|---|---|---|---|---|
| 2எ/68 | — | — | 19,000 | 565 |
| 1ஜ/69 | — | — | 12,000 | 417 |
| 1சி/68 | ... | .. | 10,000 | 306 |

**கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஞானஒளிவுபுரம் பகுதிகளில்**

| | | | | |
|---|---|---|---|---|
| 48/63 | ... | ... | 10,000 | 298 |
| 68/63 | ... | ... | | |

இணைந்த வீடுகளுக்கான மனு படிவங்களுக்கு ரூபாய் ஐந்தும், மனைகளுக்கான மனு படிவங்களின் ரூ. 3 கொடுத்து நேரடியாக எல்லா அலுவலக நாட்களிலும் 3 மணிக்குள்ளாக பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் மேலும் ரூபாய் ஒன்று அனுப்ப வேண்டும்.

ஜவகர் தெரு,
காந்தி நகர்,
மதுரை-20.

**நிர்வாக அதிகாரியும், நிர்வாகப் பொறியாளரும்,**
மதுரை வீட்டு வசதிப் பிரிவு.

(த. 41)

## ஏல விற்பனை

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

இவ்விலாக்காவின் பயன்படுத்த முடியாத, பழுதடைந்த இயந்திர சாமான்கள் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ஆம் தேதி மாலை 2—30 மணியளவில் சென்னை-25 நெடுஞ்சாலைப்போக்குவரத்து இயந்திரக் கோட்டத்தில் பொது ஏலத்திற்கு விடப்படும்.

ஏலத்திற்குட்பட்ட பொருள்களின் விவரங்களையும், மற்ற விவரங்களையும் வேலை நேரத்தில் எந்த வேலை நாளிலும் நெடுஞ்சாலைப் போக்குவரத்து இயந்திரக் கோட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கோ. விசுவநாதன்,**
கோட்டப் பொறியாளர்,
(நெ.கி.பொ.ப.)
போக்குவரத்து
இயந்திரக் கோட்டம்,
சென்னை-2.

(த.32)

## திருத்தம்

"சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்" என்ற தலைப்பில் "தமிழரசு" தமிழ் 1-9-1971 & 16-9-1971 இதழ்களில் வெளி வந்தவற்றில் தொடர் எண் 7-ல் கல்வி, உணவியல் என்று வெளியிடப்பட்டுள்ளதை திருத்தி "கல்வி, உளவியல்" என்று மாற்றிக் கொள்ளவும்.

## தமிழ்நாடு அரசு

### குடிநீர் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண்—13238/71.2.
நாள் 23—9—1971.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும், தென் ஆர்க்காடு மாவட்டம் வடக்கூத்துவில் தூய நீருக்கான பம்பு இல்லம் கட்டுவதற்காக பொதுப்பணித் துறையின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் உரிய வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 6,400.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் விலை ரூ. 20.00 ''பி. டப்ளியூ. III ஓ. ஆர்'' என்ற தலைப்பில் அரசு கருவூல சலான் மூலம், நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்டம், வட்டம் வடக்கூத்து, அவர்கள் கணக்கில் செலுத்தப் படவேண்டும்.

விற்பனை வரி—அமலில் உள்ள விகிதத்தில் விற்பனை வரி ''XII (b) விற்பனை வரி, பல்வகை'' என்ற கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.
ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் கிடைக்கும் காலம்—25-10-1971 முதல் 10-11-1971 வரை.

ஒப்பந்தப் புள்ளி தேதியும் நேரமும்—20-11-1971 மாலை 3-00 வரை.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(தூ.38)

## தமிழ்நாடு அரசு

### குடிநீர் வடிகால் வாரியம்

சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண்—13847/71, டி-2.
நாள் 23-9-1971.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும், தென் ஆர்க்காடு மாவட்டம் சேத்தியாதோப்பில் கச்சா நீருக்கான பம்பு இல்லம் கட்டுவதற்காக பொதுப்பணித் துறையின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீராணம் திட்ட வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் உரிய வடிவத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 6,600.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் விலை ரூ. 20.00—''பி. டப்ளியூ. III ஓ. ஆர்.'' என்ற தலைப்பில் அரசு கருவூல சலான் மூலம், நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்டம், வட்டம் வடக்கூத்து, அவர்கள் கணக்கில் செலுத்தப் படவேண்டும்.

விற்பனைவரி—அமலில் உள்ள விகிதத்தில் விற்பனை வரி ''XII (b) விற்பனை வரி, பல்வகை'' என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் கிடைக்கும் காலம்—25-10-1971 முதல் 10-11-1971 வரை.

ஒப்பந்தப் புள்ளி தேதியும் நேரமும்—20-11-1971 மாலை 3.00 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்களை கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் பெறலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
வீராணம் திட்ட வட்டம்,
சென்னை-5.

(தூ. 37)

## விற்பனை

### செங்கற்பட்டு மாவட்ட நிலக்கடலை வணிகப் பெருமக்களுக்கு ஓர் வேண்டுகோள் !

1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்களின் சட்டம் 1962-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருட்களைக் குறித்த விதிகள் அவைகளின் துணைவிதிகள் இம்மாவட்டத்தில் செங்கற்பட்டு விற்பனைக்குழுவின் மூலம் நிலக்கடலைக்குஅமலாக்கத் தமிழக அரசினர் உத்திரவிட்டுள்ளனர். எனவே, செங்கற்பட்டு மாவட்ட நிலக்கடலை வணிகப் பெருமக்கள் அனைவரும் செங்கற்பட்டு விற்பனைக் குழுவினுடன் ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அச்சட்டத்தின்படி நிலக்கடலை வியாபாரிகள் செங்கற்பட்டு விற்பனைக் குழுவினரிடமிருந்து உரிமையாணை பெற்றுத்தான் வாணிகம் செய்ய வேண்டும்.

(அ) பிரிவு உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 25.

(ஆ) பிரிவு உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 15.

(இ) பிரிவு உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 5.

தரகர்கள் உரிமையாணை ஆண்டொன்றுக்கும் அதன் பாகத்திற்கும் ரூ. 10.

உரிமையாணையர்கள் எடையாளர் உரிமையாணையர்களைக் கொண்டுதான் எடை போட வேண்டும்.

(அ) பிரிவு (ஆ) பிரிவு உரிமையாளர்களின் எடையாளர் உரிமையாணை ரூ. 10.

(இ) பிரிவு உரிமையாளர்களின் எடையாளர் உரிமையாணை ரூ. 3.50

விற்பனைக் கட்டணம் ரூ 100 மதிப்புள்ள பொருளுக்கு 25 காசு தான்.

சட்டப்படி இவ் வுரிமையாணைகளை பெறுவிட்டால், நீதிமன்றத்தினரால் ரூ. 500வரை அபராதம் விதிக்க சட்ட சம்மதம் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே செங்கற்பட்டு மாவட்ட விற்பனைக்குழு நிலக்கடலை வியாபாரிகள் அனைவரும் விற்பனைக் குழு அலுவலகத்திலோ அல்லது அதிகாரம்பெற்ற விற்பனைக்குழுவின் மேற்பார்வையாளர்களிடமோ பணம் செலுத்தி பணவரவு சீட்டு பெற்றுக்கொண்டு உரிமையாணை பெற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

தனிநிலக்கடலை வியாபார பெருமக்களையுமன்றி, நிலக்கடலை வியாபார பெருமக்களின் சங்கங்களையும் இக்குழுவுடன் ஒத்துழைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

முழு விபரங்கட்கும் விற்பனைக் குழு செயலாளரையோ அல்லது விற்பனைக் குழுவின் மேற்பார்வையாளர்களையோ அணுகி தெரிந்து கொள்ளலாம்.

**சி.வி.எம். அண்ணாமலை,**
**எம்.எல்.ஏ.,**

தலைவர்,
செங்கற்பட்டு விற்பனைக்குழு,
காஞ்சிபுரம்.

(த.31)

---

## ஒப்பந்த புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

**என்னூர் அனல் மின்திட்டம் —இரண்டாம் கட்ட விரிவு படுத்தல்— அனல் மின் நிலையம் —ஐந்தாவது அனல் மின் உற்பத்திச் சாதனம் அமைப்பதற்கான தரைமட்டத்தின் கீழே உள்ள கான்க்ரீட் கட்டத்தின் முதற் கட்ட வேலைகள்.** (Construction of R. C. C. protective raft over piles, Supplying and laying water proofing and first stage concreting of the Power House R. C. C. substructure for the 5th unit.)

1. தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் மேலே குறிப்பிட்டபடி, உறையின் மீது எழுதப்பட்ட முத்திரையிட்ட ஒப்பந்தங்கள், மேலே கூறிய வேலைக்காக இரண்டு நகல்களில் 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ஆம் தேதி (3—11—1971) புதன் கிழமை நண்பகல் 12—00 மணிவரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அதே தினத்தன்று மாலை 2—30 மணிக்கு கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமாக பெறக்கூடிய ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

2. ஒப்பந்தம் தனி குறிப்பு எண் சி. 1104 நகல் ஒன்றின் விலையான ரூபாய் ஐம்பது மட்டும் (ரூ. 50 .00) ரொக்கமாகவோ அல்லதுமணியாடர் மூலமாகவோ 157, அண்ணா சாலை, சென்னை—2 என்ற விலாசத்திலுள்ள '' அக்கவுண்ட்ஸ் ஆபீஸர் '' (ஸ்பெசிபிகேஷன்), சென்னை மின்சார திட்டம் (விநியோகம்) அவர்களுக்குச் செலுத்தி, பெறப்பட்ட ரசீதை இணைத்து விண்ணப்பித்துக் கொள்வதின்பேரில் நகல்களை கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அக்கவுண்ட்ஸ் ஆபீஸர், (ஸ்பெசிபிக்கேஷன்) சென்னை மின்சார திட்டம் (விநியோகம்)அவர்களுக்கு மேற்படி பணம் செலுத்தும் போதும் மற்று எல்லாவித மான கடிதப்போக்கு வரத்திலும் தனிக்குறிப்பு எண் சி. 1104 என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திரும்பிப்பெறக்கூடியதல்ல.

3. குறைந்த அல்லது எந்த ஒப்பந்தத்தையோ ஏற்றுக்கொள்வதற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது. எக்காரணமும் காட்டாமல் எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்கும் முழு உரிமை இவ்வாரியத்திற்குண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
தொழில் நுட்பம்(பொதுவியல்).
(த-30)

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பந்தங்கள் (Tenders) அதன் உறையில் ''தமிழக மின்சார வாரியம், பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம் இரும்புக் கழிவுத் துண்டுகள், பித்தளைக்கழிவுத் துண்டுகள் பழைய டயர்கள், காலி பிப்பாய்கள் வாங்குவதற்கான விலை ஒப்பந்தங்கள்'' விளக்க விவரம் எண் SEG BB. 42 மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டுக் கீழ்க் கையொப்பம் இட்டவரால் 30–10–71 அன்று பிற்பகல் 1-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5 ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளி விளக்க விவரப் பிரதிகள் (Tender specification copies) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 வீதம் துணைத் தலைமைக் கணக்கர், மின் உற்பத்தி நிலையம், பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், சென்னை-12 (Deputy Chief Accountant, Generation Basin Bridge Power Station, Madras-12) என்ற முகவரிக்குப் பண அஞ்சல் (Money Order) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படித் தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. இத்தொகையைப் பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவர எண்ணையும் (Specification Number) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்குச்சேர்க்கப்படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்துக்கும் ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) கட்டுத் தொகையாக பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் நேரில் செலுத்தி அதற்கான ரசீதை விலை–ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். மேற்படி ரசீது–இல்லாத ஒப்பந்தங்களும், உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத விலை ஒப்பந்தங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 30–10–71 அன்று மாலை 4-00 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் முன்னிலையில்அடியில் கையெப்பமிட்டுள்ளவரால் அவரது அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

சென்னை மின் பெருவட்டம்,
மின் உற்பத்தி நிலையம்,
பேசின் பிரிட்ஜ் மின் நிலையம்,
சென்னை-12.

(த. 84)

---

### கருங்கல் சல்லி

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் பொருட்டும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வையாளர், அரசினர் சின்கோனத் தோட்டங்கள், ஆனைமலை—அவர்களுக்கு கருங்கல் சல்லி வழங்குவதற்காக வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் 25-11-71 பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி பற்றிய விவரங்களையும் நிபந்தனைகளையும் பெற விற்பனை வரி உட்பட ரூ. 2.07 (ரூபாய் இரண்டு, காசு ஏழு) செலுத்திக் கீழே கையெழுத்திட்டுள்ளவரிடம் விண்ணப்பிக்கவும்.

**இயக்குநர்,**

சின்கோனத் துறை,
அஞ்சல் பெட்டி எண் 6,
உதகமண்டலம்,
நீலகிரி மாவட்டம்.

(த.49)

---

## ஒப்பந்தப்புள்ளி.

---

### காவல் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவருக்காகவும், காவல்துறை மாவட்டக் கண்காணிப்பாளர், இராமநாதபுரம் இருப்பு மதுரை அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள போலீஸ் லாரி ஏலத்திற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31–10–71 காலை 11-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. விற்கப்பட்ட தொகையின் பேரில் பதினைந்து சதவிகிதம் விற்பனை வரி வசூலிக்கப்படும். லாரி சம்பந்தப்பட்ட மற்ற விவரங்களை மதுரையிலிருக்கும் இராமநாதபுரம் மாவட்ட ஆயுதப்படை உதவிக் காவல் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து தெரிந்து கொள்ளவும்.

போலீஸ் லாரி எண்—

எம்.டி.ஆர். 2937—பர்கோ—பெட்ரோல் வண்டி—1956 மாடல்.

ஒப்பந்தப் புள்ளிதாரர் கட்டுத் தொகையாக ரூ. 100 (ரூபாய் நூறு மட்டும்) இராமநாதபுரம் கண்காணிப்பாளர் அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் ''ரெவின்யூ டிபாசிட்'' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். கட்டுத்தொகை ரசீது இல்லாத ஒப்பந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். எவ்விதக் காரணமும் கூறாமல் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமையுண்டு.

**கோ. செல்வராஜ்,**

காவல்துறைக் கண்காணிப்பாளர்
இராமநாதபுரம் (இருப்பு)
மதுரை.
2–10–71

(த.82)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர் : சோளிங்கர் குடிநீர் வழங்கும் திட்டம்—முதற் கட்டம்— வழங்கும் முறை—சி. ஐ. ஏ. சி. குழாய்கள், ஸ்பெஷல்கள் அமைத்தல் மற்றும் இணைத்தல்.

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் மேற்கூறப்பட்ட வேலையைச் செய்வதற்காக, இத்துறையில் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனங்களில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களால், 52, கெங்கு ரெட்டி சாலை, எழும்பூர், சென்னை -8 என்ற முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 5—11—1971 அன்று மாலை 3-00 மணி வரை, துறைக்குரிய முறையான வடிவத்தில், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்குப் பிறகு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், பொது நல்வாழ்வுப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களால், திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் : கே. 2.

2. கட்டுத் தொகை : ரூபாய் 1,515 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூற்றுப் பதினைந்து மட்டும்).

(கருவூலச் சலான் வடிவிலோ, அல்லது ஒப்பந்தப் புள்ளி அட்டவணையில் குறிப்பிட்டபடி ஏற்கத் தக்க வடிவங்களில் ஏதேனும் ஒன்றாகவோ இருக்க வேண்டும்).

3. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை : ரூபாய் 10.35 (ரூபாய் பத்து காசு முப்பத்தி ஐந்து மட்டும்).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணத்தை நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம் செங்கற்பட்டு அவர்கள் கணக்கில் "P.W. III OR" என்ற தலைப்பிலும், விற்பனை வரியை" "XII Sales Tax (D) Misc. I. General Sales-Tax" என்ற தலைப்பில் தனிச்சலானிலும் செலுத்த வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம்: நிருவாகப் பொறியாளர், (பொ. ந. பொ), மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 24, பெரிய மணியக்காரர் தெரு, செங்கற்பட்டு அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம்.

(ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்திற்குரிய கட்டணத்தை ரொக்கமாக அல்லது பண அஞ்சல் மூலமாக செலுத்தப்படவேண்டும்).

5. வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள்.

சென்னை-8,
4—9—1971.
(த-80)

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்.

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் துறைக்குரிய வடிவத்தில் மக்கள் நல்வாழ்வுப் பொறியாளர் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை, அல்லது அவை போன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளரால் (ம. ந. வா. பொ.) எண் 17. சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் அவரது அலுவலகத்தில் 29-10-1971 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன. அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு அவை அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : திருப்பத்தூர் ஊராட்சி (இராமநாதபுரம் மாவட்டம்) குடிநீர் வழங்கு திட்டம் 1-வது கட்டம் 10·00 லட்சம் லிட்டர் திறன் உள்ள மேல் மட்ட ஆர். சி. சி. சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 5,400 (ரூபாய் ஐயாயிரத்து நானூறு மட்டும்).

இந்தத் தொகையில் ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூல செலாணக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கின் பாங்க் காரண்டியாக நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 48, காலேஜ் ரோடு, காரைக்குடி என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் : 12 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை: ரூ. 15.53 (விற்பனை வரி உள்பட)

ஒப்பந்தப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 48, காலேஜ் ரோடு, காரைக்குடி என்ற முகவரியில் 25-10-1971 திங்கட்கிழமை மாலை 5 மணி வரையிலும் பெறலாம்.

கே. கோவிந்த மேனன்,
மேற்பார்வைப் பொறியாளர் (ம. ந. வா. பொ.)
மதுரை-2.

தேதி: 22-9-1971.
(த. 63)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநரின் சார்பில் பொதுப் பணித் துறை மேற்பார்வைப் பொறியாளர், கடலூர் அவர்களால் கீழ்க் கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 10—11—71 மாலை 3 மணிவரையில் மூடிய உறையில் அரக்கு முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தங்கள் தகுந்த வகுப்பில் பதிவு செய்யப் பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் இவ்வலுவலகத்தில் வழங்கப்படும் நிர்ணயிக் கப்பட்ட படிவத்தில், உறையின் மேல் வேலையின் பெயர் குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

கொளஞ்சியப்பர் அரசினர் கலைக்கல்லூரி முதல் மாடி கட்டடங்கள் கட்டுதல்—ஒப்பந்த அறிக்கை சம்பந்த மாக—

(1) ஒப்பந்தவகை—மொத்தத் தொகை ஒப்பந்தம் (L.S)

(2) கட்டுத் தொகை—(E. M. D.)—ரூ. 5,400

(3) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்).

(4) விற்பனை வரி—0·60· (பைசா அறுபது மட்டும்).

(5) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள்—25—10—1971 முதல் 8—11—1971 வரை. அலுவலக நேரத் தில் விற்பனைக்குக் கிடைக்கும்

(6) ஒப்பந்தங்கள் 10—11—1971 அன்று மாலை 4 மணிக்கு இவ்வலுவலகத்தில் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ரூ. 20ஐ (ரூபாய் இருபது PWIII ORஎன்ற கணக்குத் தலைப்பில் '' நிர்வாகப் பொறி யாளர், (பொ.ப.து.) கடலூர் கோட்டம், கடலூர் அவர்கள் கணக்கிலும், விற்பனை வரிக்காக 0·60 காசுகளை'' ''XII Sales Tax (d) Miscellaneous-I General Sales Tax'' என்ற கணக்குத் தலைப்பிலும் தமிழ்நாடு அரசினர் கருவூலத் தில், மேற்படி ரூபாய் ரூ. 20·60ஐ ஒரே சலானில் தனித் தனிக் கணக்குத் தலைப்பில் செலுத்த வேண்டும். இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப் பந்தப் பத்திரங்கள் கோரிவரும் மனுக்கள் பணம் கட்டிய தற்கான அசல் சலானுடன் அனுப்பப்படவேண்டும்.

**வெ. இராமனுதன்,**

மேற்பார்வைப் பொறியாளர்,

பொ.ப.து, தென்னார்க்காடு மாவட்டம்,

கடலூர்-2.

(த. 83)

## ஒப்பந்தப் புள்ளி

### மணப்பாறை நகராட்சி

மணப்பாறை நகராட்சிக்குச் சுமார் 95,000 ரூபாய் மதிப்பிற் குரிய 39 வேலைகளைச் செய்து முடிக்க மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 27-ம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணிவரை நகராட்சி அலுவலகத் தில் நகராட்சி ஆணையர் அவர் களால் பெற்றுக்கொள்ளப்படும்.

வேலைகளின் பெயர்களையும் மற்றும் விவரங்களையும் அலுவலக நேரத்தில் நகராட்சிப்பொறியாள ரிடம் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிந்து கொள்ள லாம்.

**எஸ். ஜார்ஜ்,**

ஆணையர்.

மணப்பாறை,
3–10–71.

(த.85)

## ஒப்பந்த நீட்டிப்பு அறிவிப்பு

### பொதுப் பணித் துறை

வேலையின் பெயர்—

செங்கற்பட்டு மாவட்டம்—பூந்தமல்லியில் அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளி யில் பொன்விழாக் கட்டடம் கட்டுதல்.

இவ்வேலைக்கு ஒப்பந்தப்புள்ளி கள் பெறக் கடைசித் தேதி 27–10–1971 வரை நீட்டிக்கப் பட்டிருக்கிறது. 27–10–1971 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 25–10–71 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

(பொ.ப.து.)

செங்கற்பட்டு வட ஆர்க்காடு வட்டம்.

(த.79)

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிகளுக்காக மனுக்கள் 1971 நவம்பர் 11 மாலை 5 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர். | பதவிகள் எண்ணிக்கை. |
| --- | --- |
| முழு நேர விரிவுரையாளர், சட்டக் கல்லூரி, சென்னை. | 4 |
| பகுதி நேர விரிவுரையாளர், சட்டக் கல்லூரி, சென்னை. | 17 |

தகுதிகள் : கீழ்க்கண்ட அல்லது அதற்குச் சமமான தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

அ. 1. சென்னைப் பல்கலைக்கழகத்தின் எம்.எல் பட்டம் அல்லது

2. சென்னைப்பல்கலைக்கழக முதல் வகுப்பு பி.எல். பட்டம் மற்றும் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. அல்லது பி.காம் பட்டம்

அல்லது

3. (1) சென்னைப் பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வகுப்பு பி.எல். பட்டம்.

மற்றும்

(2) தமிழ் நாட்டில் ஒரு பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வகுப்பு பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. பட்டம் இரண்டு பகுதிகள் ; அல்லது தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றில் இரண்டாம் வகுப்பில் பி. காம். பட்டம் அல்லது தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகம் ஒன்றில் எம்.ஏ., எம். எஸ்ஸி. அல்லது எம்.காம் பட்டம் ; அல்லது சென்னைப் பல்கலைக் கழகம் பழைய ரெகுலேஷன் பி.எஸ்ஸி. இரண்டாம் வகுப்புப்

மற்றும்

(ஆ) எம்.எல். பட்டம் பெற்றவர்கள் விஷயத்தில் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும், பி.எல். பட்டம் பெற்றவர்கள் விஷயத்தில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமலும் வழக்குரைஞராக அனுபவம்.

**சம்பள விகிதம் :—**

மாதம் ஒன்றுக்கு—

முழுநேர விரிவுரையாளர்கள்—ரூ. 800—40—1,000—50—1,250.

பகுதி நேர விரிவுரையாளர்கள்—ரூ. 525—25—600—30—690—35—900.

வயது—முழு நேர விரிவுரையாளர்களுக்கு :

1—7—1971-ல் 50 ஆண்டு நிறைவு பெறாதவராக இருக்க வேண்டும், சென்னை சட்டக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராக மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றியிருந்தால் மற்றவர்கள் விஷயத்தில் 40 வயது.

பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு :

58 வயது ஆகியிருக்கக் கூடாது.

முழுநேர விரிவுரையாளர்கள் விஷயத்தில் ஷெடியூல் வகுப்பினர், ஷெடியூல் பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அவர்களுடைய புதல்வர்கள் திருமணமாகாத பெண்கள் மற்றும் தேசீய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்குப் பின்னர் முழுநேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் ஆக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசீய மாணவர் படை காடெட்டுகள் ஆகியோருக்கு வயது வரம்பு விஷயத்தில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகளிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்களானாலும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடிபெயர்ந்தவர்கள் விஷயத்திலும் இலங்கை, பர்மா ஆகியவைகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விஷயத்திலும் வயது வரம்பு உள்படத் தகுதிகள் தளர்த்தப்படும். மனு வடிவங்களையும் இதர விவரங்களையும் "செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2" என்ற முகவரிக்கு, பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. உள்ள தன் முகவரியிட்ட 35 காசு அஞ்சல் வில்லை ஒட்டி நூல் அஞ்சல் என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த. 48)

---

## ஒப்பந்தப்புள்ளி

### குற்றால நகரியம்

கீழ்க்காணும் நகரியப் பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் அதற்குரிய செடியூலுடனும், முன்வைப்புத் தொகை கட்டிய ரசீதுடனும் 30-10-1971 ஆம் தேதி மாலை 4-00 மணிவரை நிர்வாக அதிகாரியால் பெற்றுக் கொள்ளப்படும். கிடைக்கப் பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் ஆஜராகியுள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் 30-10-1971-ந் தேதி மாலை 4-30 மணிக்கு நிர்வாக அதிகாரியால் திறக்கப்படும். இதற்கான செடியூல் அன்று மாலை 2-00 மணி வரை நகரிய அலுவலகத்தில் ரூ. 5 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இதர விவரங்கள் அலுவலக தினத்தில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| வேலை விவரம். | மதிப்பீடு தொகை. | முன்வைப்புத் தொகை. |
| --- | --- | --- |
| | ரூ. | ரூ. |
| ஐந்தருவீ புதிய கார் நிறுத்தும் இடத்தில் ஆற்றோரம் தடுப்புச் சுவர் கட்டும் வேலை. | 15,000 | 345 |

குற்றால நகரியம்,
5-10-1971.

**சா. நா. பழனிச்சாமி,**
நிர்வாக அதிகாரி.

(த.86)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர்—நீலகிரி மாவட்டத்தில் உள்ள பந்தலூரில் தேயிலைத் தொழிற்சாலை கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கூறப்பட்ட வேலையை மேற்கொள்வதற்காக, தொழில் துறை மற்றும் இதர அரசுத் துறைகளின் கட்டுமானப் பகுதியின் உரிய பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பகுதி, தொழில் வணிகத்துறை, அவர்களால் 26—10—1971 அன்று மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-10 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில், மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பகுதி, தொழில்துறை, 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2, அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. கட்டுத் தொகை—ரூபாய் 3,200 (ரூபாய் மூவாயிரத்து இருநூறு மட்டும்).

3. மாதிரி வரைபடத்துடன் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை, விற்பனை வரியும் சேர்த்து—ரூபாய் 10·40.

4. வேலையை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ' 4, தியாகராஜபுரம், வேலூர் ' என்ற முகவரியில் உள்ள நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மேற்குக் கோட்டம் அவர்களது அலுவலகத்தில் 12-10-71 முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை அதற்குரிய விற்பனை வரி உட்பட்ட தொகையான ரூபாய் 10·40 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX industries other receipts" என்ற தலைப்பில், நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்), மேற்குக் கோட்டம், 4, தியாகராஜபுரம், வேலூர், அவர்களது கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ, 'கால் டிபாசிட்' ரசீது வடிவிலோ ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம், வேலூர் அவர்களது கணக்கில் செலுத்தப்பட்ட ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்ட் டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு கடன் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் விற்பனை மதிப்பில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்களும் சம்பந்தப்பட்ட அஞ்சலகத்தின் தெரிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய காரண்டியும் கூட கட்டுத் தொகைக்காக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் கட்டுத் தொகை செலுத்தப்படுமானால், ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி அளிக்க விரும்புகின்றவர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சி. பி. மேத்யூ,**
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப்பகுதி.

சென்னை-2.
(ந. 61)

## சிறுதொழில்களுக்குக் கடன்

### அரிசன நலத் துறை

1971–72-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச்சேர்ந்த இந்து அரிசன வகுப்பினர் சிறு தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் அளிப்பதற்கான விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தொழில்களுக்கு மீண்டும் வரவேற்கப்படுகின்றன.

குறிப்பாக, கீழ்க்கண்ட தொழில்களுக்காகத் தொழில் கூடங்களில் பயின்று, தொழில் நுட்பத் தகுதியும், முன் அனுபவமும் பெற்றவர்கள், விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட நல அதிகாரிக்கு 31–10–71 தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

1. மோட்டார் மெக்கானிக்.
2. டிங்கரிங் மற்றும் ஸ்பிரே பெயிண்டிங்.
3. லேத் மற்றும் டர்னிங் பணி.
4. எலக்டிரிக் மற்றும் காஸ் வெல்டிங், டின் வேலை.
5. வாடகை சைக்கிள் கடைகள், சைக்கிள் மற்றும், மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் தொழில்.
6. டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட்.
7. மெடிகல் ஸ்டோர்ஸ்.
8. தச்சு வேலை.
9. பிரம்பு வேலை.
10. ஸ்லேட் தயாரித்தல்.

விண்ணப்பதாரர்களில், 22 முதல் 40 வயதிற்குள் உள்ள நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

விண்ணப்பதாரர்கள், கடன் வழங்கும் சாதனங்கள், கருவிகள் ஆகியவைகள் உள்படச் சொத்து மதிப்பு, கடன் தொகையைப் போல் ஒன்றரைமடங்கு அதிகமாகயிருந்தால் தான் விண்ணப்பிக்கவேண்டும். தகுந்த ஜாமீனும் கொடுக்கவேண்டும். மற்ற எல்லா விவரங்களுக்கும் மாவட்ட நல அதிகாரியை அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட மாவட்ட நல அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

**இயக்குநர்,**
அரிசன நலத்துறை.

(ந. 68)

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

கீழ்க்கண்ட பதவிக்காக 11—11—1971 அன்று மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு தொழிற்சாலைப் பணியாளர் தொகுதியில், உதவிக் கண்காணிப்பாளர் இயந்திர செங்கல் தொழிற்சாலை, திருமழிசை.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 550—25—600—35—950.

கல்வித் தகுதிகள்:(1)பீங்கான் அல்லது சிலிகேட் தொழில் நுட்பக் கலையில் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட யாதேனும் ஒரு பல்கலைக் கழகத்தின் அல்லது இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது கழகத்தின் பட்டம் அல்லது டிப்ளமா அல்லது விருத்தாச்சலத்தில் உள்ள பீங்கான் தொழில் பயிற்சிப் பள்ளியினால் வழங்கப்பட்ட பீங்கான் தொழில் நற்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அத்துடன்

(2) பீங்கான் தொழிற்சாலை அல்லது சிலிகேட் தொழில் நுட்பக் கலை அல்லது சால்ட் கிளேஸ்டு குழாய் தொழிற்சாலை அல்லது ஆய்வுக்கூடம் அல்லது பரிசோதனை அல்லது ஆராய்ச்சி நிலையம் அல்லது நிறுவனம் அல்லது பீங்கான் தொழில் ஆய்வியலில் பட்டதாரிகள் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும் டிப்ளமா பெற்றவர்கள் 5 ஆண்டுகளுக்குக் குறையாமலும் செய்முறை அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

வயது: 1—7—1971-ல் 40 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

குறைந்தபட்சப் பொதுக் கல்வித் தகுதியிலும் மேம்பட்ட பொதுக் கல்வித் தகுதி பெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைசாதி வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு வயது வரம்பு இல்லை. இதர தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைசாதி வகுப்பினர், ஆகியோருக்கு உச்ச வயது 5 ஆண்டுகள் வரை தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் அவர்களுடைய புதல்வர்கள், அவர்களுடைய திருமணமாகாத புதல்விகள், மற்றும் தேசிய மாணவர் படையில் 1—1—1963-ல் அல்லது அதற்கு பின்னர் முழு நேர அடிப்படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்டரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜராக அமர்த்தப்பட்டிருந்த முன்னாள் தேசிய மாணவர் படையினர் ஆகியோருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு. ராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றிலிருந்து படை கலைக்கப்பட்டதால் திரும்பியவர்கள் 1—7—1971-ல் 40 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பார்களேயானால் கல்வித் தகுதிகள் தளர்த்தப்படும். கிழக்குபாகிஸ்தானிலிருந்து 1—1—1964-ல் அல்லது அதற்குப் பின்னர் குடிபெயர்ந்தவர்களாகஇருப்பினும்,இலங்கை,பர்மா ஆகியவற்றிலிருந்து வந்துள்ள அகதிகளாக இருப்பினும் வயது வரம்பு உட்பட கல்வித் தகுதிகள் தளர்த்தப்படும். மனுவடிவங்களையும் இதர விவரங்களையும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வுக் கழகம் சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு கடிதம் எழுதி 23 சென்டி மீட்டர் நீளமுள்ள, சுய விலாசமிட்ட, 35 காசு அஞ்சல் தலை ஒட்டிய ''நூல் அஞ்சல்'' என்று குறிக்கப்பட்ட உறையை உடன் வைத்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(த-46)

## ஒப்பந்தப் புள்ளி

### சங்கரன்கோவில் நகராட்சி

அடியிற்கண்ட தண்ணீர்க் குழாய்களுக்கான நல்லிகள் சப்ளை செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சங்கரன் கோவில் நகராட்சி ஆணையர் அவர்களால் 21—10—1971-ஆம் தேதி வியாழக் கிழமை மாலை 4-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்பட்டு, 4-30 மணிக்குத் திறக்கப்படும். நகராட்சியில் ரூ.1 செலுத்தி குறிப்பிட்ட நமூனாவில் ஒப்பந்தப்புள்ளி அனுப்புவதுடன் ரூ. 50 வைப்புத் தொகையும் அனுப்பப்படவேண்டும். மற்ற விவரங்கள் அலுவலகம் நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

| | | உத்தேச தேவையான எண்ணங்கள். |
|---|---|---|
| 1. | அரை அங்குல தெருக்குழாய்களுக்கான வீல் டைப் நல்லிகள். முக்கால் அங்குலம் ஷை | 80 |
| 2. | அரை அங்குல தெருக்குழாய்களுக்கான புஸ் பட்டன் டைப் நல்லிகள். முக்கால் அங்குலம் ஷை | 60 |

வி. ஞானகிராமன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
சங்கரன்கோவில்,
தேதி: 1—10—1971.
(த.77)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாகவும் அதன் பொருட்டும், உரிய வடிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுத் துறை, 17, சர்பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 அவர்களால் 3-11-1971 புதன் கிழமை மாலை 3 மணி வரையிலும் பொதுப்பணித் துறையில் உரிய பிரிவில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் மாலை 3-30 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில்திறக்கப்படும்.

வேலையின் பெயர்: சிவகங்கை குடிநீர் வழங்கு மேம்பாடுத் திட்டம்—II-ம் நிலை—விநியோக முறை சி-1 & எ.சி.குழாய்களும் ஸ்பெஷல்களும் அமைத்தலும் இணைத்தலும்.

ஒப்பந்த வடிவம் : கே. 2.
கட்டுத் தொகை : ரூ. 1,550 (ஓராயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்.)

இத் தொகை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துடன் தேசிய உடமையாக்கப்பட்ட பாங்குகளின் டிமாண்ட் டிராப்ட் மூலமோ அல்லது கருவூலங்களின் சலான் மூலமோ நிருவாகப் பொறியாளர், மக்கள்நல்வாழ்வுப் பொறியியல் பணிவட்டம், காலேஜ் ரோடு, காரைக்குடி என்ற கணக்கில் கட்ட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திர விலை : ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை நிர்வாகப் பொறியாளர், மக்கள்நல்வாழ்வுப் பொறியியல் பணி வட்டம், 48, காலேஜு ரோடு, காரைக்குடி என்ற விலாசத்தில் 30-10-1971 சனிக்கிழமை மாலை 5 மணி வரையிலும் பெறலாம்.

**ஆர். கோவிந்த மேனன்,**
மேற்பார்வைப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் பணி வட்டம், மதுரை-2.

தேதி : 27-9-1971.
(த.66)

## ஒப்பந்தப் புள்ளி

### வீட்டுவசதி வாரியம், சென்னை கிழக்குக் கோட்டம்

எண்: எம். இ. 4/674/71, நாள் 5-10-1971.

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரையும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரையும் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 28-10-1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-05-மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்: வியாசர்பாடியில் கிரயத்துக்கு வாங்கும் திட்டத்தில் குறைந்த வருமானப் பிரிவினருக்கான வீடுகள் 10 கட்டுதல்.

வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 1,40,000.
கட்டுத் தொகை: ரூ. 2,100.
ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை: ரூ. 10.00 விற்பனைவரி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் முதலியவைகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிழகுக் கோட்ட நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தில் 20-10-1971 விருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11-00 முதல் மாலை 3-00 வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**டி. ஜெகதீசன்,**
நிர்வாகப் பொறியாளர், கிழக்கு

(த. 70)

## ஒப்பந்தப் புள்ளி

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சென்னை கிழக்குக் கோட்டம்.

எண் : எம். இ. 4/466/71 நாள் : 5—10—1971.

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரையும் ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயரையும் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 28—10—1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் மாலை 3-05-க்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : வட சென்னை புறநகர்த் திட்டத்துக்கு நீர் வழங்குமுறை—பகுதி 1-க்கு பைப் லைன்கள் அமைத்தல்.
வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 99,500.
கட்டுத் தொகை : ரூ. 1,500.
ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை : ரூ. 10.00 + விற்பனைவரி.

ஒப்பந்தப்புள்ளிப்பத்திரங்கள் முதலியவைகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிழக்கு டிவிஷன் நிர்வாகம் பொறியாளர் அலுவலகத்தில் 20—10—1971-லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11-00 முதல் மாலை 3-00 மணி வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**டி. ஜகதீசன்,**
நிர்வாகப் பொறியாளர், கிழக்கு.

(த–65)

## வேலை வாய்ப்பு

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்.

தமிழ்நாடு பணியாளர் கீழ்நிலைத் தொகுதியில் கல்வி சென்னை திரைப்பட தொழில் நுட்பக் கலை நிறுவனத்திற்கு கீழ்க்கண்ட பதவிகள் ஒவ்வொன்றிலும் ஒருவரை நியமனம் செய்வதற்காக 16-11-1971 அன்று மாலை 5-00 மணி வரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

(1) ஆராய்ச்சி உதவியாளர்:

சம்பளம்: ரூபாய் 450—25—750.

கல்வித் தகுதி: (அ) (1) பல்கலைக் கழக மானியக் குழுவினால், மானியம் கொடுக்கும் காரணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட யாதேனும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தின் கலையியல் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(2) இந்திய வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றில் அறிவுபெற்றிருக்க வேண்டும்.

(3) பிரெஞ்சு மொழியறிவு பெற்றிருக்க வேண்டும்; அத்துடன்

(4) இலக்கியப் பணியில், வெளியிடப்பட்ட எழுத்தோவியங்களுடன் கூடிய மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) திரைப்படக் கதை எழுதுதல், இயக்குதல் ஆகியவற்றில் இந்திய திரைப்பட நிறுவனம், பூனா அளித்துள்ள டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

(2) பராமரிப்புப் பொறியாளர்:

சம்பளம் :ரூபாய் 400—15—475—20—575—25—650

கல்வித் தகுதி : (அ) (1) சென்னையிலுள்ள மாநில தொழில் நுட்பக் கல்விப் பயிற்சிக் கழகம் அளித்துள்ள மின்சார இயல் அல்லது ஒலி பொறியியல் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். மற்றும்

(2) திரைப்படமெடுக்கும் நிறுவனம் ஒன்றின் ஸ்டுடியோ கருவிகளைப் பராமரிப்பதில் 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) (1) ஆங்கிலம் படிக்கவும், எழுதவும் திறமை உடையவராக இருக்க வேண்டும்; மற்றும்

(2) திரைப்படமெடுக்கும் நிறுவனம் ஒன்றின் ஸ்டுடியோ கருவிகளைப் பராமரிப்பதில் 7 ஆண்டுகளுக்குக் குறையாத செயல்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(3) தயாரிப்பு மேலாளர்:

சம்பளம்: ரூபாய் 400—15—475—20—575—25—650.

கல்வித் தகுதி: (அ) இயக்குதல் அல்லது உற்பத்தித் தொழில் நுட்பக் கலையில் பூனா நகரில் உள்ள இந்திய திரைப்பட நிறுவனம் அளித்துள்ள டிப்ளமா பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) (1) பல்கலைக் கழக மானியக் குழுவினால், மானியம் கொடுக்கும் காரணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தின் கலை அல்லது விஞ்ஞான பட்டம் பெற்றிருக்க வேண்டும்; மற்றும்,

(2) திரைப்பட மெடுக்கும் நிறுவனம் ஒன்றின் உற்பத்தி நிர்வாகத்தில் 2 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(4) திரையிடுதல் பற்றிய விரிவுரையாளர்

சம்பளம்: ரூபாய் 475—25—650—30—800:

கல்வித் தகுதி: (அ) எலக்ட்ரானிக்ஸ் மற்றும் செய்தி பரப்புப் பொறியியல் பட்டம் அல்லது பௌதிகத்தை முக்கிய பாடமாகக் கொண்ட பட்டம் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது

(ஆ) (1) இந்திய அரசு அல்லது ஏதேனும் மாநில அரசு அங்கீகரித்துள்ள நிறுவனம் அல்லது கழகம் வழங்கியுள்ள சினிமாடோகிராபி மற்றும் ஒலி பொறியியல் அல்லது ஒலி பொறியியலில் மட்டும் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். மற்றும்

(2) ஒலிப் பதிவு செய்வதிலும், மறு உற்பத்தி செய்வதிலும் தனித்து நின்று பதிவு செய்பவராக 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் செய்முறை அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது: எல்லாப் பதவிகளுக்கும் 1-7-1971-ல் 40 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(த.53)

---

## ஒப்பந்த ஒத்திவைப்பு அறிவிப்பு.

எண்: டி-3/20280/71-7, நாள் 27-9-1971.

வேலையின் பெயர் : தாம்பரம் காச நோய் சானடோரியத்தில் 40 நர்சுகளுக்கும் 5 ஸ்டாப் நர்சுகளுக்கும், சமையலறை, உணவுக்கூடம் ஆகியவைகளுடன் குடியிருப்புகள்.

பார்வை : இந்த அலுவலகத்தில் எண். டி. 3/20280/71-1, நாள் 7-8-1971.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறக் கடைசித் தேதி 27-9-1971 லிருந்து 25-10-1971 மாலை 3-00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் 19-10-1971லிருந்து 23-10-1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாறுதல் இல்லை.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சென்னை, செங்கல்பட்டு வட்டம்.

(த.69)

## அரசாங்கத் தொழில் நுட்ப (டெக்னிகல்) தேர்வுகள், அக்டோபர் 1971

*[அக்கவுண்ட்டன்சி, சுருக்கெழுத்து (ஆங்கிலம், தமிழ்), தட்டச்சு (ஆங்கிலம், தமிழ்).]*

அக்கவுண்ட்டன்சி, சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகியவைகளில், லோயர், ஹையர் கிரேடுகளுக்கு அரசாங்கத் தொழில் நுட்பத் தேர்வுகள் சம்பந்தமாக எழுதத் தேர்வுகள், கீழே தரப்பட்டுள்ள கால அட்டவணையின்படி நடத்தப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. தட்டச்சில் வாய்மொழி, செயல் முறைத் தேர்வு, இத்தேதிக்குப் பின்னர், காலக் கிரமத்தில் தமிழ்நாடு அரசு, அரசிதழில் பாகம் 2, பிரிவு 3-ல் அறிவிக்கப்படுகிறபடி நடத்தப்படும்.

குறிப்பு.—*(1) தட்டச்சில் வாய்மொழி:* செயல்முறை தேர்வுகளில் ஏமாற்றம் நேராமல் காத்துக்கொள்வதற்காகத் தமிழ்நாடு அரசினர் அரசிதழ், பாகம் 2, பிரிவு 3-ஐ அவ்வப்போது பார்த்துக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளலாகிறது. தனித்தனியாகத் தகவல் ஏதும் தரப்படமாட்டாது.

2. ஏற்கெனவே ஆங்கிலம் தட்டச்சில் ஹையர் கிரேடு தேறியவர்கள், தமிழ்த் தட்டச்சில் ஹையர் கிரேடு தேர்வுக்குச் செல்லும்போது செயல்முறைத் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டு, சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளார்கள். இதேபோல ஆங்கிலத் தட்டச்சு ஹையர் கிரேடு அல்லது லோயர் கிரேடில் தேறியவர்கள், தமிழ்த் தட்டச்சு லோயர் கிரேடுக்குச் செல்லும்போது செயல்முறைத் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டு, ஏற்ப சான்றிதழ் வழங்கப் பெறுவார்கள். தமிழ்த் தட்டச்சு லோயர் அல்லது ஹையர் தேர்வு பெற்றவர்கள், ஆங்கிலத் தட்டச்சு லோயர் அல்லது ஹையர் செல்லும்போது செயல் முறைத் தேர்விலிருந்து விலக்களிக்கப்பட்டு, ஏற்ப சான்றிதழ் வழங்கப் பெறுவார்கள்.

### 2. எழுத்துத் தேர்வு நடத்தப்படுகின்ற, நாள், நேரம், பாடம் ஆகியவை பற்றிய ஆணையைக் காட்டும் அட்டவணை

குறிப்பு.—*(1)* இந்தக் கால அட்டவணை வெளியிடப்பட்ட பின்பு, தேர்வு நடைபெறுகின்ற நாட்களில் ஏதாவது ஒருநாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டாலும், இந்தக்கால அட்டவணை, உள்ளபடி கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படும். இந்த அலுவலகத்தின் எழுத்து மூலமான ஆணைப்படி அல்லது, எக்காரணம் முன்னிட்டும், தேர்வு நிறுத்தப்படாது.

*(2)* ஒருவர் ஒரே பாடத்தில் ஒரு கிரேடுக்கு மேல் தேர்வுக்கு வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். தட்டச்சில் *(ஆங்கிலம்)* லோயர், ஹையர் ஆகியவைகளுக்கு ஒரு தேர்வுத் தொடரில், ஒரு தொகுதிக்கு மேல் வர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### கால அட்டவணை

| நாளும் தேதியும். | தேர்வு நேரம். | தேர்வுப் பாடம். | கிரேடு. | எந்தப் பிரிவு என்னும் விவரம். |
|---|---|---|---|---|
| 1971 அக்டோபர் 29 வெள்ளிக்கிழமை. | காலை 10-00 முதல் பிற்பகல் 1-00வரை. | அக்கவுண்ட்டன்சி | லோயர் | முதல் தாள். |
| | | அக்கவுண்ட்டன்சி | ஹையர் | முதல் தாள். |
| | பிற்பகல் 2-00 முதல் மாலை 5-00 வரை. | அக்கவுண்ட்டன்சி | லோயர் | இரண்டாவது தாள். |
| | | அக்கவுண்ட்டன்சி | ஹையர் | இரண்டாவது தாள். |
| அக்டோபர் 30 சனிக்கிழமை. | காலை 11-00 முதல் 11-10 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்) | லோயர் | முதல் தாள் டிக்டேஷன். |
| | 11-15 முதல் 12-45 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்) | லோயர் | மேற்சொன்ன தன் டிரான்ஸ்கிருப்ஷன். |
| | பிற்பகல் 2-00 முதல் மாலை 4-30 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்) | லோயர் | இரண்டாவது தாள் பிரின்சிபில் முதலியன குறித்து. |
| | பிற்பகல் 2-15 முதல் 2-25 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்) | ஹையர் | முதல் தாள் டிக்டேஷன். |
| | பிற்பகல் 2-30 முதல் மாலை 4-30 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்) | ஹையர் | முதல் தாள் டிரான்ஸ்கிருப்ஷன். |

| | | | | |
|---|---|---|---|---|
| நவம்பர் 1 திங்கட் கிழமை. | காலை 11-00 முதல் 11-05 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்). | ஹையர் | இரண்டாவது தாள் டிக்டேஷன். |
| | காலை 11-15 முதல் பிற்பகல் 1-15 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்). | ஹையர் | இரண்டாவது தாள் குறிப்பினை விளக்கி வரைதல். |
| | பிற்பகல் 2-15 முதல் 2-25 வரை. | சுருக்கெழுத்து (ஆங்கிலம்). | ஷை | மூன்றும் தாள் பிரிவு 1 டிக்டேஷன். |
| | பிற்பகல் 2-30 முதல் மாலை 5-30 வரை. | ஷை | ஷை | மூன்றும் தாள் மேற் சொன்னதைச்சுருக்கி எழுதுதல், பிரிவு 2, டிரான்ஸ் கிருப்ஷன் பிரின்சிபில்ஸ் முதலியன பற்றிய தாள் |
| நவம்பர் 2. செவ்வாய்க்கிழமை. | காலை 10-00 முதல் 10-10 வரை. | சுருக்கெழுத்து (தமிழ்). | ஷை | முதல் தாள் டிக்டேஷன். |
| | 10-15 முதல் 12-15 வரை. | ஷை | ஷை | முதல் தாள் டிரான்ஸ் கிருப்ஷன். |
| | 11-00 முதல் 11-10 வரை. | ஷை | லோயர். | முதல் தாள் டிக்டேஷன். |
| | 11-15 முதல் 12-45 வரை. | ஷை | ஷை | முதல் தாள் டிரான்ஸ் கிருப்ஷன். |
| | பிற்பகல் 12-50 முதல் 1-50 வரை. | | ஷை | இரண்டாவது தாள் பிரின்சிபில்ஸ். |
| | பிற்பகல் 1-00 முதல் 3-00 வரை. | ஷை | ஹையர். | இரண்டாவது தாள் டிக்டேஷன் குறிப்புகளை விளக்கி வரைதல். |
| | பிற்பகல் 3-30 முதல் மாலை 5-00 வரை. | ஷை | ஷை | மூன்றும் தாள் பிரின்சிபில்ஸ் முதலியன. |
| நவம்பர் 3, புதன் கிழமை. | பிற்பகல் 1-00 (எ) | தட்டெழுத்து (ஆங்கிலம்). | லோயர். | முதல் இரண்டாவது தாள். |
| நவம்பர் 4, வியாழக் கிழமை. | 12-35 பிற்பகல் (எ) | ஷை | ஹையர். | முதல் & இரண்டாவது தாள். |
| நவம்பர் 5, வெள்ளிக்கிழமை. | பிற்பகல் 1-00 (எ) | தட்டெழுத்து (தமிழ்). | லோயர். | முதல் & இரண்டாவது தாள். |
| நவம்பர் 6 சனிக் கிழமை. | பிற்பகல் 12-35 (எ) | ஷை | ஹையர். | முதல் & இரண்டாவது தாள். |

லோ : லோயர் கிரேடு. ஹை : ஹையர் கிரேடு.

* வினுத்தாளில் குறிப்பிடப்பட்ட நேர அளவு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(அ) தேர்வு எழுத வருவோர் தொகுதி தொகுதியாகத் தேர்வுக்கு வர நேருமானல் தட்டச்சில் தேர்வுகள் (ஆங்கிலம் அல்லது தமிழ்) கீழே குறிப்பிட்டபடி நடைபெறும்.

லோயர் கிரேடு

| | | முதல் தாள். | இரண்டாவது தாள். |
|---|---|---|---|
| முதல் தொகுதி | ... | காலை 8-30 முதல் 8-45 வரை. | 8-55 முதல் 10-25 வரை. |
| இரண்டாம் தொகுதி | | காலை 10-45 முதல் 11-00 வரை. | காலை 11-10 முதல் பிற்பகல் 12-40 வரை. |
| மூன்ருவது தொகுதி | ... | பிற்பகல் 1-00 முதல் 1-15 வரை. | பிற்பகல் 1-25 முதல் 2-55 வரை. |
| நான்காவது தொகுதி | .. | பிற்பகல் 3-15 முதல் 3-30 வரை. | பிற்பகல் 3-40 முதல் மாலை 5-10 வரை. |

ஹையர் கிரேடு

| | | முதல் தாள். | இர்ண்டாவது தாள். |
|---|---|---|---|
| முதல் தொகுதி | ... | காலை 7-15 முதல் 7-30 வரை. | காலை 7-40 முதல் 9-40 வரை. |
| இரண்டாவது தொகுதி | | காலை 9-55 முதல் 10-10 வரை. | காலை 10-20 முதல் பிற்பகல் 12-20 வரை. |
| மூன்ருவது தொகுதி | .. | பிற்பகல் 12-35 முதல் 12-50 வரை. | பிற்பகல் 1-00 முதல் 3-00 வரை. |
| நான்காவது தொகுதி | ... | பிற்பகல் 3-15 முதல் 3-30 வரை. | பிற்பகல் 3-40 முதல் மாலை 5-40 வரை. |

குறிப்பு.—(1) தட்டச்சு (ஆங்கிலம்)—தட்டச்சு (ஆங்கிலம்) லோயர் அல்லது ஹையர் கிரேடு ...தேர்வுக்கு வருவோர், ஒவ்வொரு தொகுதிக்கும், தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பு தேர்வு மண்டபத்துக்கு வந்துவிட வேண்டும். பாரா 10 (ஆ)-வில் உள்ள குறிப்புகளையும் கவனிக்க; தட்டச்சு ஆங்கிலத் தேர்வுக்கு வரும் யாரும், முதல் தாளுக்கும், இரண்டாவது தாளுக்கும் இடையே இடைவெளி நேரத்தில் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(2) தமிழ்த் தட்டச்சு—தமிழ்த் தட்டச்சு லோயர் அல்லது ஹையர் வருவோர் முறையே 12-40-க்குப் பின்பும் 12-20-க்கு முன்பும் வருவார்களேயானல், தேர்வு மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேர்வு முறையே 20 நிமிடங்களுக்கும் 15 நிமிடங்களுக்கும் அப்புறம் நடப்பதானுலும் இது கடைப்பிடிக்கப் படும். முதல் தாளுக்கும் இரண்டாவது தாளுக்கும் இடையே இடைவெளி நேரத்தில் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள். (தமிழ்த் தட்டச்சு)லோயர் அல்லது ஹையருக்கு முதலாவது இரண்டாவது தொகுதிகளில் தேர்வுக்கு வருபவர்கள், மூன்ருவது, நான்காவது தொகுதிகளைச் சேர்ந்தவர்கள் (லோயர் அல்லது ஹையர்) தேர்வு மண்டபத்திற்கு வந்த பின்னர் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

(3) சுருக்கெழுத்துத் தேர்வுக்கு வருபவர்கள் டிக்டேஷனுக்கும், தொடர்பான டிரான்ஸ்கிருப்ஷன் அல்லது விளக்கி எழுதுதல் அல்லது சுருக்கி எழுதல் ஆகியவைகளுக்கும் இடைப்பட்ட இடைவேளைக் காலத்தில் தேர்வு மண்டபத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள். முதலாவது, இரண்டாவது, மூன்ருவது தாள்களுக்கிடையே அனுமதிக்கப்பட்டுள்ள இடைவேளையைப் பயன்படுத்திக்கொள்வதை இவ் விதி தடை செய்யாது.

## தேர்வு நடைபெறும் ஊர்கள், இடங்கள், விவரம்

மூக்கியக் குறிப்பு.—1971 அக்டோபர் தேர்வுக்கு வருவோர், தேர்வு எழுத எந்த இடத்திற்கு வர வேண்டும், பாடம், அனுமதிக்கப்பட்ட கிரேடு முதலிய விவரங்கள், ஹால் டிக்கட்டிலேயே பதிவு எண்ணுடன் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

எழுத்து மூலமான தேர்வு நடத்தப்படும் ஊர்கள் (சென்டர்கள்) பின் வருமாறு :

தேர்வுகள் குறித்து மேற்கொண்டு தகவல்கள் வேண்டுமானல், எழுத்து மூலமான தேர்வு சென்டர்களின் தலைமைக் கண்காணிப்பாளருக்கு எழுத வேண்டும். பல்வேறு ஊர்களிலும் உள்ள தலைமைக் கண்காணிப்பாளர் முகவரி பின்வருமாறு

| | |
|---|---|
| ராணிப்பேட்டை ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஆர்க்காடு (பேசிக்) ரேஞ்சு ஆர்க்காடு அரசினர் உயர்நிலைப் பள்ளி (சிறுவர்), ராணிப் பேட்டை. |
| ஆரணி ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஆரணி ரேஞ்சு, ஆரணி அரசினர் (கழக) ஆண்கள் உயர்நிலைப் பள்ளி. |
| திருவண்ணமலை ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருவண்ணமலை ; டேனிஷ் மிஷன் உயர்நிலைப் பள்ளி, திருவண்ணமலை. |
| செங்கற்பட்டு ... ... | தலைமை ஆசிரியர், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, செங்கற் பட்டு. |
| காஞ்சிபுரம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம். |
| தாம்பரம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், சைதாப்பேட்டை ரேஞ்சு, பரங்கிமலை, சென்னை-16. சென்னை சேவாசதன் உயர்நிலைப் பள்ளி, தாம்பரம், சென்னை-45. |
| கடலூர் ... ... | மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், கடலூர்-1; நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கடலூர்-1. |
| சிதம்பரம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கீழமூங்கிலடி, ஆதார ரேஞ்சு, சிதம்பரம் ஆர்.சி.டி. உயர்நிலைப் பள்ளி, சிதம்பரம். |
| விழுப்புரம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், விழுப்புரம் ; நவாப் தோப் நகராட்சி உயர்நிலைப் பள்ளி, விழுப்புரம். |
| திண்டிவனம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திண்டிவனம் ; செயின்ட் வால்டர் ஸ்கடர் உயர்நிலைப் பள்ளி, திண்டிவனம். |
| நாகப்பட்டினம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், நாகப்பட்டினம் ; தேசீய உயர்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம். |
| மன்னார்குடி ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மன்னார்குடி ரேஞ்சு ; மன்னார்குடி தேசீய உயர்நிலைப் பள்ளி, மன்னார்குடி. |
| மாயூரம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மாயூரம் ; நகராட்சி உயர் நிலைப் பள்ளி, மாயூரம். |
| திருவாரூர் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருவாரூர்; வி.எஸ். ஆண் கள் உயர்நிலைப் பள்ளி, திருவாரூர். |
| சீர்காழி ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், சீர்காழி ; எஸ். எம் இந்து உயர்நிலைப் பள்ளி, சிர்காழி. |
| கும்பகோணம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கும்பகோணம்; நேடிவ் உயர்நிலைப் பள்ளி, கும்பகோணம். |
| தஞ்சாவூர் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர் தஞ்சாவூர்; அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி (ஆண்கள்), தஞ்சாவூர்-1. |
| திருச்சிராப்பள்ளி .. .. | தலைமை ஆசிரியர், அரசினர் பயிற்சிப் பள்ளி, திருச்சிராப்பள்ளி-2. |
| திருச்சிராப்பள்ளி .. .. | மேல் நிலை உதவியாளர், அரசினர் பயிற்சிப் பள்ளி, திருச்சிராப் பள்ளி, அரசினர் சையத் முர்த்துஸா உயர்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி-8. |
| புதுக்கோட்டை ... | தலைமை ஆசிரியர், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, புதுக் கோட்டை, |
| கரூர் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கரூர் ரேஞ்சு, கரூர்; நக ராட்சி உயர்நிலைப் பள்ளி, கரூர். |
| மதுரை ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருப்பரங்குன்றம் ரேஞ்சு, திருநகர், மதுரை-6 ; எம்.ஸி. உயர்நிலைப் பள்ளி, மதுரை-1. |
| மதுரை ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மதுரை தெற்கு ரேஞ்சு, மதுரை-1; சேதுபதி உயர்நிலைப் பள்ளி, மதுரை-1. |
| பெரியகுளம் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், பெரியகுளம் ; வி.எம். அரசினர் உயர்நிலைப் பள்ளி, பெரியகுளம். |
| திண்டுக்கல் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திண்டுக்கல் பிளாக் ரேஞ்சு, திண்டுக்கல் ; டட்லி உயர்நிலைப் பள்ளி, திண்டுக்கல். |
| காரைக்குடி ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், காரைக்குடி, எஸ்.எம்.எஸ். வித்தியாசாலா உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி-1. |
| இராமநாதபுரம் ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், இராமநாதபுரம் ; ஸ்வராஜ் உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம். |
| விருதுநகர் ... ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், விருதுநகர் ரேஞ்சு, விருது நகர் ; கே. வி. உயர்நிலைப் பள்ளி, விருதுநகர். |
| ஸ்ரீவில்லிபுத்தூர் ... | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஸ்ரீவில்லிப்புத்தூர், ரேஞ்சு ஸ்ரீவில்லிபுத்தூர்; சி.எம்.எஸ். உயர்நிலைப் பள்ளி, ஸ்ரீவில்லி புத்தூர். |

| | |
|---|---|
| சிவகங்கை | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், சிவகங்கை ; இராஜா உயர் நிலைப்பள்ளி, சிவகங்கை. |
| திருநெல்வேலி | திரு எஸ். வெங்கடாசலம் பிள்ளை, பள்ளி உதவியாளர், அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி, திருநெல்வேலி. |
| தென்காசி | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தென்காசி, மேற்கு ரேஞ்சு, தென்காசி ; அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளி, தென்காசி. |
| தூத்துக்குடி | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தூத்துக்குடி ரேஞ்சு, தூத்துக்குடி-1; எஸ். ஏ. வி. உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி-2. |
| சேலம் | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், வலப்பாடி (அஞ்சல்), சேலம், நகராட்சி உயர்நிலைப்பள்ளி, சேலம்-1. |
| நாமக்கல் | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், நாமக்கல் பிளாக் ரேஞ்சு, நாமக்கல் ; அரசினர் உயர்நிலைப்பள்ளி, நாமக்கல் தெற்கு, நாமக்கல். |
| தர்மபுரி | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தர்மபுரி பிளாக் ரேஞ்சு, தர்மபுரி-3, அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, தர்மபுரி-2. |
| கிருஷ்ணகிரி | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கிருஷ்ணகிரி பிளாக் ரேஞ்சு, கிருஷ்ணகிரி; அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, கிருஷ்ணகிரி. |
| கோயம்புத்தூர் | பள்ளிகளின் இன்ஸ்பெக்டர், கிழக்கு ரேஞ்சு, ராஜ வீதி, கோயம் புத்தூர்-1; செயின்ட் மைக்கேல் உயர்நிலைப்பள்ளி, பெரிய கடை வீதி, கோயம்புத்தூர்-1. |
| கோயம்புத்தூர் | பள்ளிகளின் இன்ஸ்பெக்டர், கிழக்கு ரேஞ்சு, ராஜ வீதி, கோயம் புத்தூர்-1; யூனியன் உயர்நிலைப்பள்ளி, கோயம்புத்தூர். |
| பொள்ளாச்சி | பள்ளிகளின், டெபுடி இன்ஸ்பெக்டர், பொள்ளாச்சி புது ரேஞ்சு, பொள்ளாச்சி ; நகராட்சி ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, பாலக்காடு சாலை, பொள்ளாச்சி. |
| ஈரோடு | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஈரோடு, செங்குந்தர் உயர் நிலைப்பள்ளி, ஈரோடு-1. |
| உதகமண்டலம் | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், உதகமண்டலம்; நகராட்சி உயர்நிலைப்பள்ளி, உதகமண்டலம். |
| நாகர்கோயில் | தலைமை ஆசிரியர், அரசினர் எஸ்.எல்.பி. உயர்நிலைப்பள்ளி, நாகர்கோயில். |
| தக்கலை | தலைமை ஆசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, தக்கலை. |
| மார்த்தாண்டம் | தலைமை ஆசிரியர், அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, மார்த் தாண்டம். |
| புதுச்சேரி | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், பிராந்தியம்-1, நூறு நடராஜ அய்யர் தெரு, புதுச்சேரி ; அரசினர் சிறுவர் ஆரம்பப்பள்ளி, வைசியாள் தெரு, புதுச்சேரி. |
| அம்பாசமுத்திரம் | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், அம்பாசமுத்திரம்; திருத்த பதி உயர்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம். |
| கோபிசெட்டிபாளையம் | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், கோபிசெட்டிபாளையம்; வைரவிழா உயர்நிலைப்பள்ளி, கோபிசெட்டிபாளையம். |
| குன்னூர் | பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், அறிஞர் அண்ணா நகராட்சி உயர்நிலைப்பள்ளி, குன்னூர். |

## சென்னை நகரில் தேர்வு எழுதுவோருக்கு

5. சென்னையில் தேர்வு எழுதுவதற்கு மனுச் செய்து கொண்டு இருப்பவர்கள் கீழே குறிப் பிடப்பட்டுள்ள இடங்களில் எழுதவேண்டும்.

| | தேர்வு நடைபெறும் இடம். | தலைமைக் கண்காணிப்பாளர். |
|---|---|---|
| (1) சென்னை | முத்தியால்பேட்டை உயர்நிலைப் பள்ளி, 258, தம்பு செட்டி தெரு, சென்னை-1. | திரு ஜி. பெருமாள், பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், ராய புரம் ரேஞ்சு; 5, டேவிட்சன் தெரு, சென்னை-1. |
| (2) சென்னை | டாக்டர் குருசாமி முதலியார், டி.டி.வி. உயர்நிலைப்பள்ளி, 98, அம்மன் கோயில் தெரு, சென்னை-1. | திருமதி மீனாட்சி நடராஜன், பள்ளி களின் டெபுடி இன்ஸ்பெக்டர், ஜார்ஜ்டவுன் ரேஞ்சு; 5, டேவிட் சன் தெரு, சென்னை-1. |
| (3) சென்னை | சர். எம். சி. டி. முத்தையா செட்டி யார் உயர்நிலைப்பள்ளி, புரசை வாக்கம், சென்னை-7. | திருமதி ருக்மணிகாதர், பள்ளி களின் டெபுடி இன்ஸ்பெக்டர், புரசைவாக்கம் ரேஞ்சு; 18, ஜெர்மையா சாலை, வேப்பேரி, சென்னை-7. |

| | | |
|---|---|---|
| (4) சென்னை ... | தர்மமூர்த்தி, ஆர். பி. சி. சி. சி. உயர்நிலைப்பள்ளி, பெரம்பூர், சென்னை-11. | திரு எம். எஸ். சம்சுதீன், பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், பெரம்பூர்ரேஞ்சு; 18, ஜெர்மையா சாலை, சென்னை-7. |
| (5) சென்னை ... | சிந்தாதிரிப்பேட்டை ஆண்கள் உயர் நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. | திருமதி அலைஸ் சுந்தரேசன், பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், எழும்பூர், சென்னை-8. |
| (6) சென்னை ... | முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி, சென்னை-5. | திரு எஸ். எம். பார்த்தசாரதி, பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், திருவல்லிக்கேணி ரேஞ்சு; டேவிட்சன் தெரு, சென்னை-5. |
| (7) சென்னை ... | அரசினர் உயர்நிலைப்பள்ளி, கோடம் பாக்கம், சென்னை-24. | திரு என். கிருஷ்ணவேணு, பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், மயிலாப்பூர் ரேஞ்சு; சென்னை-6. |
| (8) சென்னை ... | ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, (மெயின்) தியாகராயநகர், சென்னை-17. | திருமதி ஏ. டி. புஷ்பவல்லி, பள்ளிகளின் டெபுடி இன்ஸ்பெக்டர், தியாகராயநகர் ரேன்சு; சென்னை-6 |
| (9) சென்னை ... | அரசினர் மதரஸா-இ-ஆஸாம், அண்ணா சாலை, சென்னை-2. | திரு பத்துருவ் ஹுஸேன், பள்ளி உதவியாளர், அரசினர் மதரஸா-இ-ஆஸம், சென்னை-2. |

தேர்வுகள் சம்பந்தமாக ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய முறை விவரங்கள் ஹால் டிக்கட்டுடன் அனுப்பிவைக்கப்படும்.

(த.67.)

**தலைவர்,**
தேர்வுகள் வாரியம்.

---

## ஒப்பந்தப் புள்ளி

சென்னையில் சுகாதாரப் பார்வையாளர் அரசினர் பயிற்சிப் பள்ளியோடு இணைக்கப்பட்டுள்ள விடுதியில் குறைந்தது 150 பெண்களுக்கு, சைவ, அசைவ உணவு வழங்கற்குரிய உணவகம் நடத்துவதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் இணை இயக்குநர் சுகாதாரப் பணி, குடும்ப நலத்திட்டம் சென்னை, அவர்களால் 20—10—1971 பிற்பகல் 2 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்த நிபந்தனைகள் வடிவம் ஆகியவை இயக்குநர், சுகாதாரப்பணி, குடும்ப நலத்திட்டம் (பொதுச் சுகாதாரப் பகுதி) அவர்கள் அலுவலகத்திலிருந்து அலுவலக நேரத்தில் அதற்குரிய தொகை ரூ. 5-ஐ இந்திய ரிசர்வ் வங்கியில் ''பப்ளிக் ஹெல்த் மிஸலேனிஸ்'' என்ற கணக்கிலும் அதன் விற்பனைவரிக்கு 0·10 காசு ''ஓ.டி. அண்டு டியூட்டீஸ், எக்ஸ்ட்ரா, எம்.ஜி.எஸ்.டி.'' என்ற கணக்கிலும் கட்டி சலானைக் காண்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆர். நாராயணன்,**
இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள்,
குடும்ப நலத்திட்டம்.
சென்னை-6.

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்

(தமிழ்நாடு தொழில் வளர்ச்சி வணிகத் துறையைச் சார்ந்தது—தமிழ்நாடு அரசின் பொறுப்பிலுள்ளது.)

ஒப்பந்தப்புள்ளி குறிப்பு எண்
7207/G.L. 1/71.

1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல், ஓராண்டுக் காலத்திற்கு, நாள் ஒன்றுக்குச் சுமார் 1,300 டன் அளவுள்ள சிமெண்ட் மூடைகளை லாரியில் அல்லது ரயில் வாகன்களில் ஏற்றுவதற்கும், பழைய சிமெண்ட் சாக்கு (கோணி) களில் கையினால் முத்திரைகள் இடுவதற்கும் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15—11—71 வரை வரவேற்கப்படுகின்றன.

விவரங்கள், சாற்றுக்குறிப்பு, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் ஆகியவற்றைப் பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் (அஞ்சல்), இராசபாளையம் (வழி), என்ற முகவரிக்கு ரூ. 10-30 மணியார்டர் செய்து (இந்தப் பணம் திருப்பித்தரப் படமாட்டாது) 16—10—71-லிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பொது மேலாளர்,**

# தீபாவளி வாழ்த்துக்கள்



## ஒளிமயமான வருங்காலத்திற்கு BHEL அளிக்கும் மின்சக்தி வளம்

BHEL-திருச்சி, தொழிற்சாலைகளுக்கும், மருத்துவ மனைகளுக்கும், வீடுகளுக்கும் வேண்டிய அனல் மின்சக்தியை உற்பத்தி செய்ய துரிதமாக நிறுவப்படும் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான கன ரக கொதிகலன்களைத் தயாரித்து கொடுக்கிறது. மேலும். உர, ரசாயனத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய நீராவிக்கொதிகலன்களையும் தயாரித்துக் கொடுக்கிறது.

**வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்திப்பணியில்...**

# BHEL

பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட், (இது ஒரு அரசாங்க நிறுவனம்), யூனிட்: ஹைபிரஷர் பாய்லர் பிளாண்ட், திருச்சிராப்பள்ளி-14

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் கோயம்பேடு என்னுமிடத்தில் பலஅடுக்குக் கட்டடங்கள் (தரை மட்டத்திற்குமேல்) கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 19—10—1971 அன்று பிற்பகல் 3 மணிக்கு அப்பாற்படாமல் சேரும்படியாக வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது ஒப்பந்ததாரர்களின் பெயரையும், வேலையின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. |
|---|---|---|---|---|---|
| 1 | I | 32 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் ஏ5 & ஏ5a. | 3,00,000 | 4,500 | (ரூ. 15 மற்றும் விற்பனை வரி) ஒவ்வொரு வகைக்கும். |
| 2 | III | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி8, பி9 & பி10. | 3,60,000 | 5,400 | |
| 3 | V | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி14 & பி15. | 2,40,000 | 3,600 | |
| 4 | VI | 24 குடியிருப்புகள் கொண்ட கட்டடங்கள் பி20 & பி21. | 2,40,000 | 3,600 | |

வரைபடங்களையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் கீழ்க்கண்ட அலுவலகத்திலிருந்து 11—10—1971 முதல் 18—10—1971 வரை பெறலாம். பெறப்படும் ஒப்பந்தங்கள் 19—10—1971 அன்று பிற்பகல் 3-15 மணிக்கு வந்திருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு ஒப்பந்தத்தையும் நிராகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ நிர்வாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

**நிர்வாகப் பொறியாளர்,**
கோட்டம் எண். 3.

தாண்டவராயச் சத்திரம்,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.
(த.71 )

## ஏல விற்பனை

### எழுதுபொருள் அச்சகத் துறை

இரண்டு பைண்டிங் இயந்திரங்கள், பழுதடைந்ததும் கண்டனம் செய்யப்பட்டதுமான 56 டி.சி. மோட்டார்கள், மின்சாரப் பொருட்கள், ஸ்டோர் சாமான்கள், முதலியன சென்னை1-ல் உள்ள அரசினர் அச்சகத்தில் (தங்கச்சாலைக் கட்டடம்) 27—10—1971 முதல் 29—10—1971 வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மற்றைய விவரங்களுக்கும், ஏல அறிக்கையின் பிரதிகளுக்கும், எழுதுபொருள் அச்சகத் துறை இயக்குநர், அரசினர் அச்சகம், தங்கச்சாலைக் கட்டடம், சென்னை-1, அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**இயக்குநர்,**
எழுதுபொருள் அச்சகத்துறை
அலுவலகம்.

சென்னை-1.
நாள்; 24–9–1971.
(த.88)

## ஒப்பந்தப் புள்ளி ரத்து

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை

தேசீய நெடுஞ்சாலை எண் 7-ஐ மைசூர் எல்லையிலிருந்து கிருஷ்ணகிரிப் பகுதியை மேம்பாடு செய்தல் (கி.மீ. 33.015 முதல் கி.மீ. 199.0 வரை), மற்றும் தேசீய நெடுஞ்சாலை எண் 47-ல் பவானி குமாரபாளையம் மாற்று வழிப் பாதை அமைத்தல் ஆகிய வேலைகளுக்கு 20—10—1971-ல் ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்புமாறு "தமிழரசு" 1—9—1971, 16—9—1971, 1—10—1971 இதழ்களில் வெளியிட்ட ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

(த. 60)

**பி. எஸ். உமர்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.) கோயம்புத்தூர்.


நமது
விளக்கம்
முதல்வர்
கலைஞர் மு. கருணாநிதி



# நமது விளக்கம்

தமிழக முதல்வர்

கலைஞர்

## மு.கருணாநிதி

## நமது விளக்கம்

தமிழ் நாடு அரசின் 1971-72-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 19—6—71 அன்று சட்டப் பேரவையிலும், சட்ட மன்றத்திலும் தமிழக முதல்வரும் நிதியமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதியவர்களால் அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இரு அவைகளிலும் விவாதங்கள் நடைபெற்றன. இந்த விவாதங்களுக்கு விளக்கமான பதிலளித்து 29—6—71 அன்று சட்டப் பேரவையிலும், 30—6—71 அன்று சட்ட மன்றத்திலும் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து இங்கே வெளியிடுகின்றோம்.

தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற விழைகின்றோம்.

சென்னை
21—7—1971

செய்தி விளம்பரத் துறை,
தமிழ் நாடு அரசு

# நமது விளக்கம்

தலைவர் அவர்களே!

இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது மாமன்றத்து உறுப்பினர்கள் தங்களுடைய விழுமிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கை பற்றி எதிர்ப்பான கருத்துக்களையும், ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்தமைக்காக,—அந்தக் கருத்துக்கள் ஏதாவது ஒரு வகையில் இந்த அரசின் காரியங்களுக்குப்பயன் படும் என்ற நிலையில் நான் நன்றி கூறி வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எடுத்துக் காட்டப்பட்டுள்ள கருத்துக்கள் ஒவ்வொன்றிற் கும் இந்தப் பொது விவாதத்திலேயே நான் பதிலளித்து விடு வது என்பது இயலாத காரியம். உறுப்பினர்களுடைய உரை களுக்கும் நான் தனித்தனியாகப் பதிலளிப்பதற்கு நேரம் இல்லை. இவற்றை அனுசரித்துத்தான், சென்ற ஆண்டிலி ருந்து ஒரு புதிய முறையை நாம் வகுத்துக்கொண்டு பல்வேறு துறைகளிலுள்ள மிக முக்கியமான பிரச்சினைகள் பற்றிப் பேசு வதற்கு சட்ட மன்றத்திலேயும், பேரவையிலேயும் எந்தெந்த மானியங்கள் விவாதிக்கப்படுகின்றனவோ அவைகளைப்பற்றிய மொத்தக் கருத்துக்களை அங்கே விவாதிக்க வழிவகைகள் கண்டு, அவை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அத்த கைய துறைகளைப் பற்றி இங்கே விவாதிக்கப்படுகின்ற நேரத் தில் தொடர்புடைய அமைச்சர் பெருமக்களும் அதற்கு நல்ல விளக்கங்களைத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உறுப்பினர் கள் பலர், இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே தங்க ளது உள்ளத்திற்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று அவர்களது மனச்சாட்சியே கூறினாலும் இந்த மன்றத்திலே அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்ற காரணத்தினால் எதிர்க்க வேண்டிய அவசியத்திற்கு ஆளானார்கள் என்பதை யும் நான் மறந்து விடவில்லை.

''இதிலே புரட்சி எதுவுமே இல்லை, புதுமை எதுவுமே இல்லை'' என்று பத்திரிகைச் செய்திக்குத் தலைப்புக் கொடுத்து விட்டு நமது மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் தனது உரையை நிகழ்த்தினார்கள்.

இதிலே புரட்சியும் புதுமையும் இருக்கின்றதா இல்லையா என்பதை இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற திட்டங்கள்—நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில்தான் தெரியுமே அல்லாமல்—நான் நிதி நிலை அறிக்கையைப் படித்து முடித்ததும்—உடனடியாக இந்த மாமன்றம் தலைகீழாகச் சுழன்று ஒரு பெரிய புரட்சிகரமாக மாறும் என்று நானும் எண்ணவில்லை; மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் எண்ணியிருக்க மாட்டார்கள்—என்றே நான் கருதுகின்றேன்.

### குளோரோஃபாம் கொடுக்கப்பட்டவர்கள் நிலை

பல உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் புகழ்கின்ற நேரத்தில் நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். ''இதிலே புகழ்வதற்கு என்ன இருக்கிறது? மயக்க மருந்து உட்கொண்டவர்கள், அதாவது 'குளோரோஃபாம் கொடுக்கப்பட்டவர்களைத் தவிர மற்ற யாரும் புகழ முடியாது'' என்று சொன்னார்கள். 'குளோரோஃபாம்' கொடுக்கப்பட்டவர்கள் பேசவே முடியாது; நல்ல டாக்டர்களுக்கு இது தெரியும்!

ஆனால் என்ன காரணத்தினாலோ டாக்டர் ஹாண்டே அவர்கள் பட்ஜெட்டைப் பற்றிப் புகழ்பவர்கள் எல்லாம் 'குளோரோஃபாம்' மயக்கத்திலே இருப்பவர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

### வரிகள் பற்றி இரண்டு கருத்துகள்.

இது பொருளாதாரம் தெரியாமல் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை என்று டாக்டர் ஹாண்டே குற்றம் சாட்டினார்கள். வரிகள் போடுவதால் விலைவாசி உயரும் என்கிற கருத்தும், உயராது என்கிற ஒரு கருத்தும் மேதைகளால் சொல்லப்பட்டிருக்கிறது. ''கீன்ஸ்மாஸ்கரேஸ்'' போன்ற பொருளாதார மேதைகள் வரிகள் போடுவதால் மக்களிடத்திலுள்ள பணத்தைக் குறைப்பதன் மூலம் விலைவாசி குறையும் என்ற தத்துவத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

### ஏழை-எளியோருக்கு நல்வாழ்வளிப்பதே எங்களுக்குத் தெரிந்த பொருளாதாரம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதுபோல நான் பெரிய பொருளாதார மேதையல்ல; நான் அந்த மேதாவிலாச அடிப்படையிலே இந்த அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறேன் என்று நான் வாய்ப்பறை அடித்துக் கொள்ளவும் தயாராயில்லை!

நானும், எனது கட்சியும் கொண்டிருக்கிற பொருளாதாரம் எல்லாம் இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய சாதாரண நடுத்தரப் பாட்டாளி மக்கள்—தொழிலாளி மக்கள் நல் வாழ்வைப் பெறவேண்டும்; அதற்கு ஏற்ற வகையிலே என் னென்ன திட்டங்கள் தீட்ட வேண்டும் என்கின்ற அடிப்படை யிலே எதை யோசிக்கிறோமோ அதைத் தான் நாங்கள் கொண்டுள்ள அல்லது நாங்கள் சிறப்பாகப் போற்றுகின்ற பொருளாதாரமாகக் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

### நல் அரசின் இலக்கணத்திற்கொப்ப நமது நிதிநிலை அறிக்கை

மத்திய அரசு இன்றைக்கு இந்தமா நில அரசிற்கு இட்டிருக் கின்ற கட்டளையின்படி ஆண்டு ஒன்றுக்குத் திட்டத்தின் வாயி லாக 70 அல்லது 80 கோடி ரூபாய்தான் செலவிடலாமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் அந்த 70கோடி ரூபாய் அல்லது 80கோடி ரூபாய் என்ற வரையறையில் திட்டங்களை வரையறுப்பது முடியாது என்ற காரணத்திற்காக, நமது ஓராண்டுத் திட்டத்தை 100 கோடியிலிருந்து 105 கோடி ரூபாய் வரையில் உயர்த்தி, அதற்காக நிதிவகைகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்கின்ற நல்ல அரசினுடைய இலக்கணத்துக்கு உட்பட்டு, வழிவகைகளை எல்லாம் ஆராய்ந்து இந்த அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது.

### மூலதனக் கணக்கும்—முதலீடு செய்வதும்.

ரெவின்யூ கணக்கை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கேற்ற வகையில் வரிகளைக் குறைக்கலாமென்று நண்பர் மாரிமுத்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். மூலதனக் கணக் கையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்துத்தான் மொத்த வரு மானம் எவ்வளவு, மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும் சேர்த்து ஊதிய உயர்வை எப்படிச் சரிக்கட்டுவது என்று ஆராய்ந்து மூலதனக் கணக்கிலே தொழில் வளர்ச்சிக் கென்று நாம் முதலீடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

### மக்கள் வசதிக்குத் தான் நிதிநிலை அறிக்கையே தவிர அரசுக்கு ஆதாயம் தேடுவதற்கல்ல!

கட்டடங்கள், பொதுத் துறை என்ற தலைப்பிலே பல்வேறு கட்டடங்கள் அரசுக்கு ஆதாயம் கிடைக்காத வகையிலே யும் பல்வேறு வசதிகளை இயற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறோம் நாம்.

இவைகளெல்லாம் மக்களுடைய வசதிக்காகத் தானேதவிர அரசுக்கு ஆதாயம் வரவேண்டுமென்ற நோக்கத்தில் நாம் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவில்லை.

எனவே இந்த மூலதனம் என்ற அம்சத்திலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளவோ, ஒளிந்து கொள்ளவோ முடியாத நிலையிலிருக்கிறோம். இது போன்ற மூலதனச் செலவுகளுக்கு வருவாய்க் கணக்கிலேதான் நிகர மிச்சத்தை நாம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இதை நண்பர் மாரிமுத்து அவர்களுடைய சந்தேகத்திற்கு விளக்கமாகத் தெரிவிக்கிறேன்.

அந்த மிச்சம் போதாத காரணத்தினாலேதான் மொத்தமாக எல்லாக் கணக்கிலேயும் விழுகின்ற துண்டு எவ்வளவு என்று நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

**வரவு-செலவுத் திட்டத்திலுள்ள வரவேற்கப்படும் திட்டங்கள்.**

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உறுப்பினர்கள் வரவேற்கும் திட்டங்கள் ஏராளம். ஆனால் தோழமைக் கட்சியிலேயுள்ள சில பேர் கூட, குறிப்பாக திரு.மணலி கந்தசாமி அவர்களைப் போன்ற ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் மக்கள் நல்வாழ்வுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்களைப், பாராட்டாமலிருப்பது, என்னைப் பொறுத்தவரை ஒரு மனக் குறை தான் !

ஒருவேளை முதல்வர் தஞ்சாவூர்க்காரர் என்பதால் திரு. மணலி கந்தசாமி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கக் கூடும்.

''இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்வதற்கு விற்பனை வரியிலே அரை சதவீதம் உயர்த்தினால்தான் என்ன'' என்று அவர்கள் கேட்ட நேரத்தில், எனக்கு மிகத் தெம்பாக இருந்தது.

இவ்வளவு தூரம் பழுத்த அனுபவம் வாய்ந்த ஒரு நல்லவருடைய—வல்லவருடைய ஆதரவு இந்த அரசுக்கு இந்த வரி விதிப்பிலே கிடைத்து விட்டது என்பதிலே எனக்கு நிறைய மகிழ்ச்சி !

ஆனால், மணலி பேசிய பிறகு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் தமக்கு இடையே நடத்திய இரகசியக் கூட்டத்திலே என்ன முடிவு எடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் நேற்றைய தினம் இந்த வரியை எதிர்த்துப் பேசியதோடு இன்றைக்கும் அதன் தொடர்பாகப் பேசியிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நமது நண்பர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிச் சார்பில் பேசிய திரு. ஆறுமுகசாமி அவர்கள் ''பல முழுமையான சோஷலிச நடவடிக்கைகளைக்

கொண்டது'' என்று குறிப்பிட்டார்கள். நான் இங்கே விவாதத்திற்குப் பதிலளிக்கிற நேரத்தில் அவர் சொன்னதையே எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அந்த இலட்சியத்தைக் கொண்டுவரவேண்டுமென்ற முனைப்போடு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நல்லெண்ணம் கொண்டவர்கள், ஆர்வம் கொண்டவர்கள் எவரும் மறுக்க முடியாது என்று நம்புகிறேன்.

### ஏழைகள் ஏற்றம்பெற ...... ...




அதற்கேற்ற வகையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு அம்சங்கள், ஏழை எளிய மக்களைத் தொழிலாளத் தோழர்களை, பாமர மக்களைப், பாட்டாளி மக்களைத் தொடக்கூடிய பல்வேறு அம்சங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களை, அவர்கள் குடியிருக்கிற மனைகளிலிருந்து எந்த நேரத்திலும் வெளியேற்றப்படலாம் என்கிற கொடுமை நீண்ட பல ஆண்டுகளாக நிலவுகிறது.

அந்தக் கொடுமையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தோடு விவசாயத் தொழிலாளர்கள் வெளியேற்றப் படாமலிருக்க வேண்டும் என்பதற்காகத் திட்டம் தீட்டியுள்ளோம். அவர்கள் வெளியேற்றப்படாமலிருப்பது மாத்திரமல்ல, அவர்கள் குடியிருக்கின்ற மனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற முடிவினை ஏற்றிருக்கின்றது எமது அரசு.

மாநில முழுவதிலும் இந்த நிலையை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கு முதற் கட்டமாகத் தஞ்சைத் தரணியில் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருக்கின்ற மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்குகின்ற அளவிற்கு ஒரு திட்டத்தை நான் இன்றைக்கு வகுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசின் சார்பிலே வெளியிட்டிருக்கிறோம்.

இன்று இலட்சக்கணக்கான நிலமற்ற ஏழை விவசாயிகள் நிலப்பட்டா, மனைப்பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டாவை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது என்றாலும் நான் பல முறை அறிவித்ததற்கிணங்கக் காடுகள் என்ற பெயரால், ஆனால் உண்மையில் காடுகளாக இல்லாமல் இருக்கிற நிலங்களைக்கூட நிலமற்ற விவசாயிகளுக்குத் தந்திட வேண்டும் என்கின்ற அடிப்படையை அமைத்து அந்தத் துறையினுடைய அமைச்சர் மாநிலத்திலே பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஆராய்ந்து பார்த்து வந்து, அந்த நிலையிலே இன்றைக்குக் காட்டு நிலங்களில் 50 ஆயிரம் ஏக்கரா வரையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்து கொடுப்பது என்ற முடிவினை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.



இதிலெல்லாம் கேரளாவைப் பின்பற்ற வேண்டுமென்று திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

### ஏழைகள் வாழ்வில் புதுமைகள், புரட்சிகள் !

கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி முதன் முதலாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த ஆண்டு 1957. அந்த ஆண்டிலேயிருந்து 1971-ஆம் ஆண்டுவரை கிட்டத்தட்ட ஒரு பதின்மூன்று, பதினான்காண்டுக் காலம்—அவர்கள் தொடர்ந்து ஆட்சிப் பீடத்திலே இல்லாவிட்டாலும்—அந்தக் கொள்கைகள் கேரள மாநிலத்தில் பரவலாக்கப்பட்டு, அதற்கு எற்றவண்ணம் அந்த மண் பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது !

ஆனால் கேரளாவிற்குக் கிஞ்சிற்றும் சளைக்காத அளவுக்குப் புதுமைகளையும், அமைதியான புரட்சிகளையும், எழை எளியோர் வாழ்க்கையிலே செய்திட வேண்டும் ; ஏழைகள் நிமிர்ந்து நடக்கவும் அவர்கள் முகத்திலே புன்னகை காணவும் வழி பிறக்கவேண்டுமென்று எண்ணிச் செயலாற்றுகின்ற இந்த அரசு, ஆட்சிப் பெறுப்பேற்று எத்தனை ஆண்டுக்காலமாகிறது என்பதனையும், இடையிலே எவ்வளவு சோகப்புயல்களை எல்லாம் ஆளும் கட்சி தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதனையும் உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

## பேருந்துகள் தேசிய மயம்.

பயணிகள் பேருந்துகள் தேசீய மயமாக்கியிருப்பதை நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள்; அவைகளுக்கு உச்சவரம்பு கட்டப் பட்டிருப்பதையும் வரவேற்றிருக்கிறீர்கள்.

பயணிகள் பேருந்துகளைத் தேசீயமயமாக்கியது பற்றி—நாட்டுடைமை ஆக்கியது பற்றி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் முற்போக்கு எண்ணம் படைத்த வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

நண்பர்கள் சுவாமிநாதன் போன்றவர்கள், நம்முடைய சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு கணேசன் போன்றவர்கள் எல்லாம், ''நீங்கள் இப்போது நடத்துகிற பேருந்து நிர்வாகத்தையே ஒழுங்காக நடத்த முடியவில்லை. இதையும் எடுத்துக் கொண்டு எப்படி நடத்தப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

இப்படிக் கேட்டவர்களில் இரு சாரார் உண்டு: பொது உடைமை தேவை என்று கேட்டவர்களும் உண்டு; நீங்கள் நடத்த முடியாது—ஆகவே இந்தக் கொள்கை தேவையில்லை என்ற அடிப்படையில் கேட்டவர்களும் உண்டு.

அவர்கள் யார் யார் என்று பகுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் அன்றைக்கே விளக்கம் அளித்தேன். சென்னை நகரில் ஓடுகிற பேருந்துகள் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. வெளியூர்களில் ஓடிக்கொண்டிருக்கிற—பல ஊர்களை இணைத்துக் கொண்டு ஓடுகிற பயணிகள் பேருந்துகள் மூலமாக நமக்கு லாபம் தான் கிடைக்கிறது. இங்கே ஏற்படுகிற நட்டத்தை ஓரளவு சரிக்கட்டுகிற அளவுக்கு வெளி ஊர்களில் ஓடிக் கொண்டிருக்கிற பஸ்களின் மூலம் நமக்கு லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது நாம் நாட்டுடைமையாக்குகிற பஸ்கள் எல்லாம் வெளியில் ஓடிக்கொண்டிருக்கிற பஸ்கள் என்கிற காரணத்தால் அவைகளையும் நாம் தனித்தனி நிர்வாகமாக நடத்த வேண்டியதில்லை என்ற காரணத்தால் நட்டம் ஏற்பட வழியில்லை.

நிர்வாகத்தில் இருக்கிற குறைபாடுகள் பற்றி நீங்கள் எடுத்துச் சொன்னதை நான் அப்படியே மறுக்கிறேன் என்று தவறாகக் கருத வேண்டாம். அந்த நிர்வாகத்தை மேலும் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்கான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறோம்.

நண்பர் சுவாமிநாதன் பேசுகிற நேரத்தில் அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டி கூடக் கொடுக்காமல் கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் உங்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. அரசுக்குக் கொடுக்க வேண்டிய வட்டியும் சேர்த்தால் ரூபாய் இரண்டரைக் கோடி அளவுக்கு நட்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள்.

### நட்டம் ; ஒரு விளக்கம் !

நான் அவர்களுக்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வட்டிக்காகக் கொடுக்க வேண்டிய வட்டித் தொகையைக் கொடுத்த பிறகுதான், இந்த நட்டமே தவிர வேறு அல்ல.




திரு கே. ராசாராம் : ஆனால் அரசுக்கு இந்தப் போக்குவரத்துத் துறை வருமான வரி செலுத்துவதில்லை. தனியார் ஓட்டுகிற பஸ் கம்பெனிகள் வருமான வரி செலுத்துகிறார்கள். இதை அரசு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

முதல்வர் : வருமானம் இருந்தால் வரி செலுத்துவார்கள். வருமானம் இல்லாமல் இருக்கிறதால் வருமான வரி செலுத்த முடியாது. ஆனால் மற்ற வரிகள் எல்லாம் செலுத்தப்படுகின்றன.

ஆகவே வட்டிக்காக அரசுக்குக் கொடுக்கப்பட்ட தொகை போக ஏற்படுகிற நட்டம்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதல்லாமல் வட்டியும் கொடுக்காமல் நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கருதுவது சரியல்ல.

நிர்வாகத்தில் உள்ள கேடு பாடுகள் எவை எவை, எந்த எந்தக் காரணத்தால் இந்தச் சிர்குலைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்திடவும், ஆராய்ந்திடவும் இப்போது பரீட்சார்த்தமாக, சில 'டிப்போக்களில்' ஆய்வுகள் நடை பெற்று வருகின்றன.

அவை மிக வேகமாக விரைவு படுத்தப்பட்டுத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை சீர்படுவதற்கு எங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வோம்.

## வேலை வாய்ப்பு வசதிகள்.

வேலை வாய்ப்பிற்காக வழி செய்திருக்கிறோம் என்பதையும் இம்மாமன்றத்தின் உறுப்பினர்களாகிய நீங்கள் வரவேற்கிறீர்கள்.

காவல் துறைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் 1,000 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இன்சினியர்கள் 3,000 பேருக்குச் சிறு தொழில் துவங்கக் கடனுதவி செய்யப்படும். பட்டதாரி மாணவர்கள் 2,000 பேருக்கு 'இளைஞர்கள் அணி' மூலமாக வேலைவாய்ப்புத் தரப்படும். கிராமப் புறங்களிலே, 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்குக்கிடைக்கும் தொகை —போதாதென்று வாதாடி வருகிறோம். முடிவு தெரியும் வரையிலே காத்திராமல் நம் மாநில அரசின் மூலமாக மேலும் 15 ஆயிரம் பேருக்கும் வேலை வாய்ப்பளிக்கிறோம். ஆக 30 ஆயிரம் பேருக்குக் கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்புத் தருகிறோம். இவையன்றி, 150 மருத்துவர்களுக்கும், 200 செவிலியர்களுக்கும் வேலை வாய்ப்புத்தருகிறோம். இது போன்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன.

## தகுதி திறமை உள்ளவர்களுக்கே தேர்வு.

இதிலே கட்சிக் கண்ணோட்டம் இருக்கக் கூடாதென்று எதிர்கட்சித் தரப்பிலே யிருக்கின்றவர்களும் தோழமைக்கட்சியிலே உள்ளவர்களும் எடுத்துரைத்ததை நாங்கள் மறந்துவிட மாட்டோம். இதற்கெல்லாம் தகுதியானவர்கள்—இதற்கு ஆற்றல் படைத்தவர்கள் ஆகியவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்களே தவிர இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர் இவரை அறிவார்; எனவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற அளவிலே—தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தகுதி, திறமை யாருக்கிருந்தாலும்—அவர்கள் அதுவரை எந்தக் கட்சியிலே இருந்தாலும்—அவர்கள் உள்ளத்திலே எந்தக் கட்சி உணர்வு இருந்தாலும்—அவைகளைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல்—திறமைசாலிகள் தான்—இந்த அரசினுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றக் கூடிய ஆற்றலுள்ளவர்கள்தான்—தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இது உறுதி!

மிக முக்கியமான வேலை வாய்ப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், இந்திய பூபாகம் முழுவதும் இன்றைய தினம் இது பரவிக் கிடக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே ''வேலை வாய்ப்புக்கு இந்த அரசு தீட்டியிருக்கிற திட்டங்களை நான் வரவேற்கிறேன். ஆனால் யானைப் பசிக்கு இது சோளப் பொரியாகப் பயன்படும். எனவே இந்தவேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டு''மென்று நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே நல்ல சிந்தனையோடு குறிப்பிட்டார்கள்.

இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதைப் பிரச்சாரத்திற்காகப் பயன் படுத்துகிற நண்பர்கள் இதைக் காரணமாகக் கண்டுபிடித்துத் திரு ராஜாராம் நாயுடு வேலை வாய்ப்புத் திட்டத்தை யானைப் பசிக்கு சோளப் பொரி என்று பேசினார்கள் என்கிற அளவிலே பத்திரிகையில் போடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த அளவிற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்பதும் எனக்குத் தெரியும். என்றாலும் இந்த அரசு இந்த நிலையை உணர்ந்திருக்கிறது என்பதையாவது ஒப்புக்கொண்டார்; அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



## அவர்கள் ஒதுக்கியது எவ்வளவு ?

இந்த அளவுதான் இந்த அரசால் முடிகிறது. மாநிலத்திலே நமக்கு இருக்கிற நிதி வாயில்களைக் கொண்டு,—நம்முடைய வருவாயைக் கொண்டு நமக்கு இருக்கிற அதிகாரங்களைக் கொண்டு—இதனைத்தான் நம்மாலே செய்ய முடிகிறது.

அவர்கள் சுட்டி காட்டியது போ 50 கோடி ரூபாயை இந்தியா முழுவதற்கும், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு இந்தியப் பேரரசு ஒதுக்கியது. இதைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ளாத நம்முடைய தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர்கள் ஏதோ தமிழ் நாட்டிற்கே 50 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதாகக் கருதி அதைப் பற்றி விமரிசித்தார்கள்.




இந்த 50 கோடி ரூபாயிலே இவர்கள் யார் யாருக்கு எவ்வளவு பங்கு போட்டுக் கொள்ளப் போகிறார்களோ என்றார்கள். அதற்குள் ஓர் ஆதங்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. உண்மையில் 50 கோடி ரூபாய் என்பது இந்தியா முழுவதற்கும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப் பட்டது. இப்படி ஒதுக்கப்பட்ட நேரத்திலே அவர்கள் மிகுந்த தந்திரத்தோடு மாவட்டத்திற்கு 15 ஆயிரம் பேர்களுக்கு என்று அல்ல, ஒரு மாநிலத்திற்கு 15 ஆயிரம் பேர்களுக்கு வேலை என்கிற அந்த அளவிலே வகுக்காமல், அல்லது கோட்டத்திற்கு, ஒரு பிளாக்கிற்கு இவ்வளவு பேருக்கு என்கிற அந்த அளவிலே வகுக்காமல், மாவட்டத்திற்கு ஆயிரம் பேர்களுக்கு வேலை என்று யாரோ மத்திய சர்க்காரிலே இருக்கிற ஒரு கெட்டிக்காரர் இந்தத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் மாவட்டங்கள் எண்ணிக்கையிலே குறைவு, பரப்பளவிலே பெரிது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல வட புலத்திலே இருக்கிற மாநிலங்களில் மாவட்டங்கள் எண்ணிக்கையிலே அதிகம். பரப்பளவிலே குறைவானவை.

சில இடங்களில் உத்தரப் பிரதேசம் போன்ற இடங்களில் 54 மாவட்டங்கள். மராட்டியம் போன்ற இடங்களில் 26-க்கு மேற்பட்ட மாவட்டங்கள் ;34-க்கு மேற்பட்ட மாவட்டங்கள் இருக்கின்றன.

அவ்வாறு மாவட்ட அளவிலே கணக்கிட்ட நேரத்தில் நமக்கு வர வேண்டிய தொகை நமக்கு வராமல் போய் விட்டது. ஆகவேதான் ஒரு கோடியே சொச்சம் என்கிற அளவிற்குத்தான் கிராமப்புற வேலைவாய்ப்புக்கு நமக்குப் பணம் ஒதுக்கப்பட்டது. அதிலே 15 ஆயிரம் கிராமப் புறத்து மக்களுக்குத்தான் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் ஊதியம் தரலாம் என்கிற அடிப்படையில் வேலைவாய்ப்பு நம்மாலே உருவாக்க முடிந்தது. அதிலே ஒரு மாவட்டத் திலே 10 பிளாக்கிற்குத்தான் கொடுக்க முடியும் என்கிற சூழ்நிலை உருவாயிற்று. ஆகவே மேலும் ஒரு கோடி ரூபாய் நமது மாநில அரசின் சார்பிலே செலவு செய்வது என்று தீர்மானித்து மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பிளாக்குகள், 20 பிளாக்குகள் என்கிற அளவிலே நிர்ணயித்து 15 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்கிற அளவிற்கு இன்றைக்கு நாம் உருவாக்கியிருக்கிறோம். அவர்கள் சொன்னார்கள் அப்படி வேலைவாய்ப்புத் தருகிற நேரத்திலே முற்றிலும் வேலை வாய்ப்பு அற்ற குடும்பங் களுக்குத்தான் இதைத் தரவேண்டும்—முதல் சலுகை, முன் உரிமை தர வேண்டும் என்று சொன்னார்கள். அவர் கள் இப்படிச் சொன்னார்கள் என்றாலும் இதற்கு முன்பே அதிகாரிக்கு, அந்தக் குழுக்களுக்கு, நாங்கள் தந்திருக்கிற ஆணையின்படி இதை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். வேலையில்லாமல், யாரும் வேலைவாய்ப்பு இல்லாமல், இருக்கிற குடும்பத்தில் இருக்கக் கூடியவர்கள் முன் உரிமை தர வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதையே நாங்கள் முன்பே அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டோம் என்பதை நான் இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

காவல்துறையில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறியவர்கள் இரண்டாயிரம் பேர்களுக்குப் பதவி ஒதுக்கம் செய்யப்பட்டு அதிலே ஆயிரம் பேர்களை நேரிடையாக வேலைக்கு எடுத்துக் கொள்கிற ஒரு வேலை வாய்ப்புத் திட்டத்தை நாம் உருவாக்கி யிருக்கிறோம். தொழில் கல்வி பயின்றவர்களுக்கு 30 ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் சிறுதொழில்களை உருவாக் கிக் கொள்வதற்குக் கடன் வசதி அளிக்க இந்த அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. பட்டதாரி மாணவர்களைக் கொண்டு இளைஞர் அணி என்ற ஒன்றைத் தயாரித்து நல்ல சமூக சேவை செய்வதற்குக் கிராமப்புறங்களில் நல்ல பணிகளைச் செய்வதற்கும், தீய பழக்க வழக்கங்களிலிருந்து கிராமப்புற மக்களை விடுவிப்பதற்கும் பட்டதாரிகள் நிறைந்துள்ள இளைஞர் அணியைப் பயன்படுத்த வேண்டு மென்றும், இரண்டாயிரம் இளைஞர்களை அந்த அணியில் திரட்டுவதற்கும் அவர்களுக்குப் பொறுப்புத் தரவேண்டும் அவர்களுக்கு மாத ஊதியமாக ரூபாய் 175 கொடுக்க வேண்டு மென்றும் இந்த வரவு செலவுத் திட்டத்திலே வகை செய்

யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களில் 6,500 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. அதில் சில குறை பாடுகள் சொல்லப்பட்டன என்றாலும் அது கிடைத்தால் போதும் என்கிற அளவிற்கு இன்றைய தினம் வேலைவாய்ப்பு அற்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை நாம் மறந்து விடுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் என்று கருதுகிறேன்—தனியார் பள்ளி களில் ஆசிரியர்கள் முழுச் சம்பளம் வாங்கிக் கொண்ட தாகக் கையெழுத்துப் போட்டுவிட்டுப் பாதிச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றார்கள். அந்த அள விற்கு வேலை வாய்ப்புப் போதும் என்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தொழில் பயிற்சி மூலம் அவர்களுக்கு இந்த அரசின் சார்பில் தரப்படுகிற இந்த உதவியை அவர்கள் புறக்கணித்து விட மாட்டார்கள், ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என் பதை நான் இங்கே எடுத் துக் காட்ட விரும்புகிறேன். அதே போல 2,400 பொறி யாளர்களுக்கு நாம் வேலை வாய்ப்பு அளித்திருக்கிறோம். பின்தங்கிய அரிசன மக் களுக்கும் ஏராளமான




சலுகைகளை வழங்கியிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஏற்கனவே ஆரம்பித்த திட்டம் என்று அவர்கள் எடுத்துக்காட்டினாலும், அது விரிவுபடுத்தப் படுகிறது. சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்து வோருக்கும் ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் தொழில் கருவிகள் வாங்குவதற்கு உதவி செய்வதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்திலே நாம் திட்டம் வகுத்திருக் கிறோம். இவை அவ்வளவையும் சொல்லிவிட்டு, இவைகள் போதாது என்று கூறிவிட்டு ஆனால் வரிகள் போடக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய உரையிலே குறிப் பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற காரணத்தினால் இப்படிச் சொன்னார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஒரு காலத்தில் இந்தப் பக்கத்தில் இருந்தவர்; எதிர்க்கட்சியினர் வரிகள் போட்டதைக் கண் டித்துக் கேள்விக்கணைகளைத் தொடுத்த நேரத்தில் பதில் அளித் தவர். ஆகவே கேள்வி கேட்கிறவர்கள், பதில் சொல் கிறவர்கள் மாறி, மாறி வருகின்ற நிலைகள் ஜனநாயகத்திலே வியப்புக்குரியதல்ல. ஆகவேதான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற காரணத்தினால் இவ்வளவையும் சொல்லிவிட்டு, யானைப் பசிக்குச் சோளப்பொரியைப் போட்டிருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, இன்னும் பல திட்டங்கள்

இங்கே நிறைவேற்றப்பட வேண்டுமென்று எல்லாத் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்து விட்டு, ஆனாலும் வரிகள் போடலாமா என்கிற ஒரு கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள்.

### பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம்.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஒரு திட்டத்தை இந்த அரசு தயாரித்து, அதற்காக நிதியினைத் திரட்டி வருகிறோம்.

இதைப் பற்றிப் பொன்னப்ப நாடார் அவர்கள் ''நல்ல திட்டம்; இதில் ஊழல் நடந்து விடக்கூடாது'' என்று குறிப்பிட்டார்கள். எல்லாத் திட்டங்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக்கூடாது.

நாம் நிதி சேர்க்கிறோம்—பிச்சைக்காரர்களுக்கு ! அதிலேயே சில பேர் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்கள் பிச்சைக்காரர்களுக்குத் துரோகம் செய்கின்ற கொடியவர்கள் ; தீயவர்கள் என்கின்ற கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல் இதற்கெல்லாம் ஏன் '' சீரியல் நம்பர் '' போடவில்லை என்று கேட்பதிலே அர்த்தமில்லை.

கொடி நாள் என்று எத்தனையோ ஆண்டுக் காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தக் கொடி நாளில் கொடிகளுக்கு விலை இவ்வளவு என்று குறிப்பிடப்படுகிறது.

அந்தக் கொடிகள்,பள்ளிகளில் சிறுர்களிடத்தில் குறிப்பிட்ட தொகைக்கு விற்கப்படுகின்றன. அப்படி விற்கப்படுகின்ற எந்தக் கொடிக்கும் சீரியல் நம்பர் போடப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆகவே, அச்சடிக்கப்பட்ட அட்டைகள் எவ்வளவு என்பதற்குக் கணக்கு உண்டு. வேறு யாரும் அச்சடிக்க முடியாதபடி அதிலே என்னுடைய கையெழுத்துப் பதிக்கப்பட்டிருக்கிறது.

உத்தமர் காந்தியடிகள் தொழு நோய்ப் பிச்சைக்காரர் ஒருவருக்குச் சிகிச்சையளிக்கின்ற படம் இன்னொரு புறத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக் கணக்கிட்டு, ஒவ்வொரு இடத்திலும் தரப்பட்டு, இதன் மூலமாக இந்த நிதிக்கு இவ்வளவு தொகை வரவேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே தவறு நடந்து விடாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தவறுகள் சுட்டிக்காட்டப்படுமேயானால் அரசு சார்பில் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நான் தயாராயிருக்கிறேன்.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு என்கிற திட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிச்சைக்காரர்களின் மேல் வைத்துள்ள அன்பின் காரணமாகவும், பற்றின் காரணமாகவும்—பற்றின் காரணமாக என்றால் அந்த வட்டாரத்திலே

உள்ளவர்களுக்கு அவர் மீது கோபம் பிறக்கும்—ஆகவே அவர்கள் பிச்சைக்காரர்கள் மேல் வைத்திருக்கிற அன்பின் காரணமாக—அவர்கள் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையெல்லாம்—நேருவின் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுவது போல—இதைப் பிச்சைக்காரர்கள் தினமாகக் கொண்டாடலாம் என்று சொன்னார்கள்.

ஐந்து ஆண்டுக் காலத்தில் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுப் பிச்சைக்காரர்களின் கூட்டமே தமிழ்நாட்டில் இல்லாதவாறு ஆக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

பண்டித நேரு அவர்கள் பிறந்த தின விழாவை குழந்தைகள் தினமாகக் கொண்டாட வழியிருக்கிறது. பண்டித நேரு மறைந்து பல ஆண்டுகளானாலும் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கும்.

ஆனால் இந்தப்பிச்சைக்காரர்கள் பிரச்சினை சரிசெய்யப்பட்டு விட்டால் பிறகு பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு தினத்தைக் கொண்டாட முடியாது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் புரிந்து கொண்டு வேறு ஒரு யோசனையைச் சொல்ல வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

## குடிசை மாற்று வாரியம்.

நாம் இன்னும் பல பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்: சென்னை மாநகரத்தில் ரூ. 40 கோடியில் திட்டமிட்டு ஏழாண்டுக் காலத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டித் தருவதற்கு நாம் பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இது பல்லாண்டுக் காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கிற ஒரு பயங்கரமான பிரச்சினை. அந்தப் பிரச்சினையை இந்த அரசு இன்றைய தினம் வெகு துணிவோடு ஏற்று, அதை நடத்திவைக்க வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக இந்த ஆண்டு மாத்திரம் 4 கோடி ரூபாய் அதற்காகச் செலவழிப்பது என்று திட்டமிட்டு அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.



அதைப் போலவே தமிழ்நாட்டில் குடிநீர் வாரியம் ஒன்றின் மூலமாகப் பல கோடி ரூபாய் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இன்னும் சில பல ஆண்டுகளில் எல்லாக் கிராமப் புறத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் திட்டம் தீட்டி அந்தத் துறையிலும் வெகு வேகமாகப் பல முற்போக்குக் காரியங்களைச் செய்திருக்கிறோம்.

இவைகளையெல்லாம் எந்த அடிப்படையில் நாம் செய்து வருகிறோம் என்பதைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்தில் எடுத்துக் காட்டினேன். ஏழை எளியவர்கள்—கிராமப்புறத்து மக்கள்—இது வரையில் தங்களையே சரிவர உணர்ந்து கொள்ள முடியாமல் எங்கோ அழுத்தப்பட்டு தள்ளப்பட்டுக் கிடந்த பிற்போக்கான நிலையில் உள்ள மக்கள், வாழ்வில் விடிவு ஏற்பட வேண்டுமென்பதற்காக இவ்வளவு முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொன்ன திட்டங்களால் மட்டும் நமது மாநிலத்தின் தேவைகள் பூர்த்தி அடைந்து விடுமா என்றால் இல்லை. இன்னும் ஏராளமான தேவைகள் இருக்கின்றன. அந்தத் தேவைகளையெல்லாம்—இங்கே பேசிய உறுப்பினர்கள்—தொகுதி வாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

## மூவர் குழு.

இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மறுபடியும் நீங்கள் விரும்பினால் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து படித்துக் கொள்ளலாம் என்கிற நிலைமை இருந்து வந்திருக்கிறது. அவைகளில் சில மறந்தும் விடலாம்; கூடிய வரையில் இந்த நிலைமைக்கு இடம் தராத வகையில் தங்கள் தங்கள் தொகுதிகளைப்பற்றிக் கோடிட்டுக் காட்டுகின்ற எந்தப் பிரச்சினையானாலும் அவைகளை ஆராயத் தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வாரிய உறுப்பினர்



களில் ஒருவர், ஆக மூவர் கொண்ட குழு அமைக்கப்பெற்று, அந்தக் குழு, இங்கே பேசிய உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து ஒவ்வொரு துறையின் தலைவர், துறையினருடைய செயலாளர்கள்—அலுவலர்கள் இவர்களோடு கலந்து ஆராய்ந்து, அமைச்சர் அவைக்கு அறிக்கைகளை அறிவித்து, அதிலே பெரும்பாலானவற்றை இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேயே நிறைவேற்ற வழி வகைகள் வகுக்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காகத் தான்—நாம் எப்படியும் தவிர்த்து விடலாம் என்று எண்ணிஞல்கூட வரிகளின் மூலம் அவற்றிற்குத் தேவையான நிதிவாயில்களைப் பெருக்க வேண்டியவர்களாயிருக்கிருேம்.

உறுப்பினர்களின் ஊதியம்.

இடையில் நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் எழுப்பிய கோரிக்கைக்கு நான் பதில் அளித்தாக வேண்டும் என்று கருதுகிறேன். அவர்கள் சொன்ஞர்கள்—அப்பட்டமாகச் சொல்லாமல்—எங்களைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொன்ஞர்கள்.

எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த ஆசை இருப்பது தெரியாமல் இல்லை. அதில் யார் மணி கட்டுவது பூனைக்கு என்பதில் தான் ஒருவருக்கொருவர் போட்டியே தவிர, இதில் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் தான் எல்லோருக்கும் இருக்கிறது.

இதைப் போலவே ரூ. 150 இருந்த காலத்தில் ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டது. எல்லாக் கட்சியிலுள்ள உறுப்பினர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதைப் போலவே நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்களின் கோரிக்கையும் விரைவில் ஏற்கப்படும்.

எந்த அளவுக்குத் தொகை என்பதை நான் இப்போது கூற விரும்பவில்லை. ஏனென்ருல் அதுபற்றிய மானிய விவாதம் வருகிற நேரத்தில் அதைப் பற்றி அந்த மானியத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிற அமைச்சர் வாயிலாக அது தெரிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேவைகள் நமக்கு நிறைய இருக்கின்றன. மற்ற உறுப்பினர்களுக்கும் தேவைகள் இருக்கின்றன. அதையும் நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது. இன்னும் நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் ஏராளம் இருக்கின்றன. அதையும் நான் உணர்கிறேன்.

அதற்காகத் தான் நிதி வாயில்களைப் பெருக்குவதற்கு வேறு எந்த வழியும் இல்லாத காரணத்தால் வரிகளை நாம் தேடிப் போக வேண்டியிருக்கிறது.

### கழக அரசின் வரிக்கொள்கை

அப்படி வரிகளைத் தேடிப் போகிற நேரத்தில் கூடுமான வரையில் தாங்கக் கூடியவர்களைத் தொடக் கூடியதாகவும், தாங்க இயலாதவர்களுக்குப் பாதகம் ஏற்படுத்தாத வகையிலும் அந்த வரிகள் இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதுதான் கழக அரசினுடைய வரிக் கொள்கையாகும்.

அதற்கேற்பத்தான் விற்பனை வரியை மூன்று சதவீதத்திலிருந்து மூன்றரை சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அதிலும் சட்டமன்றத்தில் நேற்றைக்கு முன் தினம் பல சலுகைகள் அளிக்கப்பட்டு மொத்த 'வணிக வரம்பு' ரூ. 15 ஆயிரம் என்று இருந்ததை ரூ. 25 ஆயிரம் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். அதைப் போலவே 'கம்பவுண்டிங்' ரூ. 75 ஆயிரம் என்று இருந்ததை ஒரு லட்சம் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம்.

பல பெரிய நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஒரு சிறிய பளுவை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்த வரியை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

விற்பனை வரி, மேல்வரிப் பிரச்சினையிலும் பொதுமக்களுக்கு அதிகமாகக் கஷ்டங்கள் ஏற்படப்போவதில்லை. ஏதோ பத்திரிகைகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக வணிகர்கள் கொந்தளிப்பு, வியாபாரிகள் புரட்சி என்ற செய்திகள் இரண்டொரு நாள் வரும். ஆனல், இது உண்மையிலேயே வியாபாரிகளைப் பெரிதும் பாதிக்கக் கூடிய வரியல்ல என்பதை நாம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விற்பனை வரி, மேல்வரி பற்றியும் மன்ற உறுப்பினர்கள் கருத்தறிவித்தார்கள். வேறு சில உறுப்பினர்கள் இது சென்னைக்கு மட்டுமிருக்கின்ற காரணத்தால் இதைப் பயன்படுத்திக் கொண்டு சென்னையின் புறநகர்ப் பகுதிகளிலே இருக்கின்றவர்கள் இதை ஏமாற்றித் தப்பித்துக் கொள்ளக் கூடும் என்றெல்லாம் கூறினர்கள். ஆகவே, அதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தோம். சென்னைக்கு மட்டும்தான் இந்த வரியா ? கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற நகரப் பகுதிகளுக்கு இந்த வரி கிடையாதா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டார்கள்.

ஆகவே சென்னையினுடைய புறநகர்ப் பகுதிகளுக்கும் கோவை-சேலம்-திருச்சி-மதுரை போன்ற நகரங்களையும்அதன் புறநகர்ப் பகுதிகளையும் இணைத்து இதே விற்பனை வரியை (சர் சார்ஜ்) விதிக்கலாமென்றும் உறுப்பினர்களின் கோரிக்கை கிணங்க 10 சதவீதம் என்றிருக்கும் மேல் வரியை 5 சதவிகித மாகக் குறைத்து விதிக்கலாமென்றும் கருதுகிறோம்.

## நகரங்களில் நிலவரி.

சென்னை நகரிலும், மற்ற நகரங்களிலும் உள்ள பல்லாயிரக் கணக்கானவர்களில் ஒரு 'கிரவுண்ட்' வரை உள்ளவர்களுக்கு நகர்ப்புற நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மனைவரியின் மூலமாகச் சென்னை நகரிலும் பிற இடங்களி லும் ஒரு 'கிரவுண்ட்' வைத்திருக்கிற பல்லாயிரக்கணக்கான வர்களுக்கு வரிவிலக்குச் செய்யப்பட்டதன் மூலமாக அதன் மூலம் ஒரு சமதர்ம நோக்கோடு அவர்களெல்லாம் இந்த வரியிலிருந்து விடுபடக் கூடிய சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

வேளாண்மை வரி பற்றி, இந்த மன்றத்தில் நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்டதும் நிருபர்களிடத்திலே கருத்துத் தெரிவிக்கையில் (கம்.) உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்க மணி அவர்கள், கிராமங்களிலே அதிகமாகச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களை வரிகள் தொடவில்லை என்று சொன் னார்கள்.

வேளாண்மை மூலம் அதிக ஆதாயம் பெறக்கூடியவர்களை மட்டுமே பாதிக்கின்ற அளவுக்குச் சில மாறுதல் சம்பந்தப் பட்ட மசோதா இந்த மன்றத்திலே வரவிருக்கின்றது.

இந்த வரிகளை எல்லாம் குறிப்பிட்ட டாக்டர் ஹாண்டே அவர்கள், ஒரு கையால் கொடுத்துவிட்டு இன்னொரு கையால் திரும்பி வாங்கிக்கொள்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

## மாநிலத்தின் மொத்த வருமானம்.

இந்த மாநிலத்தினுடைய மொத்த வருமானம் 2,400 கோடி ரூபாய். இந்த 2,400 கோடி ரூபாயில் அரசு ஊழியர் கள் ஊதியமாகப் பெறுகின்ற தொகை 100 கோடி ரூபாய். இது இந்த மாநில வருமானத்தில் 24-ல் ஒரு பங்காகும்.

இப்போது கூடுதலாக எழுப்புகின்ற வரிகள் மூலம்—நிதி வாயில்கள் மூலம்—கிடைக்கின்ற தொகை 25 கோடி ரூபாய் என்றால் அதில் ஒரு பங்கைத்தான்; அதில் ஒரு கோடி ரூபாய்க்கான வரிப் பளுவைத்தான் அரசு ஊழியர்கள் ஈர்க்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்காக

இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசுப்படி 25 கோடி ரூபாய் ஊதிய உயர்வு தந்திருக்கிறோம். அதனை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### '' அரியானா பற்றி நான் அறியேனா ?''

தமிழ்நாட்டிலே குறிப்பிட்ட காலத்திற்குள் 72-ம் ஆண்டு முடிவதற்குள்ளாகத் தமிழ் நாட்டிலே எங்கு பார்த்தாலும் மின்னொளி இல்லாத கிராமமே இருக்கக் கூடாது என்று சூளுரைத்து அத் திட்டத்தை நிறைவு படுத்துகிறோம்.




'' இதுவரை தமிழ்நாடு முதல் இடம் வகித்து வந்தது. ஆனால் இப்போது அந்த வகையில் இரண்டாவது இடத்திற்கு வந்துவிட்டது. அரியானா முதல் இடத்திற்கு வந்துவிட்டது என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது சொன்னார்கள்.

அது முதல் இடத்தில் இருக்கிறதா என்பதை வடக்கே உள்ளவர்கள்—பத்திரிகைகள்—வெகுவாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இன்னொரு மாநிலத்தின் பிரச்சினைகளில் தலையிடுவது நல்லதல்ல. அந்த சர்ச்சையில் நான் இறங்கவும் இல்லை.

அரியானா முதலிடம் பெற்றது என்றால் அது தமிழ்நாட்டின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு ; தமிழக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு ! வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்கள் சேர்ந்த தொண்டை மண்டலம்தான் அரியானா !

### மூன்றாண்டுகளிலே மூலைமுடுக்குகளிலெல்லாம் மின் ஒளி.

நாம் எல்லாக் கிராமங்களுக்கும் உண்மையிலேயே விளக்குப் போடத் தீவிர முயற்சி எடுத்து வருகிறோம். இன்னும் 2, 3 ஆண்டுகளில் ஒளி வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலைக்கு ஏற்பாடுகள் செய்வோம் என்று சூளுரைத்து அதன் காரணமக உங்கள் பாராட்டுதலைப் பெறும் நிலைக்கு ஆளாவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மாநிலத் திட்டக் குழு.

இந்த ஆண்டு நம்முடைய மாநிலத்தின் திட்டத்திற்குத் தேவையானதென்று எண்ணுகிற தொகை 100 கோடியிலிருந்து 105 கோடியாகும். மத்திய அரசு இந்த ஆண்டு திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 70 கோடியிலிருந்து 80 கோடி வரையில்தான் ஆகும்.

மது விலக்குப் பிரச்சினை பற்றிப் பேசிய நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போலத் திட்டச் செலவைக் குறைத்துக்கொள்வதா? அது இயலாத காரியம்!

## நலம் வாய்ந்த அரசு.




திட்டச் செலவுகள் குறைத்துக் கொள்ளப்படுமானால், இந்த நாட்டில் நாம் ஏழை எளிய மக்களுக்கு அளித்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது ஒரு நலம் வாய்ந்த அரசை நாம் உருவாக்க முடியாது.

மத்திய அரசு 70, 80 கோடி ரூபாய் இந்த ஆண்டுத் திட்டச் செலவிற்காகத் தந்திருந்தாலும் 100 கோடியிலிருந்து 105 கோடி வரையில் நாம் செலவிடுவதென்று அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தத் திட்டங்கள் எங்கிருந்து தீட்டப்பட வேண்டும்? பொதுவாகத் திட்டங்கள் மேலேயிருந்து தீட்டி, அவர்கள் இங்கே அனுப்பி வைத்து, நம்முடைய திட்டங்கள் செயல்படுவது ஒரு சரியான நல்ல சூழ்நிலையை நம்முடைய மாநிலத்தில் உருவாக்குவதற்கு ஏற்புடையதாக இல்லை என்ற காரணத்தால்தான் மாநில அளவில் ஒரு திட்டக் குழுவை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

நான் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை இந்த மன்றத்திலே வைத்த நேரத்தில் அதைப் பற்றி விளக்கியிருக்கிறேன். இப்போது திட்டக் குழு அமைக்கப்பட்டு அது தன் பணியைச் சிறந்த முறையில் ஆற்றத் தொடங்கியிருக்கிறது.

இந்தத் திட்டக் குழு மாநில அளவில் உருவாக்கப்பட்ட நேரத்தில் பத்திரிகைகளில் எல்லாம்—திட்டக் குழு பற்றி ஏதோ மத்தியத் திட்டக் குழுவிற்கு எதிராக மாநிலத்தில் திட்டக் குழு உருவாகிறது என்றெல்லாம் கணிக்கப்பட்டது.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் உருவாகியிருக்கிற திட்டக் குழுவைப் போல மற்ற மாநிலங்களிலும் திட்டக் குழு அமைக்க வேண்டுமென்ற முனைப்பு எல்லா மாநிலங்களிலும் ஏற்பட்டிருப்பதைக் காண மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நம் மாநிலத்திற்கெனப் பத்தாண்டுகளில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றுேம்? பத்தாண்டுகளில் மக்களின் நிலை எவ்வாறு இருக்கும்? கல்வித் தரம் எப்படி இருக்கும்? நம்முடைய பொருளாதார வளங்கள் எப்படி இருக்க வேண்டும்? நம் வளர்ச்சித் துறைகள் எவ்வாறு இருக்க வேண்டும்? இவற்றையெல்லாம் ஆராய்ந்து சரியான முறையில் மாநிலத்திற்கான திட்டத்தை வகுத்துக்கொண்டு, அதற்கான நிதி வாயில்களை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மாநிலத் திட்டக் குழு இன்றையதினம் அமைக்கப்பட்டுத் தன் பணியை ஆற்றத் தொடங்கியிருக்கிறது.

மாநிலத் திட்டக் குழு பற்றி இங்கே பேசப்பட்டது. திட்டக் குழுவின் பணிகள் என்ன என்று வரையறுக்கப்படவில்லை என்று திரு. தங்கமணி அவர்கள் கூறினுர்கள். ஏற்கனவே திட்டக் குழுவின் பணிகள் பற்றிய பட்டியல் அறிவிக்கப்பட்டு அது இதழ்களில் வந்துள்ளது. அதை உறுப்பினர்களுக்கும் வழங்கச் செய்வேன்.

### நமது மாநிலத் திட்டக் குழுவைப் பிற மாநிலங்கள் பின்பற்றுகின்றன.

மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்ட நேரத்தில் இதை ஒரு அதிர்ச்சியுடன் மற்ற மாநிலங்கள் பார்த்தன. இன்றைக்கு ஒவ்வொரு மாநிலமும் திட்டக் குழு அமைக்க முன்வருகிற காட்சியைப் பார்க்கிறேம். திட்டக் குழு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் இதை வரவேற்றுப் பேசியிருப்பது ஒரு நல்ல அம்சம் ஆகும்.

நமது திரு. சுப்பிரமணியம் அவர்கள் மத்தியில் அமைச்சராக இருந்தபோதுதான் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் திரு. சி. சுப்பிரமணியத்தைக் குறிப்பிட்டார்களே தவிர, திரு. அசோக் மேத்தாவும் அதற்

குக் காரணம் என்பதைக் குறிப்பிடவில்லை. அவர் இப்போது எங்கிருக்கிறார் என்பது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும், அவர் பக்கத்தில்தான் இருக்கிறார். அது தவிர பெருமதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்தபோதுதான் இந்த நாணய மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்டது.

இது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது என்பது அல்ல; அப்போதெல்லாம் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகிற அளவில் இந்த மாமன்றத்தில் இருந்தார்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள். ஆனால் எங்களுடைய ' அதிர்ஷ்டம் ' இப்போது மத்திய அரசைக் குற்றம் சாட்டும் அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பூரிப்பு அடைகிறேன்; புளகாங்கிதம் அடைகிறேன்.

### நிர்வாகச் சீர்திருத்தக் குழு.

அதேபோல் நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நாம் எண்ணினோம். நம்முடைய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கூட, கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

சிறு சிறு அலுவலகங்களில் கூட நிர்வாகம் எந்த அளவுக்கு நடைபெறுகிறது என்று, ஒரேவிஷயத்தைப் பற்றிய 11 கேஸ்களை எடுத்துக் காட்டினார்கள். இங்கே இன்னும் பல விஷயங்களை உள்ளடக்கியதான நிர்வாகச் சீர்திருத்தத்தை நாம் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டில் இன்றைய நிர்வாகம் போற்றுகிற அளவில் இருந்தாலும் குறைபாடுகள் இல்லாமல் இல்லை.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் வேலை இந்த நாட்டிலுள்ள பாமர மனிதன் மலிவாகவும், சுலபமாகவும், விரைவாகவும் தனது தேவையின் பலனை அடைய வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தோடு; இந்தக் குழு நிலைமைகளை ஆராய்ந்து, அறிக்கை தரவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

இதையொட்டி நம்முடைய மாநிலம் என்னதான் நிர்வாகத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தாலும், திட்டம் தீட்டினாலும், சமதர்மக் கண்ணோடு பிரச்சினைகளை நோக்கினாலும், அவற்றையெல்லாம் அமலாக்குவதற்கு வேண்டிய, அளவுக்கு அதிகாரத்தைப் பெற்றாக வேண்டுமென்பது இன்றைய ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நெடுநாள் கோரிக்கையாகும்.

மத்திய மாநில ஆய்வுக் குழு.

அந்த நெடுநாள் கோரிக்கைக்கு ஏற்ப ' ராஜமன்னார் ' குழு அமைக்கப்பட்டு 1969 செப்டம்பர் திங்களில் அந்தக் குழு பணியைத் தொடங்கி அந்த அறிக்கை, மன்றத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய-மாநில உறவுகளைப் பற்றிய ராஜமன்னார் அவர்களுடைய அறிக்கையை அநேகமாக அனைவரும் இங்கே வரவேற்றும் பேசியிருக்கிறார்கள்.

ஹாண்டே அவர்கள் இதிலே ஏதோ பெரிய அபிப்பிராயம் சொல்லப்போவதாகச் சொல்லிவிட்டு, ஏதும் சொல்லவில்லை. ஒருவேளை ' ராஜமன்னார் குழு ' அறிக்கை விவாதத்துக்கு வரும் நேரத்தில் அதைப் பற்றிப் பேசுவார் என்று நான் கருதுகிறேன்.

நாம், மாநிலத்துக்குச் சுயாட்சியும், மாநிலத்துக்கு அதிக அதிகாரங்களும் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி கூட மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பது உள்ளபடியே வரவேற்கத் தக்கது.

திருமதி டி. என். அனந்தநாயகி : என்னவோ இன்றைக்குக் கூடித் தீர்மானம் போட்டோம் என்பது சரியல்ல. 1967-லேயே எங்கள் கட்சித் தலைவர் காமராஜர் அவர்களால் இது கூறப்பட்டிருக்கிறது. பல மாகாணங்களிலும் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அகில இந்திய ரீதியில் இந்தத் தீர்மானம் போடப்பட்டது.

முதல்வர் : அதை யார் சொன்னாலும் சரி, போடப்பட்ட நேரம்தான் முக்கியம். யார் முன்னாலே சொன்னார்கள் என்பதல்ல. ஆனால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெற வேண்டும்.

மூதறிஞர் ராஜாஜி கருத்து.

மாநில சுயாட்சிபெற வேண்டும் என்கிற கருத்தைப் பற்றி மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 'கல்கி' ஏட்டில் ஒரு க்ருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் அதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

### ராஜாஜியும், பன்றிக்கறியும் !

""சார்லஸ் லாம்ப்'' என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் கூறுகிற ஒரு வேடிக்கைக் கதை ! ஆதிகாலத்தில் சீனத்தில் ஒரு வீடு பற்றி எரிந்தபோது அதிலிருந்த ஒரு பன்றியும் வெந்து மாண்டது. அந்தப் பிராணியைத் தொட்டவன் சூடு பொறுக்கமாட்டாமல் விரலை வாயில் வைத்துக் கொண்டான். வெந்த பன்றி மாமிசம் மிகச் சுவையாக இருப்பதாகக் கண்டான். உடனே பக்கத்திலிருந்தவர்கள் தங்களது வீடுகளை எல்லாம் கொளுத்தி, அங்கிருந்த பன்றிகளை வேக வைத்து ருசி பார்த்தார்கள். இப்படியாகத்தானே ஊனைச் சமைத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்டது. இந்த வேடிக்கைக் கதையை நினைவூட்டும் முறையில் சில முதல் மந்திரிகள் நடந்து கொள்கிறார்கள். அதாவது மத்திய சர்க்காருக்கு எதிராக ராஜ்ய சர்க்கார் அதிகச் சுயாதீன உரிமை பெற வேண்டும் என்ற தங்களது கருத்துக்குக் கிழக்கு வங்கத்தின் கோரிக்கை வலுவூட்டுவதால், பங்களா தேசக் கொந்தளிப்பை இந்த முதன் மந்திரிகள் வரவேற்கிறார்கள்'' என்று அவர் சொல்லியிருக்கிறார்.




பன்றிக் கறியைத் தொட்டுச் சுவைத்துப் பார்ப்பதற்காக வீட்டைக் கொளுத்தியவர்கள் குற்றப் பட்டியலில், நேற்றைய தினம் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியையும் ராஜாஜி அவர்கள் கூற்றுப்படிச் சேர்த்து விட்டிருப்பதற்காக நான் வருந்துகிறேன்.

### பன்றிக் கறியை முதலில் சுவைத்தவர்.

ஆனால் பன்றிக் கறியை முதலில் தொட்டுப்பார்த்து, அது சுவைக்கிறது என்று சொன்னவர் யார் என்று பார்த்தால்—

""சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க முடியாது என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாகவேண்டும். நாம் வகுத்த இந்திய அரசியலமைப்பு இதைக் கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

ஆயினும் 1947-க்குப் பிந்திய இந்திய அரசியல் சரித்திரமோ, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் சபலம் எப்படி இடையறாது இயங்கி வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. பிரதேசங்களின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைத்து அதிகாரங்களை மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது'' —இதைச் சொன்னவர் ராஜாஜி அவர்கள்.

ஆக, பன்றிக் கறி சுவைக்கிறது என்று முதலில் எடுத்துக் காட்டியவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள். '' நமது ஜன நாயகம் '' என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிரதேச ஆட்சியைப் பலவீனப்படுத்தும் போக்கு என்ற தலைப்பில் அந்தப் புத்தகத்தின் 53-ஆம் பக்கத்தில் எழுதியுள்ளதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

### 58-ல் ஆதரிப்பது ; 71-ல் எதிர்ப்பது—வேடிக்கை !

டாக்டர் எச். வி. ஹாண்டே : இதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. மாநிலத்துக்கு அதிக நிதி அதிகாரம் வேண்டுமென்று அப்போது ராஜாஜி கேட்டார். ஆனால் எதற்கெடுத்தாலும் மத்திய அரசோடு போரிடுவதைத்தான் ராஜாஜி எதிர்க்கிறார். இது மற்ற மாநிலங்களுக்குப் பரவினால் அது நல்லதல்ல.

முதல்வர் : இந்தப் புத்தகம் 58-ல் வெளியிடப்பட்டது. 58-லேயே காலம் பக்குவமாகக் கனிந்திருக்கிறது. ஆனால் 71-ல் காலம் பக்குவப்படவில்லை என்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

நாங்களும் மத்திய அரசு பலவீனப்பட்டுவிட வேண்டும் என்று சொல்லவில்லை. அவர் எங்களை விட ஒரு படி மேலாகச் சென்று கிழக்குப் பாகிஸ்தானுடைய விடுதலைப் போரை ஆதரித்துப் பாகிஸ்தானிலிருந்து விடுபட்டுத் துண்டாகப் பிரியவேண்டும் என்பதைக்கூட ஆதரித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இங்கே நாம் கேட்கும் மாநில சுயாட்சி, அதிகார அளவில் அல்லாமல், தனியாகத் துண்டித்துக் கொண்டு போக வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லை என்பதை நினைவுபடுத்துகிறேன். மத்திய அரசுடன் நமக்கு இருக்கும் உறவுகள், நட்புகளில் நமக்கு ஏற்படும் சங்கடங்களை அதன் [illegible] இடைக்கால [illegible] தேவைத் திட்டத்

தில் விளக்கமாகக் கூறி அது பற்றி எழுந்த ஐயப்பாடுகளுக்கெல்லாம் நான் அந்த நேரத்திலே மிக விளக்கமான பதில் கூறியிருக்கிறேன். ஆகவே அதைப்பற்றி மீண்டும் ஒரு முறை விரிவாகச் சொல்வது அவசியமில்லை என்று கருதுகிறேன்.

### போராடிப் பெற்றவை.

மத்திய அரசோடு நாம் போராடவேயில்லை ; போராடி எதையும் பெறவேயில்லை என்று யாரும் கூறிவிட முடியாது. இன்றைக்குக் கூட ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை நான் சொல்ல முடியும்.

மத்திய அரசுடைய அனுமதி பெற்று, மத்திய அரசு உதவியுடன் திருத்துறைப்பூண்டி, குத்தாலம், பூதலூர், லால்குடி, காட்டுமன்னார்கோயில், பட்டுக்கோட்டை ஆகிய 6 இடங்களில் வேளாண்மை விற்பனைக் கூடம் அமைக்கவும், அவற்றோடு இணைந்து 56 கிராமச் சாலைகள் ஏற்படுத்தவும், ஒருங்கிணைந்த திட்டத்தைத் தொடங்க ஒன்றரைக் கோடி ரூபாயை மத்திய அரசு இரண்டு நாள் முன்பு நமக்கு அனுமதித்திருப்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே, நாம், தேவைப்படும் நேரத்தில் எல்லாம், பின் வாங்காமல் மத்திய அரசோடு வாதாடிப் போராடி நம்முடைய மாநிலத்துக்கு உரியவைகளைப் பெறுவதிலே என்றைக்கும் சளைத்துவிடவில்லை.

### சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றம் !

ஆனல், எதற்கெடுத்தாலும் '' மாநில சுயாட்சி மாநில சுயாட்சி '' என்று அதையே சொல்லி நீங்கள் மக்களிடத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறீர்கள்—கல்லூரி அனுமதியா, மருத்துவச்சாலை அனுமதியா, மருத்துவச் சாலைக்கு 2—3 புதிய படுக்கைகள் வேண்டுமா—இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் கூட நீங்கள் மாநில சுயாட்சியைக் காட்டித் தப்பித்துக் கொள்கிறீர்கள்'' என்ற குற்றச் சாட்டை டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னர்.

ஒருவேளை அவர்கள், மாநில சுயாட்சியை வரவேற்கக் கூடும். ஆனல் அதே நேரத்தில் எதற்கெடுத்தாலும் மாநில சுயாட்சியைக் காட்டுகிறோம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டவும் கூடும்.

"ராஜமன்னார் குழு' அறிக்கை மீது பேசுகிற நேரத்தில் தான் மத்திய மாநில அரசு உறவு பற்றிச் சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றத்தை டாக்டர் ஹாண்டே மூலம் நாம் பார்க்க முடியும்.

டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ராஜமன்னார் அறிக்கையை இங்கு எடுத்துக் கொடுத்தவர் திரு. பொன்னப்ப நாடார். அவர் எடுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். அவர் ராஜமன்னார் குழு அறிக்கை மீது பின்னால் பேசுகிறேன் என்று பீடிகை போட்டார். இன்று பிரமாதமான விமரிசனம் கேட்கலாம் என்று நினைத்து வந்த எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

### வால் மாத்திரம் பாக்கி !

ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுவரில் ஒரு சிறிய வளை. அதில் ஓர் எலி நுழைந்து கொண்டிருந்தது. ஆசிரியர் 'நான் சொன்னதெல்லாம் நுழைந்ததா ?' என்று கேட்டார். "வால் மாத்திரம் பாக்கி' என்று அவன் சொன்னான்.




அதைப்போல் ராஜமன்னார் அறிக்கையிலே அவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, முதல் பக்கத்திலே வெளியிடப்பட்டுள்ள முதலமைச்சருடைய படத்தை மாத்திரம் காட்டி, "இது தேவைதானா ? 'பர்சனலிட்டி கல்ட்' வளருகிறது !" என்று குற்றம் சாட்டி, இது ஏதோ ஆளும் கட்சியில் உள்ளவர்களே கூட அந்த உணர்ச்சியில் இருக்கிறார்கள் என்பதைப் போல் எல்லாம், இங்கேயும் ஏதாவது நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் பேசினார்கள்.

### 'பர்சனலிடி கல்ட்' தி. மு. க. வில் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை 'பர்சனலிட்டி கல்ட்' இல்லை. நாங்கள் ஒருவருக்கொருவர், இவரை விட அவர் பெரியவர், அவரைவிட இவர் பெரியவர் என்று பார்க்கும் உணர்ச்சியை வளர்த்துக்கொண்டது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்திலே

இருக்கிற தலைவனிலேயிருந்து தொண்டர்கள் வரை நாங்கள் ஒரே குடும்பம் என்று எண்ணி, அண்ணன்-தம்பிகளாகப் பழகி வருகிறவர்கள். ஆகவே இங்கே தனியார் தோத்திரம், தனியார் துதி என்பதற்கெல்லாம் எள்ளளவும் இடமில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் என்னுடைய அருமை நண்பர் வீராசாமி அவர்கள் மிகுந்த சிரமப்பட்டுப் புத்தகங்களைக் கொண்டு வந்து காட்டி, அதிலே காமராஜர் படம் இல்லையா ? நேரு படம் இல்லையா ? என்று கேட்டார்கள்

டாக்டர் ஹாண்டே விரும்பியது அது அல்ல.

டாக்டர் ஹாண்டே பேசும்போது இப்படிச் சொன்னால் நேரு, காமராசர் படம் போடப்பட்டது; அதையும்தான் எதிர்த்திருக்கிறோம் ; ஆகவே எதிர்க்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே அவர் விரும்புகிற படத்தைக்காட்ட விரும்புகிறேன்.

### முதலமைச்சராக இருந்தபோது ... ... ... ..

" மெட்ராஸ் இன்ஃபர்மேஷன் " என்ற நமது சர்க்கார் பத்திரிகையில், 1952-ஆம் ஆண்டு ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வெளிவந்த படம் இது. பர்சனாலிடி கல்டா ? இல்லையா ? எளியேனுக்குத் தெரியாது

(அவையில் மேற்படி படத்தை எடுத்துக்காட்டினார் முதல்வர்).

அது மாத்திரம் இல்லை. புதியதாக மாநில கவர்னர் வருகிறார், அந்த நேரத்தில் கவர்னர் படத்தை முதலில் போட்டுவிட்டு அடுத்துப் போடப்பட்ட படம் ராஜாஜியின் படம்தான். இது ' பர்சனாலிடி கல்டா ' இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

கலைமகள், கல்கி போன்ற பத்திரிகைகளில், அதிலும் முக்கியமாக அவருக்குத் தொடர்புடைய ' கல்கி' யில் அவர் கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றுக் கொண்டபோது " அரியாசனத்தில் ஜனக மகாராஜர் ", " ஜனக ராஜரிஷி " என்பதாக எல்லாம் வருணிக்கப்பட்டது.

### ராஜாஜியைக் கடவுளாக்கிய கதை !

அதுமாத்திரம் அல்ல. 1952-ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் ராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்டபோது, நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது எதிர்த்தரப்பில் இருந்து திரு. அந்தோணிப்பிள்ளை பேசிய பேச்சை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்:—

'' இந்தத் தீர்மானத்தின் நோக்கம் என்ன? இந்த அமைச்சரவை, இதற்கு முன்பிருந்த அமைச்சரவைகளைப் போல் சாமானியர்களை—மதிப்பு ஏதுமற்றவர்களைக் கொண்டதல்ல; இந்த அமைச்சரவை அற்புதமானது, தலைசிறந்த ராஜதந்திரியின் தலைமையில் இயங்குவது என்பதை நிரூபிப்பது தான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம்.

இப்போது காங்கிரசின் போக்கு என்னவென்றால், ஒரு தலைமை வழிபாட்டைத் துவக்குவதுதான். கடந்த தேர்தலிலும் இதைக் கண்டோம். காங்கிரஸ் ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதா ஓட்டுக் கேட்டது? கழுதையானாலும் குதிரையானாலும் காங்கிரஸ் வேட்பாளருக்குப் போடும் ஓட்டு—பெரும் தலைவரான நேருவிற்குப் போடும் ஓட்டு என்று கூறப்பட்டது. ஆனால் இந்தத் தலைமை வழிபாட்டுத் தத்துவம் தென்னாட்டில் எடுபடவில்லை. ஆகவே, ஒரு தென்னாட்டு ரட்சகரைத் தேட வேண்டிய அவசியம் காங்கிரசுக்கு ஏற்பட்டது. இந்தப் புதிய பூஜா முறையை ராஜாஜியே வளர்த்து விட்டார். தான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி—கடவுளின் முழு அதிகாரம் பெற்ற தூதுவர் என்றே தம்மைப் பற்றி ராஜாஜி கூறிக்கொண்டார்.

### '' நானே கடவுள்.''

இன்னும் சிறிது காலம் கழித்தால் ராஜாஜி 'நானே கடவுள்' என்று கூறிக்கொண்டால் கூட நான் வியப்படைய மாட்டேன். மழைக்காகப் பிரார்த்தியுங்கள் என்று ராஜாஜி கூறி—மழையும் பெய்து விடவே—சில காங்கிரசார் ராஜாஜியால்தான் மழை பெய்தது. ஆகவே அவர் கடவுள் என்றுகூடக் கூறத் துவங்கி விட்டனர்.

### செயற்கை மழைக்கு ஆராய்ச்சி ஏன்?

இது உண்மையானல், செயற்கை மழை வரவழைக்க, ஆராய்ச்சி நடத்த, மக்கள் பணத்தைச் செலவு செய்யாதீர் என்று மத்திய அரசுக்கு விசேடத் தீர்மானம் நிறைவேற்றலாம். எங்கேனும் வறட்சித் துயர் ஏற்பட்டிருந்தால், அங்கே ராஜாஜியை முதலமைச்சராக அனுப்பினல் போதும்'' என்பதாகத் திரு அந்தோணிப் பிள்ளை அவர்களால் 'பர்சனுலிடி கல்ட்' கூட அல்ல, கடவுளாகவே ராஜாஜி தன்னை ஆக்கிக்கொண்டிருக்கிறார் என்று குற்றம் சாட்டப்படுகிற நிலைமையில் அன்றைக்கு ராஜாஜி வளர்க்கப்பட்டார்.

செய்தி ஏடுகள் முதல் சினிமாப் படம்வரை.

அது மாத்திரம் அல்ல—ஏ.வி.எம். தயாரித்த சினிமாப் படத்தில் ராஜாஜி ஏர் உழுவது போலக் காண்பிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக ஏர் உழுது களைத்துப் போனவர் அல்லவா ?

அது மாத்திரம் அல்ல, பல ஆங்கில ஏடுகளில் இன்னும் பூணூலைக் காதிலே மாட்டிக்கொண்டு அவரே துண்டு துவைப்பது போல் படம் போட்டுக் காட்டப்பட்டது.

சுதந்திராக் கட்சியில் ராஜாஜிக்குப் பிறகு யார் ?

'பர்சனாலிடி கல்ட்' என்ற அந்தக் குற்றத்தை எங்கள் மீதும் எங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் சுமத்திய நேரத்தில் நான் எண்ணிக்கொண்டேன். ராஜாஜி உயிரோடு இருக்கும் போதுதான் 'ராஜாஜி ஹால்' என்று பெயரிடப்பட்டது. ராஜாஜி உயிரோடு இருக்கும்போதுதான் இந்த மாமன்றத்தில் அவரது பெரிய படம் திறந்து வைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சுதந்திராக் கட்சியினரைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், ராஜாஜி இல்லாவிட்டால் அதற்குப் பிறகு யார் ! அது 'பர்சனாலிடி கல்ட்' அல்லவா? அந்த முறையில் 'பர்சனாலிடி கல்'டை வளர்த்துவிட்டார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தில் கருணாநிதி இல்லாவிட்டால், அதைஅடுத்துப் பலபேர்இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் ஹாண்டே : முதல்வரே தனி நபர் துதியை ஊக்கப்படுத்துகிறார் என்பதே எனது குற்றச்சாட்டு. முன்பு இந்த அவையில் சீமைச்சாமி பேசும்போது தலையா, வாலா என்று முதல்வர் கேட்டார். இந்த மனப்பான்மை மாறி ஜனநாயகவாதியாக ஆகவேண்டும் என்று சொன்னேன்.

முதல்வர் : ஜனநாயகம் உங்களிடம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பின்னால் பேசுகின்ற நேரத்தில் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

### பிரதமர் இந்திரா காந்தியின் கடிதம்.

'ராஜமன்னார் குழு' அறிக்கை டில்லி போய்ச் சேர்ந்ததாகக் கூடத் தெரியவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ராஜமன்னார் அறிக்கை அங்கே போய்ச் சேர்ந்து, 22-ஆம் தேதி அன்று பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய கடிதத்தை இங்கே படிக்கிறேன்.

New Delhi,
22nd June 1971.

Dear Thiru Karunanidhi,

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the Centre State Relations Enquiry Committee. Your Government will probably examine the recommendations of this Report. As you know, the Administrative Reforms Commission also went into this question and has already submitted a report, which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issues and we intend to consult all the Chief Ministers.

With regards,

Yours sincerely,
(Sd.) INDIRA GANDHI.

பிரதமர் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு :—

புது டில்லி,
ஜூன் 22, 1971.

அன்புள்ள திரு. கருணாநிதி அவர்களுக்கு :

தாங்கள் ஜூன் 15-ஆம் தேதியிட்டு எழுதிய கடிதமும் அதனுடன் அனுப்பிய மைய-மாநில உறவுஆய்வுக் குழு அறிக்கையின் பிரதியும் கிடைக்கப் பெற்றேன். உங்கள் அரசு இந்தப் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்யும் என்று நினைக்கிறேன். இது குறித்து நிர்வாகச் சீர்திருத்தக் குழுவும் ஏற்கனவே ஆராய்ந்து அறிக்கையினை அளித்திருக்கிறது. மேற்படி அறிக்கையை நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

இந்தப் பிரச்சினையில் தங்களுடைய அரசின் கருத்துக்களை எங்களுக்கு அனுப்பினால் அவற்றையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

இது முக்கியமான பிரச்சினை ஆகும். இதுபற்றி எல்லா முதல்வர்களையும் கலந்து பேசுவதாக இருக்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
இந்திரா காந்தி.

என்பதாக இந்திய முதல் அமைச்சருடைய கடிதத்தில் கூட இது பற்றிப் பரிசீலிப்பதற்கு இந்தியத் தலைமை அரசு தயாராக இருப்பதற்கு அறிகுறி காணப்படுவதைக் குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

காலம் தாழ்த்திக் கடிதத்தை வெளியிடக் காரணம்.

22-ஆம் தேதி வந்த கடிதத்தை இதுவரையில் வெளியிடாமல் நேற்றையதினம் வெளியிட்டதற்குக் காரணம், 28-ஆம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இருக்கிறதே என்பதற்காகத்தான். முதலில் வெளியிட்டால் ஒருவேளை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், இப்படி முதலமைச்சர்களை எல்லாம் கூட்டிப் பிரதமர் பேசுவதா? அப்படியானால் மத்திய அரசு வலுவிழந்துவிடாதா? என்ற அளவில் தீர்மானம் வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக வெளியிடாமல் இருந்தேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வாதத் திறமை மிக்கவர். ஆகவேதான் தீர்மானத்தையும் இந்திரா காந்தியின் கடிதத்தையும் ஒன்றாகச் சொல்லித் தீர்மானத்திற்குப் பிறகு கடிதம் வந்ததாக இருக்கட்டும் என்று பேசினார்கள். அதை நான் புரிந்துகொண்ட காரணத்தால்தான் கடிதம் வந்த விவரத்தை இங்கே தெரிவித்தேன்.




நம்முடைய மத்திய அரசோடு மாநில அரசுக்கிருக்கின்ற உறவுகள் எந்தெந்த வகையிலிருக்க வேண்டும். அதிகாரங்கள் எப்படியெல்லாம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று

கூறியுள்ள ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கை, பேரவையிலும், மேலவையிலும் மிக விரைவில் விவாதிக்கப்படும் சமயத்தில் உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை வழங்கவிருக்கின்ற காரணத்தால், நான் அதைப் பற்றி இப்பொழுது விரிவாகப் பேச விரும்பவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நாங்கள் கூறுகின்ற மாநில சுயாட்சிக் கொள்கையை இன்றையதினம் எதிர்க்கின்ற சில பெரியவர்கள் கூட, ஒரு காலத்தில் சுயாட்சி தேவை என்பதற்கு அவர்கள் பல்வேறு கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் சுவாமிநாதன் அவர்கள் இங்கே பேசுகின்ற போது மாநில அரசு அதிகாரங்கள் அதிகமாகப் பெற வேண்டுமென்ற கொள்கைக்கு ஆதரவாகப் பேசியது வரவேற்கத் தக்க கருத்தாக இருந்தது. ஆனால் அவருடைய கட்சிக்குள்ளே இது விஷயத்தில் ஒருமித்த கருத்து இருக்கிறதா என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை.

பெரியவர் கே. சந்தானம் அவர்கள் " சுயராஜ்யா " பத்திரிகையில் ' ராஜமன்னார் குழு' வினுடைய அறிக்கையைப் பற்றி ஆதரித்துக் கட்டுரை எழுதியிருக்கிறார். அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்திக் கூறி வருகின்ற மாநில சுயாட்சிக்கொள்கைக்கு மூதறிஞர் ராஜாஜி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

இவை இரண்டும் ஒரேபத்திரிகையில் வருகின்ற காட்சியை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் நண்பர் சுவாமிநாதன் மாநில சுயாட்சிக் கொள்கையை ஆதரித்தும் பேசியிருக்கிறார்.

ராஜாஜிக்குப் பதில் சொல்ல.

ஒருவேளை ராஜாஜி அவர்கள் பார்த்துவிட்டு ஏன் இப்படிப் பேசியிருக்கிறாய் என்று கேட்டால், பதில் சொல்ல, ராஜாஜி அவர்கள் எழுதிய புத்தகமே இருக்கிறதென்று நண்பர் சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ' நமது ஜனநாயகம் ' என்ற புத்தகம், அதிலே சொல்லியிருக்கிறார்.

' இந்திய தேசீய வாழ்விலும், பண்பாட்டிலும் குடிகொண்டுள்ள பிரிவினைப் போக்குக் காரணமாக, சம அந்தஸ்துள்ள சுயாட்சி உறுப்புகள் அடங்கிய சமஷ்டி யூனியனை உருவாக்கவே நாம் உழைக்க வேண்டும். பிரிவினைப் பாடுகளில்லாத நாடு இந்தியா என்ற கருத்தினுலெழும் தேச பக்தி வேறு. எனவே சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க

முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.'' நேற்று நான் சட்டமன்றத்தில் பேசி, எடுத்துக் காட்டிப் பேசியது ஒரு பகுதி. இன்றையதினம் படித்துக் காட்டுவது ராஜாஜி அவர்கள் சுயாட்சிக்காகவே பாடுபட்டிருக்கிறார் என்பதற்காகத்தான் எடுத்துக் காட்டுகிறேன். இதற்கு ராஜாஜி அவர்கள் சமாதானம் சொல்லலாம். அன்று சொன்னதை இன்று மாற்றிக்கொள்ள எனக்கு உரிமையுண்டு என்று சொல்லலாம். அவருடைய முன்னுரையில் அவர் எழுதியிருப்பதை இங்கே எடுத்து வைக்கிறேன்.

'இதிலடங்கிய பிரச்சினைகள் பற்றி நான் சொல்லியிருப்பவை யாவும் எள்ளளவும் பட்சபாதமின்றித் தீர்க்க சிந்தனையின் பயனாக அடையப் பெற்ற முடிவுகள் என்பதை வாசகர்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.'

இது அவர்கள் முன்னுரையில் வெளியிட்டுள்ள கருத்து! 'நமது ஜனநாயகம்' என்ற புத்தகத்திலிருக்கிறது. ஒரு வேளை நண்பர் சாமிநாதனைக் கேள்வி கேட்டால் இது நல்ல ஆயுதமாகவிருக்கும் என்பதற்காக இந்தப் புத்தகத்தின் தலைப்பையும் எடுத்துச் சொன்னேன்.

மத்திய அரசு, மாநில அரசுகளுடைய எல்லா விவகாரங்களிலும் இன்றைய தினம் தலையிட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் தலையிட வேண்டிய விவகாரங்களில் தலையிடுவதில்லை. அதைத்தான் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வெகு வேகமாக எடுத்துச் சொன்னார்கள்.

### மத்திய அரசு காலதாமதம் செய்வது ஏன்?

காவிரி நதிநீர்ப் பிரச்சினை, மத்திய அரசு என்றைக்கோ தலையிட்டுத் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினை. 1968-ஆம் ஆண்டிலிருந்து இந்நாள் வரையில் இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும், தீர்ந்து விடும் என்று சொல்லி, கேரள முதலமைச்சரும், மைசூர் முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் கூடிக் கூடிப் பேசுகின்ற காட்சிகள் தமிழ் நாட்டிலும், அதைப் போலவே டெல்லியிலும், மைசூரிலும் நடந்து நடந்து; கடைசியாகப் பேச்சு வார்த்தை முறிந்து விட்டது என்று பேச்சு வார்த்தைக்கு முன்னிலை வகித்த மத்திய அரசு அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்களே ஒத்துக் கொண்டு, பேச்சுவார்த்தை முறிந்து விட்டது, இனித் தொடரக் காரணமில்லை என்று கண்டு கொண்ட காரணத்தினால், இதை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று அவர் சொன்னார். சொன்ன பிறகும் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலமாகியும் நாள் கடத்தி வருகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது போல், மைசூரில் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், நாடாளுமன்றத் திற்குப் பொதுத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், அதற்காக அப்பொழுது அங்கே சென்ற பிரதமர் இந்திரா காந்தி, நடுவர் தீர்ப்புக்கு இப்பிரச்சினையை விட்டு விடுவதென்று தைரியமாகச் சொன்னார்கள். இப்பொழுது இடையில் ஏன் குறுக்கிட்டு, அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு அதை விடு வதற்குத் தயங்குகிறார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

நாங்கள் ஒரு காலத்தில் திராவிட நாடு திராவிடருக்கே யாக வேண்டும் என்ற பிரிவினையைக் கேட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால் நாட்டினுடைய பாதுகாப்பு, சூழ் நிலை இவைகளையெல்லாம் உணர்ந்து அந்தப் பிரிவினைக் கொள் கையையே கைவிட்டு விட்டவர்கள் நாங்கள். இன்றைய தினம் நாங்கள் இந்த அரசுப் பொறுப்பிலிருக்கிறோம். அதிகாரங்கள் எங்களுக்கு அதிகமாகத் தேவை என்று கேட் கிறோம். கேட்கின்ற உரிமை எங்களுக்குண்டு. ஆனால் அந்த அதிகாரங்களைப் பெறுகின்ற வரையில் அந்த அதி காரங்களுக்குட்பட்டு நடக்கின்ற அடக்க உணர்ச்சியை இந்த அரசு பெற்றிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். வீராணம் திட்டத்திற்கு அண்ணா அவர்கள் காலத்தில் கால்கோள் விழா நடத்தினோம். ஆனால் அந்தத் திட்டத் திற்கு அனுமதி கொடுக்கக் கிட்டத்தட்ட $1\frac{1}{4}$ ஆண்டுக் காலமாகியது. அனுமதி கிடைக்கிறதோ இல்லையோ, எப் படியிருந்தாலும் தொடங்கலாமென்று நாங்கள் தொடங்கிட வில்லை. ஆனால் இன்றையதினம் மத்திய அரசு, மைசூரில் என்ன நடக்கிறதென்பதை ஏன் மறந்து விட்டதென்று நான் கேட்க விரும்புகிறேன்.

வீராணமாவது கொஞ்சம் பெரிய விஷயம். நான் உங்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இது சின்ன விஷயம். நம்முடைய கோட்டையைச் சுற்றி, கோட்டை மதகில், ஏராளமாகப் புல் பூண்டுகள் கிளம்பி யிருந்தன. நம்முடைய அதிகாரிகளை வரவழைத்து அந்தப் புல்பூண்டுகளைச் செதுக்கி, அழகான செடிகளை வைக்கக் கூடாதா? வண்ண மலர்களை வளர்க்கக்கூடாதா ?' என்று கேட்டேன். அதிகாரிகள் தலையைச் சொறிந்துகொண்டு உரைத்தார்கள் :- ' இந்தக் கோட்டை மத்திய அரசின் ராணுவத்திற்குச் சொந்தம். இந்தப் புல்பூண்டுகளைச் செதுக்க அவர்களிட மிருந்து அனுமதி பெற்றாகவேண்டு''மென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு சென்னைக்கு வந்திருந்த அன்றையப் பாது காப்புத் துறையினுடைய உதவி அமைச்சர் திரு. கிருஷ்ணா அவர்களை நானே நேரில் அழைத்து வந்து கோட்டையைச் சுற்றிக்காட்டிக் கோட்டையின் முகப்புப் பக்கத்தில் முளைத் துக்கிடக்கும் புல் பூண்டுகளைச் செதுக்கிவிட்டு அங்கே நல்ல செடிகளை வளர்ப்பதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள்

என்று கேட்டேன். அனுமதி வழங்குகிறேன் என்று சொல்லி விட்டுப்போனார். அதற்கு ஒரு கடிதம் எழுதிவிட்டுப் பிறகு இரண்டொரு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிய பிறகு சென்னைக்கு வந்திருந்தபோது மீண்டும் ஞாபகப் படுத்திய பிறகு, மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி கிடைத்துப் புல் பூண்டுகள் செதுக்கப்பட்டு நல்ல செடிகள் வளர்க்கப்படுகின்றன. அந்தக் காட்சியினை நீங்கள் நாள்தோறும் பார்க்கிறீர்கள். கோட்டையைச் சுற்றியிருக்கிற புல் பூண்டுகளைச் செதுக்க மத்திய சர்க்காருடைய அனுமதியை நாங்கள் நாடினோம். ஆனாலும் எங்களுக்கென்று அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு அடக்கத்தோடு நாங்களிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு மைசூரின் போக்கை ஏன் கண்காணிக்கவில்லை? திட்டக்குழுவினுடைய ஒப்புதலைப் பெறாமல் இன்றைய தினம் அங்கே அணைகளைக் கட்டிக் கொண்டே போகிறார்கள்.

### திரைப்படத்துக்கு அனுமதி மறுப்பு.

ஹேமாவதி, கபினி, ஹரங்கி போன்ற அணைகள் அங்கே கட்டப்படுகின்றன. அதிலே இன்னொரு வேடிக்கை. அதைப் பற்றிப் பேச அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கோட்டையில் நம்முடைய அமைச்சர்கள் அறையில் கூட்டப்பட்டது. அதை அரசு செய்திப்படமாக எடுத்தார்கள். அந்தச் செய்திப் படம் வெளியிடப்படுவதற்காகத் தணிக்கைக் குழுவிற்குச் சென்றது. தணிக்கைக் குழு அந்தச் செய்திப் படத்தை அனுமதிக்க மறுத்து விட்டது. என்ன காரணம் தெரியுமா? காவிரி நதி நீர் தகராறில் ''மத்திய அரசு காலதாமதம் செய்வது குறித்து'' ஆராய்வதற்காக அனைத்துக் கட்சித்தலைவர்களுடைய கூட்டமென்று படத்தில் காட்டப்பட்டது. அதற்குப் பின்னால் ஒரு வரி. அந்த வார்த்தை கூடாதென்று சென்சார் போர்டார் நிராகரித்து விட்டார்கள். அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. இங்கேயிருந்து டெல்லியிலிருக்கின்ற தலைமை அதிகாரிக்கு உடனடியாக அந்தப் படத்தை அனுப்பி அங்கே அப்பீல் செய்தோம். ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று மத்திய சர்க்கார் காலதாமதம் செய்து வருகிறது என்பதை எடுத்துவிடவேண்டும் என்றார். மத்திய சர்க்கார் காலதாமதம் செய்கின்றது என்ற வார்த்தைகள் இருக்கக் கூடாதென்று வெளியிட அனுமதி மறுத்து விட்டார்கள்.

பிறகு அனைத்துக் கட்சிக் கூட்டம் தமிழ்நாடு பூராவும் நடந்தது. சென்னையிலும் நடந்தது. நானும் மற்ற கட்சித் தலைவர்களும் சென்னையில் கலந்துகொண்டோம். அதுவும் செய்திப் படமாகப்பட்டு சென்சார் போர்டுக்குச் சென்றிருக்கிறது. அதையும் மறுத்து விட்டார்கள்.

இன்றைய தினம் அந்த அளவுக்கு சென்சார் போர்டி னுடைய அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசு தாமதம் செய்கின்றதென்று சொல்லக் கூடாதாம்.

ஆனால் ஒரு திரைப் படத்தில் இந்திரா காந்தியைப் போலவே வேடம் போட்டு அந்த அம்மையாரைக் கிண்டல் செய்வதுபோல் படமெடுக்கலாமாம்? அதை இங்கேயிருக் கின்ற சென்சார் போர்டு பார்க்கின்ற போது தணிக்கை செய்தார்களா?

நம்மால் திருப்பிச் செய்ய முடியாதா?

ஆனால், இன்றைக்கு மத்திய அரசு காலதாமதம் செய்கின்றது என்ற வார்த்தையை அனுமதிக்கவில்லை. ஆக, அவர்கள் அவைகளைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை மத்திய அரசின் அதிகார பீடம் இருக்கிறதே, அதற்கு ஒரு சிறு மாசும் யாரும் கற்பிக்கக் கூடாது என்று கருதுகிறார்கள். அதிலே வெட்கப்படுகிறவர்கள், காலதாமதம் செய்யாம லிருக்கட்டுமே! காலதாமதமாவதைத் தவிர்க்கட்டுமே!

இவர்கள் ஹேமாவதியில், கபினியில், ஹரங்கியில், பேரணைகள் கட்டும் திட்டத்தைத் தடுக்க முற்படாவிட் டால், நாளைக்குத் தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தில் ராஜ ராஜசோழன் சிலையை வைக்கக் கூடாது என்று சொல்கிறார் களே, அதே இடத்தில் நாம் இராஜராஜ சோழனுடைய சிலையை வைக்க முடியாது என்று கருதுகின்றார்களா?

அவர்களுடைய பொறுப்பிலிருக்கிற தீவுத் திடலில், அவர்கள் அனுமதி பெறாமலேயே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்க முடியாது என்று கருதுகின்றார் களா? அப்படி அறிவித்துக் கூட்டம் நடத்தினால், நமது போலீசாரை மத்திய அரசின் போலீசார் வந்து விரட்டிவிடு வார்களா? எனக்குப் புரியவில்லை.

இங்கும் 'இருண்டு' போகவேண்டுமா?

நாம் பண்போடு நடந்து கொள்கிறோம். அடக்கத் தோடு நடந்துகொள்கிறோம். அமைதியுடன் நடந்துகொள் கிறோம். பொறுப்போடு நடந்துகொள்கிறோம்! அவை களை எல்லாம் இழந்து விட்டு, மைசூரைப் போல நடந்து கொள்வதற்கு இங்கேயும் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தான் மத்திய அரசுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு நினைவில்லை. அது அஸ்ஸாமோ அல்லது மேற்கு வங்கமோ என்று—இரண்டிலொன்று என்று கருதுகிறேன்

அவர்களுடைய கோரிக்கை நிறைவேருத காரணத்தால் ஓராண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி சுதந்திர நாளினைக் கொண்டாட முடியாது என்று அறிவித்தார்கள்.

அதேபோல, இன்றைய தினம், மைசூரில் எடுக்கப்படு கின்ற கபினி அணையால், ஹரங்கி அணையால், காவிரி வறண்டு போய், தமிழகம் பத்தாண்டுக் காலத்திற்குள் வறண்டு விடுமாளுல், அப்படி இருண்டுபோகின்ற தமிழகத்தை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்பதைக் காட்டுவதற்காக இந்த ஆண்டு சுதந்திர நாள் இருண்டு போய் விடட்டும் என்று கூறுவதற்கு நம்மாலும் முடியும் !

இவைகளெல்லாம் ஏற்படாதவாறு மத்திய அரசு பார்த் துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் நான் நம்புகிறேன் மத்திய அரசிடமிருந்து சாதக மான பதில் வருமென்று.

8-ஆம் தேதியன்று பேரவையிலும், 9-ஆம் தேதியன்று மேலவையிலும் காவிரி நதி நீர்த் திட்டம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்பு சாதகமான பதில் அங்கே யிருந்து கிடைக்குமென்று நான் கருதுகிறேன். நான் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இதைப் பற்றியெல்லாம் 7-ஆம் தேதி எல்லாக் கட்சித் தலைவர்களோடும் கலந்து அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவிருக்கிறேன்.

### மதுவிலக்குக் கொள்கை.

அடுத்தபடியாக இந்த மாமன்றத்தில் பேசப்பட்ட முக்கியமானது மதுவிலக்குக் கொள்கை பற்றியது. மது விலக்குக் கொள்கை இங்கே இருக்கிற நம்மால் மாத்திரம் அல்ல—உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும்—பல்வேறு நாட்டு மக்களாலும், பல்வேறு நாட்டு அரசுகளாலும் சட்ட பூர்வமாக அமல்படுத்தத் திட்டமிட்டுத் தோற்றுப்போய் இருக்கிறது. இதை வரலாற்றுச் சான்றுகள் நிறையக் காட்டுகின்றன.

### மற்ற நாடுகளில் மதுவிலக்கு.

அமெரிக்க நாட்டில் 1919-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16-ஆம் நாள் அரசியல் சட்டத்தையே திருத்தி மதுவிலக்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். பதினுன்கு ஆண்டு காலம் அமல்படுத்தப்பட்டதில் கடைசி யாகக் குற்றங்கள் அதிகமாயின. கள்ள மதுவைத் தடுக்க முடியவில்லை. கள்ளக் கடத்தல் அதிகமாயிற்று. மது

விலக்கை அமல்நடத்த வேண்டியவர்கள் லஞ்சப் பேயாளுர் கள் என்று கூறப்பட்டு 1938-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ஆம் தேதி மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட் டிருக்கிறது.

பின்லாந்து நாட்டில் 1907-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டு 1931-ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தின் பயனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. குடிவெறி அதிகமாகி இருப்பதாகவும், குற்றம் புரிவோர் தொகை அதிகமாகி விட்டதாகவும் அந்தக் குழு கூறியது. அந்த முடிவின்படி 1932-ல் அந்த நாட்டில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

நார்வே, 1919-ல் மதுவிலக்கைக் கொண்டு வந்தது. அது 1927-ல் ரத்துச் செய்யப்பட்டது.

நியூ பவுண்ட்லாந்து, 1915-ல் மதுவிலக்கை அமல் செய்தது. 1924-ல் அதை ரத்துச் செய்தது.

துருக்கி 1920-ல் மதுவிலக்கை அமல்படுத்தியது. 1924-ல் அதை ரத்துச் செய்தது மாத்திரமல்ல; 1926-ல் அரசாங்கமே அந்த வியாபாரத்தை மேற்கொண்டது.

நான் முஸ்லீம் லீக் உறுப்பினர்களுக்கு ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக மாளுலும், காங்கிரசாளுலும், கம்யூனிஸ்டாளுலும், முஸ்லீம் லீக்காளுலும், பி.எஸ்.பி. கட்சியாளுலும், தமிழரசுக் கழகம் ஆளுலும், சுதந்திராவாளுலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாளுலும் தமிழக அரசைப் பொறுத்த வரை யில் மதுவிலக்கு, கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை. அதில் இருவேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆளுல் அதைச் சட்டபூர்வமாக அமல்படுத்திவிட முடிந்ததா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

### மத அடிப்படையில் மதுவிலக்கு....

அன்றே சொன்னேன். முஸ்லீம் மத அடிப்படையில் மதுவிலக்குக் கொள்கையைப் பொன்னேபோல் போற்ற வேண்டிய துருக்கி, சிரியா, ஈராக், ஈரான், எகிப்து, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய முஸ்லிம் நாடுகளில் சட்டபூர்வமாக மதுவிலக்கை அமல்படுத்த முடியவில்லை. அங்கெல்லாம் சட்டம் இல்லை என்பதற்காக நாட்டு மக்கள் அத்தனைபேரும் குடித்துக்கொண்டிருக்கிருர் கள் என்று வாதிடவில்லை. அங்கேயும் தங்களது மத

மார்க்கத்திற்கு விரோதமான வகையில் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். உண்மையில் ஆதரவு இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப்.—அரேபிய தேசத்தில் மதுவிலக்கு அமலில் இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

முதல்வர்.—அரேபிய தேசத்தில் மட்டுமிருந்தால் போதாது என்பது என் வாதம்.

இங்கும் சட்டம் தளர்த்தப்படுவதன் மூலம் இந்தியப் பேரரசு இந்தியப் பூபாகம் முழுமைக்கும் மதுவிலக்கை அமல்படுத்த முன்வருகிற நாள் வரை நாம் அந்தச் சட்டத்தை ரத்துச் செய்வது என்பது கூட இல்லை—அதற்கு ஓய்வு கொடுப்பதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை பேரும் குடிகாரர்களாக மாறிவிடுவார்கள் என்று நாம்கூறிட முடியாது. அந்தக் கருத்தைத்தான் முஸ்லீம் லீக் உறுப்பினர் மொய்தீன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.




மதுவிலக்கைப் பற்றி ஆராய்வதற்காக நீதிபதி தேக்சந்த் என்பவர் தலைமையில் மத்திய திட்டக் குழு ஒரு கமிட்டியை 1963-ல் நிறுவியது. இந்தக் கமிட்டி ஏன் நிறுவப்பட்டது என்றால் 1956-ல் நாடாளு மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"This House is the opinion that Prohibition should be regarded as an integral part of the Second Five Year Plan and recommands that the Planning Commission shouldformulate the necessary programme to bring about nation-wide Prohibition speedily and effectively".

''இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரிக்க முடியாத அம்சமாக மதுவிலக்கு கருதப்படவேண்டும் என்று இந்த அவை கருதுகிறது. எனவே நாடு முழுவதும் தீவிரமாகவும் திறமையாகவும் மதுவிலக்கை அமல்படுத்தத் தேவையான நடைமுறைகளை வகுக்குமாறு திட்டக் குழுவுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது''.

### மத்திய அரசால் செயல்படுத்த முடிந்ததா?

1963-ஆம் ஆண்டிலே இந்தக் குழு அமைக்கப்பட்டு, நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். பல்வேறு ஆராய்ச்சிகளை இக்குழு நடத்தியது. 1963-லே ஓர் அறிக்கையைக் கொடுத்தது, அந்தக் கமிட்டியார் என்ன என்ன சிபாரிசுகளைச் செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதில் முக்கியமான சிபாரிசு காது மருந்துகளில் ஆல்கஹால் இருக்கிறது. ஒரு மாநிலத்தில் மாத்திரம் ஆயிரக் கணக்கான பவுண்டுகள் அந்த மருந்து செலவாவதாகத் தெரிகிறது. ஒரு சில மாநிலங்களில் அதிக விற்பனையாகிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்தது. அடுத்தது அளவுக்கு மீறிய ஆல்கஹால் உள்ள 'டிஞ்சர்' உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கமிட்டி சிபாரிசு செய்தது. இவையெல்லாம் மத்திய அரசால் செயல்படுத்த முடியவில்லை.

மருந்துகள் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யவேண்டுமென்று 'தேக்சந்த் கமிட்டி' கூறியது. அதையும் மத்திய அரசு காது கொடுத்துக் கேட்கவில்லை. அஸ்வா, அரிஷ்டம் ஆகிய மருந்துகள் முறைப்படி தயாரிக்கப்பட்டால் அதில் 10 முதல் 12 பர்செண்ட் 'ஆல்கஹால்' தான் இருக்க முடியும். ஆனால் 80 முதல் 90 பர்செண்ட் வரை ஆல்கஹால் உள்ள அரிஷ்டங்கள், அஸ்வா போன்ற மருந்துகள் விற்பனைக்கு வருகின்றன. இதற்கு 'டிரக்ஸ் ஆக்ட்' திருத்தப்பட வேண்டும், என்று 'தேக்சந்த் கமிட்டி' கூறியது. அது செய்யப்படவில்லை.

### கள் குடிக்கக் கட்டுப்பாடுகள்.

அடுத்து, 'கள்ளச் சாராயத்தைவிடக் கள் ஆபத்து குறைந்தது' என்று அந்தக் கமிட்டி கூறியது. சில பாதுகாப்புகளுடன் கள்ளை அனுமதிக்கலாம் என்றும் அது கூறியது. கமிட்டியின் குறிக்கோள் மதுவிலக்குதான். ஆனால் இடையில் சில சிபாரிசுகளைக் கூறியது. அவை 5 சதவிகிதம் ஆல்கஹால் உள்ள கள்ளை அனுமதிக்கலாம். கள் புளித்து விடாமல் இருக்கக் குளிர்பதனச் சாதனங்களைப் பயன்படுத்தலாம். விற்பனையாகும் இடங்களில் மட்டுமே குடிக்க வேண்டும். வீட்டிற்கு எடுத்துச் சென்று குடிக்கத் தடை விதிக்க வேண்டும். கள் மீதுள்ள 'தீர்வை' குறைவாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் கள்ளச் சாராயத்தை நாடிப் போகமாட்டார்கள், எனப் பல சிபாரிசுகளை அந்தக் கமிட்டி செய்தது.

### சட்ட அமலும் சாராய விற்பனையும்.

நாடு முழுவதிலும் உள்ள கள்ளச் சாராயத்தின் விற்பனைக் கணக்குகளை அந்தக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. 1963—64-ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் கள்ளச் சாராய விற்பனை 52 கோடி ரூபாய். அதில் மது அருந்துகிற மாநிலங்களில் விற்பனை 9 கோடி ரூபாய். மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கின்ற மாநிலங்களில் கள்ளச் சாராய விற்பனை 43 கோடி ரூபாய். மொத்தம் 52 கோடியில் மது அருந்துகிற மாநிலங்களில் 9 கோடி ரூபாய்; மதுவிலக்கு அமலில் உள்ள மாநிலங்களில் 43 கோடி ரூபாய் விற்பனை யாகிறது. இதில் கள்ளச் சாராயம் மாத்திரமே சேர்க்கப் பட்டிருக்கிறது. இதர மது வகையறுக்கள் சேர்க்கப்பட வில்லை. இது அரசாங்கத்திற்கு வராமல் போகிற பணம் என்பதையும் அந்தக் குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.

### மதுவிலக்கும், மக்கட்தொகை பெருக்கமும்.

அடுத்து 'வெட் ஏரியா'வில் மதுவிலக்கிற்கு முன்பு 100 யூனிட்டுகளாக இருக்குமானால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 20 சதவிகித மக்கட் தொகை அதிகரிப்பதற்கும் இதர நிலைகளுக்கும் பிறகு, அது 130 யூனிட்டாக உயர்ந்திருக்கிறது. 'டிரை ஏரியா'வில் 100 யூனிட்டாக இருந்தது பத்தாண்டு களுக்குப் பின்பு 90 யூனிட்டாகக் குறைந்திருக்கிறது என்பதை யும், இது எல்லாம் கள்ள மது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது எனவும் தேக்சந்த் குழு கூறியுள்ளது.

நாடெங்கும் மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தந்த விவரங்கள்தான் நான் குறிப்பிட்டவை.

### மதுவிலக்கும், காங்கிரஸ் கட்சியும்.

1957-ஆம் ஆண்டும், 1962-ஆம் ஆண்டும் காங்கிரஸ் கட்சி யின் தேர்தல் பிரச்சாரத்தின்போது என்ன அறிக்கைகளை வெளியிட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"Prohibition has long been the Congress policy and it has been introduced in some parts of the country. Progressive steps will be taken to introduce it in other parts."

''மதுவிலக்கு நீண்ட காலமாகவே காங்கிரசின் கொள்கை யாக இருந்து வந்திருக்கிறது; அது நாட்டின் சில பகுதிகளில் அமுலாக்கவும்பட்டிருக்கிறது. அதை நாட்டின் மற்றப் பாகங் களிலும் அமல்படுத்தவும் முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.''

இது 1957-ஆம் ஆண்டின் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.

"The Congress Policy of Prohibition should be maintained and encouraged."

''காங்கிரசின் மதுவிலக்குக் கொள்கை பேணப்பட வேண்டும்; ஊக்குவிக்கப்பட வேண்டும்!''—

இது 1962-ஆம் ஆண்டின் காங்கிரஸ் அறிக்கை.

### மதுவிலக்கும், மராட்டிய மாநிலமும்.

1962-ஆம் ஆண்டு காங்கிரஸ் அறிக்கைக்குப் பிறகு மராட்டிய மாநிலத்தில் முதலமைச்சர் அவர்கள் சட்ட சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். 1963-ல் அதாவது 'தேக்சந்த் கமிட்டி' நிறுவப்பட்ட சில மாதங்களுக்குப் பிறகு, மதுவிலக்குக் கொள்கையை மராட்டியம் தளர்த்தத் தொடங்கியது. அப்போது மாநில முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

மராட்டிய முதல்வர் 1963 டிசம்பர் 31-ஆம் தேதி அறிவித்தது இது:

Beverages with an alcoholic content not exceeding 3·5 percent will be made freely available.

Toddy with alcoholic content not exceeding 3·5 percent will be made freely available.

3·5 சதவிகிதத்துக்கு மேற்படாத போதைப் பொருள் உள்ள குடிவகைகள் தாராளமாகக் கிடைக்கும்.



3·5 சதவிகிதத்துக்கு மேற்படாத போதைப் பொருள் உள்ள கள் தாராளமாகக் கிடைக்கும் என்கிற அளவுக்கு மராட்டிய மாநிலத்தில் மது விலக்கு தளர்த்தப்பட்டது.

மராட்டிய முதல்வர் மேலும் கூறியதாவது :

"However, the experience of the implementation of this policy over the last 14 years compels us to take a more realistic and rational view of the situation as it has developed. We find that the biggest factor which works against Prohibition is not the consumer who is only the victim of the evil of drinking but illicit distillor, the bottlegger and trafficker"

"கடந்த 14 ஆண்டுகளாக மதுவிலக்கை அமல் படுத்தியதில் ஏற்பட்ட அனுபவத்தினால் மேலும் யதார்த்த மான ஒரு கண்ணோட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறது. மதுவிலக்குக்கு எதிரான பெரும் அம்சம், குடிப்பவர்கள் அல்ல—அவர்கள் பழக்கத்துக்கு இரையானவர்கள். ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சு வோர்—கடத்தல்காரர்—விற்பனையாளர்கள் இவர்கள்தான் மதுவிலக்குக் கொள்கையின் எதிரிகள்" என்று பேசி, 63-ஆம் ஆண்டு மதுவிலக்குக் கொள்கை மராட்டியத்தில் தளர்த்தப் பட்டது.

### அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தமிழ்நாடு காங்கிரசின் கருத்து.

1968-ஆம் ஆண்டு குனஹா நகரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் தேசம் முழுவதும் பூரண மதுவிலக்கு அமல் செய்ய ஏழு ஆண்டுக் காலம் அவகாசம் தரவேண்டும் என்ற ஒரு திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது திரு. நிஜலிங்கப்பா அவர்கள்தான் தலைவராக இருந்தார். திரு. சி. சுப்பிர மணியம் தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக இருந்தார். திருமதி சுசீலா நய்யார் போன்ற காந்தியடிகளைப் பின்பற்றிய வீராங் கனைகளும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் 1968-ல் இருந்து இன்னும் 7 ஆண்டுக் காலத்தில் இந்தியா முழுமையிலும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்பது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், மது விலக்குப் பிரச்சினையை உணர்ச்சிப்பூர்வமாக அணுகக்கூடாது என்றும், நடைமுறையில் அமல் செய்யும் வகையில் அணுக வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அந்த நேரத்தில் தமிழ் நாட்டிலே உள்ள ஒரு பத்திரிகை எழுதிய தலை யங்கத்தைத் தலைவரின் அனுமதியோடு படித்துக் காட்டு கிறேன்.

### இந்த நாளிதழ் அன்று என்ன எழுதியது ?

'பஞ்ஜியில் நடைபெறும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும், அதற்கு முன்னால் நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்திலும் மதுவிலக்கு பற்றிக்

காரசாரமான விவாதங்கள் நடைபெற்றிருப்பதில் வியப்பில்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மது விலக்கினை ஒரு அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நமது அரசியல் சட்டமும் கட்டளைக் கொள்கைகள் பகுதியில் அதைத் தெளிவாக வற்புறுத்தியுள்ளது.

ஒன்றைக் கொளகையளவில் ஒப்புக் கொள்வது வேறு; அதை நடைமுறையில் அமல் செய்வது பற்றி அபிப்பிராய பேதங்கள் எழுவது வேறு.

பூரண மதுவிலக்குக் கொள்கையினை எப்போது அமல் செய்வது, எப்படி அமல் செய்வது என்பது பற்றிக் காங்கிரஸ் மேலிடத்தில் நிலவிடும் கருத்து வேற்றுமையினை யாரும் பெரிதுபடுத்தத் தேவையில்லை.

மதுவிலக்கு என்பது வெறும் ஒழுக்கக் கோட்பாடு மட்டுமல்ல. அதற்குப் பின்னே பொருளாதார விளைவுகளும் உண்டு. எனவே, மதுவிலக்கினை அமல் செய்யும் விஷயத்தில் பல்வேறு ராஜ்ய முதல்வர்களும் காட்டியுள்ள தயக்கத்தினை அலட்சியப்படுத்தவோ அல்லது மதுவிலக்கு விஷயத்தில் அவர்கள் தேவையான ஆர்வம் காட்டத் தவறிவிட்டார்கள் என்று விமர்சிப்பதோ அவர்களுக்கு நியாயம் வழங்கியது ஆகாது.

பூரண மதுவிலக்கோ அல்லது பகுதி மதுவிலக்கோ அமலாகும் ராஜ்யங்களிலேகூட அது முழு வெற்றியடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. உதாரணமாகப் பூரண மதுவிலக்கு நடைமுறையிலிருக்கும் தமிழகத்தில் மது இறக்குவதும், விற்பதும் சட்டப்படி தடைப்படுத்தப்பட்ட காரியங்கள் ஆனாலும், ஆங்காங்கே பரவலான குடிசைத் தொழிலாக அது அமோகமாக நடைபெற்று வருவதைச் சட்டம் கண்ணை மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இப்படி ஒரு சட்டத்தையும் போட்டு, அது மீறப்படுவதைக் கையாலாகாத்தனத்தோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதை விட அப்படியொரு சட்டத்தை நிறைவேற்றுமல் இருப்பதே விவேகமான செயலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தவிர மதுவின் தீமையையும் ஒழிக்க முடியாமல் அதனால் கிடைக்கும் வருமானத்தையும் இழப்பது, ஒழுக்கம், நிதி ஆகிய இரண்டு முனைகளிலும் பெரு நஷ்டம் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

கௌரவப் பிரச்சினையாகக் கருதிச் சில பல திட்டங்களை மேற்கொள்ளுவதை விட சமூகநலனுக்காகச் சாத்தியக் கூறுகளை மனத்தில் கொண்டு திட்டமிடுவதும் செயல்படுத்துவதும் வரவேற்கக் கூடியதாகும்.

மதுவிலக்கு கூடாது என்பதல்ல நமது வாதம், ஒழுங்காக அமல் செய்ய முடியவில்லையானால், நிதிநிலை வசதி கருதி அதைக் கைவிடுவதுகூடத் தவறு அல்ல என்பதே நமதுநிலை.''

இது 'நவசக்தி'யின் தலையங்கம். 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் தேதியன்று 'நவசக்தி' பத்திரிகையில் எழுதியுள்ள தலையங்கம்.

ஆனால் இன்றைக்கு வேறே எழுதுவார்கள். எனினும் அன்றைக்குக் கைவிட்டுவிடுவது சாலப்பொருத்தம் என்றும், மாநில முதல்வர்களே பலர் அலட்சியப்படுத்தும் காரணத்தாலும், ஆர்வம் காட்டவில்லை என்பதாலும் அவர்கள் மீது குற்றம் கூறக் கூடாது என்றும் அன்றைக்கு 'நவசக்தி' பத்திரிகை எழுதியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**அன்று அண்ணாவுக்கு மாசு தேடியோர்**
**இன்று அண்ணாவைப் பற்றிப் பேசுகிறார்கள்.**

அண்ணாவைப் பற்றிச் சொன்னார்கள். அண்ணா வழியிலே வந்தவர்கள், அண்ணாவின் வழியில் முழுக்க முழுக்கப் பின் செல்லுபவர்கள், அதை மீறிப்போகலாமா என்றெல்லாம் கேட்டார்கள்.

அண்ணாவின் ஆன்மா கண்ணீர் விடும். அண்ணாவின் ஆன்மா சபிக்கும் என்று காங்கிரஸ் உறுப்பினர்களும் பேசினார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணா அவர்கள் தீவிரமாக மதுவிலக்கை அமல் படுத்துவதாகச் சொன்ன போது குன்ஹா நகர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், சட்டமன்றத்தின் முன்னாள் கொறடா என்ன பேசினார் தெரியுமா?

''குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக்கூடாது, அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதன் மந்திரி உத்தரவிட்டுள்ளதாக'' அவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குற்றஞ் சாட்டினார்.

மதுவிலக்குக் குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக் கூடாது அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதன் மந்திரி (அப்பொழுது அண்ணா முதலமைச்சர்) உத்தரவிட்டுள்ளதாகவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சொன்னார். அண்ணா தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்துவதாகச் சொல்வதற்காக அவருக்குப் பரிசாக அந்தப் பேச்சு அமைந்திருந்தது!

இப்பொழுது வேண்டுமென்றே அண்ணாவை இழுக்கிறார்கள். அண்ணாவின் கொள்கையை மீறி விட்டீர்கள். 'நீ யார்?' என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள்.

நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் ஐந்தாண்டுக்காலத்தில் தமிழகத்திலுள்ள அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழ்தான் பாடமொழியாக இருக்கும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

அந்தத் தீர்மானத்தை நாங்கள் அமல் படுத்துவதற்காகச் செயல் வடிவத்திற்குக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் எழுந்த கிளர்ச்சிகளை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல.

அதற்காக 'லட்சுமணசாமி முதலியார் கமிட்டி போடப்பட்டது. அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்குப் புறம்பாகத் தமிழகம் முழுவதும் எல்லா இடங்களிலும் தமிழே பாட மொழியாக இருக்கும் என்பதற்கு மாறாக—லட்சுமணசாமி முதலியார் சிபாரிசின் அடிப்படையிலே இன்றைய தினம் அரசுக் கல்லூரிகளில் கூட ஆங்கிலத்தைப் பாட மொழியாக விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நிலையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால், அண்ணா அவர்கள் காலத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை என்ன செய்தீர்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்க வேண்டாமா? கேட்கவில்லை, காரணம், அவருக்குச் சாதகமான விஷயம்.

அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்; கால வேறுபாடு, கால மாறுபாடு, நாட்டு நிலைகளை உணர்ந்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து முடிவெடுத்து, அந்தத் தீர்மானத்தைக் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதும்கூட மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் சொல்கிறோம்.

சுதந்திராக் கட்சியின் சார்பிலும் சிலர் மதுவிலக்கை ரத்துச் செய்வதை வரவேற்கிறார்கள். சாதிக் அலி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரும் மேலவையிலே வரவேற்றிருக்கிறார். கீழவையில் எதிர்க்கிறார்கள். மேலவையில் திரு ஈசுவர மூர்த்தி அவர்கள் வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

கடைசியாக நம்முடைய திரு பொன்னப்ப நாடார் அவர்களும் என்ன பேசினார்கள்? மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது என்ற கருத்தைப் பேசிவிட்டுக் கடைசியாக "சட்டத்தைப் போடுங்கள். ஜாக்கிரதையாக இருங்கள்" என்று சேலத்தைச் சுட்டிக் காட்டி, ஒத்தி வைத்ததற்கு அவரும் அனுசரணையாகத்தான் வந்தார் . . . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்.—தலைவரவர்களே, நான் அனுசரணையாக இல்லை என்ற தன்னிலை விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு இருக்க வேண்டு

மென்று பரிபூரணமாக நம்புகிறேன். அதற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பு அல்ல.

முதல்வர்.—களங்கம் கற்பிக்கவும் மாட்டேன். காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்.

டாக்டர் ஹாண்டே.—இந்த குறிப்பிட்ட பிரச்சினையில் அண்ணாவின் பாதையிலிருந்து மாறுவதேன் என்பதுதான் எனது கேள்வி. இது தவிர மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு ஆதரவாக முதல்வர் அற்புதமான உரை ஆற்றியிருக்கிறார். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல் என்ன என்பதே என் கேள்வி.

### அண்ணா வழி என்ன?

முதல்வர்.—அண்ணா வழி ஒரு நல்ல ஜனநாயக வழி. அதைப் பின்பற்றுபவர்கள் நாங்கள். ஜனநாயக வழிகளில் ஒரு காலத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் வேறொரு காலத்திலே பரிசீலிக்கப்படலாம். அண்ணா அவர்கள் திராவிட நாடு கொள்கையில் அழுத்தந் திருத்தமாக இருந்தார்கள். பிறகு நாட்டின் நிலை, இந்தியாவின் பாதுகாப்பு இவைகளை உத்தேசித்துத் திராவிட நாடு கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்காகப் பொதுக் குழுவைக் கூட்டினார்கள். பொதுக்குழு ஆராய்ந்து, பரிசீலித்து, பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கூறியது. அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டார்கள்.



சனநாயகவழி

அதைத்தான் நாங்களும் கடைப்பிடித்து வந்தோம். மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று பொதுக்குழு விரும்பியது. பொதுக்குழு அமைச்சரவைக்கு இட்ட கட்டளைக்கு நாங்கள் தலை வணங்கினோம்.

அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலைவணங்கினார்கள். நாங்களும் ஜனநாயகத்திற்குத் தலைவணங்குகிறோம். ஆகவே, இது அண்ணா வழி தானே தவிர, வேறல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—அண்ணாவிற்கு மதிப்பளிக்கவில்லை, பொதுக்குழுவிற்குத்தான் மதிப்பளித்திருக்கிறீர்கள்,

முதல்வர்.—அண்ணா வணங்கிய பொதுக் குழுவிற்கு நாங்கள் தலைவணங்குகிறோம். நாங்கள் கல்கித் தோட்டத்திற்கு மாத்திரம் தலை வணங்குபவர்கள் அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—அண்ணாவின் பெயரைச் சொல்லி ஊரை ஏமாற்றுகிறார்கள்.

(பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள்.)

பேரவைத் தலைவர்.—அதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம்.

முதல்வர்.—தயவுசெய்து வேண்டாம். அண்ணாவின் பெயரைச் சொல்லி நாங்கள் ஊரை ஏமாற்றுகிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் ஊரை ஏமாற்றுகிறோமா, இல்லையா என்பது ஊருக்குத் தெரியும். உளறுவாயர்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை.

('ஷேம், ஷேம்' என்ற குரல்கள்.)

டாக்டர் எச். வி. ஹாண்டே.—சொல்வதற்கு உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது?

(பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று சொல்லிக் கொண்டு எழுந்து நின்றார்கள்.)

பேரவைத் தலைவர்.—எல்லாரையும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். ஊரை ஏமாற்றுகிறார்கள் என்று சொல்வதைச் சபைக் குறிப்பிலே இருக்கலாம் என்று முதலமைச்சரவர்கள் பெருந்தன்மையுடன் கூறியதால், என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர் சொல்லியதை 'என்ன யோக்கியதை' என்று சொல்லியதைத் திரும்பப் பெற வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—எதை வாபஸ் வாங்க வேண்டும்?

பேரவைத் தலைவர்.—'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று சொல்லுவதை இந்த மன்றத்தின் மரபுக்கு முரணான வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும்.

அமைச்சர் அன்பழகன்.—கனம் உறுப்பினர் அவர்கள் முதலில் அவைத் தலைவருக்குப் பணிய வேண்டும். அதன் பின்னரே, அவர் விளக்கம் எதுவும் தர விரும்பினால் அதைத் தனிப்பட்ட முறையிலே அவைத் தலைவரிடம் தெரிவிக்கலாம். அவைக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. அவர் தன் உணர்ச்சிகளை இங்கே பரிமாற வேண்டியதுமில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனல் . . . . . . . . . .

யார் உணர்ச்சியையும் புண்படுத்தமாட்டோம் !

முதல்வர்.—நான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வது நல்லது அல்ல என்ற கருத்தை-உணர்ச்சியை எப் பொழுதும் புண்படுத்த விரும்பவில்லே.

டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் வேண்டுமானல் எங்கள் உணர்ச்சிகளேப் புண்படுத்த விரும்பலாம். ஆனல் நான் யாருடைய உணர்ச்சியையும் புண்படுத்த விரும்பவில்லே.

மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசினர் களே, அது திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல! தமிழரசுக் கழகத்தின் சார்பிலே சொல்லப்பட்டதும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? பி.சோ. கட்சியினர் கூறிய கருத்து முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல!

அவர்களெல்லாம் உள்ளபடியே மதுவிலக்கில் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள். ஆகவேதான் உணர்ச்சி பூர்வமாகப் பேசினர்கள். அந்த உணர்ச்சிகளுக்கு நான் என்றைக்கும் மதிப்பளிக்கத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் மதிப்பளிப் பதற்குத் தயாராகிக்கொள்ள வேண்டும். ஒருவருக் கொருவர் மரியாதை கொடுக்கத் தயாராகிக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு அண்ணுவின் வழியைப் பின்பற்றுகிருேம் என்று சொன்னல்—அண்ணுவின் வழி ஜனநாயக வழி; அந்த ஜனநாயக வழியைப் பின்பற்றுகிருேம். எந்தக் கருத்தை யும் பொதுக் குழுவில் வைத்துப் பொதுக் குழுவின் கட்டளேயை ஏற்றுக் கொள்வதுதான் அண்ணுவின் வழியாகும்.

அதே வழியைப் பின்பற்றித்தான் இந்தக் கொள் கையைப் பற்றிப் பொதுக் குழுவின் முன்னல் வைத்து ஆய்ந்து, பொதுக்குழுவின் கட்டளேயை ஏற்றுக் கொண் டிருக்கிருேம்.

ஆகவே இது அண்ணலின் வழியா, அண்ணலின் வழியா என்று கேட்டால் இந்தியாவில் இருக்கிற காங்கிரஸ் முத லமைச்சர்கள் மதுவிலக்கை ரத்து செய்து விட்டதால் அவர்கள் எல்லாம் காந்திய வழியில் நம்பிக்கையற்றவர்கள் என்ரு அர்த்தம்?

### மதுவிலக்கில் விதிவிலக்கு

அன்று திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் 'சில பேருக்காவது மதுவிலக்கில் இருந்து விதிவிலக்கு செய்தாக வேண்டும். இராணுவ வீரர்களுக்கு மது கிடைக்கச் செய்யவேண்டும். இதில் எல்லாம் காந்தியைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு காலத்தில் காந்தியார் இராணுவமே வேண்டாமென்று சொன்னார்கள். இராணுவமே இல்லாமல் இந்தியா வாழ முடியுமா? ஆகவே, மது அருந்தும் உரிமைகள் இராணுவத்திற்கு அளித்தாக வேண்டும்' என்று குல்ஹாபூரில் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டிலே பேசினார்.

இவர்கள் எல்லாம் பழைய காங்கிரசாக இருந்த போதுதான் மராட்டியத்திலே மதுவிலக்கு ரத்துச் செய்யப் பட்டது. மைசூரிலே மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. ஆந்திராவிலே மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. வேறு எந்த மாநிலத்தில் மதுவிலக்கு ரத்துச் செய்யப்படாமல் இருக்கிறது?

அவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் அவர்கள் காந்திய வழிக்குப் புறம்பாக, காந்திக்கு மரியாதை தரக்கூடாது என்ரு செய்தார்கள்?

### அண்ணா எங்களை விட்டுவிடமாட்டார்!

அந்த அளவிலே இந்த அரசை, இந்த அரசில் இருக்கும் அமைச்சர்களை, அண்ணாவால் தயாரிக்கப்பட்ட எங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணாவின் பெயரைப் பயன்படுத்தி எங்கள் மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறார்கள். அதற்கும் எங்கள் அண்ணாவைப் பயன்படுத்தி எங்களை ஒழித்து விடலாம் என்று நினைக்காதீர்கள். எங்கள் அண்ணன் எங்களை அவ்வளவு சாதாரணமாக விட்டுவிடமாட்டார்.

### அவலங்களை நிறுத்தத்தான்......!

கடைசிப் பகுதியை அவலம் (டிராஜடி) என்றார்கள். மதுவிலக்கு அமலில் இருந்தபோது எவ்வளவு அவலங்கள் நடந்திருக்கின்றன?

இதே சென்னையில் 7—8—1967 அன்று வார்னிஷ் குடித்து 113 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 51 பேர் இறந்தார்கள்.

காஞ்சிபுரத்தில் 145 பேர் வார்னிஷ் சாப்பிட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 24 பேர் இறந்தார்கள்.

செங்கற்பட்டில் 151 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு 14 பேர் இறந்தார்கள்.

வாலாஜாபாத்தில் 84 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு 14 பேர் இறந்தார்கள்.

அந்த அவலங்களை நிறுத்தத்தான் இந்த 'டிராஜடி' என்ருல், நான் இது 'டிராஜடி' என்பதை உள்ளபடியே ஏற்றுக் கொள்கிறேன்.

### தோல்வியை ஒத்துக்கொள்கிருேம்.

மதுவிலக்கு தோல்வியுற்று விட்டது. அந்தச் சட்டம் இங்கே வெற்றிகரமாக நடைபெற முடியவில்லை என்பதை இதற்கு முன் இருந்த அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். நாங்கள் அதைத் தாராளமாக ஒத்துக் கொள்கிருேம்.

அண்ணு உயிரோடு இருந்த நேரத்திலே தென்னை மரத்திலிருந்து பதநீர் இறக்குவதற்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனுல் அது பதநீராக இறக்கப்படாமல் கிட்டத்தட்ட கள்ளைப் போன்று இறக்கப்பட்டு வந்தது. கிட்டத்தட்ட மதுவிலக்கை ரத்துச் செய்தது போன்றது தான் இது. இதை அனுபவத்தில் கண்டதால் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் அந்த அனுமதியை ரத்துச் செய்து ஓர் உத்தரவு போட்டேன். உடனே அத்தனைபேரும் கோர்ட்டிற்குப் போனுர்கள். அந்த உத்தரவை அமல் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் வளர வளரத்தான் வேறு வழியில்லாமல் இந்த முடிவிற்கு வந்திருக்கிருேமே யல்லாமல் மாண்புமிகு உறுப்பினரின் உணர்ச்சிக்கு நாங்கள் கட்டுப்படாதவர்கள் அல்ல. யாருடைய உணர்ச்சிகளையும் நாங்கள் மதிக்காதவர்கள் அல்ல.

### கள்ளைப் பற்றிக் கம்பராமாயணம் !

சுதந்திராக் கட்சியின் சார்பில் நம்முடைய பெரியவர் சா. கணேசன் வெகு உருக்கமாகப் பேசினுர். வள்ளுவர் பிறந்த நாட்டிலே குடி இருக்கலாமா என்று கேட்டார்கள். வள்ளுவர் பிறந்த நாட்டிலேதான் கம்பர் இராமாயணம் எழுதினுர்.

கம்ப இராமாயணத்திலே கம்பர், மாதர்களும் குடித்தார்கள் என்று எழுதியிருக்கிருர். வள்ளுவர் பிறந்து குறளை எழுதியதற்குப் பிறகு தான் கம்பர் இந்த நாட்டிலே பிறந்து இராமாயணத்தை எழுதியிருக்கிருர்.

குறளைப் படித்து அறிந்த கம்பர் எத்தனையோ இடங்களில் இராமாயணத்தில், மக்கள் கள்ளைக் குடித்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதையும் இலங்கையிலே யிருந்த அசுரர்கள் தான் மது அருந்தினார்கள்; மற்றவர்கள் அல்ல என்று வாதிக்கக்கூடும். மிதிலாபுரியிலும் குடித்தார்கள். கம்பர் பாடுகிறார்:—

பளிக்குவள் ளத்து பாக்கும் பசுநறுந் தேறல் மாந்தி
வெளிப்படு நகைய வாகி, வேறெனு மிழற்று கின்ற
ஒளிப்பினும் ஒளிக்க ஒட்டி ஊடலை உணர்த்து மாபோல்
களிப்பினை உணர்த்தும் செவ்விக் கமலங்கள் பலவும்
கண்டார்.

என்று கம்பர் பாடியிருக்கிறார். எனக்குப் பார்த்துத்தான் படிக்கத்தெரியும்.

தமிழ்நாட்டிலேதான் கம்பர் அயோத்தியைக் கண்டார்; மிதிலையையும் கண்டார் என்று சொல்கிறார்கள். கம்பர் ராமனைக் மாத்திரம் விடுதலை செய்துவிட்டார். வால்மீகி ராமனை குடியிலிருந்து விடுதலை செய்தார். அயோத்தியா புரி, மிதிலையை விடுதலை செய்யவில்லை.

தசரதன் மிதிலைக்குப் புறப்பட்ட பொழுது, வழியில் சந்தித்த பலர் ''மதுக் கொண்டு மாந்தர் மடவாரில் ஓதை'' என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

தசரதனுடன் சென்ற அயோத்திச் சேனைகள் கள்ளுண்டு, இன்பம் அனுபவித்து மகிழ்ந்தனர் என்று உண்டாட்டுப் படலம் கூறுகிறது. வள்ளுவர் எப்படியோ அதேபோல ஆற்றலுள்ள கம்பர் பார்த்தார்; அந்த நிலையை எடுத்துச் சொன்னார்.

கம்பரே சொல்கிறார். ஆகவே கொள்கை ரீதியில் ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறவில்லை. ஆனால் நிலைமைகளை எடுத்துச் சொல்கிறேன். இந்தியாவில் மட்டுமல்ல அனைத்துலகிலுமே தீமையை உணர்ந்து முயன்று பார்த்தார்கள். ஆனால் முடியவில்லை.

## இங்கிலாந்தில் உள்ளபடி இங்கும் செய்யலாமே!

சுதந்திராக் கட்சியின் தலைவர்களில் ஒருவராகப் போற்றப்படுகிறவரும் சிறந்த மேதையுமான பேராசிரியர் எம். ரத்தினசாமி எம். பி. அவர்கள் ஒரு கட்டுரையை எழுதி, அதை நம்முடைய சுகாதார அமைச்சருக்கும், தொழில் அமைச்சருக்கும், சட்ட அமைச்சருக்கும், அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரையில் அவர் என்ன குறிப்பிட்டடிருக்கிறார்? ''நம் நாட்டுக் கள்ளுக்கடை அசுத்தம் மலிந்தது. வசதி

குறைந்தது. அதற்கு மாருக இங்கிலாந்திலுள்ள மதுக் கடைகளில் மேஜை, பெஞ்சு போன்ற வசதிகள் உண்டு. சுவையுள்ள சிற்றுண்டியும் அங்குக் கிடைக்கும். குடித்து விட்டு மட்டும் வெளியே வருபவனுல் ஆபத்துகள் விளைய லாம். ஆனுல் குடியோடு, சிற்றுண்டி சாப்பிட்டு, நல்ல சூழ்நிலையிலிருந்து வீட்டுக்கு வெளிவருபவனுல் ஆபத்துக் கிடையாதாம். அது மனேநிலை மாற்றம். இங்கிலாந்தில் உள்ளதை ‘மதுக்கடை’ என்று சொல்லுவதற்குப் பதில் ‘காலம் போக்கும் விடுதி’ என்று அழைப்பதேபெரிதும் பொருந் தும். அரசு நிதி வசூலிப்பதில் மட்டும் கண்ணேட்டம் செலுத்தாமல் மக்களின் நலனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்'' என்று கூறிவிட்டு ‘‘மதுவிலக்கை ரத்துச் செய்தாலும் செய்யாவிடினும் குடிப்பவன் குடித்துக் கொண்டேதான் இருக்கிருன். நல்ல சரக்குக் கிடைக்கா விடில் கண்டதையெல்லாம் குடிக்கிருன். அவதியுறுகிருன். திரு. ராஜகோபாலாச்சாரியார் கள்ளுக்கடையைத் திறந்தால் மனைவியை அடிக்கும் குற்றம் பெருகும் என்கிருர். குடிக் காதவன் மட்டும் மனைவியை அடிக்காமலா இருக்கிருன்? பெருவாரியான குடியர்கள் மனைவியை அடிப்பதில்லை. ஆம். சட்டம் என்பது இந்தப் பெருவாரியான எண் ணிக்கையினரது நலனுக்காக அமைதல் வேண்டும்'' என்றும் பேராசிரியர் அவர்கள் எழுதியிருக்கிருர்கள்.

இன்னும் காங்கிரஸ் கட்சி தரப்பில் எந்த அடிப்படை யில் பேசினுர்கள்! ஏதோ தொலையட்டும் மதுவிலக்கை வர வேற்கிறேன் என்று நண்பர் ஈஸ்வரமூர்த்தி எடுத்துச் சொன் ஞர் என்ருல், இருக்கும் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்துச் செய்கிருேமேயல்லாமல் வேறு அல்ல. ஏதோ மது விலக்குக் கொள்கையில் எங்களுக்குப் பற்றுப்போய்விட்டது என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம். நாம் நியமித்த காவல்துறை கமிஷன், நாம் ஆராயச் சொல்லாவிட் டாலும்கூட ஒழுக்கங்கள் எப்படியெல்லாம் குறைகின்றன என்பதற்குச் சில சான்றுகளைச் சொல்லி அந்த அறிக்கை யில் மதுவிலக்குப் பற்றியும் சில குறிப்புகள் எழுதினுர்கள்.

அப்போது காவல் துறைக் கமிஷன் உறுப்பினராக இருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் மாத்திரம் மாறு பட்ட குறிப்பை எழுதினுர்கள். மற்றவர்கள் எல்லாம் இருக்கும் நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டி எழுதியிருக் கிருர்கள். ஆகவே அவைகளை எல்லாம் நாம் மறந்து விடக்கூடாது என்று உங்களை மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு 1967-ஆம் ஆண்டிலிருந்து மதுவிலக்குக் குற் றத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்கள் தொகை நமக்குத் தெரிகிறது. இந்த ஆண்டு மாத்திரம் இந்தக்

குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்கள் கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேர். இன்றைக்குச் சிறையில் இருப்பவர்கள் கிட்டத்தட்ட 2,000 பேர். அதில் 164 பேர் பெண்களும் இருக்கிறார்கள். (கம்ப ராமாயணத்தைப்பின்பற்றியவர்கள்.)

பெர்மிட்டுகள் பெற்றவர்களில் பெண்களும் இருக்கிறார்கள். ஏறக்குறைய 150 பெண்கள் பெர்மிட் பெற்றிருக்கிறார்கள். மதுவைக் குடிக்கிற நேரத்தில் வாய் கமழுகிற மணத்தை நான் அறியாதவன் அல்ல. எல்லோரையும் சொல்லவில்லை. சிலரிடையே அந்த மணம் கமழ்வதைக் காணாதவன் அல்ல. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை. கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேர் இன்றைய தினம் கைது செய்யப்பட்டார்கள் என்றால் அதில் கைது செய்யப்படாமல் தப்பியவர்கள் எத்தனை பேர் ?

ஒரு வழக்கில் 10 பேர் என்றாலும், போலீஸ் இலாகாக் கணக்குப்படி 27 லட்சம் பேர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரிஷ்டம் சாப்பிட்டோ, கள்ளச் சாராயம் காய்ச்சியோ, வேறு போதைப் பொருள்கள் சாப்பிட்டோ லட்சம் பேர் அந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள். அவர்களால் வர வேண்டிய வருமானம் நமக்கு வரவில்லை. யார் யாருக்கோ போய் விடுகிறது.

### வேதனையான முடிவு.

ஒரு நாளைக்கு ரூ. 5 லட்சம் என்று கணக்கிட்டால் மாதம் ஒன்றுக்கு ஒன்றேகால் கோடி அல்லது ஒன்றேமுக்கால் கோடி! ஆண்டுக்குக் கிட்டத்தட்ட ரூ. 20 கோடி வருமானம். இந்த வருமானம் எங்கே போகிறது ? எங்கோ போகிற வருமானம் அரசுக்கு வரட்டும் என்ற முடிவே தவிர அவர்களைத் திருத்த முடியவில்லை.

இங்கு குன்றக்குடி அடிகளார் அவர்களும், திரு எம். சங்கரலிங்கம் அவர்களும் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். மதுவைச் சாப்பிட்ட வேண்டாம் என்று அறிவுரை செய்ய வேண்டும், மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று.

நண்பர் ஆறுமுகசாமி குறிப்பிட்டது போல், பல ஆண்டுகள் மதுவிலக்குப் பிரச்சாரம் சரிவர நடைபெறாமல் இந்த அளவில் தீமைகள் ஏற்பட்டன. ஆகவே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டாலும் அதன் விளைவு, தீமைகள், அதிகக் குடியால் ஏற்படக் கூடிய தீமைகள் இவைகளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதில் இந்த அரசு முனைந்து நிற்கும். அதற்

காக முனைந்து நிற்பவர்களுக்கு நிச்சயமாக ஆக்கம் அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்களின்—தோழமைக் கட்சி நண்பர்களின்—உணர்ச்சியை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். அவர்களில் சிலபேர் என்னைக் கெஞ்சிக் கூடக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக்கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம்விட நான் வயதில் சிறியவன். அப்படி மன்றாடிக் கேட்டதை, கெஞ்சிக் கேட்டதைத் தயவுசெய்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆகவே மிக உணர்ச்சியுடன் பேசியவர்களைக்கேட்கிறேன். இது உங்களை எல்லாம் புறக்கணித்துவிட்டு, உங்கள்உருக்குகிற நெஞ்சை உதறித்தள்ளிவிட்டு, வேண்டுகோளை விழலுக்கு இறைத்த நீராக்கிவிட்டு, நீங்கள் யார் சொல்ல, நான் யார் கேட்க, என்கிற அகந்தையோடு அல்ல, மிகுந்த வருத்தத்தோடு, மிகுந்த வேதனையோடு,இருக்கிற நிலைமைகளை எண்ணி இந்த முடிவைத் தவிர வழி இல்லை என்ற காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதுவும் ஒத்தி வைத்திருக்கிறோம்.

ஆகவே,அனைவரும் சேர்ந்து இந்திய அரசைக் கட்டாயப்படுத்தவும், இந்தியா முழுமைக்கும் நீங்கள் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு 1956-ல் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினீர்களே அதை அமல்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்ளவும், அது இந்தியாவில் அமலாக்கப்படுகின்றவரையில் ஒத்தி வைப்புத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லி, இந்த ஒரு விஷயத்தில் உங்கள் வேண்டுகோளை ஏற்க முடியாமல் இருப்பதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இந்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பல கருத்துக்களை எடுத்துக் கூறிய உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, இடையில் சூடு ஏற்பட்டாலும் அந்தச் சூட்டைத் தமிழ்ப் பண்பின் காரணமாக நிச்சயமாக மறந்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உங்களுக்கெல்லாம் நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.